360

# தமிழ்நாடு

# சட்ட மன்றப் பேரவை நடவடிக்கைகள்

ஏப்ரல் 6, 1999 தொகுதி 69 எண் 2.

D
V2ll,31'N99
N99.69.2
221015

வெளியீடு 09-02-2000 Issued 09-02-2000

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, ஏப்ரல் 6, 1999 - தொகுதி 69 - எண் 2

Tuesday, 6th April, 1999—Volume 69 - No. 2

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*
Legislative Assembly Secretariat, Fort St. George,
Chennai - 600 009

*விலை ரூ. 3.00*] [Price Rs. 3.00

**6-4-1999**

## உள்ளடக்கம்


பக்கங்கள்

1. *வினாக்கள்-விடைகள்—*

உடுக்குறியிட்ட வினாக்கள் 291-320

2. *சிறப்புக் கவன ஈர்ப்பு—*

(அ) அரசு மருத்துவமனைகளில் மருத்துவர்கள் குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்ய மறுப்பு 321-335

(ஆ) தோட்டத் தொழிலாளர்கள் வேலை நேரம் 335-341

3. *மானியக் கோரிக்கைகள், **1999-2000,** விவாதமும் வாக்கெடுப்பும்*—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் *1* - நில வருவாய்த் துறை 341-405

(ஆ) கோரிக்கை எண் *40* - இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு 407-428

(இ) கோரிக்கை எண் *45* - இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும்

*மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் 341, 349, 353, 357, 407-419

திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் 357-363, 419-420

திரு. சுப. தங்கவேலன் 363-368

| | பக்கங்கள் |
|---|---|
| *3. மானியக் கோரிக்கைகள், 1999-2000, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.* | |
| திரு. சி. வேலாயுதன் | 345, 368-372, 421 |
| திரு. மீ.அ. வைதியலிங்கம் | 372-379 |
| திரு. ச. இராஜ ரெட்டி | 380-382 |
| திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் | 344, 351, 354, 383-388, 421, 424, 426 |
| *திரு. பா. துரைசாமி | 388-392 |
| *திரு. அ.வ. அப்துல் நாசர் | 347, 352, 356, 392-396, 422, 425, 427 |
| *திரு. டி. மணி | 342, 349-350, 396-402, 420, 424 |
| திரு. எ. தெய்வநாயகம் | 402-405 |
| 4. தகவல் கோரல்— | |
| உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் கைதான விவரம் | 379, 406 |





| | பக்கங்கள் |
|---|---|
| *5. அறிவிப்புகள்—* | |
| (அ) உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் கைது | 405 |
| (ஆ) காமன்வெல்த் பாராளுமன்ற தமிழ் நாடு கிளையின் சார்பாக, பொருளாதாரம் மற்றும் அரசின் வரவு-செலவு மேலாண்மை, என்ற தலைப்பின்கீழ் கருத்தரங்கு | 407 |
| *6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்—* | 428-429 |


221075

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**பங்குனி 23, வெகுதான்ய - திருவள்ளுவர் ஆண்டு 2030**

**1999 ஏப்ரல் 6, செவ்வாய்க்கிழமை**

*மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்*
*செல்வரும் சேர்வது நாடு".*

செழிப்புக் குறையாத விளைபொருள்களும், சிறந்த பெருமக்களும் செல்வத்தைத் தீய வழியில் செலவிடாதவர்களும் அமையப்பெற்றதே நல்ல நாடாகும்.

## 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 261, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**261—**

### எடப்பாடியில் கனிம வளங்கள் ஆய்வு

***20100—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடியின் சுற்று வட்டாரங்கள் மலை சூழ்ந்த பகுதியாக உள்ளதால் அவற்றில் கனிம வளங்கள் உள்ளதா எனக் கண்டறிய அரசு ஆய்வு மேற்கொள்ளுமா?

[1999 ஏப்ரல் 6

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி சுற்று வட்டாரங்களில் உள்ள மலை சூழ்ந்த பகுதிகளில் ஏற்கெனவே விரிவான புவியியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

(ஆ) ஆய்வுகள் மேற்கொண்டதில் அங்கு வெங்கக்கல், களிமம், மைக்கா, கிரானைட் கல் ஆகிய கனிமங்கள் மிகக் குறைந்த அளவில் கிடைப்பது கண்டறியப்பட்டது.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எடப்பாடி தொகுதியைச் சுற்றியுள்ள வட்டாரங்களிலே பலவாறாக, பலயிடங்களிலே உயர்ந்த கிரானைட் கற்களை அனுமதி இல்லாமல் வெட்டி எடுக்கிறார்கள், சிலர் அனுமதியோடு வெட்டி எடுக்கிறார்கள். மிக மிகப் பின்தங்கிய தொகுதியாக இருப்பதால், பின்தங்கிய மக்கள் வாழக்கூடிய அந்தப் பகுதியிலே இந்தக் கனிமங்களை வெட்டியெடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல, எடப்பாடியைச் சுற்றியுள்ள ரெட்டிப்பட்டி மற்றும் குரும்பப்பட்டி பகுதிகளில் மொத்தம் 439.74 ஏக்கர் பரப்பில் சுமார் 17,000 டன் களிமம் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. எடப்பாடியைச் சுற்றியுள்ள மைக்கா சுரங்கத்தையொட்டி 87 ஏக்கர் பரப்பில் சுமார் 1 இலட்சம் டன் வெங்கக்கல் கிடைக்கலாம் எனக் கண்டறியப்பட்டுள்ளது. இந்தப் பகுதியில், 1997 ஆம் ஆண்டில மேற்கொண்ட ஆய்வுக்கேற்ப, 243.71 ஏக்கர் பரப்பில் பல வண்ணம் உள்ள கிரானைட் கற்கள் இருப்பதும கண்டறியப்பட்டுள்ளது. இந்தப் பகுதியிலே உள்ள இந்தக் கிரானைட்டை, ஏழை மக்கள் வாழ்கின்ற அந்தப் பகுதியிலே இருக்கிற அந்தக் கிரானைட்டை, அரசு வெட்டியெடுத்து அவர்கள் பயன்படுவதற்கு உதவுமா என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்டார். கடந்த காலத்தில் இதுபோன்ற கனிமங்களை வெட்டியெடுப்பதில் அல்லது குத்தகைக்கு விடுவதில், ஏலம் விடுவதில் பல தவறுகள் நடைபெற்று, அரசு தான் யாருக்குத் தர விரும்புகிறதோ அவர்களுக்குத் தரலாம என்று ஒரு புதிய விதியையும் சேர்த்து, பெரும் கொள்ளை நடைபெற்றது. இந்த அரசு 1996இல் மீண்டும் பொறுப்பேற்றவுடன்



1999 ஏப்ரல் 6]

அந்த விதியை அறவே அகற்றி, அதன் காரணமாக, திறந்த ஒப்பந்தப்புள்ளி மற்றும் பகிரங்க ஏலம், அதாவது tender அல்லது auction என்ற முறையிலே விடப்பட்டு, அந்தப் பகுதியில் இப்பொழுது 52 குவாரி குத்தகைகள் 243.71 ஏக்கர் பரப்பில் வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் 1997-98 ஆம் ஆண்டில் அரசுக்கு 1 கோடியே 33 இலட்சத்து 62 ஆயிரத்து 701 ரூபாய் வருவாய் கிடைத்திருக்கிறது. (பல உறுப்பினர்கள் கையை உயர்த்திக் கொண்டிருந்தனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சேலம் மாவட்டம் பற்றி என்றால்தான் அனுமதி கொடுப்பேன். யார் கேட்கிறார்கள் சேலத்தைப் பற்றி? திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்திலே பல்வேறு வகையான கனிமங்கள் இருக்கின்றன. இவற்றில் அரசு அனுமதி பெறாமல் பலயிடங்களில் வெட்டியெடுக்கப்படுவதால் அரசுக்கு ஏற்படும் வருவாய் இழப்பை அரசு அறியுமா? அதேபோல அந்த உரிமம் வழங்கும் முறையையும் எளிதாக்கி, royalty தொகையைக் குறைத்து, அனைவரும் முறையாக அரசு அனுமதி பெற்று அந்தத் தொழிலை நடத்த அரசு நடவடிக்கையெடுக்குமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அரசு அனுமதி இல்லாமலும் அல்லது அரசு மறைமுகமாக அனுமதித்தும், இப்படிப்பட்ட கனிமங்கள் வெட்டி எடுக்கப்பட்ட காலம் கடந்த காலம். அது இப்பொழுது இல்லை என்பதை நான் தெளிவாகத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படி எங்காவது நடைபெற்றால், மாண்புமிகு உறுப்பினர் அக்கறையுடன், ஆர்வத்துடன் குறிப்பிட்டுச் சொல்வாரேயானால், உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். நான் முதலிலே குறிப்பிட்டதைப்போல, இந்தக் கனிமங்களெல்லாம் திறந்த ஒப்பந்தப்புள்ளி அல்லது பகிரங்க ஏலம் மூலமாகத்தான் வழங்கப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

முற்பகல் 9-35

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எடப்பாடி அருகிலுள்ள சூரியன்கரடு என்ற பகுதியிலே அதிகமான கனிம வளங்கள் இருப்பதாகப் பொது மக்கள் மிகவும் பிரபல்யமாகப்

பேசி வருகிறார்கள். சென்ற அரசாங்கத்திற்கு முன்பாக பல ஹெலிகாப்டர்களில் அதைச் சுற்றிப் பார்த்து ஓர் ஆய்வு செய்தார்கள். அந்த ஆய்வினுடைய முடிவு என்ன என்பதை அரசு தெரிவிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கனிமங்களை ஹெலிகாப்டர்களில் சுற்றிப் பார்த்து, ஆய்வு செய்வது, புதுமையாகத்தான் இருக்கிறது. ஒருவேளை இப்படி ஹெலிகாப்டர்கள் மூலம் கண்டுபிடித்திருப்பார்களேயானால், அந்தக் கனிமங்களை அரசு எடுக்கத் தவறாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 262, திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**262—**

## போக்குவரத்து சமிக்ஞைகள் கற்றுத் தருதல்

***8450—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பள்ளிகளில் போக்குவரத்து சமிக்ஞைகள் கற்றுத் தரவும், அதனைக் கட்டாயப் பாடமாக்கவும் அரசு பரிசீலனை செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது :

**விவர அறிக்கை**

தமிழ்நாட்டுப் பள்ளிப் பாடத் திட்டம் அரசால் நியமிக்கப்பட்ட உயர்மட்டக் குழுவால் மாற்றியமைத்து திருத்திய பாடத்திட்டம் 1995-96 கல்வியாண்டில் 1, 6 மற்றும் 11 வகுப்புகளுக்கும், 1996-97 கல்வியாண்டில் 7, 9 மற்றும் 12 வகுப்புகளுக்கும், 1997-98 கல்வியாண்டில் 8 மற்றும் 10 ஆம் வகுப்புக்குரிய பாடநூல்களும், 1998-99 ஆம் கல்வியாண்டில் 4 ஆம் வகுப்புக்கான பாடநூல்களும் தயாரிக்கப்பட்டு, விநியோகம் செய்யப்பட்டுள்ளன. 5 ஆம் வகுப்புக்கான திருத்திய பாடத் திட்டத்திற்கான பாடநூல்கள் 1999-2000 கல்வியாண்டில் வழங்கப்பட உள்ளன. பள்ளி மாணவர்களுக்கு பயனளிக்குப் வகையில் "சாலை விதிகள்" என்ற தலைப்பில் 8 ஆம் வகுப்பு தமிழ்ப் பாடநூலில் பாடல் ஒன்று இடம் பெற்றுள்ளது. 3 ஆம் வகுப்பு தமிழ்ப் பாடநூலில் 'படங்கள் உணர்த்துவன' எனும் தலைப்பில் போக்குவரத்து தொடர்பான படங்களும், குறியீடுகளும், போக்குவரத்து சமிக்ஞைகள் வண்ணப்படங்களாக, குறிப்புகளுடனும் இடம் பெற்றுள்ளன. முதலாம் வகுப்பு சூழ்நிலையியல் பாடநூலில் பல்வேறு வாகனங்கள் சாலையில் ஒழுங்காகச் செல்வதை அடிப்படை அளவில் தெரிந்திட, முழுப்பக்கம் அளவு படம் வரைந்து காட்டப்பட்டுள்ளது. இரண்டாம் வகுப்பு சூழ்நிலையியல் பாடநூலில் போக்குவரத்துக் காவலர் போக்குவரத்தினை நிழற்குடையின்கீழ் நின்று சமிக்ஞைகள் காட்டுவது போன்றும், பயணிகள் நடைபாதையில் நின்று பேருந்தில் வரிசையாக ஏறிச் செல்வதும் காட்டப்பட்டுள்ளது. போக்குவரத்து சமிக்ஞைகள் குறித்து ஏற்கெனவே இரண்டாம் வகுப்பு தமிழ்ப் பாடம் சாலை விதிகளிலும், மூன்றாம் வகுப்பு சூழ்நிலையியல் சமூகவியல் மூன்றாம் பாடத்தில் சாலைக் குறியீடுகளிலும் பாடப் புத்தகத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இதில் போக்குவரத்து சமிக்ஞைகள் குறித்து மாணவர்களுக்கு விரிவாகக் கற்பிக்கப்பட்டு, அவர்களுக்கு அவற்றில் தேர்வும் நடத்தப்பட்டு வருகிறது. இதுபோல் இளம் செஞ்சிலுவை இயக்கம், சாரணர் இயக்கம், நாட்டு நலப் பணித் திட்டம், தேசிய மாணவர் படைத் திட்டம் போன்றவற்றில் பங்குபெறும் மாணவர்களுக்குப் போக்குவரத்து சமிக்ஞைகள் குறித்து விரிவாகக் கற்பிக்கப்படுகிறது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத், இருக்கையில் இல்லை.

வினா எண் 263, திரு. ஜி. நிஜாமுதீன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**263—**

## ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

***13228—திரு. ஜி. நிஜாமுதீன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1999 ஏப்ரல் 6

கீழையூர் ஒன்றியம், சோழவித்தியாபுரத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கீழையூர் ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகைக்கு இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாகும். ஆனால் அந்த ஊராட்சி ஒன்றியத்தில் ஆறு ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன. மேலும் சோழவித்தியாபுரத்தில் துணை சுகாதார நிலையம் செயல்படுவதாலும், அக்கிராமத்திற்கு 6 கி.மீ. தொலைவில் திருப்பூண்டி ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படுவதாலும் சோழவித்தியாபுரம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் ஏதுமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன், இருக்கையில் இல்லை.

வினா எண் 264, திரு. இரா. மகேந்திரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**264—**

**ஆரம்ப சுகாதார நிலையத்தை மருத்துவமனையாக்குதல்**

***16901—திரு. இரா. மகேந்திரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்டராம்பள்ளி தொகுதி, கந்திலியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக மாற்ற அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.



1999 ஏப்ரல் 6]

**திரு. இரா. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கந்திலி மற்றும் அதனைச் சுற்றியுள்ள மக்கள் நீண்ட காலமாக அரசு மருத்துவமனை வேண்டுமென்று கோரி வருகிறார்கள். என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் குனிச்சி, பேராம்பட்டு, கெத்திலிநாயக்கன்பட்டி, புதுப்பேட்டை, வெலக்கல்நத்தம், நாட்றாம்பள்ளி, பச்சூர், இராமநாயக்கன்பட்டி போன்ற இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. என்னுடைய தொகுதியில் ஒரு அரசு மருத்துவமனைகூட இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 1996 ஆம் ஆண்டு, இந்த மாமன்றத்தில் கந்திலி பகுதியில் மருத்துவத் துறையை மேம்படுத்துவதற்காக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கியதாக அறிவித்தார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து என்னுடைய தொகுதியில் கந்திலியை மையமாகக் கொண்டு ஓர் அரசு மருத்துவமனையை ஏற்படுத்த மறுபரிசீலனை செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996 ஆம் ஆண்டு நான் அறிவித்தது, கந்திலி பகுதியிலே பெண் குழந்தை பிறந்தால் அதைக் கொன்று விடுகின்ற பழக்கமிருக்கிறது; அதைத் தடுப்பதற்காக ஒரு திட்டத்தைத் தயார் செய்து, சிசுக் கொலையைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளில் அரசு வேகமாக நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது. அதற்காகத்தான் அந்தப் பணம் ஒதுக்கப்பட்டதே தவிர, புதிதாக மருத்துவமனை தொடங்குவதற்காக அல்ல. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் ஏராளமான ஆரம்ப சுகாதார நிலையங்கள் அந்தப் பகுதியில் இருக்கின்றனவென்று தெரிவித்திருக்கிற காரணத்தால், 24 மணிநேர ஆரம்ப சுகாதார நிலையங்களிலே ஒன்றைத் தொடங்குவதற்கு முடியுமா என்பதை நிதி நிலையைப் பொறுத்து அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 265, திரு. வை. சிவபுண்ணியம், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**265—**

**மருத்துவமனைகளுக்குக் கூடுதல் வசதிகள்**

***10770—திரு. வை. சிவபுண்ணியம்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1999 ஏப்ரல் 6

(அ) திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, பெருகவாழ்ந்தான் ஊராட்சியில் உள்ள சித்த மருத்துவமனை மற்றும் தாய் சேய் நல விடுதிக்குப் புதிய மருத்துவர்களை நியமித்து, உடன் இயங்கச் செய்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், இதற்குரிய இரண்டு கட்டடங்களையும் புதுப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, பெருகவாழ்ந்தான் ஊராட்சியில் உள்ள ஊரக சித்த மருத்துவமனை முன்னாள் மருத்துவர் பணியிலிருந்து ஓய்வு பெற்றதையடுத்து, கோட்டூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலிருந்து மேற்படி சித்த மருத்துவர் பணியிடத்தை நிரப்பிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தகுதியான நபர்களுக்கு நேர்முகத் தேர்வு செய்து, ஊராட்சி ஒன்றிய நியமன குழுவினர் மூலம் மருத்துவர் பணியிடத்தைப் பூர்த்தி செய்திட, நடவடிக்கை மேற்கொள்ள கோட்டூர் ஊராட்சி ஒன்றிய ஆணையருக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவுறுத்தியுள்ளார்.

(ஆ) ஆம்.

முற்பகல் 9-40

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணியிடங்களை நிரப்புவதற்கு ஏற்பாடு செய்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, அந்த சித்த மருத்துவமனையும், தாய்-சேய் நல விடுதியும் இயங்குகிற கட்டடம் மிகவும் பழுதடைந்துவிட்ட காரணத்தினால், அதைப் புதுப்பித்து, புதிய கட்டடமாகக் கட்டித்தர வேண்டுமென்ற கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது; அப்படிக் கட்டித் தருவதற்கான முயற்சிகளை அமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோட்டூர் ஊராட்சி ஒன்றியத்தில் உபரி நிதி அதிகமாக இல்லாத காரணத்தினால், வேறு நிதிகளில் எதை ஈடுசெய்து, அந்தக் கட்டடத்தைக் கட்டுவதென்ற ஆய்வு நடந்து கொண்டிருப்பதையொட்டி அது முடிவு பெற்றவுடன் நிச்சயமாக அந்தக் கட்டடத்தைப் பழுது



1999 ஏப்ரல் 6]

நீக்கும் நடவடிக்கை உறுதியாக மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *266*, திரு. இ.ஏ.பி. சிவாஜி, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**266—**

## ஊராட்சியைப் பேரூராட்சியாக்குதல்

***15483—திரு. இ.ஏ.பி. சிவாஜி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், வெங்கத்தூர் ஊராட்சியைப் பேரூராட்சியாக உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.

**திரு. இ.ஏ.பி. சிவாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டத் தலைநகராக உள்ள திருவள்ளூர் நகரையொட்டி, வெங்கத்தூர் ஊராட்சி அமைந்திருக்கிற காரணத்தினாலும், அங்கு மக்கள் தொகைப் பெருக்கம் பெருமளவு உள்ளதாலும், அதேபோன்று புதுப்புது குடியிருப்புகளும் உருவாகி, அங்கே இருக்கின்ற மக்கள் அடிப்படைத் தேவைகளுக்காக ஒரு அவலநிலையைச் சந்திக்கிற நிலைமை இருக்கிற காரணத்தினாலும், வெங்கத்தூர் ஊராட்சியைப் பேரூராட்சியாக மாற்றிட அரசு மறு ஆய்வு செய்யுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையில் பேரூராட்சிகள் ஏற்படுத்துவது என்பதில் தவறான முறைகளில் ஏராளமான பேரூராட்சிகளை உருவாக்கி, நிதிநிலைமையில் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். ஆகையினால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தக்க நேரத்தில் அறிவுரை வழங்கி, அதுபோன்ற நிலைமைகள்

இருந்தால், அவற்றைச் சீர்செய்ய வேண்டுமென்று ஆணையிட்டதன் அடிப்படையில் ஒருசில பேரூராட்சிகள் இப்போது ஊராட்சிகளாக வருவதற்குத் தயாராக இருக்கிறோம் என்று மனுக்கள் வந்து, அவை பரிசீலிக்கப்பட்டு, தக்க நடவடிக்கை எடுக்கப்படுகிற இந்த நேரத்தில், அவசரப்பட்டு பேரூராட்சியாகத் தரம் உயர்த்துவது என்பது அவ்வளவு நல்லதல்ல. அதனாலேயே அந்த ஊராட்சிக்கு ஒரு பெருமை வந்துவிடப் போவதில்லை. புதிதாக இப்போது நாம் உருவாக்கியிருக்கிற சட்டத்தின் அடிப்படையில் மக்கள் தொகை 20 ஆயிரத்திற்கு மேல் இருக்க வேண்டும்; அப்படி இருந்தால்தான், அதைப் பேரூராட்சியாக்க முடியும் என்று ஒரு சட்டம் குடியரசுத் தலைவருடைய அனுமதிக்குச் சென்றிருக்கிறது. உறுப்பினர் சொல்லும் ஊராட்சியில், 10,799 என்ற அளவுக்குத்தான் மக்கள் வாழ்கிறார்கள். அந்த வகையில், அதைப் பேரூராட்சியாக ஆக்குவதற்குத் தகுதி இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கான வருவாயும் அங்கு குறைவாக இருக்கிறது. ஒரு இலட்சம் ரூபாய் வருவாய் இருந்தால் போதும் என்று அப்போது ஒரு சட்டம் இயற்றப்பட்டது. இப்போது அந்த ஒரு இலட்சம் ரூபாய் ஏறத்தாழ Executive Officer-க்குச் சம்பளம் கொடுக்கவே சரியாக இருக்கும்; இதை உறுப்பினர் அவர்கள் உணர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 267, திருமதி ஆர். சரஸ்வதி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**267—**

## சொகுசுப் பேருந்து இயக்குதல்

***7798—திருமதி ஆர். சரஸ்வதி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னையிலிருந்து தாராபுரத்திற்கு சொகுசுப் பேருந்து விட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் மூலமாக, சென்னையிலிருந்து தாராபுரத்திற்கு சொகுசுப் பேருந்து இயக்க சாத்தியமில்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஆர். சரஸ்வதி, இருக்கையில் இல்லை.

வினா எண் 268, திரு. டி. அமரமூர்த்தி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**268—**

## விரைவுப் பேருந்து இயக்குதல்

***15530—திரு. டி. அமரமூர்த்தி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இரயில் போக்குவரத்து நிறுத்தப்பட்டுள்ளதால், அரியலூரிலிருந்தும், திருமானூரிலிருந்தும் புதியதாக சென்னைக்கு அரசு விரைவுப் பேருந்து இயக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது இரயில் போக்குவரத்து மீண்டும் தொடங்கப்பட்டுள்ளதால், இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. டி. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமானூரிலும், அரியலூரிலும் இருப்பவர்கள் இரயில் ticket கிடைக்கவில்லையென்றால், பெரம்பலூர் வரவேண்டும்; இல்லையென்றால், தஞ்சாவூர் போகவேண்டும். அப்படி தஞ்சாவூர், தொழுதூர் வந்து பேருந்து ஏறுவதற்கு கிட்டத்தட்ட 100 கிலோமீட்டர் அவர்கள் போகவேண்டும். நீதிமான் நீங்கள், இந்த அவையை நடத்துகிறீர்கள்; உங்கள் முன்பு அவர்கள் 'இல்லை' என்று சொல்வது எனக்குச் சரியாகப்படவில்லை. ஆகவே உங்களுக்காகவாவது என் கோரிக்கையை மறுபரிசீலனை செய்வார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வியே, இரயில் போக்குவரத்து நிறுத்தப்பட்டுள்ளதால்,

அரியலூரிலிருந்தும், திருமானூரிலிருந்தும் புதியதாக சென்னைக்கு அரசு விரைவுப் பேருந்து விடப்படுமா என்பதுதான். இரயில் போக்குவரத்து நிறுத்தப்பட்டு, broad-gauge ஆக்கப்பட்டு திறந்தாகிவிட்டது. இந்தக் கேள்விக்கே இடமில்லை என்பதுதான் பதில். இப்பொழுது, அவர் புதியதாக வழித்தடம் வேண்டும்; இரயிலுக்கு அதிக தூரம் இருக்கிறது என்று வேண்டுமானால் கேட்கலாம்; அது வேறு கேள்வி. கேள்விக்கே சம்பந்தம் இல்லாமல் பேசுகிறார். புதிதாக விரைவுப் பேருந்து வேண்டுமென்று கேட்டிருந்தால் பரவாயில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் மிகவும் நியாயமாகத்தான் பதில் சொல்லியிருக்கிறார் என்று தீர்ப்பு வழங்குகிறேன்.

அடுத்து வினா எண் 269, திரு. எஸ். டேவிட் செல்வின், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**269—**

## இருவழித் தடமாக அகலப்படுத்துதல்

***7353—திரு. எஸ். டேவிட் செல்வின்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம், புதுக்கோட்டை சாலையிலுள்ள மங்களக்குறிச்சி, ஏரல் பகுதியை (கி.மீ. 14/6 முதல் 17/0 வரை) இருவழித் தடமாக அகலப்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், பணிகள் எப்போது தொடங்கப்படும்?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*(அ)* இல்லை.

*(ஆ)* கேள்விக்கு இடமில்லை.

**திரு. எஸ். டேவிட் செல்வின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர்



அவர்களே, தூத்துக்குடி மாவட்டத்தில் திருவைகுண்டம், புதுக்கோட்டை சாலையிலுள்ள மங்களக்குறிச்சி, ஏரல் பகுதி மிகவும் குறுகிய பகுதி. குறுகிய சாலையாக அது இருக்கிற காரணத்தினால், அடிக்கடி அந்த இடத்திலே விபத்து நடக்கிறது. அந்தச் சாலையின் ஒருபுறத்திலே தாமிரபரணி ஆறு; மற்றொரு பக்கத்திலே திருவைகுண்டம் அணையிலுள்ள வடகால் வாய்க்கால். இரண்டும் இருமருங்கிலும் இருந்து கொண்டிருக்கின்றன. இடையிலே குறுகிய சாலை [illegible] மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள், மறுபரிசீலனை செய்து, திருவைகுண்டம் - புதுக்கோட்டை சாலையை இருவழித் தடமாக அகலப்படுத்த ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 9-15*

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டத்தில் திருவைகுண்டம்-புதுக்கோட்டை சாலையில் உள்ள மங்களக் குறிச்சி, ஏரல் பகுதியில் கிலோமீட்டர் 14/6-லிருந்து 17 வரையில் இரு வழித்தடமாக மாற்றப்படவேண்டும் என்றுதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்றார்கள். அந்தப் பகுதியில் ஒரு பாலமும் அகலமாகக் கட்டப்பட வேண்டிய அவசியம் இருக்கிறது. அந்தப் பாலத்தையும் அகலப்படுத்திக் கட்டி, இந்தச் சாலையையும் இருவழி சாலையாக மாற்றுவதற்கு தோராயமாக 85 இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. இப்போது இருக்கக்கூடிய நிதிநிலை நெருக்கடியில் இதை உடனடியாகச் செய்ய இயலவில்லையென்றுதான் நான் தெரிவிக்கிறேன். வருங்காலத்தில் நிதிநிலைக்கு ஏற்ப, இந்தத் திட்டம் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 270, திரு. குழந்தை தமிழரசன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**270—**

## விருத்தாசலத்தில் புறவழிச் சாலை

***18242—திரு. குழந்தை தமிழரசன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1999 ஏப்ரல் 6

*(அ) விருத்தாசலத்தில் புறவழிச் சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இந்தப் புறவழிச் சாலைப் பணியை 6.5 கி.மீ. நீளத்தில், ரூ. 13.00 கோடி மதிப்பீட்டில், உலக வங்கி உதவியுடன் செயற்படுத்துவதற்கு தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் (கட்டம்-2) பரிசீலனையில் உள்ளது.

**திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை குறித்து, இந்த மாமன்றத்தில் பலமுறை கவனத்திற்குக் கொண்டு வந்ததற்குப் பின்னால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களும் விரைந்து இந்தப் பணியை முடுக்கிவிட்டு, இப்போது அமைச்சர் அவர்கள் கூறியவாறு பணிகள் நடைபெற்று வருகின்றன. இதிலே ஒரேயொரு வேண்டுகோள். கட்டம்-2-லே விருத்தாசலம் இடம் பெற்றிருக்கின்றது. எனவே, அதனால் நீண்ட காலம் ஆகும் என்று தோன்றுகிறது. எனவே, விருத்தாசலத்தில் உள்ள நெருக்கடியைக் கருத்திலே கொண்டு கட்டம்-1-ஏ-ல் விருத்தாசலத்தை இணைத்து, விரைந்து நடவடிக்கை எடுத்து, புறவழிச் சாலையை அமைத்துத் தர அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டபடி, இந்தத் திட்டத்திற்கு உலக வங்கி நிதி உதவி செய்வதற்கு முன்வந்திருக்கிறது. உலக வங்கி அறிவுறுத்தியபடி, இந்தத் திட்டத்தில், ஏறத்தாழ 1,500 கிலோ மீட்டர் அளவிற்கு எடுத்துக்கொள்ளப்படவிருக்கின்றது. அதிலே கிழக்கு கடற்கரைச் சாலையும் வருகின்றது. கடலூரிலிருந்து தூத்துக்குடி வரையிலுள்ள அந்தச் சாலையும் சேர்ந்திருக்கின்றது. தமிழ்நாட்டின் உள்பகுதியிலே வரக்கூடிய சில சாலைகளும் சேர்ந்திருக்கின்றன. அதிலே இந்த விருத்தாசலம் புறவழிச் சாலையும் இணைக்கப்பட்டிருக்கின்றது. உலக வங்கியினுடைய அறிவுரைப்படி இது மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, அதாவது, கட்டம்-1, கட்டம்-1ஏ மற்றும் கட்டம்-2



1999 ஏப்ரல் 6]

என்று பிரிக்கப்பட்டு, உலக வங்கியும் இதனை ஏற்றுக்கொண்டிருக்கின்றது. ஆகவே, இதனைக் கட்டம்-2 என்பதிலிருந்து கட்டம்-1-க்குக் கொண்டுவர இயலாது. எனினும், இந்தத் திட்டம் விரைவாக நிறைவேறுவதற்கு எல்லா முயற்சிகளையும் துறை எடுத்துக் கொண்டிருக்கின்றது. விருத்தாசலத்திற்கு எப்படியும் புறவழிச்சாலை அமைத்துத் தரப்படும் என்கின்ற உறுதியை இங்கே நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 271, டாக்டர் ஆ. ஞானசேகரன், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

**271—**

## பால் குளிரூட்டும் நிலையம் அமைத்தல்

***13500—டாக்டர் ஆ. ஞானசேகரன்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*மேல்மலையனூர் தொகுதி, செஞ்சி வட்டத்தில் ஒரு பால் குளிரூட்டும் நிலையம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மேல்மலையனூர் தொகுதி, செஞ்சி வட்டத்தில் ஒரு பால் குளிரூட்டும் நிலையம் தனியே அமைக்கும் அளவிற்குப் பால் உற்பத்தி இல்லாததால் குளிரூட்டும் நிலையம் அமைக்கும் வாய்ப்பு இல்லை.

**டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கப்பட வேண்டுமானால், குறைந்தபட்சம் 10,000 லிட்டர் அளவிற்குப் பால் உற்பத்தி இருக்க வேண்டுமென்கின்ற நிலை இருக்கின்றது. எங்களுடைய பகுதியில் இப்போது 7,000 லிட்டர் அளவிற்குப் பால் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது. எங்களுடைய பகுதியில் உற்பத்தி செய்யப்படக்கூடிய பாலை விழுப்புரம் பகுதிக்கு எடுத்துச் செல்ல வேண்டிய நிலை இருக்கும்போது, அந்தப் பால் கெட்டுவிடுகின்றது என்று புகார் கூறப்படுகின்றது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 10,000 லிட்டர் பால் உற்பத்திக்கு ஒரு பால் குளிரூட்டும்

[1999 ஏப்ரல் 6

நிலையம் அமைப்பது என்பதை மாற்றி 5,000 லிட்டர் பால் உற்பத்தி இருந்தாலே போதும் என்கின்ற வகையில், சிறிய அளவில் ஒரு பால் குளிரூட்டும் நிலையத்தை ஏற்படுத்த வருங்காலத்தில் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேல்மலையனூரைச் சுற்றியுள்ள சங்கங்களிலிருந்து 7,000 லிட்டர் அளவிற்குத்தான் பால் உற்பத்தியாகி, விழுப்புரம் பால் பண்ணைக்கு அனுப்பப்படுகிறது. தற்போது தேசிய பால் வளத் துறையின் உத்தரவின்படி 10,000 லிட்டர் பால் உற்பத்தியிருந்தால்தான் ஒரு குளிரூட்டும் நிலையம் அமைக்கப்படும் என்றிருக்கிறது. அதை இப்போது 30,000 லிட்டர் அளவிற்கு உயர்த்த வேண்டுமென்று தேசிய பால் வளத் துறை நிர்ணயித்திருக்கின்றது. ஆகவே, 5,000 லிட்டர் பால் உற்பத்தியில் குளிரூட்டும் நிலையம் அமைக்க முடியாது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 272, திரு. பா. வேல்துரை, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**272**—

## பீடித் தொழிலாளர்களுக்கு வீடுகள்

***22772—திரு. பா. வேல்துரை:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, முக்கூடல் பகுதியில் 500 பீடித் தொழிலாளர்கள் வீடுகட்டுவதற்கு நில ஆர்ஜிதம் செய்தும் வீடுகள் கட்டாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

முற்பகல் 9-50

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.



1999 ஏப்ரல் 6]

(ஆ) சேரன்மகாதேவி தொகுதி, முக்கூடல் பகுதியில் 535 பீடித் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டப்படாமல் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளது. முக்கூடலில் வீடுகள் கட்டுவதற்கு ஆர்ஜிதம் செய்துள்ள நிலம் மேடு, பள்ளங்களுடன் களிமண் நிலமானதால் நிலத்தினைச் சீர்படுத்தவும், இவ்வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் பயனீட்டாளர்கள், பீடித் தொழிலாளர்கள் அதிகரித்ததினால் கூடுதல் செலவினங்கள் ஏற்பட்டுள்ள நிலையில், கட்டுமானப் பணி தொடங்க தாமதமாகி வருவதைக் கருத்தில் கொண்டு, வீடுகளை விரைவில் கட்டுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முக்கூடல் பகுதியிலே நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு, பணிகள் எல்லாம் நடைபெறுகிற ஒரு நிலை வந்த பிறகுகூட, அது நிறுத்தப்பட்டுவிட்டது. கடந்த ஆட்சிக் காலத்திலே நிலத்தை ஆர்ஜிதம் செய்து, அந்தப் பகுதி மக்களுக்குப் பட்டாக்களை வழங்காமல், மற்ற பகுதி மக்களுக்கெல்லாம் முறைகேடாக பட்டாக்களை வழங்கியிருக்கிறார்கள். அரசு உடனடியாக அதைக் கவனத்தில் கொள்ளவேண்டும். முறைகேடாக வழங்கப்பட்ட அந்தப் பட்டாக்களை இரத்து செய்துவிட்டு, முக்கூடல் பகுதியிலே வாழ்கின்ற, பீடி சுற்றுகின்ற தொழிலாளர்களுக்கு அந்தப் பட்டாக்களை வழங்கி, உடனடியாக வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற பட்டாவிற்கும், வீடு கட்டுகின்ற பிரச்சினைக்கும் சம்பந்தம் இல்லை. பீடித் தொழிலாளர்கள் வீட்டுவசதித் திட்டம், மத்திய அரசினுடைய திட்டம். மத்திய அரசு பீடித் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டுவதற்காக 9,000 ரூபாய் மானியமாகக் கொடுக்கிறார்கள். ஹட்கோ ரூ. 13,000 கடனாகத் தருகிறது. பீடித் தொழிலாளர்களுடைய சம்பளத்திலே அது பிடித்தம் செய்யப்படுகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் அதிகாரத்திலுள்ள கட்டட மையம் அந்த வீடுகளைக் கட்டும் பொறுப்பை ஏற்றிருக்கிறது. மேலப்பாளையத்தைப் பொறுத்தவரையில் கட்டுமானப் பணிகள் தொழிலாளர்களுக்காக நடைபெற்று வருகிறன்றன. ஏறத்தாழ 148 வீடுகள் கட்டப்படுகின்ற நிலையில் இருக்கின்றன. ஆனால், முக்கூடலைப் பொறுத்தமட்டில் நிலம் களிமண்ணாக இருப்பதால் நிலத்தைச் சீர் செய்து வீடுகளைக் கட்டுவதற்கு, வீட்டிற்காக ஒதுக்கிய பணச்செலவு அதிகமாக ஏற்பட்டிருக்கிறது.

[1999 ஏப்ரல் 6

அடுத்து பயனீட்டாளர்கள், பீடித் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகமாகி இருக்கிறது. இப்போது ஹட்கோ கொடுக்கக்கூடிய அந்த லோன் 13,000 ரூபாயாக இருந்து, அது போதாது என்று சொல்லி, அதை அவர்களே 17,000 ரூபாயாகக் கொடுத்து, இப்போதும் அந்த வீட்டினுடைய cost போதாது என்கிற காரணத்தினாலே, அதிக தொகை கேட்டிருக்கிறோம். இது சம்பந்தமாக நானே நெல்லைக்குச் சென்று அந்த இடத்தைப் பார்வையிட்டேன். கூட்டம் நடத்தினேன், அதிகாரிகளின கூட்டம் நடத்தப்பட்டது. இன்னும் சொல்லப்போனால், இப்போது Housing Federation, ஹட்கோ ஒதுக்கிய பணத்தை வீட்டைக் கட்டினால் தான் கொடுப்போம் என்று சொல்கிறார்கள். ஆனால், வீடு கட்டுவதற்கு எங்களுக்கு advance தொகை அதிகம் கொடுத்தால்தான் கட்டமுடியும் என்று சொல்கிறார்கள். இருந்தாலும் நிலைமை சீர்செய்யப்பட்டு வீடு கட்டப்படுகின்ற காரியம் தொடங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 273, திரு. ம. முத்துராமலிங்கம், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**273—**

## திருமங்கலத்தில் சார்பு நீதிமன்றம்

***17053—திரு. ம. முத்துராமலிங்கம்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா---

(அ) மதுரை மாவட்டம், திருமங்கலத்தில் சார்பு நீதிமன்றம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவாகளே,

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், திருமங்கலத்தில் சார்பு நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. ம. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமங்கலத்தில் இருக்கின்ற குற்றவியல் மற்றும் நடுவர்



1999 ஏப்ரல் 6]

நீதிமன்றம் 100 ஆண்டுகள் அனுபவத்தைப் பெற்றது. அங்கு ஏராளமான வழக்குகள்கூட நடைபெற்று வருகின்றன. வழக்கறிஞர்களுக்குண்டான நூலகம் எல்லாம் நல்லமுறையில் இருக்கிறது. கட்டட வசதிகள் எல்லாம் இருக்கின்ற காரணத்தினால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து வருங்காலத்திலாவது அங்கு ஒரு சார்பு நீதிமன்றம் அமைக்க முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் மொத்தம் 30 நீதிமன்றங்கள் இருக்கின்றன. இந்த 30 நீதிமன்றங்களில் 5 நீதிமன்றங்கள் Sub-Court ஆகும். புதிதாகப் பிரிக்கப்பட்ட மதுரை மாவட்டத்தில் உசிலம்பட்டிதான் வருவாய் கோட்டமாகும். அரசைப் பொறுத்தவரையில் இப்போது இருக்கின்ற நீதிமன்றங்களே போதுமானது என்று கருதுகிறது. எதிர்காலத்திலே ஒரு Sub-Court திறப்பது என்ற நிலை வந்தால்கூட, வருவாய் கோட்டத்தின் தலைநகராக இருக்கிற உசிலம்பட்டிக்குத்தான் அந்த வாய்ப்பு இருக்கிறதே தவிர திருமங்கலத்திற்கு வருமா என்பது சந்தேகத்திற்குரியது ஆகும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 274, திரு. பி.என். வல்லரசு, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

**274—**

## மகாலட்சுமி நூற்பாலையைத் திறத்தல்

***16021—திரு. பி.என். வல்லரசு:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை பசுமலை மகாலட்சுமி நூற்பாலையைத் திறக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருத்திய விடையை அளிக்க அனுமதி கோருகிறேன். மதுரை பசுமலையில் உள்ள மகாலட்சுமி டெக்ஸ்டைல்ஸ் மில்ஸ் லிமிடெட்டின்

நிர்வாகத்தைக் கலைக்க உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதால் இந்த ஆலையைத் திறப்பதற்கு சாத்தியம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை பசுமலையில் உள்ள மகாலட்சுமி மில் நீண்ட நாட்களாக மூடப்பட்டு, ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வாழ்விழந்து தவித்துக் கொண்டிருக்கிறார்கள். தற்போது உயர் நீதிமன்றத்தின் மூலம் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாக மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்களுக்கு வாழ்வளிக்கின்ற வகையில் இந்த நூற்பாலையைத் திறக்க மாற்று வழி காண்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் *9-55*

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாற்று வழி காண்பதற்காகத்தான் பல நேரங்களில் Debt Relief Undertaking Act என்ற அடிப்படையில் கடன் கொடுத்தவர்களுடைய தொந்தரவைக் குறைத்து முறைப்படுத்துகிற பணியிலே ஈடுபட்டோம். இருந்தாலும் இடையிலே மீண்டும் கடன்காரர்கள் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்காடி கடந்த *23-3-1998* ஆம் தேதியன்று ஓர் உத்தரவைப் பெற்று அதன்மூலம் கடன்காரர்களுடைய கடனை அடைப்பதற்கு ஒரு Liquidator உயர் நீதிமன்றத்தாலே நியமிக்கப்பட்டு, கடன் தொகையைத் திருப்பிக் கட்டுவதற்கு அந்த ஆலை wind-up செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மகாலட்சுமி டெக்ஸ்டைல்ஸ் சம்பந்தமாகத்தான் கேள்வி கேட்க வேண்டும். திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல பழைய நிர்வாகம் சரியாகச் செயல்படவில்லை என்று கருதி நீதிமன்றம் அதைக் கலைத்துவிடலாம் என்று ஆணை பிறப்பித்திருக்கிறது. இதை ஏற்கெனவே கருத்தில் கொண்டு வேறு யாராவது அந்தத் தொழிற்சாலையை நடத்துவதற்கு முன்வந்தால் கொடுக்கலாம் என்கிற நிலையில் நமது அரசு பரிசீலனை செய்து கொண்டிருந்தது. அதை



ஏற்று வேறு யாராவது அந்த மில்லை எடுத்து நடத்துவதற்கு முன்வந்தால் அரசு அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்வருமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Debt Relief Undertaking Act என்ற அடிப்படையிலே இந்த நூற்பாலையைக் - கொண்டு வந்ததனுடைய நோக்கமே Board for Industrial and Financial Reconstruction என்று சொல்கிற புதிய விதி முறைகளைக் கடைப்பிடிக்கின்ற அளவுக்கு யாராவது அதற்குப் பொறுப்பேற்று மூலதனம் அளித்தால் இந்த ஆலையை நடத்தலாம் என்ற அடிப்படையிலே நடவடிக்கை எடுக்கப்பட்டது. அப்படி எடுக்கப்பட்டதில் திரு. கலீல் என்பவர் இதிலே ஈடுபட்டு, அவரும் ஓரளவுக்குக் கணிசமான தொகையை இதற்குக் கொடுத்து உதவினார். அதற்குப் பின்னர் இந்த ஆலையை முறையாக இயக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டு, அரசும் அவருக்கு மீண்டும் கடன் இடர் உதவித் திட்டத்தின்கீழ் எந்த வழிவகையும் செய்ய இயலாத நிலை ஏற்பட்ட காரணத்தால்தான் இதிலே அரசு எந்தவிதத்திலும் வாதியாகவோ அல்லது பிரதிவாதியாகவோ இல்லாத காரணத்தால் கடந்த *23-1-1998*-லே wind-up செய்யப்பட்டது. இந்த உத்தரவை நான் தேடி கிடைக்கப்பெற்று, இந்த அவைக்குத் தெரிவிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுவிட்டது. ஆக, ஏறத்தாழ *23-1-1998*-லே wind-up செய்யப்பட்டுவிட்டது. Liquidator போடப்பட்டுவிட்டது. நாம் எந்த விதத்திலும் நீதிமன்றத்திற்குச் செல்ல வாய்ப்பு இல்லாத காரணத்தால், இதைத் தெரிந்துகொள்ள, அறிந்துகொள்ள இயலவில்லை. ஆகவே இதைத் தெரிந்து இப்போது உண்மையை, விளக்கத்தை இந்த அவையில் தெரிவித்திருக்கிறோம். ஆகவே, நிச்சயமாக மீண்டும், யாராவது இதிலே முதலீடு செய்ய வாய்ப்பு இருந்தால், அதைக் கொண்டு நீதிமன்றத்திலே ஏதாவது வழக்காடுவதற்கோ அல்லது அந்தக் கடன்காரர்களோடு பேசி முடிப்பதற்கோ நிச்சயம் அரசு உதவி செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி தமிழ்நாடு முழுவதும் தனியார் பஞ்சாலைகள் மூடப்பட்டு பல்வேறு தொழிலாளர்கள் வாழ்விழந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே இப்படி, தமிழ்நாட்டிலே மூடப்பட்டிருக்கக்கூடிய மொத்தப்

[1999 ஏப்ரல் 6

பஞ்சாலைகள் எத்தனை? அதிலே நடப்பாண்டில் மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் உட்பட ஏதாவது பஞ்சாலைகளைத் திறக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புவதோடு, இப்போது மேற்கு வங்க அரசு இப்படி மூடப்பட்டிருக்கிற ஆலைகளில் பணியாற்றி வாழ்விழந்த தொழிலாளர்களுக்கு *500* ரூபாய் வழங்குவதாகச் சொல்லப்படுகிறது, அதைப்போல நம்முடைய தமிழக அரசும் வழங்குவதற்கு முன்வருமா என்றும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு ஒரு தனிக் கேள்வி போட்டால்தான், இப்போது ஜவுளித் துறையிலே ஏற்பட்டிருக்கின்ற நெருக்கடியையொட்டி, எந்த அளவிற்கு ஆலைகள் மூடப்பட்டிருக்கின்றன என்ற முழு விவரத்தையும் கொடுக்க இயலும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி ஆயிரத்திற்கும் மேற்பட்ட மில் தொழிலாளர்கள் அங்கே வேலைவாய்ப்பை இழந்து இருக்கின்ற காரணத்தால் மாற்று ஏற்பாடாக, அரசே அதை ஏற்று நடத்துவதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-00*

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்காலத்தில் எந்த ஒரு ஆலையையும் அரசு எடுத்து ஏற்று நடத்தக்கூடிய சூழ்நிலையில்லை. இருக்கின்ற கூட்டுறவு நூற்பாலைகளே இன்று *185* கோடி ரூபாய் அரசினுடைய நிவாரணம் பெற்றும் இன்றும் பல இடங்களிலே தொழிற்சங்கத்தினுடைய முறையான ஒப்பந்தம் ஏற்படாத காரணத்தினால் *6* நூற்பாலைகள் மட்டும் அந்த ஒப்பந்தத்திற்குக் கட்டுப்பட்டு revival package-லே சிறப்பாக ஓடிக்கொண்டிருக்கின்றன. இரண்டு ஆலைகள் ஆண்டிப்பட்டி அண்ணா, எட்டையபுரம் பாரதி ஆகியவை இலாபகரமாகவே ஓடிக்கொண்டிருக்கின்றன. அதுபோக, மீதியிருக்கின்ற ஆலைகளுக்கு தொழிற்சங்கத்தினுடைய உதவி முழுமையாக இல்லாத காரணத்தினால்- ஒப்பந்தம் நிறைவேறாத காரணத்தினால், 'NABARD' இடமிருந்து நாம் தக்க ஆதரவைப் பெற இயலாத நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்தக் கேள்வியின் மூலம் எனக்கு ஒரு வேண்டுகோளைக் கொடுப்பதற்கு



1999 ஏப்ரல் 6]

வாய்ப்பளித்தமைக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த *10* ஆலைகளையும் சிறப்பாக—அரசினுடைய உதவி கிடைத்தும் இன்றும் ஓடுவதற்கு இயலாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிற இந்த நிலையை சற்று மாற்றியமைக்க தொழிற்சங்கத்தினர் உதவ வேண்டுமென்று இந்த அவையின் மூலம் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *275*, திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர்.

**275—**

## நடுத்தர வகுப்பினருக்கு வாடகை வீடுகள்

***21014—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் காலியாகவுள்ள அரசு நிலங்களில் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் நடுத்தர வகுப்பினர் குடியிருக்க வாடகை வீடுகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டு வசதித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அரசுக்குச் சொந்தமான காலி இடங்களில் நடுத்தர வகுப்பினர் போன்ற பொது மக்களுக்கு வாடகைக் குடியிருப்புகள் கட்டும் திட்டத்தை வாரியம் செயல்படுத்துவதில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே மிகப் பெரிய நகரங்களுள் சென்னையும் ஒன்று. மக்கள் தொகைப் பெருக்கம் நாளடைவில் அதிகமாக கொண்டிருக்கின்ற காரணத்தினாலே தமிழ்நாட்டினுடைய பல்வேறு பகுதிகளிலேயிருந்து சென்னையை நோக்கி ஏராளமான பொது மக்கள் இங்கே வந்து, *10* ஆண்டுகள், *15* ஆண்டுகளாகவே சிறுதொழில் செய்தவர்கள் அல்லது தனியார் தொழிற்சாலைகளில் வேலை பார்த்து வரக்கூடியவர்கள் எல்லாம் வாடகை அதிகம் கொடுக்க இயலாத நிலையிலே—நடுத்தர மக்கள்—அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

ஆகவே, அவர்களுடைய குறைகளையெல்லாம் போக்கக்கூடிய வகையிலே நம்முடைய தமிழக அரசு, அரசுக்குச் சொந்தமான இடங்களிலே, சென்னையையொட்டியுள்ள இடங்களிலே வீடுகளைக் கட்டி, அவர்களுக்குக் குறைந்த வாடகையிலே கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்குச் சொந்தமான காலியிடங்கள் கிடைக்காததாலும், பொது வாடகையில், வாடகை மிகக் குறைவாக இருந்து, அதனால் அரசுக்குத் தகுந்த வருமானம் இல்லாத காரணத்தாலும், அந்தத் திட்டம் தற்போது கைவிடப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *276*, திரு. இ.ஜி. சுகவனம், மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்.

**276—**

### கால்நடை மருத்துவமனைகள் தொடங்குதல்

***9625—திரு. இ.ஜி. சுகவனம்:**

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பர்கூர் தொகுதி, சிகரலப்பள்ளி மற்றும் குருவிநாயனப்பள்ளி ஆகிய கிராமங்களில் கால்நடை மருத்துவமனைகளைத் தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அரசிடம் தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**திரு. இ.ஜி. சுகவனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பர்கூர் தொகுதியிலே சிகரலப்பள்ளி மற்றும் குருவிநாயனப்பள்ளி பகுதிகள்—அதுவும் குறிப்பாக குருவிநாயனப்பள்ளி ஆந்திர மாநில எல்லையையொட்டியுள்ள பகுதியாகும். இந்தப் பகுதி



காடுகள் நிறைந்த மலைப் பகுதியாக இருக்கிறது. இங்கே படிக்காத ஏழை எளிய மக்கள் விவசாயத்தையே வானம் பார்த்த பூமியில் நம்பிக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பகுதிகளில் கால்நடைகளை வைத்து அவர்கள் பிழைப்பை நடத்திக்கொண்டு வருகிறார்கள். அங்கே அந்தக் கால்நடைகளுக்கு நோய் வருகின்ற காலத்திலே நீண்டதூரம் அந்தக் கால்நடைகளை அழைத்துச் செல்ல வேண்டிய சூழ்நிலையிருக்கிற காரணத்தினால், அந்தப் பகுதிகளில் கால்நடை மருத்துவமனை அமைத்துத்தர மறுபரிசீலனை செய்ய முடியுமா என்பதைத்தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பர்கூர் ஊராட்சி ஒன்றியத்தில் பர்கூரில் ஒரு கால்நடை மருத்துவமனை இயங்கி வருகிறது. மேலும், போச்சம்பள்ளி, ஏலத்தகிரி, வறட்டனபள்ளி, ஜகதேவி ஆகிய இடங்களில் கால்நடை மருந்தகங்களும், சாந்தூர், ஓரப்பம், சிந்தகம்பள்ளி, சிகரலபள்ளி, பெருகோபனபள்ளி, ஐ. குந்தம் ஆகிய இடங்களில் கால்நடை கிளை நிலையங்களும், இவற்றுக்கு முறையே பார்வைக் கிளை நிலையங்களாக தொகரப்பள்ளி, கண்டம்பட்டி, காளிக்கோயில், கப்பல்வாடி, ஐ. குந்தம்புதூர், புள்ளம்பாடி ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் கோரும் பர்கூர் தொகுதியில் சிகரலபள்ளி கிராமத்திலேயே ஒரு கால்நடை கிளை நிலையமும் செயல்பட்டு வருகிறது. குருவிநாயனப்பள்ளி கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் இல்லை. எனினும், குருவிநாயனப்பள்ளி கிராமத்திலுள்ள கால்நடைகளுக்கு முதல் உதவி மற்றும் சிகிச்சைப் பணிகள் சிகரலபள்ளி கால்நடை கிளை நிலையத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்விரு கிராமங்களுக்கும் கிருஷ்ணகிரிகுப்பம் சாலையில் 7 கிலோ மீட்டர் தூரத்தில் வறட்டனபள்ளி என்ற ஊரில் கால்நடை மருந்தகம் ஒன்றும் செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரும் கோரிக்கையை நிதிநிலைமையைக் கருதி எதிர்காலத்தில் பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்.

**திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் காவேரிப்பட்டினம் தொகுதியிலே [illegible]ப்பள்ளி என்ற கிராமப் பகுதி . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துணை வினா, அந்தத் தொகுதியைப் பொறுத்துத்தான் இருக்க வேண்டும், உட்காருங்கள்.

**திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்:** எங்களுடைய மாவட்டம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாவட்டத்தை எல்லாம் கணக்கில் எடுக்க முடியாது. தொகுதிதான் உட்காருங்கள்.

*வினா எண் 277, திரு. மு. பன்னீர்செல்வம், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.*

*முற்பகல் 10-05*

**277—**

## தொழில் நுட்பக் கல்லூரி தொடங்குதல்

***11617—திரு. மு. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிதம்பரம், அரசினர் நந்தனார் பெண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் ஆதிதிராவிட நலத் துறையின் மூலம் தொழில் நுட்பக் கல்லூரி தொடங்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. மு. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரத்திலே இருக்கக்கூடிய அரசினர் நந்தனார் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியும், அதேபோன்று அரசினர் நந்தனார் பெண்கள் மேல்நிலைப் பள்ளியும் ஆதிதிராவிடர் நலத் துறை மூலமாக சிறப்பாக பெரிய அளவிலே நடைபெற்று வருகின்றன. சிதம்பரத்தில் இருக்கக்கூடிய அரசினர் நந்தனார் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியிலே தொழிற் பயிற்சி துறையின் மூலமாக தொழிற் பயிற்சி நிலையம்கூட ஒன்று இயங்கி வருகிறது. அதேபோன்று பெண்களுக்கு, நம்முடைய கழகத் தலைவர் முதல்வர் அவர்கள் முக்கியத்துவம் கொடுத்து, கல்வியை ஊக்கப்படுத்தக்கூடிய அளவிலே சிறப்பாக நிதி ஒதுக்கீடு செய்து வருகிறார்கள். அந்த அளவிலே மாண்புமிகு முதல்வர் அவர்களோடும், கல்வித் துறை அமைச்சர் அவர்களோடும் கலந்து பேசி மறுபரிசீலனை செய்து, சிதம்பரத்திலே அரசினர் நந்தனார் பெண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்திலே ஒரு தொழில்நுட்பக் கல்லூரி தொடங்க அரசு மறுபரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் அரசினர் நந்தனார் பெண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் தொழில்நுட்பக் கல்லூரி தொடங்குவதற்கு போதுமான நிலங்கள் இல்லை. இப்பள்ளியில் தற்போது சுமார் 2-½ ஏக்கர் நிலம்தான் உள்ளது. இது விளையாட்டு மைதானத்திற்கு மட்டும்தான் போதுமானதாக இருக்கிறது. ஆகவே, இடம் கொடுத்தால், மாண்புமிகு முதல்வர் அவர்களுடனும் கல்வி அமைச்சருடனும் கலந்து பேசி எதிர்காலத்தில் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ. இராமலிங்கம்.

**திரு. ஏ. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் பகுதியில் பெண்களுக்கென தனிக் கல்லூரி கிடையாது. அந்தப் பகுதி தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை ஏற்று ஆதிதிராவிடர் நலத் துறை மூலம் நடந்து வரும் அரசினர் நந்தனார் பெண்கள் மேல்நிலைப் பள்ளியைக் கல்லூரியாக உயர்த்தித்தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரத்தில் தொழில் நுட்பக் கல்லூரி தொடங்கும் வாய்ப்பு இல்லை என்றவுடன் கலைக் கல்லூரியாவது தொடங்கப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்றார்கள். ஏற்கெனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலும் வினா எழுப்பி இருக்கிறார்கள். இதற்கு நான் பதில் கூறி இருக்கின்றேன். அவருடைய வினாவின் அடிப்படையில் அரசுக்கு கருத்துரு வந்துள்ளது. கல்லூரி தொடங்குவதற்கு, கல்லூரி கல்வித் துறையினுடைய முடிவை எதிர்நோக்கி கருத்துரு நிலுவையில் உள்ளது. மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் கலந்தாலோசித்து எதிர்காலத்தில் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 278, திரு. கோ. நயினா முகமது, மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

[1999 ஏப்ரல் 6

**278—**

## மாணவர்களுக்கு விடுதி கட்டும் பணி

***15826—திரு. கோ. நயினா முகமது:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடையநல்லூர் தொகுதி, மங்களபுரம் கிராமத்தில் ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு மாணவர் விடுதி கட்ட நிலம் கையகப்படுத்தப்பட்டு நிதி ஒதுக்கப்பட்டது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், பணிகள் எப்பொழுது தொடங்கும்?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தற்போது அங்கு விடுதி கட்டும் பணி தொடங்கப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. நயினா முகமது இருக்கையில் இல்லை.

வினா எண் 279, திரு. ஏ. ராசேந்திரன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**279—**

## சுற்றுலாத் தலமாக்குதல்

***18318—திரு. ஏ. ராசேந்திரன்:**

மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், அம்மன் கோயில் படவேட்டை சுற்றுலாத் தலமாக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம் அம்மன் கோயில் படவேட்டை சுற்றுலாத் தலமாக்கும் செயற்குறிப்பு அரசிடம் தற்போது இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ. ராசேந்திரன், இருக்கையில் இல்லை. வினா எண் 280, திரு. இரா. மணிமாறன் மற்றும் திரு. ஐ. கணேசன், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர்.



1999 ஏப்ரல் 6]

**280—**

## மீனவர்களுக்கு அடையாள அட்டை

***21043—திரு. இரா. மணிமாறன்,**

**திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக மீனவர்களின் பாதுகாப்பு நலன் கருதி ஆழ்கடலில் சென்று மீன் பிடிக்கும் மீனவர்களுக்கு மீனவர் அடையாள அட்டை வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையைப் படிக்கிறேன்.

(அ) தற்போது நடைமுறையில் உள்ளது.

(ஆ) தமிழகக் கடலோர பாதுகாப்பு குறித்து 1996 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் அரசு மேற்கொண்ட ஆய்வுக்கூட்ட நடவடிக்கைகளின் பேரில் ஆழ்கடல் மீன்பிடிப்புக்குச் செல்லும் மீனவர்களின் பாதுகாப்பு நலன் குறித்து புகைப்படம் ஒட்டிய அடையாள அட்டை வழங்குவது குறித்து திருத்திய முடிவு மேற்கொள்ளப்பட்டது. அதன்படி 30-9-1998 முடிய 1,45,969 அடையாள அட்டைகள் கடல் மீன்பிடிப்புக்குச் செல்லும் தமிழக மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

**திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர்கள் பாதுகாப்பு நலன் குறித்து மீனவர்களுக்கு அடையாள அட்டை வழங்கியிருப்பதற்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். தமிழகத்தின் கடலோரப் பகுதிகளிலே சில நேரங்களில் மீனவர்கள் ஆழ்கடலில் மீன்பிடிக்க செல்கின்றபோது சமூக விரோத நடவடிக்கைகளிலே ஈடுபட்டு இருப்பவர்கள் மீனவர்களைப்போல் தங்களை அடையாளம் காட்டி பல அசம்பாவிதங்கள் நடைபெற்று வருவதை நாம் அறிகிறோம். அதைத் தவிர்ப்பதற்கு அடையாள அட்டை அவசியம் என்ற அடிப்படையிலேதான் கேள்வி எழுப்பப்பட்டது. கடலோர மாவட்டங்கள்

[குறிப்பு:. ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

அனைத்திலுமே இந்த அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளதா என்பதை தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள 11 கடலோர மாவட்டங்கள் முழுவதிலும் கட்டுமரம் மற்றும் விசைப் படகு வைத்துள்ள மீனவர்கள் அனைவருக்கும் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடையாள அட்டை ஓராண்டுக்கு முன்னாலே வழங்கப்பட்டதாக இங்கே அறிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் கடலோர மாவட்டங்களிலிருந்து மீன் பிடிக்கச் சென்ற தமிழ் மீனவர்களை சிங்கள இராணுவத்தினர் பிடித்துச் சென்று, சித்ரவதை செய்து, உயிரோடோ, பிணமாகவோ கொண்டு வந்து போடுவதை அரசு அறியுமா? இதுவரை எத்தனை மீனவர்களை இந்த ஓராண்டு காலத்திலே பிடித்துச் சென்றிருக்கிறார்கள்? அதைப் பற்றி அரசு அறிவிக்குமா? இன்னும் அடையாள அட்டை வேண்டி எத்தனை மீனவர்கள் விண்ணப்பித்து இருக்கிறார்கள் என்பதை அரசு அறிவிக்குமா?

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடையாள அட்டையை ஒரு மீனவர் வைத்திருந்தால்தான் அவர் உண்மையான மீனவர் என்பதைக் கணக்கில்கொண்டு, நாங்கள் இறப்பவர்களுக்கு நிவாரணமும், புயல் கால நிவாரணமும் வழங்குகிறோம். மேலும் இங்கிருந்து இலங்கைக்கு வழி தப்பிச் சென்ற மீனவர்களை, பிடித்துச் செல்கின்ற மீனவர்களை மீட்டு வருவதும் இந்த அடையாள அட்டை மூலமாகத்தான். மேலும் இந்த அரசுக்குள்ள தகவல்படி இன்றைய தேதி வரையில், இலங்கையில் எந்தத் தமிழ் மீனவர்களும் இல்லை என்பதை என்னால் தெரிவிக்க முடியும். இதனைப் பற்றிய விவரங்களை தனிக் கேள்வி போட்டால் நிச்சயமாக குறிப்பாகச் சொல்ல முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.



## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### (அ) அரசு மருத்துவமனைகளில் மருத்துவர்கள் குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்ய மறுப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, சிறப்புக் கவன ஈர்ப்பு. "அரசு மருத்துவமனைகளில் அறுவை சிகிச்சை செய்ய டாக்டர்கள் மறுத்து வருவது" குறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டுவரும் அறிவிப்பினை மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சி. ஞானசேகரன், திரு. ஆர்.ஆர். சேகரன், திரு. லா. சந்தானம், திரு. ஜி. நிஜாமுதீன், டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், டாக்டர் க. கிருஷ்ணசாமி, திரு. ஐ. கணேசன், திரு. கே. சுப்பராயன், திரு. நா. பெரியசாமி, திரு. பி.ஆர். சுந்தரம், திரு. டி. மணி, திரு. ஜி. பழனிசாமி, திரு. பி.என். வல்லரசு, டாக்டர் தே. குமாரதாஸ் ஆகியோர் கொடுத்திருக்கிறார்கள். கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் பேசலாம். (குறுக்கீடு) திரு. சி. வேலாயுதன், என்ன சொல்கிறீர்கள்?

**திரு. சி. வேலாயுதன்:** நானும் அறிவிப்புக் கொடுத்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உங்கள் பெயரையும் சேர்த்துக் கொள்கிறேன். டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்து, அதனால் ஒரு விபத்து நடந்துவிட்டது என்கிற காரணத்தினாலே நீதிமன்றத்திற்குச் சென்று, அந்த அறுவை சிகிச்சை செய்த டாக்டர்களுக்கு 10 ஆண்டு சிறைத் தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியதைத் தொடர்ந்து, இன்றைக்கு தமிழகம் முழுவதும் உள்ள அரசு மருத்துவமனைகளில், மருத்துவர்கள் இனிமேல் குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்வதில்லை என்கிற ஒரு நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறார்கள். எனவே, இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருப்பது அரசுக்கும், நாட்டுக்கும், மக்களுக்கும் நல்லதல்ல என்கிற காரணத்தினாலே, இதில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனிக் கவனம் செலுத்தி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும், சம்பந்தப்பட்ட டாக்டர்களை அழைத்துப் பேசி, இதில் நீதிமன்றத்திலே நீதி வழங்கப்பட்டிருக்கிறது என்று சொன்னாலும், மருத்துவர்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கிற காரணத்தினாலே, அந்தத் தண்டனையை இரத்து செய்து அவர்களை விடுதலை

செய்வதோடு, அவர்கள்மீது போடப்பட்டிருக்கிற வழக்கு சரியானதாக இல்லை என்கிற கருத்து பல இலட்சக்கணக்கான டாக்டர்கள் மத்தியில் இருக்கிறது. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அவர்களை அழைத்துப் பேசி, மேற்கொண்டு பிரச்சினைகள் இல்லாமல் சுமுகமாகத் தீர்க்க முன்வருவார்களா? இந்தப் பேச்சு வார்த்தையை வெகுவிரைவிலே நடத்தி, அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றித்தர அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகவும் சிக்கலான ஒரு பிரச்சினையை அரசின் கவனத்திற்கு கொண்டு வர வேண்டியிருக்கிறது. சிதம்பரம் அரசு மருத்துவமனையில், மருத்துவர் உமாகாந்தன் என்பவர் அறுவை சிகிச்சை செய்ததிலே ஒரு பெண் மரணமுற்று, அவருடைய தந்தையார் கொடுத்த புகாரின் அடிப்படையிலே, அங்கிருந்த மருத்துவர்களெல்லாம் விசாரிக்கப்பட்டு, நீதிமன்றத்திலே வழக்கு பதிவு செய்யப்பட்டு, அதன் அடிப்படையில் தண்டனை வழங்கப்பட்டு, அந்தத் தண்டனையும் மேல் முறையீட்டிலே, (Appeal) இருக்கிற காரணத்தினாலே, நிலுவையாக இருக்கும் ஒரு வழக்கு தொடர்பாக மருத்துவர்களெல்லாம் வேலை நிறுத்தம் அறிவித்திருக்கிறார்கள் என்பது வேதனையான உண்மை.

*முற்பகல் 10-15*

இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு, 1997 ஆம் ஆண்டில் மருத்துவர்களையெல்லாம் அழைத்து அவர்களுடைய கோரிக்கை மீது பேச்சு வார்த்தை நடத்தியதன் அடிப்படையிலே தேவையற்ற வழக்குகளை மருத்துவர்கள் தொடர்பாக பதிவு செய்யக் கூடாது என்று மாநில அரசே காவல் துறைக்கு அறிவுரையும் வழங்கியிருக்கிறது. இருந்தாலும் இப்படி ஒரு நிகழ்வு ஏற்பட்டுவிட்டது. நீதிமன்றத்தினுடைய உத்தரவின் அடிப்படையில்தான் இந்தப் பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது. ஆனால் இதிலே பொதுமக்கள் பாதிக்கப்படுவது என்பது, மருத்துவமனைகளில் எந்தக் காரியமும் நடைபெறவில்லை என்பதைப்போல ஒரு தோற்றத்தை பொதுமக்களிடத்திலே ஏற்படுத்தியிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, தவறான கருத்து இடம் பெற்றுவிடக் கூடாது. 1997 ஆம் ஆண்டு



அரசே இப்படி ஓர் அறிவுரை வழங்கியிருக்கிறது காவல் துறைக்கு என்று கூறிவிட்டு, இருந்தாலும்கூட காவல் துறை இப்படி நடந்துகொண்டு இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். இது நடைபெற்றது 1995 ஆம் ஆண்டு. 1995 ஆம் ஆண்டு நடைபெற்ற குடும்ப நல அறுவை சிகிச்சையில் கோளாறு ஏற்பட்டு, அதிலே ஒரு பெண் இறந்துவிடுகிறார். அவருடைய தந்தையார் போட்ட வழக்கு அது. 1995-இல் நடைபெற்றது. இப்பொழுது அல்ல.

**திரு. நா. பெரியசாமி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சரின் விளக்கம் மிகச் சரியானது. நான் சொன்னதும் அந்த அர்த்தத்திலேதான் சொல்ல வந்தேன். ஆனால் தவறான அர்த்தம் வந்துவிடக்கூடாது என்று தலையிட்டதற்கு நன்றி. இந்த மருத்துவர்களுடைய பிரச்சினையைப் பொறுத்தவரையில், தேவையற்ற அச்சம் நிலவுவதாகத்தான் நாங்கள் கருதவேண்டியிருக்கிறது. முடிந்த அளவிற்கு அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், அவர்களை அழைத்து வைத்துப் பேசி, அவர்களையும் இணக்கப்படுத்தி, பொதுமக்களிடத்திலே ஏற்பட்டிருக்கிற பதற்றத்தைப் போக்குகின்ற வகையில் நடந்துகொள்ள வேண்டும். இதற்கான தீர்வு காணவேண்டுமென்று வலியுறுத்தி அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1995 ஆம் ஆண்டு டாக்டர் உமாகாந்தன் என்பவர் செய்த அறுவை சிகிச்சையினால் ஒரு பெண் மரணமுற்றார் என்பதும், அதற்காக நீதிமன்றம் அவருக்கு 10 ஆண்டுகாலம் சிறைத் தண்டனையும், 3 இலட்சம் ரூபாயும் தண்டமாக அறிவித்திருக்கிறது. அன்று அவர் செய்த அறுவை சிகிச்சைக்கு நான் செல்ல விரும்பவில்லை. ஒன்றை நன்றாகச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். எந்தத் தொழிலைச் செய்யக்கூடியவர்களும் அந்தத் தொழிலில் தவறு நேரவேண்டுமென்று நினைப்பதில்லை. அந்த வகையிலேதான் டாக்டர்களும் இருக்கிறார்கள். தவறே நடைபெறாத துறை என்று எங்குமே பார்க்க முடியாது. அங்கொன்றும் இங்கொன்றுமாக அறிந்தோ அறியாமலோ தவறுகள் நடந்து வருகின்றன. அதற்காக இப்படி ஒரு பெரிய தண்டனை வழங்குவது என்றால், அது எதிர்கால நலனுக்கு ஆபத்தாக விளங்கிவிடும். குறிப்பாக, சாலையில் செல்கிறோம். பஸ்ஸோ, காரோ நம் மீது மோதி ஒரு ஆபத்து ஏற்பட்டு விடுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தண்டனை வழங்கியது நீதிமன்றம். அரசுக்கும், இதற்கும் தொடர்பு இல்லை. அதை எப்படி நீங்கள் அதிகம் என்று பேசலாம்?

**திரு. ஜி. நிஜாமுதீன்:** சாலையில் நாம் சென்றுகொண்டு இருக்கிறோம். ஒரு வாகனம் நம் மீது மோதிவிட்டது என்று சொன்னால், அதற்காக 10 ஆண்டு காலம் சிறைத் தண்டனை; 3 இலட்சம் ரூபாய் அபராதம் என்று அறிவிப்பது இல்லை. அது ஏதோ தவறுதலாக நடந்துவிட்ட ஒன்று என்ற காரணத்தால், 3 ஆயிரம் ரூபாயோ, 4 ஆயிரம் ரூபாயோ அபராதம் விதிக்கிறோம். அப்படித்தான் இதுவும் நடந்து இருக்கிறது. ஏனென்றால் ஒரு குற்றம் என்று சொன்னால், அதற்கு மன ரீதியாகவும், உடல் ரீதியாகவும் நமக்கு இசைவு இருக்க வேண்டும். இது மன ரீதியாக இசைவு உள்ள ஒன்றல்ல. இது சாதாரணமாக தவறுதலாக நடந்துவிட்ட ஒன்று. அன்றைக்கே இதைப்பற்றிக் குறிப்பிடும்பொழுது, சட்டமன்றம், அரசு என்பது மக்களின், ஒரு மனிதனின் மயிர், கால், நாடி ஆகிய இசைவுகளைப் பார்த்து நடக்கக் கூடியது. ஆனால் நீதிமன்றம் அப்படியல்ல. ஏதோ 4 அறைக்குள் தந்த தீர்ப்பு என்றால், எதிர்காலத்தில் ஏற்படும் விளைவுகளுக்கு அவர்கள் பொறுப்பு ஏற்கமாட்டார்கள். இதை அரசும், அரசை நடத்திச் செல்கின்ற அதிகாரிகளும், சட்டமன்ற உறுப்பினர்களும்தான் பார்த்து அதற்காக ஆவன செய்ய வேண்டுமென்பது நிலை மீண்டும் மீண்டும் இதுமாதிரி தீர்ப்பு வந்தால், எதிர்காலத்திலே மருத்துவமனைகளில் மருத்துவம் பார்ப்பவர்களுக்கு ஆபத்தான நிலை வந்துவிடும். ஆகவே இதுகுறித்து அரசு தலையிட்டு, இதுபோன்று தொடர்ந்து நடக்காதவண்ணமும், இப்பொழுது வந்துவிட்ட பிரச்சினையை ஒரு முடிவுக்குக் கொண்டு வரவேண்டிய நிலையிலும் முடிவு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகின்றேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் அரசு மருத்துவமனையில் உமாகாந்தன் என்ற டாக்டர் ஒரு பெண்ணுக்கு குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்ததில் அந்தப் பெண் மரணமடைந்ததையொட்டி, அவருடைய தந்தையால் தொடுக்கப்பட்ட வழக்கில் டாக்டருக்கு 10 ஆண்டு காலம் சிறைத் தண்டனை கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சிறைத்தண்டனையைப் பொறுத்தவரையில், நீதிமன்ற விவகாரத்திற்குள் நான் செல்ல



விரும்பவில்லை. அதைப்போல அந்த டாக்டர் செய்தது தவறா, இல்லையா என்பதையும் நான் விளக்கவில்லை. ஒன்றே ஒன்று. எது எப்படி இருந்தாலும் இப்போது பொதுமக்கள் அதிகம் பாதிப்புக்கு ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள். அந்த டாக்டர்களைப் பொறுத்தவரையில் அவர்களுடைய சங்கம் ஏற்கெனவே அரசுக்கு ஒரு கெடு கொடுத்து, இந்த 5 ஆம் தேதிக்குள் எங்களுடைய பிரச்சினையை இந்த அரசு தீர்க்காவிட்டால், நாங்கள் operation செய்வதை நிறுத்திக்கொள்வோம் என்று ஏற்கெனவே கால அவகாசம் கொடுத்திருக்கிறார்கள்.

*முற்பகல் 10-20*

உண்மையிலேயே பொதுமக்கள் மீது இந்த அரசுக்கு அக்கறை இருந்திருந்தால், நம்முடைய சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் முன்னேற்பாடாக அவர்களை எல்லாம் அழைத்துப் பேசி இந்தப் பிரச்சினையை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்திருக்கலாம். ஏனோ அவர்கள் விட்டுவிட்டார்கள். எது எப்படி இருந்தாலும், இதில் பொதுமக்கள் பாதிக்கப்படுகின்ற காரணத்தால் உடனடியாக இந்த அரசு தலையிட்டு இதற்கு ஒரு முடிவு ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற அரசாங்கம் இருந்தபோது, 1995 ஆம் ஆண்டு நடந்ததையடுத்து இன்று டாக்டர்களுடைய போராட்டம் மிகப் பெரிய போராட்டமாக... (குறுக்கீடு)

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் கணேசன் அவர்கள் பேசுகின்றபோது உறுப்பினர் சுந்தரம் அவர்கள் எழுந்து நாம் எல்லோரும் கூட்டு, எதிர்த்துப் பேசாதீர்கள் என்று சொல்லுகிறார். கூட்டு இருக்கிறதா, உடைந்து விட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும். உறுப்பினர் சுந்தரம் தனிப்பட்ட முறையில் பல கூட்டுகளுக்கு முயற்சி செய்துகொண்டிருக்கிறார். (சிரிப்பு)

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றே காதிலே பூ வைத்து விட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. ஐ. கணேசன்] [1999 ஏப்ரல் 6

நான் கூட்டணி பற்றிப் பேசவில்லை. (சிரிப்பு) காதிலே பூ வைத்ததைப் பற்றி தான் பேசினேன்.

1995ஆம் ஆண்டு மருத்துவருடைய கவனக் குறைவால் ஒரு உயிர் அநியாயமாகப் பறிபோனதை முன்னிட்டு நீதிமன்றத்திற்குச் சென்று, நீதிமன்றம் உத்தரவு வழங்கி இருக்கிறது. அந்த டாக்டர் தண்டிக்கப்பட வேண்டியவர் என்று நீதிமன்றம் உத்தரவு வழங்கியிருக்கிறது. நீதிமன்றத்திற்கும் டாக்டர்களுக்கும் நடக்கக்கூடிய இந்தப் பிரச்சினையில் அரசு எப்படியாவது தலையிட வேண்டும் என்பதற்காக இன்று பொதுமக்களுக்கு இடையூறாக அனைத்து மருத்துவமனைகளிலும் அறுவை சிகிச்சை செய்யப்படமாட்டாது என்று டாக்டர்கள் சொல்வது பொதுமக்களுக்கு மிகப் பெரிய வேதனையாக இருக்கிறது. நீதிமன்றம் தண்டனை கொடுத்ததை எதிர்த்து அவர் மேல் முறையீடு செய்திருக்கிறார். மேல் court-டிலே என்ன தீர்ப்பு வரும் என்று தெரியாது. இதற்குள்ளாக பொதுமக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். நம்முடைய அமைச்சர் அவர்களும், நம்முடைய முதலமைச்சர் அவர்களும் மிகத் திறமையானவர்கள் என்பதை நாடறியும். எனவே, அமைச்சர் அவர்கள் டாக்டர்களை அழைத்து அவர்களுக்கு அறிவுரை சொல்லி, பொதுமக்களுக்கு இடையூறு இல்லாத வகையில் சிறந்த ஒரு நடவடிக்கையை இந்த அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

***திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் அரசு மருத்துவமனையிலே ஒரு பெண்ணுக்குக் குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்கின்ற நேரத்திலே அந்த அறுவை சிகிச்சை செய்த மருத்துவர் உமாகாந்தன் என்பவர் சரியான முறையில் அறுவைச் சிகிச்சை செய்யவில்லை என்பதன் காரணமாக அந்தப் பெண்மணி இறந்துவிட்டார் என்கின்ற நிலையிலே அவருடைய தந்தையார் நீதிமன்றத்திற்குச் சென்று வழக்கு தொடர்ந்து, அதன்மூலமாக அந்த மருத்துவருக்கு நீதிமன்றம் தண்டனை வழங்கியிருக்கிறது. அரசு எந்தவகையிலும் அந்த மருத்துவருக்கு இடையூறோ அல்லது தவறுகளோ செய்யவில்லை என்பது மிகத் தெளிவாகத் தெரிந்த ஒன்று. இது நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு. அந்த நீதிமன்றத்தினுடைய தீர்ப்பின் அடிப்படையிலே இன்றைக்கு மருத்துவர்கள் தங்களுடைய அறுவை சிகிச்சையை, பொதுமக்களுக்குக் கிடைக்க வேண்டிய அந்தப் பணிகளை



1999 ஏப்ரல் 6] [திரு. லா. சந்தானம்]

செய்யமாட்டோம் என்று மறுப்பது எந்த வகையிலும் முறையானதாக இருக்க முடியாது.

*முற்பகல் 10-25*

அதை நமது அரசு அவர்களுக்கு எடுத்துச் சொல்லி, இது நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு; அவர்களுக்கு மேல்முறையீடு செய்வதற்கு வாய்ப்புகள் அளிக்கப்பட்டிருக்கின்றன; ஆகவே மேல்முறையீட்டிலே அந்தத் தீர்ப்பு மாற்றி அமைவதற்கான வாய்ப்புகளும் உண்டு; அதற்கு அரசு எந்தவகையிலே உதவி செய்ய முடியுமோ அதைச் செய்வதற்கு அரசு தயாராக இருக்கிறது என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்களும், நமது மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும் அந்த மருத்துவர்களை அழைத்துப் பேசி, அதன்மூலம் இங்கே இருக்கிற ஏழையெளிய மக்கள் பாதிக்கப்பட்டுவிடக் கூடாது என்கின்ற நிலையை எடுத்துச் சொல்லி, அவர்களைச் சமாதானப்படுத்தி, அவர்கள் மேற்கொள்ள இருக்கின்ற அந்த வேலைநிறுத்தத்தை வாபஸ் பெறுவதற்கு உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

***திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1995 ஆம் ஆண்டில் சிதம்பரம் அரசு மருத்துவமனையில் நடைபெற்ற குடும்ப அறுவை சிகிச்சையின் மூலமாக ஒரு பெண் இறந்ததையொட்டி, நீதிமன்றம் அந்த மருத்துவருக்கு ஒரு தண்டனை வழங்கியிருக்கிறது. ஆனால், அந்தத் தண்டனையை எதிர்த்து மேல்முறையீடு செய்வது போன்ற நடவடிக்கைக்குச் செல்வதுதான் உரிய நடவடிக்கையாக இருக்கும். அதற்காக ஒரு வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவது அல்லது தாங்கள் அறுவை சிகிச்சை செய்ய முடியாது என்ற ஒரு நடவடிக்கைக்கு வருவது என்பது ஒரு துரதிருஷ்டமான நிலையாகும். இது சாதாரண மக்களைப் பெரிய அளவிற்குப் பாதிக்கக்கூடிய நிலையாகும். எனவே, அந்த நிலையிலிருந்து அவர்களை மாற்றுவதற்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களும், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும் சேர்ந்து, அந்த மருத்துவர்களை அழைத்துப் பேசி, இதற்கு ஒரு சுமுகமான தீர்வை ஏற்படுத்த வேண்டும். ஏனென்றால், நீதிமன்றத்தினுடைய தண்டனைக்குள்ளே அரசு செல்ல இயலாது என்ற காரணத்தினால், இந்த ஒரு முறையைக் கையாண்டு, அவர்களுடைய நடவடிக்கைகளிலிருந்து அவர்களைப் பின்வாங்கச் செய்யவேண்டுமென்று கேட்டு, அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மருத்துவர்கள் அறுவை சிகிச்சை செய்ய மாட்டோம் என்று போராட்டத்தில் இறங்கியிருப்பது, பாமர மக்களுக்கு மிகுந்ததொரு பிரச்சினையாக மாறியுள்ளது. இந்த மருத்துவர்களுடைய நிலையைக்கூட நாம் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். தக்க சமயத்தில் பல மருத்துவர்கள் தங்களுடைய முயற்சியின் மூலம், தங்களுடைய உழைப்பின் மூலம் பல உயிர்களைக் காப்பாற்றியிருக்கக்கூடிய சம்பவங்களும்கூட உண்டு. அப்படியிருக்கக்கூடிய சூழ்நிலையில், நோய் என்பது பெரும்பாலானவை குணமாகின்றன. சில, தோல்விகூட அடைந்துவிடுகின்றன. அது இயற்கை. அப்படி இருக்கும்போது, சில சந்தர்ப்பங்களில் சில மருத்துவர்களது அறுவை சிகிச்சையின் மூலம் சில தோல்விகள் ஏற்படுவதைக் காரணம் காட்டி, அவர்களுக்குத் தண்டனை வழங்கக்கூடிய நிலைக்குச் சென்றிருக்கிறது. ஆகவே, நீதிமன்றத்திற்குள் நான் செல்ல விரும்பவில்லை. இப்படி இருக்கும்போது, மருத்துவர்களுடைய தொழிலில் ஆர்வத்தைக் குறைத்துவிடுமோ என்ற அச்சம் எழுகின்றது. ஆகவே, உயிர்காக்கக்கூடிய தொழிலைச் செய்யக்கூடியவர்கள், தங்களுடைய தொழிலைத் தெய்வமாக நினைத்து பார்க்கின்ற பழக்கவழக்கத்தோடு வாழக்கூடியவர்களுக்கும்கூட, இந்தத் தொழிலில் இருக்கக்கூடிய ஆர்வத்தைக் குறைத்துவிடுமோ என்கின்ற நிலை இருக்கிறது. பல மருத்துவர்கள், தனியார் மருத்துவர்கள்கூட, காசைக்கூடப் பார்க்காமல், மக்களுக்கு உதவக்கூடிய நிலை இருக்கிறது. அரசு மருத்துவமனைகளில் பல மருத்துவர்கள் கடமையிலே கண்ணாக இருக்கக்கூடியவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் இது ஒரு கேள்விக்குறியாகிவிட்டால், தொழிலில் இருக்கக்கூடிய ஆர்வத்தைக் குறைத்துவிட்டால், அது இதைவிட அதிக மோசமான நிலைக்குச் சென்றுவிடும். எனவே, *1995* ஆம் ஆண்டு நடந்த சம்பவத்திற்கான தீர்ப்பு என்பது இது குறிப்பட்டதொரு பிரச்சினை என்ற அளவிற்கு அதை எடுத்துக்கொள்ளவேண்டும்; மருத்துவர்களுடைய சங்கத்தினர் மேல்முறையீடு செய்வதுதான் முறை என்பதை விளக்க, அந்த ஒரு பிரச்சினைக்குத்தான் அந்தத் தீர்ப்பு; பொதுவாக இப்படிச் செய்வது முறையல்ல என்று விளக்க, நம்முடைய அரசாங்கமும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும் அவர்களை அழைத்துப் பேசி, இதுபோன்ற பிரச்சினைகளை அவர்களிடம் எடுத்துச் சொல்லி, இது பொதுமக்களுக்கு எந்த அளவிற்குப் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது



என்பதை உணர்த்தி, அவர்கள் மீண்டும் மருத்துவத் தொழிலில் ஆர்வத்தோடு ஈடுபட்டு, எல்லோரும் சிலாகிக்கக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்த அரசு ஆவன செய்ய வேண்டும். அதே சமயத்தில், அவர்களுக்கு எந்த அளவிற்குப் பாதுகாப்பு வழங்க வேண்டும் என்பதையும் அரசு சிந்தித்து, சட்டப்படியாக அவர்களுக்கு உதவவும் முன்வர வேண்டுமென்று கேட்டு, அமர்கின்றேன்.

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் கிருஷ்ணசாமி.

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் அரசு மருத்துவமனையில் டாக்டர் உமாகாந்தன் அவர்கள் *1995* ஆம் ஆண்டு செய்த குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சையில் ஏற்பட்ட விபத்தின் காரணமாக ஒரு பெண் உயிரிழக்க நேர்ந்ததையடுத்து ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டு, இப்போது *10* ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. அந்த மருத்துவருக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய இந்த நிலையைக் கண்டித்தும், ஒட்டுமொத்தமாக எதிர்காலத்திலே மருத்துவர்களுக்கு இதுபோன்ற நிலை ஏற்படக்கூடாது என்பதை வலியுறுத்தியும் தமிழகத்தில் இருக்கக்கூடிய அனைத்து மருத்துவர்களும் நேற்று அரசு மருத்துவமனைகளில் குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்வதில்லை என்ற போராட்டமும், அடுத்த வாரத்திலே தொடர்ச்சியாக எந்த அறுவை சிகிச்சையும் செய்வதில்லை என்ற முடிவுக்கும் வந்திருக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையில் என்னுடைய கருத்துக்களை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஓர் அறுவை சிகிச்சையின்போது ஒரு சிறு தவறு ஏற்பட்டதன் காரணமாக ஒரு பெண் உயிரிழக்க நேர்ந்தது வருந்தக்கூடிய விஷயம். எந்தத் தொழிலிலும் நூற்றுக்கு நூறு உத்தரவாதமாகச் செய்ய இயலாது என்பதும் யதார்த்தம். ஓர் அறுவை சிகிச்சையின்போது ஏற்பட்ட விபத்துக்கு *10* ஆண்டு சிறைத் தண்டனை ஒரு மருத்துவருக்கு என்பது யாராலும் ஏற்றுக்கொள்ள முடியாதது. அதோடு *3* இலட்சம் ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டிருக்கிறது. இதிலே என்னுடைய கருத்து என்னவென்றால் அரசு மருத்துவருக்கு ஆதரவாக வழக்குப் பதிவு செய்யப்பட்டிருந்தாலும்கூட, வாதாடிய அரசு வழக்கறிஞர் முறையாக வாதாடியிருந்தால் நிச்சயமாக *10* ஆண்டு சிறைத் தண்டனை கிடைத்திருக்காது என்பதை நான் சுட்டிக்காட்டக்

[டாக்டர் க. கிருஷ்ணசாமி] [1999 ஏப்ரல் 6

ஏற்கெனவே தமிழ்நாடு அரசு அறிவித்ததாகச் சொல்லப்படுகிறது- மருத்துவர்கள்மீது criminal வழக்குகள் பதிவு செய்யக்கூடாது என்று. அதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதேநேரத்தில் இந்த மருத்துவர் டாக்டர் உமாகாந்தன் அவர்களை ஜாமீனில் எடுப்பதற்காகவாவது தமிழக அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், ஒருவேளை 3 இலட்சம் ரூபாய் பணம் கட்ட வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தால் 3 இலட்சம் ரூபாய் ஒரு மருத்துவரால் கட்டுவது இயலாத காரியம். அரசு மருத்துவராக இருக்கின்ற காரணத்தினாலே அரசே அந்த 3 இலட்சம் ரூபாயையும் கட்டி உடனடியாக அவரை முதலில் ஜாமீனில் வெளியே எடுப்பதற்கும், நல்ல அரசு வழக்கறிஞர்களை வைத்து வாதாடி அவருக்கு விடுதலை பெற்றுக் கொடுப்பதற்கும், அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதன் மூலமாக ஒட்டுமொத்தமாக, தமிழகத்திலே அரசு மருத்துவர்கள் மத்தியிலே ஏற்பட்டிருக்கக்கூடிய பதற்றத்தைத் தணிக்க முடியும். அதற்குண்டான நடவடிக்கையை அரசு எடுக்க வேண்டுமென்று வலியுறுத்தி விடைபெறுகின்றேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் மருத்துவமனையில், மருத்துவர் உமாகாந்தன் அவர்களுக்கு நீதிமன்றம் கொடுத்த தண்டனை குறித்தும், அதனையொட்டி, மருத்துவர்கள் இன்றையதினம் குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்ய மாட்டோம் என்று நடத்துகின்ற போராட்டங்கள் குறித்தும், மாண்புமிகு உறுப்பினர்கள் டாக்டர் தே. குமாரதாஸ், திரு. நா. பெரியசாமி, திரு. ஜி. நிஜாமுதீன், திரு. பி.ஆர். சுந்தரம், திரு. ஐ. கணேசன், திரு. லா. சந்தானம், திரு. டி. மணி, திரு. சி. வேலாயுதன், டாக்டர் க. கிருஷ்ணசாமி ஆகியோர் பல்வேறு கருத்துக்களை இங்கே சொல்லியிருக்கின்றார்கள். ஆகவே, இந்த அரசாங்கத்தினுடைய நிலைமையை விளக்குவது என்னுடைய கடமை என்று கருதுகின்றேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. குமாரதாஸ் பேசுகின்ற நேரத்தில் டாக்டருக்கு வழங்கப்பட்டிருக்கின்ற தண்டனையை இரத்து செய்து விடுதலை செய்ய வேண்டுமென்று சொன்னார். நீதிமன்றம் கொடுக்கின்ற தண்டனையைக் குறைப்பதற்கோ அல்லது விடுதலை செய்வதற்கோ அரசாங்கத்திற்கு உரிமையிருக்கிறதா, அதிகாரம்



1999 ஏப்ரல் 6] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

இருக்கிறதா என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். நம்முடைய பிரச்சினையையே, நீதிமன்றத்திலே நம்மாலே தீர்த்துக்கொள்ள முடியவில்லை. அப்படியிருக்கும்போது, டாக்டர்களுக்காக நாம் போய் வாதாடி எந்த அளவிற்கு நீதிமன்றங்களிலே நாம் வெற்றி பெற முடியும் என்பதும் எனக்குத் தெரியவில்லை. ஆனால், உண்மை என்னவென்றால், இது 1995-ஆம் ஆண்டு கடந்த கால ஆட்சியிலே நடைபெற்றது. அப்போது, நீதிமன்றத்திலே 40 முறை வாய்தா போட்டிருக்கின்றார்கள். அவர்கள் விசாரணை நடத்தியிருக்கிறார்கள். குற்றச்சாட்டு பதிவு செய்தவுடனேயே அவர் கைது செய்யப்பட்டு bail-இல் வெளியே வந்திருக்கிறார். அதற்குப் பிறகு இந்த 4, 5 ஆண்டுகாலமாக இப்போது போராட்டம் நடத்துகின்ற டாக்டர்கள் சங்கமோ டாக்டர்களோ அது பற்றி எந்தவிதமான கருத்தும் தெரிவிக்கவில்லை, ஆனால் இப்போது திடீரென்று இந்தப் போராட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். அதனுடைய விளைவுகளைப் பற்றியெல்லாம் நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 10-35

முதலிலே என்ன நடந்தது என்பதை இந்த அவைக்குத் தெரிவிப்பது என்னுடைய கடமை. சிதம்பரம் மருத்துவமனையில் மருத்துவர் உமாகாந்தன் அவர்கள் கடந்த ஆட்சிக் காலத்திலே, 2-2-1995 அன்று குடும்ப நல அறுவை சிகிச்சை செய்த பெண் ஒருவர் சில நாட்கள் கழித்து இறந்துவிட்டார். அப்பெண்ணின் தந்தையார் காவல் நிலையத்தில் தனிப்பட்ட குற்றவியல் புகார்—private criminal complaint செய்ததன் பேரில் காவல் துறையினர் விசாரணை மேற்கொண்டு, வழக்கு நடத்தி உள்ளனர். Prosecution சார்பாக சக மருத்துவர்கள் உட்பட பலர் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டனர். சிதம்பரம் நீதிமன்றத்தில் வழக்கு நடந்தபோது டாக்டர் உமாகாந்தன் எந்த ஒரு நிலையிலும் அரசுத் துறையின் உதவியை நாடவில்லை. மேலும் தனிப்பட்ட முறையில் அவரே வழக்கை நடத்தியுள்ளார். அவர் சார்பாக அவர் நியாயத்தை எடுத்துரைக்க சாட்சிகள் யாரையும் ஆஜர்படுத்தி விசாரிக்கப்படவில்லை எனத் தெரிகிறது. எனவே, இவ்வழக்கில் விசாரணைக்கு வந்த சாட்சிகளின் வாக்குமூலங்களின்படி நீதிமன்றம் டாக்டர் உமாகாந்தன் அவர்களுக்குச் சிறைத் தண்டனையும், அபராதமும் விதித்துள்ளது. இந்த நிலையில் நீதிமன்றம் தனது தீர்ப்பை வழங்கிய பின்னர், இந்த அரசின் மீது குறை கூறுவது சரியல்ல.

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1999 ஏப்ரல் 6

மேலும், *1997* ஆம் ஆண்டு இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு, தமிழ்நாடு அரசு மருத்துவர் சங்கத்தின் சம்மேளனம் விடுத்த கோரிக்கையை ஏற்று, மருத்துவர்கள் மீது மருத்துவ சிகிச்சையின்போது ஏற்படும் அசம்பாவிதங்களுக்குக் குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டாம் என்று காவல் துறைக்கு அறிவுரை வழங்கியுள்ளது. ஆனால் இந்த வழக்கு டாக்டர் கலைஞர் அவர்கள் அரசு பதவிக்கு வருவதற்கு முன்பே, அதாவது *13-2-1995* அன்றே பதிவு செய்யப்பட்டு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வழக்கு ஆகும். இந்த நிலையில் இந்த அரசு பதவியேற்ற பின்னர் மருத்துவர்கள் பணியாற்றும்போது, அவர்களுக்கு ஏற்படும் இடர்ப்பாடுகளைக் கருத்தில்கொண்டும், அரசு மருத்துவர்கள் செய்யும் அறுவை சிகிச்சையில் தவறு ஏற்பட்டால், நோயாளிகளின் நலனைக் கருத்தில் கொண்டும், அறுவை சிகிச்சை செய்த மருத்துவர்கள்மீது இலாகா விசாரணை நடத்தி, மருத்துவர்கள் கவனக் குறைவால் தவறு ஏதும் நிகழ்ந்து இருக்குமானால், தமிழ்நாடு அரசு அலுவலர்களுக்கான ஒழுங்கு மற்றும் மேல் முறையீடு விதிகளின்படி அவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், பாதிக்கப்பட்டவர்களின் வாரிசுகளுக்கு முதலமைச்சர் அவர்களின் நிவாரண நிதியிலிருந்து தக்க நிவாரணமும் வழங்கப்படுகிறது.

உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால், *2, 3* மாதங்களுக்கு முன்னால் குமாரபாளையத்திலே ஒரு சகோதரி மகப்பேறுக்காகச் சென்றிருந்தபோது டாக்டர்களுடைய கவனக் குறைவால் அவர் இறந்துவிட்டார் என்று தெரிந்ததும், முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து பாதிக்கப்பட்ட அந்தக் குடும்பத்திற்கு நாம் நிதி வழங்கியிருக்கின்றோம். இந்த அவையிலேகூட அதை அறிவித்திருக்கின்றோம். டாக்டர்கள் மீது இலாகாபூர்வமாக விசாரணை நடைபெறுகிறதே தவிர, criminal வழக்கு அவர்கள்மீது பதிவு செய்யவில்லை.

அதேபோல தனியார் ஒருவர் கொடுத்த புகாரின்மீது தொடரப்பட்ட இந்த வழக்கில் தொடர்புடைய மருத்துவர் அரசினுடைய உதவியை நாடாமல் தானே தனிப்பட்ட முறையில் வழக்கை நடத்தி, தண்டனை பெற்றதற்குத் துறையைத் தொடர்புபடுத்துவது சரியானதல்ல. மேலும், நீதிமன்றம் அளித்த தீர்ப்பிற்கு டாக்டர் உமாகாந்தன் உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்து, நிவாரணம் காண்பதே முறையாகும். இந்த



1999 ஏப்ரல் 6] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

அமைப்புகூட இதே கருத்தை எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். நிலையில் நீதிமன்றம் அளித்த தீர்ப்பிற்கு எதிராக அறுவை சிகிச்சை செய்ய மறுப்பது போன்ற போராட்டங்களில் ஈடுபடுவது சட்டப்படி நீதிமன்ற அவமதிப்பு குற்றமாகும். இதை ஏதோ நான் மட்டும் சொல்லவில்லை. இன்று Hindu பத்திரிகையைப் பார்த்தால், ஒரு தனியார்

தமிழ்நாட்டில் குடும்ப நலத் திட்டம் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் *3* இலட்சத்திற்கு மேல் பெண்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது. இதில் மிகச் சிலருக்கு சில சிக்கல்கள் - complications உருவாகி கருத்தரிப்பு ஏற்பட்டுவிடுகிறது அல்லது பிற பாதிப்புகளால் இறப்பு ஏற்படுகிறது. மருத்துவர்கள் நீதிமன்றத் தீர்ப்பிற்கு எதிராகப் போராட்டம் நடத்துவார்களானால் அறுவை சிகிச்சைக்காக அரசு மருத்துவமனைகளில் காத்துக்கொண்டிருக்கும் ஏழை எளிய நோயாளிகளுக்கும் மற்றும் அவர்கள் குடும்பத்தினருக்கும் பெரும் பாதிப்பு ஏற்படும். இதனால் அரசு மருத்துவர்கள் மீதும், அரசு மருத்துவமனைகள் மீதும் நல்லெண்ணமும், நம்பிக்கையும் நிச்சயமாகக் குறையும்..

இந்தப் போராட்டத்திற்கு என்ன காரணம் என்பதை இந்த அவையிலே விளக்குவது என்னுடைய கடமை. உண்மையிலேயே உமாகாந்தன் பிரச்சினைதான் இதற்குக் காரணமா என்றால், எனக்குத் தெரிந்த வரையில் அப்படியில்லை. டிசம்பர் மாதம் ஒரு நாள் அவருடைய கோரிக்கைக்காக போராட்டம் நடத்தி ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தம் செய்தார்கள். பிறகு வேலை நிறுத்த notice கொடுத்தார்கள். அப்போது இந்த அரசாங்கம் அவர்களையெல்லாம் அழைத்துப் பல முறை பேசி, இரவு *12* மணி, *1* மணிவரையெல்லாம்கூடப் பேசி முதலமைச்சர் அவர்கள் மிகுந்த கருணையுள்ளத்தோடு, அவர்கள் கேட்ட நியாயமான கோரிக்கைகள் என்றுகூடச் சொல்லமாட்டேன், வேறு எங்கும் இல்லாத அளவுக்குப் பல கோரிக்கைகளை ஏற்று இந்த அரசாங்கம் நிறைவேற்றித் தந்தது. ஆனால் அந்தச் சங்கத்திலே இருக்கக்கூடிய ஒருசிலர் இந்த அரசாங்கத்தினுடைய அறிவிப்பை ஏற்றுக்கொள்வதற்கு மறுத்து அங்கே சில பிரச்சினைகளை உருவாக்கியிருக்கிறார்கள். எனவே, அந்தச் சங்கத்தில், தங்களுடைய பதவியைக் காப்பாற்றிக் கொள்வதற்காக இப்போது இப்படிப்பட்ட போராட்டம் நடத்தப்படுகிறதோ என்றும் இந்த அரசாங்கம் கருதுகிறது. எனவேதான், இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையிலே அவர்கள் சங்கத்திலே இருக்கக்கூடிய நிர்வாகிகள்

தங்களுடைய பதவிகளைக் காப்பாற்றிக் கொள்வதற்கு இப்படிச் செய்வார்களேயானால் அதைக் கண்டிக்க இந்த அரசாங்கம் கடமைப்பட்டிருக்கிறது. அதேநேரத்தில் மருத்துவமனையிலே இருக்கக்கூடிய நோயாளிகள் எந்தக் காரணத்தைக் கொண்டும் பாதிக்கப்பட்டுவிடக் கூடாது என்பதிலேயும் அக்கறை கொண்டிருக்கிறது.

*முற்பகல் 10-40*

இங்கே விவாதிக்கப்பட்டு, இந்தக் கருத்துக்களைத் தெரிவித்ததற்குப் பிறகும் மருத்துவர்களுக்கு உண்மையிலேயே டாக்டர் உமாகாந்தன் மீது அக்கறை இருக்குமானால், 10,000 உறுப்பினர்களைக் கொண்ட அந்தச் சங்கம் 3 இலட்சம் ரூபாய் பணத்தைக் கட்டினால் உடனே ஜாமீனில் விடுவதற்கு நீதிமன்றம் தயாராக இருக்கிறது. அதை அவர்கள் கட்ட மறுக்கிறார்கள். ஏனென்றால், இதை ஒரு பிரச்சினையாக ஆக்க வேண்டும், அரசுக்கு எதிராக நடத்த வேண்டும், என்றுதான் கருதுகிறார்களே தவிர, ஒரு சங்கத்திற்கு 3 இலட்சம் ரூபாய் கட்டுவது என்பது பெரியதல்ல. அதிலேயும், 10,000 டாக்டர்களை உறுப்பினர்களாகக் கொண்ட ஒரு சங்கத்திற்கு இது ஒரு பெரிய காரியமே அல்ல. சாதாரண தொழிற் சங்கங்களெல்லாம்கூட உறுப்பினர்களிடத்திலே கட்டணம் வசூல் செய்து ரூ. 5,00,000, 6,00,000 வங்கியிலே வைத்திருக்கிறார்கள்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் போன்றவர்களெல்லாம் சொன்னார்கள், டாக்டர்களை அழைத்துப் பேசுங்கள் என்று. ஏதோ நாங்கள் அழைத்துப் பேசாததைப் போலவும், நாங்கள் அவர்களைச் சந்திக்க மறுப்பதைப் போலவும், ஒரு பிரச்சினை இங்கே எடுத்துச் சொல்லப்பட்டது. அது உண்மையல்ல. டாக்டர்கள் சங்கத்தினுடைய பிரதிநிதிகள் 2 தினங்களுக்கு முன்னாலே கூட என்னிடத்திலே வந்து கேட்டபோது, அரசாங்கம் உங்களுக்காக கருணையோடு பரிசீலிக்கத் தயாராக இருக்கிறது, எதையும். ஆனால், நீதிமன்றப் பிரச்சினையிலே அரசாங்கம் எப்படித் தலையிட முடியும், அதைச் சொல்லுங்கள் என்று கேட்டால் அதற்கு அவர்களுக்கே வழி தெரியவில்லை. இந்தச் சூழ்நிலையிலேதான் இந்தப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எனவே, அரசாங்கத்தைப் பொறுத்தவரையிலே, நாங்கள் எதையும் கௌரவப் பிரச்சினையாக நினைப்பதில்லை. டாக்டர் உமாகாந்தனை வெளியே கொண்டுவர வேண்டுமென்றால், நீதிமன்றம், 3 இலட்சம் ரூபாய் பணத்தை deposit செய்யுங்கள், நாங்கள் bailஇல் விடுகிறோம் என்று சொல்கிறார்கள். அதை அரசாங்கம் கட்ட முடியாது.



ஏனென்றால், அவர்தான் கட்ட வேண்டும். அவருக்காக அந்தப் பணத்தை சங்கம் மூலம் கட்டுங்கள் என்று நான் சொன்னேன். அதை அவர்கள் ஏற்றுக்கொள்வதாக இல்லை. எனவே, இந்தச் சூழ்நிலையிலே நோயாளிகளினுடைய நன்மையைக் கருதி இனிமேலும் இதிலே அதிகமாகக் காலதாமதம் செய்யாமல் உடனடியாக எங்கேயெல்லாம் அறுவை சிகிச்சை செய்ய டாக்டர்கள் மறுக்கிறார்களோ அங்கேயெல்லாம் புதியதாக டாக்டர்களை நியமித்து நிச்சயமாக நோயாளிகளைக் காப்பாற்ற இந்த அரசாங்கம் (மேசையைத் தட்டும் ஒலி) நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதற்கு என்ன விளக்கம் கேட்கப் போகிறீர்கள்?

**டாக்டர் தே. குமாரதாஸ்:** விளக்கம் அல்ல. நான் இரத்து செய்ய வேண்டும் என்று சொன்னதனுடைய பொருள், நாமே இரத்து செய்ய வேண்டும் என்பதல்ல. துரிதமாக வழக்கை முடித்து அவரை வெளியே கொண்டு வருவதற்கு அரசு துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்கிற அடிப்படையிலே சொன்னேனே தவிர வேறல்ல. ஏனென்றால், அவர்களைக் காப்பாற்ற வேண்டியதும் அரசினுடைய பொறுப்பாக இருக்கிறது. எனவே, அரசு இதை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விளக்கத்தைத் தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். தண்டனையை, தற்காலிகமாக நீதிமன்றம் இரத்து செய்யும். அபராதத் தொகையைக் கட்டாயம் கட்டியாக வேண்டும் என்று எந்த வழக்காக இருந்தாலும் நீதிமன்றம் சொல்லும். அதுதான் பிரச்சினை.

## (ஆ) தோட்டத் தொழிலாளர்கள் வேலை நேரம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த சிறப்புக் கவன ஈர்ப்பு. தோட்டத் தொழிலாளர்களுக்கு 9 மணி நேரம் வேலை என நிர்ணயம் செய்தது குறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டுவரும் அறிவிப்பினை டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். டாக்டர் க. கிருஷ்ணசாமி சுருக்கமாகப் பேசுவார் என்று நான் நினைக்கின்றேன். டாக்டர் க. கிருஷ்ணசாமி.

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தோட்டத் தொழிலாளர்களுடைய வேலை நேரம் பற்றிய சிறப்புக் கவன ஈர்ப்பை இந்த அவையிலே எழுப்ப வாய்ப்புக் கொடுத்த தங்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியை முதலில் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

சமீபத்தில், தோட்டத் தொழிலாளர்களுடைய வேலை நேரம் குறித்து தொழிலாளர் துறை, மாஞ்சோலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு என்று தனியாகக் கொடுத்திருந்தாலும்கூட, ஒட்டுமொத்தமாக தோட்டத் தொழிலாளர்கள் தங்களுக்குக் கொடுக்கப்படக்கூடிய உணவு இடைவேளை அல்லாமல் 8 மணி நேரம் காட்டிலேயே வேலை செய்ய வேண்டும் என்று ஒரு உத்தரவு பிறப்பித்திருப்பது, மாஞ்சோலை உட்பட அனைத்துத் தோட்டத் தொழிலாளர்கள் மத்தியிலேயும், இதே நிலை எதிர்காலத்திலே அனைத்துத் தொழிலாளர்கள் மத்தியிலேயும் அதிர்ச்சியையும், ஒரு பதற்றத்தையும் உருவாக்கும் என்று கருதுவதால் இந்த அவையின் கவனத்தை நான் இந்தச் சிறப்புக் கவன ஈர்ப்பின் மூலமாக ஈர்க்க விரும்புகின்றேன்.

*முற்பகல் 10-45*

தொழிலாளர்களுக்கு ஒட்டுமொத்தமாக 8 மணி நேர வேலை என்பது ஏறக்குறைய 170, 180 ஆண்டுகளுக்கு முன்பாகவே மேலை நாடுகளிலே போராட்டம் தொடங்கி, இறுதியாக அமெரிக்காவில் சிகாகோவில் மிகப் பெரிய இரத்தக் கிளர்ச்சி ஏற்பட்டு, அதற்குப் பிறகு—8 மணி நேர வேலை நேரம் என்பது—உலகெங்கும் அமலுக்கு வந்தது. அதைத்தான் நாம் மே தினமாகக் கொண்டாடுகிறோம். இப்போது தமிழகத்தில் ஆகட்டும், இந்தியாவில் ஆகட்டும், மத்திய அரசு, மாநில அரசு, அரசுக்கு உட்பட்ட பொது நிறுவனங்கள் அனைத்திலேயும், எந்த இடத்திலேயும் 8 மணி நேரத்திற்கு மேலாக வேலை செய்வது கூடாது. எல்லா நிறுவனங்களிலேயும் தங்களுக்குக் கொடுக்கப்படக்கூடிய மதிய உணவு இடைவேளை அல்லது இரவு வேலை இருந்தால், அந்த இரவு வேலை கொடுக்கப்படுகிறபோது, அந்த உணவு இடைவேளைக்கு உட்படத்தான் 8 மணி நேரம் வேலை செய்கிறார்கள். தமிழகத்திலே இருக்கும் மத்திய அரசு நிறுவனங்கள் M.R.L. அதேபோன்று O.N.G.C. அதேபோல F.C.I., போன்ற எல்லா நிறுவனங்களிலேயும் கூட 7½, 8, 8¼ மணி நேரத்திற்கு மேலாக யாரும் வேலை செய்வது கிடையாது. அந்த 8¼ மணி நேரம் 8 மணி



நேரம், 7½ மணி நேரத்திற்குள்ளாகத்தான் அவர்களுக்கு 1/2 மணி நேரமோ, ¾ மணி நேரமோ, உணவு இடைவேளை கொடுக்கப்படுகிறது.

இந்த நிலையில் கடந்த 5 மாதகாலமாகத் தோட்டத் தொழிலாளர்கள் பல மணி நேரம் வேலை வாங்கப்படுகிறார்கள். காலை 6-00 மணிக்குச் சென்று மாலை 6-00 மணி வரையிலும் வேலை வாங்கப்படுகிறார்கள் என்ற குற்றச்சாட்டைச் சுமத்தி, 8 மணி நேரம் வேலை கொடுக்கப்பட வேண்டும் என்றுதான் புதிய தமிழகம் போராடியது, ஒட்டுமொத்தத் தொழிலாளர்களும் போராடினார்கள். மனித உரிமைக் கழகமும் வந்தது. அமைச்சர் முன்னிலையிலேகூட ஒரு பேச்சுவார்த்தை நடந்தது. அதிலேகூட 8 மணி நேரம் வேலை என்றுதான் முடிவு செய்யப்பட்டது. ஆனால், அதற்கிடையில் தொழிலாளர் நலத் துறை 15 நாட்களுக்கு முன்பாக இந்த 8 மணி நேரத்தில் உணவு இடைவேளை சேர்க்கப்படமாட்டாது என்று சட்டவிதிகளைக் காட்டி ஒரு உத்தரவு பிறப்பித்திருக்கிறது. ஆனால், சட்ட விதிகளில் எந்த ஷரத்திலேயும் திட்டவட்டமாக உணவு இடைவேளை சேர்க்கப்படாமல் 8 மணி நேரம் வேலை வாங்கப்பட்ட வேண்டும் என்று சொல்லப்படாதபோது தமிழ்நாடு தொழிலாளர் நலத் துறை இதுபோன்ற உத்தரவு பிறப்பித்திருப்பது ஒட்டுமொத்தத் தொழிலாளர்களுடைய நலனுக்குக் குந்தகம் விளைவிக்காதா என்பதுதான் என்னுடைய கேள்வி. இந்த உத்தரவின் மூலமாகக் கடந்த இரண்டு மாதகாலமாக, மாஞ்சோலையிலே தோட்டத் தொழிலாளர்கள், காலை 7½ மணிக்குச் சென்று, 3½ மணி வரை வேலை செய்தாலும்கூட, 8 மணி நேரத்திற்கு மேலாக வேலை செய்தாலும்கூட அவர்கள் அரைநாள் சம்பளம் மட்டும்தான் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். எனவே, இதன் காரணமாகப் பெரிய பதற்றம் அந்தப் பகுதியிலே நிலவுகிறது. தொழிலாளர்கள் தாங்கள் முழுமையாக 8 மணி நேரம் வேலை செய்தும்கூட, அரை நாள் சம்பளத்தை இழக்க வேண்டிய ஒரு அவலம் இருக்கிறது. இது தொழிலாளர் விரோத உத்தரவு. எனவே, இந்த உத்தரவை உடனடியாகத் தொழிலாளர் நலத் துறை வாபஸ் பெற வேண்டும் என்று வலியுறுத்தி அமர்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள், ஒரு பிரச்சனையைத் தெரிவித்துள்ளார்கள்.

சட்டத்திற்குட்பட்டுத்தான் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும். —தோட்டத் தொழிலாளர்கள் சட்டம் (The Plantation Labour Act, 1951) என்பது மத்திய அரசு கொண்டு வந்திருக்கக்கூடிய சட்டம். இது எல்லா மாநிலங்களுக்கும் பொருத்தமான சட்டம். இதுகுறித்து திருத்தங்கள் தாங்கள் சொல்கிறபோது, அது சரியானது என்று நிர்வாகமும், தொழிற்சங்கங்களும் பேசி ஒரு முடிவிற்கு வந்தால், அந்த திருத்தம் பற்றி (amendment) நாம் பரிசீலனை செய்யலாம். மத்திய அரசுக்கு எழுதலாம். ஆனால், உறுப்பினர் சொல்கின்ற வாதம் சரியானது அல்ல என்பது என்னுடைய பணிவான கருத்து. காரணம், வேலை நேரம் பற்றி Plantation Labour Act மிகத் தெளிவாகச் சொல்கிறது. Statutory Provisions Section 19, Section 20, Section 21 இவை எல்லாம் வேலை நேரம் பற்றி வரையறுக்கின்றன. வாரம் 48 மணி நேரத்திற்கு மேல் வேலை செய்யக்கூடாது. வாரத்தில் ஒரு நாள் கட்டாயமாக ஓய்வு (Leave) கொடுக்க வேண்டும். ஒரு நாளில் 12 மணி நேரத்திற்கு மேல் வேலை செய்யக்கூடாது. 8 மணி நேரம் வேலை செய்ய வேண்டும். 5 மணி நேரத்திற்குமேல் தொடர்ச்சியாக வேலை பார்க்கக்கூடாது. கண்டிப்பாக அரை மணி நேரம் குறைந்தபட்சம் அவர்களுக்கு இடைவேளை interval, rest கொடுக்க வேண்டும் என்று சட்டத்திலே தெளிவாக இருக்கிறது.

*முற்பகல் 10-50*

இப்பொழுது காலையிலே 7½ மணியிலேயிருந்து 12½ வரைக்கும் பணியாற்றுகிறார்கள். பிறகு மதியம் 1½ இலேயிருந்து 4½ வரைக்கும் பணியாற்றுகிறார்கள். காலையிலே 5 மணி நேரம்; மாலையிலே 3 மணி நேரம். இடைவெளி இருக்கக்கூடிய அந்த ஒரு மணி நேரம் conventional ஆக அரை மணி நேரம்தான் கொடுக்க வேண்டும் என்று சொன்னாலும் 1 மணி நேரம் என்ற நடைமுறை தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய எல்லா தேயிலைத் தோட்டங்களிலும் நடைபெற்று வருகிறது. எங்களுக்கு அந்த ஒரு மணி நேரம் வேண்டாம். அரை மணி நேரம் வேண்டும் என்று கேட்பீர்களேயானால் பரிசீலிக்கலாம். அந்த ஒரு மணி நேர இடைவேளை என்பது பற்றிய சட்டபூர்வமான Section-ஐ வாசிக்கிறேன்.

"The Period of work of each day shall be so fixed that no period shall exceed five hours and that no worker shall work for more than five hours before he has had an interval for rest for at least half-an-hour." கட்டாயமாக இந்த அரை மணி நேரம் கொடுக்க வேண்டும். இதை வேலை



நேரத்திலே சேர்க்கக் கூடாது. (குறுக்கீடு) முடித்து விடுகிறேன். ஒரு மணி நேரம் (குறுக்கீடு)

**HON. SPEAKER:** Dr. Krishnasamy, I won't allow you to interfere. Let the Minister complete his reply and then you can ask.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** இது ஒரு சட்டபூர்வமான கருத்து. ஒரு மணி நேரமோ, அரை மணி நேரமோ அது வேலைநேரத்திலே சேர்க்கப்படமாட்டாது. Effective actual working hour is eight hours. அதிலே இது include ஆகாது என்பதுதான் காலங் காலமாக அகில இந்திய அளவிலேயிருந்து இப்பொழுதும் ஏற்றுக் கொள்ளக் கூடியது.

மனித உரிமைக் கழகம் 8 மணி நேரத்திலே இந்த இடைவேளை ஒரு மணி நேரத்தைச் சேர்க்கக் கூடாது என்ற எங்களுடைய கருத்தை ஏற்காமல், சேர்க்க வேண்டுமென்று சொல்லியிருப்பதாகச் சொல்கிறார். மாண்புமிகு உறுப்பினர் வழக்கம்போல உண்மைக்குப் புறம்பாகச் சொல்கிறார். அப்படி மனித உரிமைக் கழகம் சொல்லவில்லை.

அடுத்து இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் 3½ மணிக்கு இப்பொழுது தொழிலாளர்கள் . போய் விடுவதாகக் குற்றம் சுமத்தி, 1½ மணியிலேயிருந்து 4½ வரைக்கும், பணியாற்ற வேண்டிய தொழிலாளர்கள் 3½ மணிக்கே போய் விடுகிறார்கள்; அரை மணி நேரம் வேலை செய்யாமல் போகின்ற காரணத்தினாலே சம்பளத்தைக் குறைக்கிறோம் என்று அவர்கள் சொன்னார்கள். நேரடியாக அவர்களைக் கூப்பிட்டு நான் பேசி, அது கூடாது, பேசித்தான் முடிவெடுக்க வேண்டும் என்று சொன்னேன். தொழிற்சங்கத் தலைவர்களும், அவர்களும் பேசியிருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், சம்பளம் cut இருக்குமேயானால் அதுகுறித்து அவர்கள் notice கொடுத்தால் இந்த அரசு அதுகுறித்துப் பேசி உரிய நடவடிக்கை எடுக்கும். அதைத் தடுப்பதற்கான முயற்சியிலே எது நியாயமோ அதைப் பேசித் தீர்க்கும். அந்தப் பேச்சுவார்த்தையில் முறையாக உங்கள் பிரதிநிதி கலந்து கொள்ளலாம்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தொழிலாளர் நலச் சட்டம், 1951-இல் "...The Period of work of an adult worker in a plantation shall be so, that it is inclusive of the interval for rest under Section..."

[டாக்டர் க. கிருஷ்ணசாமி] [1999 ஏப்ரல் 6

என்று அந்த விதியில் வருகிறது. அதில் "The Period of work of each day shall be so fixed that no period shall exceed five hours and that no worker shall work for more than five hours before he has had an interval for rest for at least half-an-hour."

இந்த அரை மணி நேரம் என்பது 8 மணி நேர வேலையில் அரை மணி நேரமாவது ஓய்வு எடுக்க வேண்டும் என்பதுதான் விளக்கமே தவிர,....

**HON. SPEAKER:** That is not a correct interpretation according to me. I am a lawyer. You have to do work for eight hours. There will be a break of atleast half-an- hour for lunch or dinner or whatever it is. That is not included in the working hours. That is the interpretation all over the country for all labour laws.

**DR. K. KRISHNASAMY:** But there is no industry adopting such methods. All the workers throughout Tamil Nadu are working below 8 hours only. In the Tamil Nadu Government or Central Government or public sector undertaking now here there is working hours of 8 hours per day. It is only 7-1/2 hours or 7 hours.

**HON. SPEAKER:** That is indiscipline.

**HON. THIRU A. RAHMAN KHAN:** One humble submission. Plantation Labour Act. தான் தொழிலாளர்களுடைய வேலை மற்ற அவர்களுடைய அமைப்புகளைப் பற்றிச் சொல்லியிருக்கக்கூடிய சட்டபூர்வமான Act இதற்கு interpretation உறுப்பினர் அவர் விருப்பப்படி சொல்லலாம், ஆனால் அது உண்மையான பொருள் ஆகாது. சபாநாயகர் அவர்களும் அந்தக் கருத்தை வக்கீல் என்ற முறையிலே ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். உறுப்பினர் வக்கீலாக இல்லாவிட்டாலும் அவர் படித்துக்காட்டிய புத்தகம் சட்டப் புத்தகம் அல்ல. அதிலே ஒருவர் விளக்கம் அப்படிக் கொடுத்திருக்கிறார். நானும் அதைப் படித்துப் பார்த்தேன் 5 நாட்களுக்கு முன்பாக; அது உண்மையான விளக்கம் ஆகாது. (குறுக்கீடு)

முற்பகல் 10-55

**HON. SPEAKER:** That is all. I won't allow an argument. (Interruption) No. No. Dr. Krishnasamy, if you have got anything further, you can tell me and I will look into it. (Interruption) No. I cannot allow further argument on the floor. This is not an argument between you and the Minister. I have allowed you already once.

**DR. K. KRISHNASAMY:** That is not the law. I have a very good book. Please let me say. (Interruption)



1999 ஏப்ரல் 6]

**HON. SPEAKER:** Wait. The Hon. Minister may sit down. Dr. Krishnasamy.

**DR. K. KRISHNASAMY:** It has been mentioned in the book under "Hours of work" that the 'hours of work' have a reference of hours per day that a worker is allowed or required to work. It includes shift hours, rest interval...

**HON. SPEAKER:** That book is a commentary by some individual. It is not the law. The Minister has given clarification. I won't allow any further discussion.

**DR. K. KRISHNASAMY:** I am not satisfied with the Minister's reply. I am staging a walk-out.

**HON. SPEAKER:** Yes. You can.

(டாக்டர் க. கிருஷ்ணசாமி அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தார்)

## 3. மானியக் கோரிக்கைகள், 1999-2000

### விவாதமும் வாக்கெடுப்பும் - தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 1—நில வருவாய்த் துறை**

**(ஆ) கோரிக்கை எண் 40—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு**

**(இ) கோரிக்கை எண் 45—இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1999-2000 ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 1— நில வருவாய்த் துறை, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நில வருவாய்த் துறை பற்றிய 1ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 13,00,65,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1385 திரு. சி. ஞான சேகரன் இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 170, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"எடப்பாடி தொகுதியில் கூட்டுப் பட்டாதாரர்களாக உள்ளவர்களுக்கு தனிப்பட்டா வழங்கப்பட்டதில் ஏற்பட்டுள்ள குறைபாடுகளைக் களையவும், புதிதாக பட்டா வழங்கவும் அங்கு தனி தாசில்தார் அலுவலகம் இயங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நில வருவாய்த் துறை பற்றிய 1ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 13,00,65,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1535, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஆண்டிமடம் தொகுதி வறட்சியாக இருப்பதால் விவசாயிகளிடம் நிலவரி வரி வசூல் செய்யப்படுவதை நிறுத்தி வைப்பதுடன் வறட்சிப் பகுதியாக அறிவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நில வருவாய்த் துறை பற்றிய 1ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 13,00,65,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1059, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நில உச்சவரம்பு நிர்ணயம் செய்தபிறகு உபரியாக உள்ள நிலங்களை ஏழை விவசாயிகளுக்கு உடனுக்குடன் வழங்குவதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நில வருவாய்த் துறை பற்றிய 1ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 13,00,65,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 745, திரு. ஜி.கே. மணி.



**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, சாமிசெட்டிப்பட்டி ஊராட்சிக்குட்பட்ட எல்லுக்குழிமோலன், அள்ளி, கமலநத்தம் ஆகிய ஊர்களில் நீண்டகாலமாக புறம்போக்கு நிலத்தில் விவசாயம் செய்துவரும் ஏழைகளுக்கு பட்டா வழங்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நில வருவாய்த் துறை பற்றிய 1ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 13,00,65,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1598, திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சென்னையில் நிலம் கிரயம் செய்யும்போது பட்டா மாறுதல் செய்வதில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நில வருவாய்த் துறை பற்றிய 1-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 13,00,65,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 370, திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தண்டராம்பட்டு தொகுதியில் குளம் புறம்போக்கில் வீடுகட்டி வாழ்ந்துவரும் ஏழைகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நில வருவாய்த் துறை பற்றிய 1ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 13,00,65,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 566, திரு. கே. தங்கமணி.

[1999 ஏப்ரல் 6

**திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மானாமதுரை தொகுதி, திருப்புவனத்தைத் தனித் தாலுகாவாக உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நில வருவாய்த் துறை பற்றிய 1ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 13,00,65,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 928, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஈரோடு மாவட்டம், பவானி ஒன்றியம், ஓடத்துறை ஊராட்சி, பாலப்பாளையத்தில் குடியிருக்கும் 175 குடும்பங்களுக்கு உடனடியாக பட்டா வழங்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நில வருவாய்த் துறை பற்றிய 1ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 13,00,65,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1263. திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2710, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பட்டுக்கோட்டை தாலுகாவை இரண்டாகப் பிரித்து, திருச்சிற்றம்பலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு தனித் தாலுகா ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நில வருவாய்த் துறை பற்றிய 1ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 13,00,65,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3, திரு. சி. வேலாயுதன்.



1999 ஏப்ரல் 6]

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கல்குளம் தாலுகா, கல்குளம் கிராமம், குமாரபுரத்தில் குடியிருப்போருக்கு பட்டா வழங்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நில வருவாய்த் துறை பற்றிய 1ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 13,00,65,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 600, திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஈரோடு மாவட்டம் பெருந்துறை வட்டம், ஊத்துக்குளியில், வீட்டுவசதி வாரியத்திற்காக ஒதுக்கீடு செய்ய முன்மொழியப்பட்ட க.ச. எண் 1-ல் உள்ள நிலத்தில் 6 ஏக்கர் நிலம் மேல்நிலைப் பள்ளிக்காக வழங்க விலக்களிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நில வருவாய்த் துறை பற்றிய 1ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 13,00,65,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2673, திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தரிசு நிலங்கள், புறம்போக்கு நிலங்கள் ஆகியவற்றைப் பல ஆண்டுக்காலமாக அனுபவித்து வரும் விவசாயிகளுக்கு பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நில வருவாய்த் துறை பற்றிய 1ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 13,00,65,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1703, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நிர்வாகத் துறையில் பின்பற்றப்படும் பழைய டாட்டன்ஹாம் முறையை மாற்றி புதிய சிங்கிள் பைல் திட்ட முறையைக் கொண்டுவர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நில வருவாய்த் துறை பற்றிய 1ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 13,00,65,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 104, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மன்னார்குடி வட்டம், மேலப்பனையூர் ஊராட்சிக்குட்பட்ட மேலமருதூர், கீழமருதூர் ஆகிய இரு கிராமங்களையும் இணைத்துத் தனி வருவாய்க் கிராமமாகச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நில வருவாய்த் துறை பற்றிய 1ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 13,00,65,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1116, திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பாபநாசம் சட்டமன்றத் தொகுதி, கும்பகோணம் வட்டத்தை இரண்டாகப் பிரித்து, சுவாமிமலையைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய வட்டம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நில வருவாய்த் துறை பற்றிய 1ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 13,00,65,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 140, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நில வருவாய்த் துறை பற்றிய 1ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 13,00,65,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 474, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"திருப்பூர், பெரிச்சிபாளையம் வடக்கு, பட்டுக்கோட்டையார் நகர், எஸ்.எப். எண் 736/1-ஏ1-ல் குடியிருந்து வரும் பொதுமக்களுக்கு வீட்டுமனை பட்டா வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

நில வருவாய்த் துறை பற்றிய 1ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 13,00,65,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1643, திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நில வருவாய்த் துறை பற்றிய 1ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 13,00,65,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1210, திரு. டி சுதர்சனம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 81, திரு. ஆர்-ஆர். சேகரன்.

[1999 ஏப்ரல் 6

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், உடைந்த பாலம் பகுதியில் வசிக்கும் மக்களுக்கு உடனடியாக பட்டா வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

*"நில வருவாய்த் துறை பற்றிய 1ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 13,00,65,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *684*, திரு. பி. வெங்கடசாமி.

**THIRU B. VENKATASAMY:** Hon. Speaker Sir,

"To discuss the need to assign poramboke lands to Onnalavadi Government High School in Hosur Taluk" I move—

"That the sum of Rs. 13,00,65,000 allocated under Demand No. 1-Land Revenue Department, be reduced by Rs. 100"

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1297*, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ரிஷிவந்தியம் தொகுதி, திருக்கோவிலூர் நகரத்தில் கனகனந்தல் ரோடு, டி.கே. மண்டபம் பகுதியில் குடியிருக்கும் ஏழை மக்களுக்கு அவர்கள் குடியிருப்பு இடத்திற்கு பட்டா வழங்குவதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

*"நில வருவாய்த் துறை பற்றிய 1ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 13,00,65,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1206*, திரு. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், இருக்கையில் இல்லை.

## (ஆ) கோரிக்கை எண் 40—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் *40*-இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.



1999 ஏப்ரல் 6]

***மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 40ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 71,74,51,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."*

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் *1384*, திரு. சி. ஞானசேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *207*, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு நிவாரணம் வழங்கும் போது குடிசையைப் புதுப்பிக்கத் தேவையான நிவாரணம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

*"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 40ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 71,74,51,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1658*, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"இயற்கைச் சீற்றங்களினால் பாதிக்கப்படும் ஒவ்வொரு கிராமத்திற்கும் குழுக்களை அமைத்து துயர் தணிப்புப் பணிகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:"

*"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்புப் பற்றிய 40ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 71,74,51,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1064*, திரு. டி. மணி.

***திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"முல்லையாறு கால்வாய் உடைப்பால் பாதிக்கப்பட்ட ஆண்டுக்கோடு, இடைக்கோடு, பாகோடு கிராம விவசாயிகளுக்குப்

போதுமான இழப்பீட்டுத் தொகை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 71,74,51,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 876, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வெள்ளம் மற்றும் தீயினால் சேதமடையும் கடைகள், ஓட்டு வீடுகள் ஆகியவற்றுக்கு நிவாரணத் தொகை காலம் தாழ்த்தாமல் உடனுக்குடன் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 40ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 71,74,51,000ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

முற்பகல் 11-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 139, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 40ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 71,74,51,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1595, திரு. ப. ரங்கநாதன் இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 568, திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மானாமதுரை தாலுகாவில் வைகை நதியில் ஏற்பட்ட பெருவெள்ளம் காரணமாகச் சேதமடைந்த வீடுகளின் உரிமையாளர்களுக்கு உரிய இழப்பீட்டுத் தொகை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:





"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 40ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 71,74,51,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 935, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வெள்ளத்தால், தீயால் சேதமடையும் கடைகளுக்கு மற்றும் வீடுகளுக்கு நிவாரணத் தொகை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 40ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 71,74,51,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 608, திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தீ விபத்தால் பாதிக்கப்படும் குடிசைவாசிகளுக்கு வழங்கப்படும் நிவாரணத் தொகையை உயர்த்தி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 40ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 71,74,51,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1700, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வெள்ளம், தீ, கடல் அரிப்பால் பாதிக்கப்படும் வீடுகளுக்கு வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகையை மேலும் உயர்த்தி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 40ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 71,74,51,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3048, திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 40ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 71,74,51,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 494, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்புப் பற்றிய 40-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 71,74,51,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1616, திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"இயற்கைச் சீற்றங்களினால் பாதிக்கப்படும் மக்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை உயர்த்தப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 40ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 71,74,51,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2701, திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



"இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்படும் மக்களுக்கு உதவித் தொகை உடனுக்குடன் வழங்குவதுடன் அதனை உயர்த்தியும் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 40ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 71,74,51,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 23, திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஓமலூர் தொகுதியில் இடி, மின்னலால் பாதிக்கப்பட்ட ஏழை மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ்ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 71,74,51,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

## (இ) கோரிக்கை எண் 45—இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 45-இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 78,68,36,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 218, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மோட்டார் வாகன விபத்தில் ஊனமுற்றோருக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 78,68,36,000-ல் ரூ. 100/- குறைகக வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1562, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 78,68,36,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 780, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"விபத்துக்களில் இறந்தவர்களுக்கும், பாம்புக்கடி போன்றவற்றால் இறப்பவர்களுக்கும் அளிக்கப்படுகின்ற நஷ்ட ஈட்டை இரு மடங்காக உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 78,68,36,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1596. திரு. ப. ரங்கநாதன் இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 939, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 78,68,36,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 610, திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

முதியோர் ஓய்வூதியம் பெறுவோருக்கு வழங்கப்படும் நிதியின் அளவை உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 78,68,36,000-ல் ரூ. 100/-ஐ குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2702, திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு அவர்களின் பாதிப்புக்கு ஏற்ப தகுந்த அளவில் உதவித் தொகை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 78,68,36,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1698, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பல்வேறு விபத்துக்களினால் இறந்தோரின் குடும்பங்களுக்குக் கிடைக்க வேண்டிய நிவாரணம் அல்லது இழப்பீட்டுத் தொகை விரைந்து கிடைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 78,68,36,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2939, திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பாபநாசம் சட்டமன்றத் தொகுதியில் தென்னை மரத்தில் ஏறும்போது தவறிக் கீழே விழுந்து இறந்து விடுபவர்களுக்கு உடனடியாக நிவாரணத் தொகை வழங்குவது குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 78,68,36,000-ல் ரூ. 100- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *138*, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் பற்றிய *45* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. *78,68,36,000*-ல் ரூ. *100*-ஐ குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1614*, திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் பற்றிய *45* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. *78,68,36,000*-ல் ரூ. *100* குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *660*, திரு. பி. வெங்கடசாமி.

**THIRU B. VENKATASAMY**: Hon. Speaker Sir,

"To discuss the need to pay compensation to the land owner whose lands once acquired for constructing the Kelavarapalli Dam and its channels in Hosur Taluk, I move—

"That the allocation of Rs. 78,68,36,000 under Demand No. 45— Compensation and Assignments be reduced by Rs.100".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1321*, திரு. லி. அய்யலுசாமி.

**திரு. லி. அய்யலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கோவில்பட்டி தொகுதியில் பெரும் மழையினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:





"இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் பற்றிய *45* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. *78,68,36,000*-ல் ரூ. *100* குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் தன்னுடைய முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால், கூறலாம்.

***மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கைகளான நில வருவாய்த் துறை, இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு, இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் என்ற தலைப்புகளில் கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பெற்று பேரவைமுன் மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. அதில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்பை@ நான் இந்த அவையிலே ஆற்றிய உரையாகக் கருதி அவற்றை அவைக் குறிப்பில் பதிவு செய்து கொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கொள்கை விளக்கக் குறிப்புகள் மீது தங்களுடைய மேலான கருத்துகளையும், ஆலோசனைகளையும் வழங்குமாறு மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதங்களில் மாண்புமிகு உறுப்பினர்கள் முன்வைக்கும் கருத்துகளைக் கேட்டறிந்த பின்பு இறுதியில் என்னுடைய பதிலுரையையும் இந்தத் துறையின் வளர்ச்சிக்கான அரசின் புதிய அறிவிப்புகளையும் தெரிவிக்கிறேன் என்பதை எடுத்துரைக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதத்திலே மாண்புமிகு உறுப்பினர்கள் *10* பேர் பேசவிருக்கின்றார்கள். ஆகவே, நேரத்தின் அருமை கருதி, இந்த விவாதத்தைத் தொடங்குகின்ற திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் அவர்களுக்கு *10* நிமிடங்களும், மற்றவர்களுக்கு *7* நிமிடங்களும் ஒதுக்கப்படும் என்பதைத் தெரிவித்து, திருமதி பொன்னம்மாள் அவர்களைப் பேசுமாறு அழைக்கின்றேன்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட இந்த மானியக் கோரிக்கைகளின்மீது ஒரு சில கருத்துகளைத் தெரிவிப்பதற்கு வாய்ப்பளித்தமைக்கு நான் முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

@430 முதல் 467 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.

இந்த வருவாய்த் துறையைப் பொறுத்தவரையில் எங்கே தீப்பிடித்து விட்டாலும் அவர்கள்தான்—வெள்ளம் வந்து மழையால் பாதிக்கப்பட்டால் வருவாய்த் துறைதான், சாதிச் சான்றிதழ், வருமானச் சான்றிதழ் வழங்குவது எல்லாம் வருவாய்த் துறைதான். எங்கேயாவது நிலத்திலே கோளாறு ஏற்பட்டால் வருவாய்த் துறைதான். எல்லா பொறுப்பிற்கும் வருவாய்த் துறைதான் மூலக் காரணமாக இப்போது இருந்து கொண்டிருக்கிறது.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

*முற்பகல் 11-05*

சென்ற நவம்பர், டிசம்பர் மாதங்களில் மழை பெய்த காரணத்தினால் என்னுடைய தொகுதி மிகவும் மோசமான நிலையில் பாதிக்கப்பட்டுவிட்டது. அங்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள்கூட படகிலே சென்று பேரணையின் Shutter மேல் ஏறிக்கொண்டு அங்கே இருந்த ஆட்களை எல்லாம் சத்தம் போட்டு அழைத்து, பிறகு Shutter-ஐத் திறந்துவிட்ட காரணத்தால் மேலும் 10,15 கிராமங்கள் அடித்துச் சென்று போகாமல் பாதுகாக்கப்பட்டது. இப்படிப்பட்ட மோசமான சூழ்நிலை பலமுறை என் தொகுதியில் நிலவியுள்ளது. இப்போது நான் சட்டமன்ற உறுப்பினராக வந்த பிறகு, 6, 7 தடவை-வரிசநாடு பகுதியில் மழை பெய்தது, கம்பம் பள்ளத்தாக்கில் மழை பெய்தது, ஆனால் நிலக்கோட்டை பகுதியில் மழை பெய்யவில்லை. ஆனால், அங்கே மழை பெய்யும்போது, தண்ணீர் வேகமாக வந்து என்னுடைய தொகுதிதான் பாதிக்கப்படும். நிலக்கோட்டை தொகுதி மக்களை நினைத்து நான்கூட சில சமயங்களில் அழுவதுண்டு. இந்த மக்கள் பொன்னம்மாளுக்கு ஓட்டு போட்ட காரணத்தால்தான் இப்படிப் பாதிக்கப்படுகிறார்களோ என்று கண்ணீர் விடுவதுண்டு. இரண்டு முறை, மூன்று முறை, பாதிக்கப்பட்டவர்களுக்கு எல்லாம் அரசாங்கம் கொடுக்கக்கூடிய சேலை, வேட்டியோடு, நானும் தனியாக சேலை, வேட்டி மற்றும் அரிசி கொடுத்து அந்த மக்களுக்கு ஆறுதல் சொல்லக்கூடிய நிலைமையிலே இன்று வரை இருந்து கொண்டிருக்கிறேன். சென்ற ஆண்டுகூட நவம்பர், டிசம்பர் மாதங்களில் வந்த வெள்ளத்தினால் மக்கள் பாதிக்கப்பட்டபோது நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திரு. பெரியசாமி அவர்களோடு நானும் அந்த ஆற்றில் போய்க்கொண்டிருக்கிறோம். ஆற்றில் தண்ணீர் கழுத்தளவு போய்க்கொண்டிருக்கிறது. அமைச்சர் அவர்கள், அக்காள் பொன்னம்மாள் அவர்கள் எப்படி வருவார்கள் என்று கேட்டார்கள், உடனே நான் குறிப்பிட்டேன், என்னை தண்ணீர் அடித்துக்கொண்டு



போனாலும் பரவாயில்லை. நானும் வருகிறேன். என்று அந்தத் தண்ணீரிலே நீந்திச் செல்லக்கூடிய நிலைமை ஏற்பட்டது. நாங்கள் சென்று பார்வையிட்டோம். நம்முடைய மதிப்பிற்குரிய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் அதை நேரில் வந்து பார்வையிட்டார்கள்.

இங்கு மட்டுமல்ல, வைகை ஆற்றில் வெள்ளம் காரணமாக இராமநாதபுரம் ஜில்லாவிலே பல இடங்களில் பாதிக்கப்பட்டது. அங்கே நிலம் எல்லாம் முழுமையாக மண் மூடிவிட்டது. மணல் அடிக்கப்பட்டு மக்கள் விவசாயமே செய்ய முடியாத நிலை இருந்தது. ஆற்றின் கரை உடைந்து வெள்ளத்திலே மணல் மூடிற்று. அந்த மணலை அள்ள முடியாத நிலை இப்போது இருக்கிறது. விவசாய மக்களுக்கு இப்படி ஏற்பட்டுவிட்ட சூழ்நிலையில் அவர்களுக்கு நாம் என்ன செய்கிறோம்? அவர்களுக்கு அளிக்கக் கூடிய உதவித் தொகை மிக மிகக் குறைவாக இருக்கிறது. விவசாய இலாகா மூலமாக அளிக்கும் உதவித் தொகை குறைவாக இருக்கிறது. வீடு இடிந்து பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு 300 ரூபாய், 400 ரூபாய் அதேமாதிரி மண் அடித்து மேடிட்ட விவசாய மக்களுக்கு 300, ரூபாய், 400 ரூபாய் என்றுதான் கொடுக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஓர் ஏக்கருக்கு விவசாயம் செய்ய வேண்டுமென்றால் 5,000 ரூபாய் செலவாகிறது. 6 மாதம் அல்லது 3 மாதங்களுக்குள்ளாக நெல் நடவு செய்திருந்தால் வருமானம் வரும். வருமானம் வரும்போது 5,000 அல்லது 10,000 ரூபாய் என்று வரும். ஆனால் ஏற்கெனவே 5,000 ரூபாய் செலவு செய்து விவசாயம் செய்யும் நேரத்தில், வெள்ளத்தினால் அந்த விவசாயம் பாழாகும்போது, மறுபடியும் மண்மேடாகி மண் எடுக்கப்படாமல் பாதிக்கக்கூடிய நிலைமை இருந்தால் மிகவும் பரிதாபத்திற்குரிய நிலைமை ஏற்படுகிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏற்கெனவே இதற்கு முன்பு வந்த வெள்ளத்திலே பாதிக்கப்பட்டவர்களுக்காக நமது அரசாங்கம்தான், Bull dozer வைத்து அந்த மணலை எல்லாம் அப்புறப்படுத்தினார்கள். ஆனால் இந்த முறை அந்த மணல் அப்புறப்படுத்தப்படாமல் மக்கள் வேதனைப்படக்கூடிய ஒரு சூழ்நிலை அங்கே இருந்து கொண்டிருக்கிறது.

அங்கே வீடுகள் எல்லாம் பாதிக்கப்பட்டிருக்கின்றன. போய்விட்டன,சித்திரக்கல்நத்தம் என்ற ஊரிலே 258 வீடுகள் முழுமையாகப் போய்விட்டன. மல்லையம்பட்டியில் 256 வீடுகள் முழுமையாகப் போய்விட்டன, பறையப்பட்டியில் 178 வீடுகள் முழுமையாகப் போய்விட்டது; சக்கிலியபட்டியில் 116 வீடுகள் பாதிக்கப்பட்டன, குணவாரன் கோட்டையில் 100 வீடுகள் பாதிக்கப்பட்டன. இப்படி கிட்டத்தட்ட 908 வீடுகள் முழுமையாகப்

பாதிக்கப்பட்டன. இப்படி முழுமையாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ நான் இங்கு ஓடிவந்தேன். முதல்வர் அவர்களைப் பார்ப்பதற்கு பெரு முயற்சிகள் எடுத்தேன். ஆனால் ஏதோ என்னுடையப் பொல்லாத நேரமோ அல்லது என்னுடைய தொகுதி மக்களின் பொல்லாத நேரமோ என்னவோ தெரியவில்லை, முயற்சி எடுத்தும் முதல்வர் அவர்களைப் பார்க்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. பிறகுதான் நம்முடைய வருவாய்த் துறை Commissioner அவர்களிடம் சென்று அவர்களைப் பார்த்து கண்ணீர்விடாத குறையாக, என் தொகுதியில் மிகவும் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. ஐயா, எப்படியாவது நீங்கள் உதவி செய்ய வேண்டுமென்று அவர்களிடத்திலே மனு கொடுத்தேன். அமைச்சர் அவர்களிடத்திலே மனு கொடுத்தேன். செயலாளர் அவர்களிடத்திலே சென்று மனு கொடுத்தேன். மனுவைக் கொடுத்துவிட்டு இந்த மக்களுக்கு நிவாரணம் செய்யுங்கள் என்று கேட்டேன். நாம் என்ன நிவாரணம் செய்தோம், நாம் என்ன நிவாரணம் அளித்தோம், சேலை, வேட்டி கொடுத்தோம், அரிசி 5 கிலோ கொடுத்தோம்? அந்த அரிசிகூட பச்சைப்பசேல் என்றுதான் இருந்தது. ஆனால், நான் எங்கள் மூலமாக வசூல் செய்து 1,000 பேருக்கு சேலை, வேட்டி, 2 கிலோ அரிசி மட்டும்தான் கொடுக்க முடிந்தது. ஆனால், நல்ல அரிசி கொடுத்தேன். இந்த மாதிரி அந்த ஏழைகளுக்கு உதவி செய்வதற்கு நாம் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு அந்த ஏழை மக்களைக் காப்பாற்ற வேண்டுமென்பதற்காகத்தான் இந்த மானியத்தின்மீது பேசுகிறேன்.

அதேமாதிரி மழைத் தண்ணீர் வரும்போது ஆற்றின் கரை உடைந்துவிடுகிறது. 1985-லே என்று நினைக்கிறேன். கரை உடைந்து மணல் மூடிய பிறகு, அதைப் பொதுப் பணித் துறை அதிகாரிகளிடம் சொல்லி, அவர்களும் நேரில் பார்வையிட்டு, ஒரு கோடியே 23 இலட்சம் ரூபாய்க்கு குன்வாரன்கோட்டையிலிருந்து பேரணை வரைக்கும் கரையை உயர்த்த வேண்டும், கரையைப் பலப்படுத்த வேண்டும் என்று சொன்னார்கள். மதிப்பீடே தயார் செய்து அனுப்பினார்கள். அந்தத் திட்டம் நடைமுறைக்கு வரவில்லை. எனவே, அந்தக் கரையை உயர்த்தவேண்டும். கரையைப் பலப்படுத்த வேண்டும், அந்த மக்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்றுதான் இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 11-10

இப்போது முழுமையாக பாதிக்கப்பட்ட வீடுகள் 908 வீடுகள். HUDCO-விலிருந்து கடன் கொடுப்பதாக இந்தப் புத்தகத்திலே போடப்பட்டிருக்கிறது. HUDCO-விலிருந்துகூட கடன் உதவி





கொடுக்கின்றார்கள். அவர்கள் கடன் கொடுக்கும்போது, அதாவது ரூ. 478.88 கோடி வீடு கட்டுவதற்குக் கொடுக்கிறார்கள். இந்தப் பணத்திலே ஒரு வீட்டிற்கு 50 ஆயிரம், 60 ஆயிரம் எடுத்து செலவு செய்ய வைத்து, பாதிப் பணம் மானியமாகக் கொடுங்கள், பாதிப் பணம் நீண்ட காலக் கடனாகக் கொடுத்து, அத்தனை பாதிக்கப்பட்ட மக்களுக்கெல்லாம் வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று மிக்கப் பணிவோடும் அன்போடும் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். வெறும் ஆயிரத்திற்கு அதிகமான வீடுகள்தான் இப்போது பாதிக்கப்பட்டிருக்கின்றன.

அதோடுமட்டுமல்ல, மழை பெய்கின்ற காலத்திலே - நாம் பட்டா கொடுக்கிறோம் - கண்மாய் இருக்கிறது. இந்தக் கண்மாய்களில் எல்லாம், தண்ணீர் விடமுடியாமல் அத்தனையும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு விவசாயம் செய்யக்கூடிய நிலைமையிருக்கிறது. நான் சட்டமன்ற உறுப்பினராக வந்த பிறகு, என்னுடைய தகப்பனாருக்குச் சொந்தமான கண்மாயை நான் புறம்போக்காக ஆக்கினேன். முதலில் 9 ஏக்கர் 10 செண்ட், பிறகு 89 செண்ட் பிறகு ஒரு 14 செண்ட் 1974 ஆம் ஆண்டு இந்த அரசாங்கம் இருக்கும்போது அந்த ஊரிலே இருக்கின்ற ஒருவருக்கு பட்டா போட்டுக் கொடுத்து விட்டார்கள். இதை நினைத்து நினைத்து நானே Case போட்டிருந்தேன். Case போட்டு Court-க்குப் போகும்போது என்ன சொல்லிவிட்டார்கள் என்றால் அது புறம்போக்குதானே, ஏழைகளுக்கு பட்டா கொடுக்கலாம் என்று சொல்லிவிட்டார்கள். சொந்த நிலத்தை, அரசுப் புறம்போக்காக ஆக்கினோம். ஏன் ஆக்கினோம்? மக்கள், மாடு கன்றுகளை அவிழ்த்துவிட வேண்டும், அந்த மாடுகள் போய் மேய வேண்டும். அந்த இடத்தை பட்டா போட்டுக் கொடுப்பதாலே மாண்புமிகு அமைச்சரிடத்திலே என்னுடைய பணிவான வேண்டுகோள், 1947 ஆம் ஆண்டுக்கு முன்பு எந்த அளவிற்குக் கண்மாய் இருந்ததோ அந்த அளவிற்குக் கண்மாய் இருக்கவேண்டும். இன்றைக்கு எங்கெல்லாம் கண்மாய் இருக்கின்றதோ அங்கெல்லாம் யார் ஆக்கிரமிப்பு செய்திருந்தாலும், அதை அப்புறப்படுத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே மிக்கப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதுமாத்திரமல்ல, எங்களுக்கெல்லாம் கிணற்றில் தண்ணீர் வர வேண்டும். அந்தக் கிணற்றிலே தண்ணீர் வரும்போது-ஜம்புதுரை கோட்டை பஞ்சாயத்திலே ஓணான் ஊத்து என்ற ஓர் ஊத்து. அது 6 இலட்சம் ரூபாய்க்கு Sanction ஆனது. அதிலே ஒருவர்—ஏற்கெனவே

[திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்] [1999 ஏப்ரல் 6

இதைப் பல ஆண்டுகளுக்கு முன்பாகவே சொல்லியிருக்கின்றேன். சென்னையிலே இருந்து வந்த ஒருவர்—கல்வெட்டுவதாக என்னுடைய ஊருக்கு ஜம்புதுரைகோட்டைப் பஞ்சாயத்துக்கு வந்து அந்த ஓணான் ஊத்து ஓடை இருக்கின்ற இடத்திலே ஓர் இரண்டு ஏக்கர் அரசாங்கத்திடமிருந்து கிரயம் வாங்கியிருக்கிறார்கள். இரண்டு ஏக்கர் கிரயம் வாங்கி, 29 ஏக்கரை பட்டா போட்டுக் கொண்டார்கள். பட்டா போட்டுக் கொண்டு, இப்போது அவரை வெளியேற்றுவதற்கு எவ்வளவோ முயற்சி செய்தும் அது முடியவில்லை. ஆகையினால், யார் யாருக்கெல்லாம் (மணியடிக்கப்பெற்றது) கண்மாய்களில் பட்டா போட்டுக் கொடுத்திருக்கிறோமோ அதையெல்லாம் இரத்து செய்து, தண்ணீர் தேங்கக்கூடிய அளவுக்கு, நாம் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே மிக அன்போடு கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் பல பேர், பொது வாழ்விற்கு வந்தவர்கள், இருக்கின்ற காலத்தில் பட்டா போட்டுக்கொள்வார்கள். ஆனால், சொந்த நிலத்தை பட்டா போட்டுக் கொடுத்தும்கூட, புறம்போக்காக ஆக்கிவிட்ட பிறகு, இப்போது அதிலே மிகப் பெரிய ஒரு வருந்தத்தக்கச் சூழ்நிலை வந்திருக்கிறதென்றால், அதை இரத்து செய்து மறுபடியும் மக்களுக்குப் போய்ச் சேரக்கூடிய அளவுக்கு அந்த நிலத்தை ஆக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்கிறேன்.

சில இடங்களிலே ஓடையை அடைத்துவிட்டார்கள். ஓடையெல்லாம் அடைத்து மிகப் பெரிய விவசாய நிலமாக ஆக்கியிருக்கிறார்கள். ஆகையினால், இவற்றையெல்லாம் மறுபடியும் resurvey செய்து ஆக்கிரமிப்பையெல்லாம் எடுத்து, புறம்போக்காக ஆக்க வேண்டும். மக்கள் உபயோகத்திற்காக ஆக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கூறிக்கொள்கிறேன்.

வேட்டி, சேலை கொடுக்கிறோம். வீடுகள் கட்டுவதிலேகூட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மழையில்லாமல் 10 ஆண்டு காலம் சிரமப்பட்டோம். இப்போது மழையினாலேயே சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறோம். ஆகையினால், மாண்புமிகு முதல்வர் அவர்கள் 1997 ஆம் ஆண்டுக்கான நிலவரி 43 கோடியே 30 இலட்சத்தை அப்போது அதைத் தள்ளுபடி செய்திருக்கிறார்கள். வரி வசூல் செய்வதை நிறுத்தியிருக்கிறார்கள்; அதேபோல பாதிக்கப்பட்ட மக்களுக்கு எங்கெல்லாம் நிலக்கோட்டை மட்டுமல்ல, இராமநாதபுரம் என்று இருந்தாலும், எங்கிருந்தாலும் அவர்களுக்கு நாம் கடன் கொடுக்கின்ற,



1999 ஏப்ரல் 6] [திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்]

கூட்டுறவுச் சங்கம் மூலமாகக் கடன் கொடுக்கிறோமே அந்தக் கடனுக்குள்ள—நான் அசலைக்—கட்ட வேண்டாம் என்று சொல்லமாட்டேன். அந்தக் கடனுக்குள்ள—வட்டியையாவது தள்ளுபடி செய்ய வேண்டும். அதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் HUDCO ஒத்துக்கொள்ளமாட்டார்கள். NABARD ஒத்துக்கொள்ள மறுக்கிறார்கள் என்று சொன்னார்கள். அவர்கள் ஒத்துக்கொள்ள மறுத்தாலும்கூட, எப்படி 43 கோடியே 30 இலட்சம் ரூபாய் நில வரியைத் தள்ளுபடி செய்தீர்களோ, அதேபோன்று இது ரூபாய் 46 கோடிதான் வருகின்றது; இந்த வட்டியை மாத்திரமே தள்ளுபடி செய்ய வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக் கொண்டு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ வேண்டுமென்று மீண்டும் கேட்டு முடிக்கின்றேன். நன்றி., வணக்கம்.

முற்பகல் 11-15

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சுப. தங்கவேலன்.

***திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஓர் ஆட்சியினுடைய இதயமாகவும், இயக்கமாகவும், பல்வேறு துறைகளினுடைய தலையாய தாய்த் துறையான, வருவாய்த் துறையின் மானியக் கோரிக்கைகள் மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். நல்ல உள்ளம் படைத்த தமிழ் மக்களின் நெஞ்சங்களில் தங்க சிம்மாசனம் போட்டு வீற்றிருக்கக்கூடிய நம்முடைய அன்புத் தலைவர், கலைஞர் அவர்கள் ஓர் அற்புதமான நிதிநிலை அறிக்கையை இந்த அவைக்குத் தந்து இருக்கின்றார்கள். அந்த நிதிநிலை அறிக்கை பற்றி விவாதங்கள் முடிந்து, அவர்கள் பதிலுரை அளித்தபோது இந்த மாமன்றத்தில் அவர் ஆட்சிப் பொறுப்பேற்ற காலங்களில் அவர்களாலே கொண்டு வரப்பட்ட பல்வேறு திட்டங்கள், நலத் திட்டங்கள் இந்தியத் திருநாட்டுக்கே வழிகாட்டக்கூடிய அற்புதமான திட்டங்களை எல்லாம் தொகுத்து அளித்து இங்கே பட்டியலிட்டுக் காட்டியது எங்களுக்கு மெய்சிலிர்க்கின்ற அளவுக்கு இருந்தது. இன்னும் அவர்கள் பல்லாண்டுக் காலம் வாழ்ந்து பல்வேறு நிதிநிலை அறிக்கைகளை இந்த மாமன்றத்திலே தாக்கல் செய்ய வேண்டுமென எங்கள் மாவட்ட மக்களின் சார்பிலே அவர்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய வருவாய்த் துறை, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்ற 1967 ஆம் ஆண்டிலிருந்து விவசாயிகளுக்குப்

பல்வேறு புதுமைகளைப் படைத்து இருக்கிறது. ஒரு காலத்தில் சுதந்திரத்திற்காகப் போராடிய கட்டபொம்மன், 'வானம் பொழிகிறது, பூமி விளைகிறது; வெள்ளையனுக்கு ஏன் காணிக்கை' என்று கேட்டான். 1967-இல் தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய அனைத்துப் புஞ்சை நிலங்களுக்கும் வரி விலக்கு அளித்த பெருமை இந்த அரசுக்கு உண்டு. அதைப்போல 5 ஏக்கர் நிலங்களுக்குக் குறைவாக இருக்கக்கூடிய அனைத்து விவசாயிகளுக்கும் நஞ்சைத் தீர்வையை இரத்து செய்துவிட்டு புஞ்சை நிலத்திற்கான தீர்வையை மட்டும் செலுத்தினால் போதும் என்று உத்தரவிட்ட வரலாறும் இந்த அரசுக்கு உண்டு. அதுமட்டுமல்ல, 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் நிலம் என்று இருந்தது. அதிலே Commercial crops என்று சொல்லக்கூடிய பணப் பயிர்கள் பயிரிட்டால் அந்த நிலங்களுககு விதி விலக்கு அளிக்கப்பட்டு இருந்தது. அதை எல்லாம் இரத்து செய்து, 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று கொண்டு வந்து, பல இலட்சக்கணக்கான ஏக்கர் நிலங்களை மிச்சப்படுத்தி, கையகப்படுத்தி, இந்த நாட்டிலே உள்ள நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு, குறிப்பாக ஆதிதிராவிடப் பெருமக்களுக்கு வழங்கிய பெருமை இந்த அரசுக்கு உண்டு.

தலைவர் கலைஞர் ஆட்சிக்கு வந்தால், மழை பொழியாது என்றெல்லாம் வெளியே பிரச்சாரம் செய்யப்பட்டது. 1996 ஆம் ஆண்டு—இந்த மாமன்றத்திலே இருந்தாலும் சரி, இதற்கு வெளியே இருந்தாலும் சரி, அப்போது வறட்சி ஏற்பட்டுவிட்டது; பயிர்கள் வறண்டு காய்ந்து கருகிப் போய்விட்டன; வரி விலக்கு அளியுங்கள் என்றுதான், நில வரி இரத்து செய்ய வேண்டுமென்றுதான் கேட்பது வாடிக்கை. ஆனால் 1996 ஆம் ஆண்டிலே புதுமை படைத்து, பெருமழை காரணமாக, சராசரியாக இந்த மாநிலத்தில் பெய்ய வேண்டிய 470 மில்லி மீட்டர் மழையைக் காட்டிலும் 600 மில்லி மீட்டர் மழை பெய்த காரணத்தினால் இங்கே மிகப்பெரிய வெள்ளம் ஏற்பட்டு பயிர்கள் அழிந்து, அதன் காரணமாக வரிகளை இரத்து செய்ய வேண்டுமென்று நாம் இந்த மாமன்றத்திலே கோரிக்கை வைத்த காரணத்தினால், இங்கு மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப்போல, 42 கோடியே 33 இலட்சம் ரூபாய்க்கான வரியை அன்றைக்கு இதே பேரவையில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இரத்து செய்து அறிவித்த காரணத்தினால், தமிழகத்தினுடைய பல இலட்சக் கணக்கான விவசாயிகள் அன்றைக்கு பயனடைந்தார்கள். அதைப்போல கடந்த ஆண்டும் கடுமையான மழை பெய்தது. சராசரி மழையைக் காட்டிலும் கூடுதலாக 1998-99-ல்



பெய்தது. அதன் விளைவாக வைகை நதியிலிருந்து ஒரு வினாடிக்கு 1 இலட்சத்து 7 ஆயிரம் கனஅடி தண்ணீரைத் திறந்து அணையைக் காப்பாற்ற வேண்டிய நிர்ப்பந்தம் பொறியாளர்களுக்கு ஏற்பட்டது. பிறகு அவசர அரசரமாக அணையை, ஒரே நேரத்தில் பெருமளவு தண்ணீரைத் திறந்து விட்ட காரணத்தால், மதுரை மாவட்டம் மட்டுமல்ல, இங்கு மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப்போல, இராமநாதபுரம் மாவட்டத்தினுடைய பல்வேறு பகுதிகள் துண்டிக்கப்பட்டன; இராமநாதபுரம், பரமக்குடி நகரம் நீரால் சூழ்ந்து, வீடுகளுக்குள் எல்லாம் தண்ணீர் புகுந்து, பரமக்குடி அரசு மேல்நிலைப் பள்ளியில் மிகப் பெரிய உடைப்பும் ஏற்பட்டது.

முற்பகல் 11-20

அதைப்போல பரமக்குடி தொகுதியிலே இலட்சுமணன் குடியிருப்பு, பகைவென்றி, கங்கைகொண்டான், பாண்டியூர், செவ்வூர், முதலூர் போன்ற கிராமங்களிலே பிரம்மாண்டமான உடைப்புகள் எடுத்து, அந்த உடைப்புகளின் வழியாக, வைகை தன்னுடைய போக்கையே மாற்றிக்கொண்டு, நயினார்கோவில் ஒன்றியப் பகுதியிலே புகுந்து, ஏராளமான, பல்லாயிரக்கணக்கான நிலங்கள் சாகுபடிக்கு இலாயக்கற்ற நிலங்களாக ஆகிவிட்டன. எனவே, அந்த நிலங்களையெல்லாம் Bull dozer-கள் மூலம் சீரமைத்துத் தருவதுடன், அந்த விவசாயிகளுக்கு நஷ்டஈடு கொடுக்க வேண்டும். அதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கண்மாய்கள், கால்வாய்கள், அனைத்துத் தலைப்பிலும் போடப்பட்ட சாலைகள், குளங்கள், குடிநீர் குளங்கள் அனைத்தும் உடைந்து போய் சீர்குலைந்து கிடக்கின்றன. நெடுஞ்சாலைத் துறையினுடைய உடைப்புகள் எல்லாம் அடைக்கப்பட்டு, ஒரு மாத காலத்திற்குள் போக்குவரத்து சீர்செய்யப்பட்டுவிட்டது. ஆனால் உள்ளாட்சித் துறைக்குச் சொந்தமான சாலைகளுக்கு எல்லாம் போதிய நிதி வழங்கப்படவில்லை. இருதயம் கண்ணுக்குத் தெரியாத இடத்திலே இருப்பதைப்போல, நெடுஞ்சாலைக்கு அப்பாற்பட்டு, ஒதுக்குப்புறத்தில் இந்த ஒன்றியம் இருக்கிற காரணத்தினாலோ என்னவோ அதிகாரிகளினுடைய கவனம் இங்கே ஈர்க்கப்படவில்லை. எனவே, அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய உள்ளாட்சிக்குச் சொந்தமான சாலைகள் அனைத்தும் உடைப்பு ஏற்பட்டு, இன்றைக்கும் அந்த உடைப்புகள் அடைக்கப்படாமல் இருக்கின்றன. எனவே, அவையெல்லாவற்றையும் சீரமைத்துக் கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

[திரு. சுப. தங்கவேலன்] [1999 ஏப்ரல் 6

அதுமட்டுமல்லாமல் சீர்திருத்தங்கள் கொண்டுவர ஏற்கெனவே சபாநாயகம் குழு என்று ஒன்று போடப்பட்டு, அதனுடைய பரிந்துரையைக் கொடுத்திருக்கிறார்கள். எனவே, இப்போது குறைந்தபட்சம் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியப் பகுதியிலே ஒரு துணை வட்டாட்சியர் அலுவலகத்தையாவது நிறுவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பல்வேறு நலத் திட்டங்களில் ஒன்றாக, பள்ளி மாணவர்களுக்கு உரிய சான்றிதழை அந்தப் பள்ளி நிர்வாகத்தின் மூலமாக வழங்க ஏற்பாடு செய்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதனை எளிமையாக்கி இருக்கிறார்கள். கள்ளச்சாராயம் காய்ச்சுவதைக் கண்காணிப்பதற்கும், கண்மாய் புறம்போக்கு, வருவாய்த் துறைக்கு சொந்தமான புறம்போக்காக இருந்தாலும், பொதுப்பணித் துறைக்குச் சொந்தமான புறம்போக்காக இருந்தாலும், அந்த இடங்களில் இருக்கக்கூடிய மரங்களைக் கண்காணிப்பதற்கும், அனைத்து நலத் திட்டங்களுக்குரிய சான்றிதழ்களை வழங்குவதற்கும் அந்த உள்ளாட்சியிலே ஒரு துணை தாசில்தாரை நியமிக்க வேண்டும். அதுபற்றி முக்கியமான, ஓரிரு கருத்துகளைத் தெரிவிக்க விரும்புகிறேன். பிரதானமானது நிலவாரி பதிவேடு. இந்த நிலவாரி பதிவேட்டை வைத்துத்தான் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி மூலமாக, நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மூலமாகக் கடன் வழங்குகிறோம். ஒவ்வோர் ஆண்டும் நிலவாரி பட்டியலைச் சீரமைத்து, செம்மைப்படுத்திக் கொடுக்க வேண்டிய பொறுப்பை இந்தத்துணை தாசில்தாரிடத்திலே ஒப்படைத்து விடலாம். அப்படி ஒப்படைக்கத் தவறுகின்றபோது பினாமி லோன்கள் எல்லாம் பெறுவதற்கு வாய்ப்பிருக்கிறது. கூட்டுறவுச் சங்கங்கள் மீதான புகார்கள் வருகிறபோது அது தொடர்பாக 8(1) விசாரணை போடப்படுகிறபோது, இந்த நிலப் பதிவேடுகள் சரியாக இல்லாத காரணத்தால், நிலப் பதிவேடுகள் பல ஆண்டுகளாக உருவாக்கப்படாமல் அல்லது சரி செய்யப்படாத பட்டியல் இருக்கிற காரணத்தினாலேதான் அப்படிப்பட்ட தவறுகள் ஏற்படுகின்றன.

இப்போது கிராமப்புறங்களில் உள்ள உள்ளாட்சி மன்றங்களுக்கு அதிக அதிகாரங்களை இந்த அரசு வழங்கியிருக்கிறது. வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்கின்ற மக்களைக் கண்டறிவதும், வருவாய்த் துறையினுடைய கடமை. வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழக்கூடியவர்கள் பட்டியல் ஒன்றியங்களிலே, ஊராட்சி அலுவலகங்களிலே இருக்கிறது. மத்திய அரசு வழங்குகின்ற I.R.D.P.



1999 ஏப்ரல் 6] [திரு. சுப. தங்கவேலன்]

போன்ற கடன்களானாலும், மாநில அரசு வழங்குகின்ற கடன்களானாலும், அந்தக் கடன்களை வழங்குகிறபோது அல்லது இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குகிறபோது, வீடுகளை வழங்குகிறபோது, இந்த நிலப் பதிவேட்டில் யார் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிறார்கள் என்பது அறிந்து, கீழேயிருந்துதான் கடன் பயனாளிகள் பட்டியல் தயார் செய்ய வேண்டுமென்று விதியிருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) அப்படியிருந்தும்கூட, அந்தப் பட்டியல் பல ஆண்டுகளுக்கு முன்னாலே தயாரிக்கப்பட்ட காரணத்தினாலே, பல தவறுகள் இந்தப் பட்டியலில் இருக்கிற காரணத்தினாலே உண்மையாக வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்கு இந்தக் கடன் போய்ச் சேருவதிலே தடை ஏற்படுகிறது. அந்தத் தடையை நீக்குவதற்கு இந்தப் பட்டியலை உடனடியாகச் சீர்த்திருத்தி அமைக்க வேண்டும். இதைக் கண்காணிக்க வேண்டும்.

ஒன்றை மட்டும் சொல்லி முடித்துக் கொள்கிறேன். 10(1) அடங்கல், 10(1) எண் 14 சிட்டா ஆகிய இவையெல்லாம் முக்கியமாக வருவாய்த் துறையிலே பின்பற்றக்கூடிய கணக்குகள் ஆகும். எனவே, இந்த 10 (1) அடங்கலிலே மிகப் பெரிய உண்மையை நாம் கண்டறிய வேண்டும். கிராம நிர்வாக அலுவலர்கள் எல்லாம் ஒவ்வொரு தல வாரியாகச் சென்று, எந்த Survey எண்ணில் என்ன தானியம் சாகுபடி செய்யப்பட்டுள்ளது; கரும்பா, நெல்லா, கேழ்வரகா, பருத்தியா, மிளகாயா என்று பார்க்க வேண்டும். அப்படி நேரடியாகப் பார்த்து, அவர்கள் விவரங்களைத் தாக்கல் செய்தால், ஒவ்வொரு ஆண்டும் என்ன பயிரை, எத்தனை ஏக்கரில் சாகுபடி செய்கிறோம். இந்த ஆண்டினுடைய திட்டக் குறியீடு என்ன? நெல்லினை எத்தனை ஏக்கரில் சாகுபடி செய்திருக்கிறோம், இந்த ஆண்டு தேவையான தண்ணீர் இருக்கிறதா? கடந்த ஆண்டு உற்பத்தியினுடைய அளவு என்ன? இந்த ஆண்டு திட்ட மதிப்பு என்ன? இந்த ஆண்டு எத்தனை ஏக்கரில் பயிரிடலாம் என்ற உண்மையான புள்ளிவிவரத்தை நாம் தெரிந்து கொண்டு புதியத் திட்டங்களை உருவாக்க வேண்டுமென்று சொன்னால், நாம் போடுகின்ற திட்டங்களெல்லாம் பயனாளிகளைச் சென்றடைய வேண்டுமென்று சொன்னால், இந்த 10(1) அடங்கலை பயனுள்ள வகையில் உருவாக்க கிராமங்களில் உள்ள கிராம நிர்வாக அலுவலர்களும், வருவாய்த் துறை ஆய்வாளர்களும், நான் சொல்கின்றபடி, ஒன்றியத்தினுடைய தலைமையிடத்தில் போட இருக்கின்ற புதிய வட்டத்தினுடைய துணை வட்டாட்சியரும் பார்த்து, ஒவ்வொரு இடமும் என்னால் சரிபார்க்கப்பட்டது என்று சாகுபடி

பதிவேட்டில் அவர்கள் சான்றளித்துக் கையொப்பமிடுகின்ற அளவிற்கு உருவாக்கினால்தான், கிராம நிர்வாக அலுவலர்களையும், வருவாய்த் துறை ஆய்வாளர்களையும் இயக்க முடியும். அவர்களைச் சரியான முறையில் வேலை வாங்க வேண்டும். ஓர் ஆட்சியின் திட்டங்களை வருவாய்த் துறை அடிமட்ட அலுவலர்களால்தான் மக்களுக்குக் கொண்டு போய் சேர்க்க முடியும். எனவே, ஒரு துணை வட்டாட்சியரை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

*முற்பகல் 11-25*

கடந்த ஆண்டு என்னுடைய தொகுதியின் தலைமையிடமான கடலாடியில் 87 இலட்சம் ரூபாய் செலவில் தாலுகா அலுவலகம் கட்ட நிதி ஒதுக்கீடு செய்து, tender கோரப்பட்டு இருக்கிறது. இதற்காக ஏற்பாடு செய்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்து, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை மானியத்தில் பேச வாய்ப்பு தந்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். வருவாய்த் துறை என்பது மற்ற அனைத்துத் துறைகளையும் அரவணைத்துக் கொண்டு செல்லக்கூடிய ஒரு துறையாகும். அனைத்துத் துறைகளுக்கும் வழிகாட்டியாக இருக்கின்ற ஒரு துறை என்று சொன்னால் கூட அது மிகையாகாது. எனவே, வருவாய்த் துறை மூலம் மக்களுடைய மனநிலையை, சிந்தனையை உயர்த்தக்கூடிய வகையில் செயல்பாடுகள் அமைய வேண்டும்.

இலவச வேட்டி, சேலை என்பது என்னைப் பொறுத்தமட்டில், பாமர மக்கள் மத்தியில் அதற்கு வரவேற்பு இருந்தாலும்கூட, அது பாமர மக்களின் மனநிலையைப் பாதிக்கின்றதோ, அதாவது கையேந்தக்கூடிய ஒரு மனநிலையை ஏற்படுத்திவிடுமோ என்று நான் அஞ்சுகின்றேன். இன்னொரு நோக்கத்தில் பார்த்தால், கூட்டுறவுத் துறை மூலம் உற்பத்தி செய்யப்படுகின்ற அந்தத் துணிகளை வாங்கும்போது, அந்தத் துறைக்கு ஊக்கம் கொடுக்கக்கூடியதாக அது அமைகின்றது. இருந்தாலும், இலவசம் என்று சொல்லக்கூடிய நிலை மக்களுடைய மனதில் எதற்கும் கையேந்தக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்திவிடுமோ என்று அஞ்சத் தோன்றுகிறது. இலவச வேட்டி, சேலை கொடுக்கக் கூடிய கிராமங்களில் சென்று பார்த்தால், 50



ரூபாய், 60 ரூபாய் சம்பளத்திற்குக் கூலி வேலைக்குச் செல்லக் கூடியவர்கள் வேலைக்குச் செல்லாமல், அங்கு போய்க் வரிசையில் நின்று, சண்டை போட்டு வாங்கி வரக்கூடிய இப்படிப்பட்ட ஒரு நிலை இருக்கிறது. எனவே, இலவசமாகக் கொடுக்கக்கூடிய அந்தத் துணியின் தரம் 50 ரூபாய் என்று வைத்துக்கொண்டால்கூட, அதற்குப் பதிலாக, அவர்களுடைய வீட்டின் தரத்தை மேம்படுத்த அவர்களுடைய மின் கட்டணத்தை 10 சதவிகிதம் அளவுக்குக் குறைத்துக் கொடுப்பதன் மூலம் அவர்களுக்கு ஊக்கம் கொடுக்க முடியும். ஆகவே, இலவசம் என்று சொல்வதை மாற்றி, ஏழைகளை ஊக்குவிக்கக்கூடிய வகையில், அவர்களுடைய வீட்டின் தரத்தை மேம்படுத்த, மின் கட்டணத்தை 10 சதவிகிதமாகக் குறைப்பது போன்ற திட்டங்களைத் தீட்டினால், அவர்களுடைய அந்த மன நிலையும் பாதிக்காது, நாம் உழைக்க வேண்டும் என்ற ஆர்வத்தையும் அவர்களிடத்தில் ஏற்படுத்த முடியும் என்று நான் கருதுகிறேன்.

இயற்கைச் சீற்றத்தால் ஏற்படும் இழப்புகளுக்கு அரசாங்கம் வழங்குகின்ற நிவாரணம். நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், எங்களது கன்னியாகுமரி மாவட்டத்தில் இயற்கைச் சீற்றத்தால் ஒரு வாழை மரம் சேதப்படுத்தப்பட்டால், அந்த வாழை மரத்திற்கு 5 ரூபாய் கொடுக்கப்படுகிறது. ஆனால், பக்கத்து மாநிலமான கேரளாவில், அதாவது களியக்காவிளையின் கிழக்குப்புறம் 5 ரூபாயும், கேரளாவின் பக்கம் சென்றுவிட்டால் 25 ரூபாயும் வழங்கப்படுகிறது. எனவே, அந்த வாழை மர சேதத்திற்கான ஈட்டுத் தொகையைக் கூடுதலாக்கிக் கொடுக்க அரசாங்கம் முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஏழை மக்கள் புறம்போக்கு நிலங்களில் வீடு கட்டியிருக்கிறார்கள். அந்த வீடுகளைச் சுற்றி, தங்கள் வருமானத்திற்காக இரப்பர், தென்னை போன்ற மரங்களை வைத்திருக்கிறார்கள். அரசுப் புறம்போக்கு நிலம்தான் அது. அவர்களுடைய வருமானத்திற்காக அதை வைத்திருக்கிறார்கள். அந்த மரங்களுக்கு வருட வரியாக 8 ரூபாய் வசூலிக்கப்பட்டு வந்தது. அது தற்பொழுது 50 ரூபாயாக உயர்த்தப்பட்டு இருக்கிறது. இது மிகுந்த அதிகத் தொகையாக இருக்கிறது. அதைக் குறைந்தபட்சம் 15 ரூபாயாகக் குறைக்க முடியுமா என்று அரசாங்கம் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மக்கள் வேறு எந்த வழியும் இல்லாமல் புறம்போக்கு நிலங்களில் வீடு கட்டியிருக்கிறார்கள். அந்த வீடுகள் இருக்கக்கூடிய இடம், குளம் புறம்போக்கு, கால்வாய்ப் புறம்போக்கு என்று பதிவேடுகளில் இருக்கிறது.

[திரு. சி. வேலாயுதன்] [1999 ஏப்ரல் 6

ஆனால், நாம் எங்கு சென்று பார்த்தாலும், குளமாகவோ, கால்வாயாகவோ இருந்த எந்தவிதமான அடையாளமும் கிடையாது. சாதாரண புறம்போக்கு நிலம் மாதிரிக் காட்சியளிக்கின்றது. எப்பொழுதோ இருந்த ஒரு பதிவேட்டைப் பயன்படுத்தி, அந்த ஏழைகளுக்குப் பட்டா வழங்காததன் காரணமாக, மின் இணைப்புக் கிடைக்காமல், குடும்ப அட்டை கிடைக்காமல், அவர்கள் பலவிதமான துன்பங்களுக்கு ஆளாகியிருக்கிறார்கள். எனவே, இதை அரசு பரிசீலிக்க வேண்டும். அதைக் குளமாகப் பயன்படுத்த வாய்ப்பு இருக்கிறதா அல்லது வாய்க்கால் போக்குவரத்துக்குப் பயன்படுத்துவதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்பதை ஆராய்ந்து, எதற்கும் பயன்படாது என்ற உண்மை நிலையைக் கண்டறிவோமானால், அவர்களுக்கு பட்டா வழங்குவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-30*

அதேபோன்று, கள்ளச் சாராயப் பிரச்சினை. இரண்டு நாட்களுக்கு முன்னால்கூட, பலர் இறந்ததாகச் செய்தி வந்திருக்கிறது. காவல் துறையினர் வருகின்றார்கள் என்றால், அவர்கள் மறைந்துவிடுகிறார்கள். அதனால் பிரச்சினை ஏற்படுகிறது. வருவாய்த் துறை அதிகாரிகள் அவர்களைக் கண்டறிந்து, காவல் துறைக்குத் தகவல் கொடுக்கின்ற வகையில், இந்தப் பணியிலும் அவர்களை ஈடுபடுத்த முடியுமா என்பதை அரசாங்கம் கவனிக்க வேண்டும்.

அடுத்து. இயற்கைச் சீற்றம். வீடுகள் தீயினாலே எரிந்துவிடுகின்றன, மழையினால் சேதம் அடைந்துவிடுகின்றன, பெருங்காற்றினால் சேதம் அடைந்துவிடுகின்றன என்ற நிலை ஏற்படுகின்றபோது, தற்போது ஆயிரம் ரூபாய் அரசால் வழங்கப்படுகிறது. ஒன்றும் இல்லாத ஏழை, அவன் சேமித்து வைத்திருந்த அந்தப் பொருட்களும், துணிமணிகள் அனைத்தும் தீயில் எரிந்துபோய் நிர்க்கதியாக நிற்கக்கூடிய நிலையில் உள்ள அவனுக்கு, ஆயிரம் ரூபாய் கொடுத்தால் அதைக்கொண்டு, ஒன்றும் செய்ய முடியாத நிலை இருக்கிறது. சமீபத்தில் என்னுடைய வீட்டின் பக்கத்தில் உள்ள ஒரு ஏழை விவசாயி—குஞ்சுபிள்ளை என்பது அவருடைய பெயர், அவருக்கு எந்த வசதியும் கிடையாது. இரண்டு பெண் குழந்தைகள்தான் அவருக்கு இருக்கிறார்கள். அவருடைய வீடு தீயினால் எரிந்துவிடுகின்றது. நான் எவ்வளவோ முயற்சி செய்தேன். அரசாங்கத்திலிருந்து நல்ல நிதி உதவி கிடைக்கும் என்று, என்னுடைய கற்பனையில் ஆசைப்பட்டு, முயற்சி செய்து பார்த்ததில், R.D.O. வரை சென்று முயற்சி செய்து பார்த்ததில், ஆயிரம் ரூபாய்தான் வழங்க முடியும், அதற்கு மேல் வழங்குவதற்குச்



1999 ஏப்ரல் 6] [திரு. சி. வேலாயுதன்]

சட்டத்தில் வழியில்லை என்று சொல்லக்கூடிய நிலை இருக்கிறது. எனவே, இந்த ஆயிரம் ரூபாய் என்பதைக் குறைந்தபட்சம் 5 ஆயிரம் ரூபாய் என்றாவது வழங்கினால் தான், தன்னுடைய ஓலைக் குடிசையைத் திரும்பவும் கட்டிக் கொண்டு, அந்த ஓலைக் குடிசையில் தன்னுடைய மனைவி, மக்களோடு வாழக்கூடிய நிலை அவர்களுக்கு ஏற்படும். இல்லையென்றால், அந்த ஆயிரம் ரூபாயை வாங்கிக்கொண்டு, இரண்டு நாள் சாப்பாட்டிற்குப் பயன்படுத்திவிட்டு, இன்னொரு வீட்டின் திண்ணையில் சென்று வாழக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுவிடும். எனவே அரசாங்கம், இந்த ஆயிரம் ரூபாய் என்பதை, 5 ஆயிரம் ரூபாய் என்று மாற்றுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சாதிச் சான்றிதழ். பல மாவட்டங்களில் சாதிச் சான்றிதழ் கிடைக்காமல் மேல்படிப்புக்குச் செல்ல முடியாமல் கஷ்டப்படுகின்ற நிலை ஏற்படுகிறது. பள்ளிக்கூடத்திற்குச் செல்ல முடியவில்லை,. வேலைக்குச் செல்ல முடியவில்லை, இதுபோன்ற சூழ்நிலைகள் ஏற்படுகின்றன. எங்களது மாவட்டத்தைப் பொறுத்தவரையில், கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை தாலுகாவிலும் உள்ள கிருஷ்ணன் வகை சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்—இங்கே சென்னையிலே கிட்டத்தட்ட 500 குடும்பங்கள், நிரந்தரமாக சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்னாலே வந்து, வீடுகளை வாங்கிக்கொண்டு, ஊரோடு எந்தவிதமான ஒட்டுறவும் இல்லாத அளவுக்கு வாழ்க்கையை ஆரம்பித்துவிட்டார்கள், குடும்பத்தோடு இங்கே வாழ்கிறார்கள். அவர்களுக்குச் சாதிச் சான்றிதழ் கிடைக்கவில்லை. இங்கே கேட்டால், கன்னியாகுமரி மாவட்டத்திற்குச் சென்று, அங்கே கேட்டு வாங்கிக் கொள்ளுங்கள் என்று சொல்கிறார்கள். அங்கே சென்றால், குடும்ப அட்டை இருக்கிறதா, எங்கே வேலை பார்க்கிறீர்கள் என்று அத்தாட்சிகள் கேட்கிறார்கள். இந்த அத்தாட்சிகளை அவர்களால் கொடுக்க முடியாத நிலை ஏற்படுகிறது. அதனால், அங்கே இருக்கின்ற தாலுகா அலுவலகத்திலும், R.D.O. அலுவலகத்திலும் இவர்களுக்குச் சான்றிதழ் வழங்குவதிலே சிரமம் ஏற்படுகிறது. அங்கே இருந்து இங்கே வருகிறார்கள். இங்கேயும் சான்றிதழ் கிடைக்காத நிலை ஏற்படுகிறது. எனவே, அரசாங்கம் இதைக் கவனத்தில் கொண்டு, வெகு விரைவில் அவர்களுக்குச் சான்றிதழ் வழங்கக் கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, இரண்டு கோரிக்கைகளை மட்டும் சொல்லி முடித்துக் கொள்கிறேன். பத்மநாபபுரம் தொகுதி, கல்குளம் தாலுகா, இரணியல்

[திரு. சி. வேலாயுதன்] [1999 ஏப்ரல் 6

கிராமத்தில், தங்கச்சியம்பலம்வயல் என்று சொல்லக்கூடிய, கேரள அரசினுடைய கோயில் நிலத்தைச் சேர்ந்த சொத்து, சர்வே எண் 4058இல் 49 சென்ட் இடத்தில், பல சாதிகளைச் சார்ந்தவர்கள், கிருத்தவர்கள், இந்துக்கள் என்று சாதி மதத்திற்கு அப்பாற்பட்டு 18 வீடுகளைக் கட்டிக் கொண்டு, உண்மையிலேயே ஒரு சமத்துவபுரமாக, ஏற்கெனவே அமைந்த ஒரு சமத்துவபுரமாக அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அங்கே 8 கிருத்தவர்கள் வாழ்கிறார்கள். 10 இந்துக்கள் வாழ்கிறார்கள். 3 கடைகள் இருக்கின்றன. ஒரு படிப்பகம் இருக்கிறது. 50 ஆண்டுகளாக அவர்கள் அங்கே குடியிருக்கிறார்கள். அவர்களுக்கு பட்டா கிடைக்காத காரணத்தால், அவர்களது வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்பட வாய்ப்பில்லாமல் இருக்கிறது. அது கேரள அரசுக்குச் சொந்தமான, ஆலயத்திற்குச் சொந்தமான இடம். தங்கச்சியம்பலம்வயல் என்று அந்த இடத்திற்குப் பெயர் வழங்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்குப் பட்டா கிடைக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கல்குளம் தாலுகா, கல்குளம் கிராமத்தில், குமாரபுரத்தில் சர்வே எண் 399/5இல் 4 வீடுகள் கட்டி, அம்பிகாதேவி, மணி, ஸ்ரீகுமார், தங்கம் என்று சொல்லக்கூடிய 4 பேர் வாழ்கிறார்கள். அந்த இடம் குளத்துப் புறம்போக்கு என்று சொல்லப்படுகிறது. அங்கே சென்று பார்த்தால், தண்ணீரோ, குளமோ, வாய்க்காலோ இருந்த அடையாளமே இல்லை. இந்தப் பிரச்சினையை அரசாங்கம் கருத்தில் கொண்டு, அவர்களுக்கு உதவிட வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

வாழிய செந்தமிழ்; வாழ்க நற்றமிழர்,
வாழிய பாரத மணித்திருநாடு,
வந்தே மாதரம், வந்தே மாதரம்!

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மீ.அ. வைதியலிங்கம்.

*முற்பகல் 11-35*

***திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஜாதி மத, ஏழை பணக்காரன் வித்தியாசம் இல்லாமல், சமுதாயத்தோடு பின்னிப் பிணைந்திருக்கிற நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், தாயுள்ளத்தோடு, கருணையுள்ளத்தோடு, நலிந்தோருக்கு வழங்குகிற திட்டங்கள் அனைத்தையும் மக்கள் மத்தியிலே கொண்டு போய்ச் சேர்க்கிற வருவாய்த் துறை மானியக்



1999 ஏப்ரல் 6] [திரு. மீ.அ. வைதியலிங்கம்]

கோரிக்கைகளின்மீது பேசுகிற வாய்ப்பினை அளித்தமைக்காக உங்களுக்கு முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் துறைதான் சமுதாயத்திலே இருக்கின்ற மக்களுடைய அடிப்படைப் பிரச்சினைகளைக்கூடத் தீர்த்துக் கொள்வதற்கு வாய்ப்பளிக்கிறது என்ற காரணத்தினால், இத்துறை குறித்து இதுவரையில் பேசியவர்கள் சுட்டிக்காட்டிய கிராமப்புறங்கள் மட்டுமல்லாமல் புறநகர்ப் பகுதிகளிலே இருக்கின்ற மக்கள் மத்தியிலே பட்டா வழங்குகிற விஷயத்தில் இப்போது பெருத்த ஏமாற்றம் உருவாகியிருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. ஏனென்றால், வீட்டுமனை பட்டா 1998-99-இல் மொத்தம் 1,97,973 பேர்களுக்கு வழங்கியிருப்பதாகவும், அதிலே, காஞ்சிபுரம் மாவட்டத்தில் 7,433 பேர்களுக்கு வழங்கியிருப்பதாகவும் இங்கே அறிவித்திருக்கிறீர்கள். ஆனால், சென்னையை ஒட்டியிருக்கின்ற புறநகர்ப் பகுதிகளில் பட்டா வழங்கக்கூடாது என்று தடை விதிக்கப்பட்டிருக்கின்ற காரணத்தினால், இந்தப் பகுதியிலே வாழ்கிற ஏழையெளிய மக்கள், 50 ஆண்டுகாலம், 60 ஆண்டுகாலம் வாழ்கின்றவர்கள்கூட பட்டா பெற முடியாத நிலை உருவாகியிருக்கிறது.

நான் மாண்புமிகு முதல்வர் அவர்களையும், வருவாய்த் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்வதெல்லாம், எப்படி வரைபட அனுமதி இல்லாமல், அங்கீகாரம் இல்லாத மனைப் பிரிவுகளில் வீடு கட்டியவர்களுக்கு ஒரு காலம் நிர்ணயித்து, அவற்றை வரைமுறைப்படுத்திக்கொள்கிறோமோ, அதுபோல 30 ஆண்டுகாலம், 50 ஆண்டுகாலம் என்று ஒரு காலவரையறை வைத்து, அதற்கு முன்பாகக் குடியேறியவர்களுக்கு நாம் ஏற்கெனவே விலை நிர்ணயித்திருந்தாலும்கூட, அந்த விலைக்கு, வட்டி இல்லாமல்—வட்டியை மட்டும்—தள்ளிவிட்டு, பணத்தைப் பெற்றுக்கொண்டு, நாம் பட்டா தர முன்வருவோமானால், மாண்புமிகு முதல்வர் அவர்கள் பல இலட்சக்கணக்கானவர்களுக்கு பட்டா கொடுத்த பெருமையும், அதேபோல, அரசுக்குக் கோடிக்கணக்கான ரூபாய் வருமானமும் புறநகர்ப் பகுதிகளிலேயிருந்து வரும் என்பதையும் நான் இந்த நேரத்திலே மெத்தப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

முன்பெல்லாம் நத்தமாக இருக்கின்ற பகுதிகளிலேகூட, குடியிருப்பவர்கள் அங்கே வாழ்கிறார்கள் என்று கிராம அதிகாரிகள் சான்று வழங்கினால், அம்மக்களுக்கு வரைபட அனுமதி தருவார்கள்; வங்கிகளிலே கடன் தருவார்கள். இப்போது அதற்கும் பட்டா வேண்டும்

என்று கேட்கிறார்கள். நத்தம் என்று சொன்னாலே, குடியிருக்கிற பகுதி என்று வந்துவிட்ட காரணத்தினால், பல்லாண்டுகளாகக் குடியிருக்கிறவர்களுக்கு, நில வருவாய்ப் புத்தகங்களிலே இடம் பெற்றிருக்கக்கூடிய அவர்களுக்கு, கிராம அதிகாரிகள் சான்று தந்தாலே, அவர்களுக்கு வரைபட அனுமதியும், அதேபோல, வங்கிகளிலே கடன் பெறுவதற்கு அனுமதியும் அளிக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு பக்கத்திலே நாம் பட்டா தருவதில்லை; இன்னொரு பக்கம் குடியுரிமை இல்லாத காரணத்தினால், பல பேர், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்கூட, இந்த பட்டா இல்லாமல், இப்போது இலவசமாக அளிக்கப்படுகின்ற வீடுகளைப் பெற முடியாத அளவிற்கு அவர்கள் ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். இன்னொரு பக்கம், ஆக்கிரமிப்பாளர்கள் தரிசு நிலங்களை ஆக்கிரமிப்பதிலேயிருந்து தவறுவதில்லை. அதுவும், புறநகர்ப் பகுதிகளிலே, விலையுயர்ந்த இடம் என்கின்ற காரணத்தினாலே, காவல் துறையிலே சொல்வார்கள்—தங்கத்தைத் திருட வருகின்ற திருடன் 'தங்கத்தை மட்டுமே திருடுவான்; வெள்ளியைத் திருட வருகின்ற திருடன் வெள்ளியை மட்டுமே திருடுவான்' என்று. எதையெதைத் திருட வருகிறானோ, அவன் அந்தப் பொருளை மட்டும் திருடிச் செல்வான் என்று சொல்வார்கள். அதைப்போல, இந்தப் புறநகர்ப் பகுதிகளில் தரிசு நிலங்களை மனை போட்டு விற்பதற்கென்றே ஒரு கும்பல் இருக்கிறது. அதைப்போல அரசு உச்சவரம்பின்கீழ் வரும் இடங்களை மட்டுமே மனை போட்டு விற்பதற்கு என்று ஒரு கும்பல் இருக்கிறது. ஒரு பக்கம், உச்சவரம்பிலே நிலத்தை நாம் எடுக்கிறோம். இதுவரையிலே *2,014* ஹெக்டேர், *88* ஏர் எடுத்திருக்கிறோம் என்று கணக்கு வந்திருக்கிறது. அதிலே அரசு நிறுவனங்களுக்கு நாம் வழங்கியிருப்பது *327* ஹெக்டேர், *67* ஏர்தான். நீதிமன்ற வழக்கிலே இருப்பது *104* ஹெக்டேர். ஆக்கிரமிப்புகள் *216* ஹெக்டேர். அரசுக்கு வழங்கியிருக்கிற நிலங்களைத் தவிர, நீதிமன்ற வழக்கிலே இருப்பதும் ஆக்கிரமிப்புகள்தான். கணக்கிட்டுப் பார்த்தால், அரசுக்கு, பொதுக் காரியங்களுக்கு வழங்கியிருப்பதைவிட, இந்த இடங்கள் அதிகமாக இருக்கின்றது என்பதை நாம் உள்ளங்கை நெல்லிக்கனிபோல தெரிந்து கொள்ள முடிகிறது. எனவே, இதற்கென்றே ஒரு கும்பல் இருக்கிறது. எங்கெங்கோ இருக்கிறது. அதோடு, கடந்த ஐந்தாண்டு கால ஆட்சியில் இருந்த கிராம அதிகாரிகள் - இன்றைக்கும் ஓரிருவர் இருக்கத்தான் செய்கிறார்கள்—அவர்கள் அழகாக



எல்லாவிதமான விவரங்களையும் இந்தக் கும்பலுக்கு தந்து, எப்படி ஆக்கிரமிப்புச் செய்வது என்ற வழிமுறைகளைக்கூடச் சொல்லிக் கொடுத்துவிடுகிறார்கள். அதே நேரத்தில், அரசுக்குத் தேவைப்படுகிறபோது, அப்படிச் செய்வதில்லை குறிப்பாக என்னுடைய தொகுதியிலே சொல்ல வேண்டுமானால், நம்முடைய மின்சாரத் துறைக்கு, ஒரு துணை மின் நிலையம் அமைப்பதற்காக கவுரிவாக்கம் பகுதியிலேயும், சோளிங்கநல்லூர் பகுதியிலேயும், மடிப்பாக்கம் பகுதியிலேயும் இடம் கேட்டு, அரசுக்கு மனுச் செய்து நான்கு ஆண்டுகள் ஆகின்றன. ஆனால், இதுவரையில் அதற்கான அனுமதி பெறப்படவில்லை. புறநகர்ப் பகுதிகளிலே பட்டாக்கள் தரவேண்டுமென்று, சிறப்பு அம்சமாகக் கேட்கிறபோதுகூட, நம்முடைய அரசு என்ன சொல்லியிருக்கிறது என்றால், எல்லாத் துறைகளும் தடைகளை அவரவர்களே நீக்கிக் கொண்டு, அதைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அது போகாத ஊருக்கு வழி சொல்வதுபோல் ஆகிவிடும் என்கின்ற காரணத்தினால், அருள்கூர்ந்து ஏதாவதொரு நிர்ணயம் செய்யுங்கள், *20* ஆண்டுகாலம், *30* ஆண்டுகாலம் இருப்பவர்களுக்கு, விலையை நிர்ணயித்தாவது, அவர்களுக்கு பட்டா வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே உங்களை நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-40*

அதுபோல, வாரிசுச் சான்றிதழ் வழங்குகிறோம். வருவாய்த் துறை அதிமுக்கியத்துவம் வாய்ந்தது. அரசுத் துறையிலே இருப்பவர்கள், தனியார் துறையிலே இருப்பவர்கள் இறந்துவிட்டால், வாரிசுச் சான்று அவசியம் தேவைப்படுகிறதுபோது, வட்டாட்சி அலுவலகத்திலே போய்க் கேட்டால், 'நீதான் அவருடைய மனைவி என்பதற்கு ஏதாவது சான்று கொண்டு வா' என்று சொல்கிறார்கள். அதை யார் தரவேண்டுமென்று கேட்டால், அதுவும் வட்டாட்சியர்தான் தரவேண்டும் என்று சொல்கிறார்கள். இது தமிழகத்தினுடைய கலாச்சாரத்திற்கே கொஞ்சம் எதிராக இருப்பதுபோலப்படுகிறது. எனவே, அருள்கூர்ந்து மாண்புமிகு முதல்வர் அவர்களும், வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும்—சான்று தருகிறபோது அங்கிருக்கின்ற கிராம அதிகாரிகள், அதைப்போல Revenue Inspector அவர்கள்தான் சான்று தருகிறார்கள். அதற்கேற்றாற்போல் அவர்களுக்கு வாரிசுச் சான்றிதழ் தராமல், 'அது தேவையில்லை. நீதான் இன்னாருடைய மனைவி

என்பதற்கான ஆதாரங்களைக் கொண்டு வாருங்கள், என்று கேட்கிறார்கள். இப்படிச் சொல்வதனுடைய விளைவா,க சில சமூக விரோதிகள்கூட இதைப் பயன்படுத்திக் கொண்டு, நான் கூட அவருக்கு மனைவிதான் என்று சொல்லக்கூடிய வழக்குகளும் ஒரு சில இடங்களில் இருக்கின்றன என்பதையும் நாம் மறந்து விடக்கூடாது என்கிற காரணத்தினால்—இதிலே ஏதாவது வழிவகை காண வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, நலிந்தோர் உதவித்தொகை. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், மிக, மிகத் தாயுள்ளத்தோடு அளிக்கின்ற தொகை, இதுவரை 7,500 ரூபாயாக இருந்தது. மத்திய அரசு 5,000 ரூபாயும், நாம் 2,500 ரூபாயும் கொடுப்பது என்றிருந்ததை, இப்போது மத்திய அரசு 10,000 ரூபாயாக உயர்த்தி, அவர்கள் வழங்குவதாகச் சொல்லிவிட்டு, அதற்குப் பதிலாக 7,200 ரூபாய்தான் ஆண்டு வருமானம் இருக்க வேண்டும் என்று போட்டிருக்கிறார்கள்.' இப்போதெல்லாம் பிச்சைக்காரர்கள்கூட, நாலணா, எட்டணா போட்டால் வாங்குவது கிடையாது. ஒரு ரூபாய் போட்டால்தான் வாங்குகிறார்கள் எட்டணா போட்டால் திரும்பிப் பார்க்கிறான் கேவலமாக. இந்தக் காலக்கட்டத்தில் சோம்பேறிகள்கூட ஒரு நாளைக்கு எப்படியிருந்தாலும் 50 ரூபாயிலிருந்து 60 ரூபாய் வரை சம்பாதித்து விடுகிறார்கள். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் நேற்றைக்கு விவசாயக் கூலிகளுக்குக்கூட 100 ரூபாய் என்று அறிவித்திருக்கிறார்கள். பெண்களுக்குக்கூட 45 ரூபாய் என்று அறிவித்திருக்கிறார்கள். ஆண்டு வருமானம் 7,200 ரூபாய் என்பது சோம்பேறிகளுக்குக்கூட இந்தக் காலத்தில் கிடைக்கிறது. எனவே, நலிந்தோர்கள் இதனால் பாதிக்கப்பட்டு விடுவார்கள் என்ற காரணத்தினால், அருள்கூர்ந்து மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்து, வருமான வரம்பை நாம் 12,000 ரூபாய் என்று ஏற்கெனவே வைத்திருக்கிறோமே, அந்த வரம்பிலே இருக்க வேண்டும் என்று, அதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களும், வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும் வழிவகை காண வேண்டும். இந்த வருமான வரம்பை உயர்த்தித் தரவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல, ஒரு பெண் திருமணம் செய்துகொண்டு 2 ஆண்டுகளுக்குள் இறந்துவிடுகிறாள் என்றால், வரதட்சணைக் கொடுமை என்றோ அல்லது சந்தேகப்பட்டோ வழக்கு வருகிற போது, நம்முடைய கோட்டாட்சியர் வந்து, பிணப் பரிசோதனை செய்வதற்கு முன்பாக,



அவர் விசாரணை செய்ய வேண்டும் என்று இருக்கிறது. அதுபோன்ற நிகழ்வுகளில் நம்முடைய கோட்டாட்சியர் கிடைக்காத காலகட்டத்தில், ஒரு நாள், இரண்டு நாள்கூட பிணப் பரிசோதனை செய்ய முடியாத நிலை ஏற்பட்டு விடுகிற காரணத்தினால் அவற்றிற்கு முன்னுரிமை தந்து, அவரால் நியமிக்கப்படுகின்ற யாராவது சென்று விசாரணை செய்வதற்கான வாய்ப்புகளை உருவாக்கித் தர வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, விபத்து நிதி 15,000 ரூபாய் என்று உள்ளது. நான் மாண்புமிகு முதல்வர் அவர்களை மிகப் பணிவன்போடு வேண்டி விரும்பிக் கட்டுக் கொள்வதெல்லாம், ஜனவரி 10 ஆம் தேதி மீனம்பாக்கத்திலிருந்து ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள், தாழ்த்தப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். சபரிமலைக்குச் சென்றார்கள். திரும்பி வருகிறபோது விபத்துக்குள்ளாகி, அதிலே 3 பேர்கள் உயிரிழந்துவிட்டார்கள். அந்த 3 பேர்களுக்கும் வயது முறையே 18, 19, 26. அந்தக் குடும்பங்களுக்கு, தாயுள்ளம் கொண்ட தாங்கள் ஏதாவது நிதி உதவி வழங்க வேண்டும் என்றும், இதிலே கை, கால்கள் ஊனமுற்று, அதன் விளைவாக இன்று வரையிலே வேலைக்குச் செல்ல முடியாமல் இருப்பவர்களுக்கு 10,000 ரூபாயாவது நிதி உதவி வழங்க வேண்டும் என்றும் இந்த நேரத்திலே நான் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே, ஏரிகள், குளங்கள், கண்மாய்கள் எல்லாம் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஏற்கெனவே குடியேறியிருக்கிறார்கள். ஏரிகள், குளங்கள், கண்மாய்களில் குடியேறுபவர்களைத் தடுக்காமல் விட்டுவிட்டு, இப்போது நகராட்சிப் பகுதிகளில், பேரூராட்சிப் பகுதிகளில் அவர்களிடத்திலே வாக்குகள் இருக்கின்ற காரணத்தாலே, சாலைகள் அமைத்துத் தந்திருக்கிறோம். அதைப்போலவே, அவர்களுக்கு விளக்கு வசதி செய்து தந்திருக்கிறோம்...

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, விபத்தில் மூன்று பேர் இறந்துவிட்டதாக மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். அவர்களுடைய பெயர்களைத் தயவுசெய்து சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. மீ. அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதற்குத் தனியாக வேண்டுகோள் கடிதமே முதல்வர் அவர்களுக்கு வைத்திருக்கிறேன். நான் அதைத் தந்துவிடுகிறேன் என்பதை இதன் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1999 ஏப்ரல் 6

*மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: பெயர்களைச் சொன்னால், உடனடியாக அதுபற்றி அக்கறை எடுத்துப் பரிசீலிக்க முடியும். அந்தப் பெயர்கள்கூட ஞாபகம் இல்லாமல், அவர்களுக்கு நிதி கொடுக்கச் சொன்னால், என்ன புண்ணியம்?

**திரு. மீ. அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேசி முடித்தவுடன் பெயர்களை நான் மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே தந்துவிடுகிறேன்.

அதைப்போலவே, கிராம அதிகாரிகள். வெளியிலே சென்று சான்று பெறுகிறபோது, இரண்டு கிராமங்களுக்கு, மூன்று கிராமங்களுக்கு ஒரு அதிகாரி என்று வைத்திருக்கிறோம். அவர்கள் குறிப்பிட்ட நேரத்திலே கிடைப்பதே இல்லை. எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இரண்டு ஊர்களாக இருந்தாலும், மூன்று ஊர்களாக இருந்தாலும், வாரத்திற்கு ஒரு நாள், அந்தக் கிராம ஊராட்சிப் பகுதியிலாவது தங்கியிருப்பதற்கான உத்தரவினை இடவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோலவே, பல ஆண்டுக் காலமாக 29 ஆண்டு காலம், 30 ஆண்டு காலமாகப், பள்ளிகளை நடத்துகிறார்கள். அரசு அனுமதி பெற்று நடத்துகிறார்கள். அரசு அங்கீகாரம் பெற்று நடத்துகிறார்கள். அவர்கள் ஆண்டுக்கு ஒரு முறை அங்கீகாரத்தைப் புதுப்பிக்க வேண்டுமென்று இருக்கிறது. பொது இடங்களுக்கென்று 30 ஆண்டுகளுக்கு முன்னால் ஒதுக்கப்பட்ட இடத்தைப் பெற்றவர்கள் அந்த இடங்களைப் பள்ளிக்குத் தந்திருக்கிறார்கள்.

முற்பகல் 11-45

இப்போது சொல்கிறபோது, அந்தக் கட்டடத்தை ஆய்வு செய்வதில் தவறில்லை. Document இருக்கிறதா, அதைக் காட்டுங்கள்; உங்களுக்குச் சொந்தமா என்று கேட்டு, அரசினுடைய அனுமதியைப் பெற முடியாத ஒரு நிலை இருக்கிறது. எனவே, அதைத் தளர்த்தி, 30 ஆண்டுகளாக நடைபெறுகிற பள்ளிகளுக்கு அங்கீகாரம் வழங்குவதற்கு உத்தரவிட வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் உங்களை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

ஏரி, குளங்களிலே இருக்கிற ஆக்கிரமிப்புகளை, அருள்கூர்ந்து, ஒரு தனிச் சட்டம் இயற்றியாவது அப்புறப்படுத்தித் தரவேண்டுமென்று இந்த நேரத்திலே வேண்டி விரும்பிக் கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு



1999 ஏப்ரல் 6] [திரு. மீ.அ. வைதியலிங்கம்]

நன்றி கூறி, நிதி அளிப்பதாகக் கூறிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

## 4. தகவல் கோரல்

### உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் கைதான விவரம்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆர். சொக்கர்.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான பிரச்சினைக்காக உங்களுடைய அனுமதியை வேண்டுகிறேன். நமது சட்டமன்றத்திலே மிகத் துடிப்பாகச் செயல்படக்கூடிய திரு. சி. ஞானசேகரன், அவர்கள், இன்று மக்களுடைய பிரச்சினைக்காக, இரயில் மறியலில் ஈடுபட்ட காரணத்தினால், கைது செய்யப்பட்டுள்ளதாக எங்களுக்குத் தகவல் வந்திருக்கிறது. சட்டமன்றம் நடந்துகொண்டிருக்கிற நேரத்திலே, அவர் சட்டமன்றக் கூட்டத் தொடரில் கலந்து கொள்ளக் கூடிய வகையிலே, அவரையும் மற்றும் அவரோடு சேர்ந்தவர்களையும் உடனடியாக விடுதலை செய்து...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இது குறித்து எந்தத் தகவலும் இது வரையில் வரவில்லை. தகவல் வந்த பிறகு, முறையாகத் தெரிவிக்கப்படும்.

**திரு. ஆர். சொக்கர்:** எங்களுக்குத் தகவல் வந்திருக்கிறது: அதைச் சொன்னேன்.

## 3. மானியக் கோரிக்கைகள், 1999-2000, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

**(அ) கோரிக்கை எண் 1—நில வருவாய்த் துறை**

**(ஆ) கோரிக்கை எண் 40—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு**

**(இ) கோரிக்கை எண் 45—இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்—தொடர்ச்சி.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ச. இராஜ ரெட்டி.

**THIRU S. RAJA REDDY:** Hon. Deputy Speaker, Sir, on behalf of the Communist Party of India, I would like to express my views on the Revenue Department. In a State where 65% of the population live in rural areas, the Revenue Department is one of the Departments which has direct contact with the masses. The functions of the Revenue Department are not only to safeguard the rights of the people, their holdings and land but also to bring land reforms and social equality by assigning and distributing surplus lands to the landless poor and Adi—Dravidars and Scheduled Tribes. When there is law and order problem and natural calamities like drought flood and the Revenue Department is the first to rush to the affected areas and initiate various relief measures.

The most important work done by the Revenue Department is the assignment of cultivable waste lands and grant of house site pattas to landless poor and implementing land reform laws. Cultivable lands are assigned to cultivating poor in all the districts of the State including Dharmapuri. But in Dharmapuri district in Denkanikottai and Hosur Taluks assignment of cultivable lands is banned by a G.O. in 1989 by the then D.M.K. Government. When this question was raised during the Budget session of 1997, the Hon. Minister for Revenue gave an assurance on the floor of this House that assignment of poramboke lands would be considered and when the Hon. Minister Mullaivendan visited our constituency, hundreds of petitions were given to him in this regard. It is a question of livelihood of thousands of landless poor. I once again appeal to the Hon. Minister to reconsider the issue on realistic and humanitarian grounds and effect assignment of cultivable lands.

In Nelluaru Agraharam of Denkanikottai taluk, 700 acres of land were declared surplus in 1982 under the Land Reforms Act. The cultivating peasants paid the first instalment of compensation to the Assistant Commissioner, Land Reforms, Erode. Because of the G.O. banning assignment in Denkanikottai and Hosur taluks, assignment could not be made even though they had paid the first instalment of compensation.

It is the policy of the Government to assign surplus lands to the eligible poor. But, the land owners who had lost their lands get the lands assigned in benami names and the eligible poor who have been waiting for



long years are denied the land and even the assignment is delayed and in some cases, they are locked up up in courts.

Collection of arrears from the cultivators of land should be waived because of the continuous loss of crops due to floods.

There is unevenness in the grant of house site pattas in different districts. For example, 28,876 in Cuddalore, 14,650 in Madurai, 14,813 in Villupuram were given. But in districts like Dharmapuri, 8,335 house site pattas only were given. Even the beneficiaries who could be identified by the Revenue authorities could not hold the land, because they could not evict the owners who are already in possession.

In some villages in Thally Union, house site pattas were given but they were not identified and taken possession by the Adi-Dravidars. In Thally constituency, lands were acquired by the Adi-Dravidar Welfare Department for construction of group houses and notified in the Gazette. But the land owners went to the court and got stay orders in most of the villages. It takes 10 to 20 years to vacate the stay and in one village called Salivaram, Gazette notification was made in 1957 and even after 42 years the stay is still in force.

I request the Hon. Minister to order the District Collectors to file caveats in courts as soon as the Gazette notification is made, so that the courts could not issue stays orders.

Many M.L.A.s stated that community certificates were not being issued to scheduled Tribes. Even three years after the present Government came power Scheduled Tribe Community Certificates were not issued in my constituency properly. I request the Hon. Minister to see that Scheduled Tribe certificates are issued so that they could benefit from the schemes meant for Scheduled Tribes.

முற்பகல் 11-50

Under Accident Relief Scheme, Rs. 15,000/- is provided to the families and under Family Distress Relief Scheme, Rs.10,000/- is provided to the victims. The Government should find a way to see that the entire amount reaches the beneficiaries because at the lower level, the beneficiaries are forced to part with a portion of that amount by the V.A.Os.

[Thiru S. Raja Reddy] [1999 ஏப்ரல் 6

I welcome the scheme of giving Community, Income and Nativity certificates in schools after completion of studies along with Transfer Certificates. Due to this new arrangement, students need not wait in Taluk offices.

I welcome the Committee on Administrative Reforms headed by Justice Ramanujam for ensuring an honest and efficient administration and for preventing corruption. I hope that the decisions of the Government and the recommendations of the Committee would be placed in the Assembly.

Some Tahsildars refuse to take action on erring salesmen in Fair Price Shops. Tahsildars should be asked to take action on Salesman in Fair Price Shops.

It has been mentioned in the Budget speech that 15% of total land area in Tamil Nadu are waste lands and Waste Land Development Authority will be set up. I request the Hon. Minister to include Denkanikottai in the scheme so that the most backward area in Tamil Nadu is developed and the poor people living in those areas are benefited.

Cultivable poramboke lands are given to Social Forestry Department for planting trees. There are thousands of degraded forest lands lying for development. I request the Hon. Minister not to give cultivable Government lands to Social Forestry and the same may be distributed to landless poor.

I request the Hon. Minister to transfer the Chinna Eri in Denkanikottai, as its water is not used for irrigation, to the Local Administration to construct a bus stand for Denkanikottai. When this question was raised in the Assembly, our Local Administration Minister stated that after the transfer of Chinna Eri to Local Administration, construction work would be taken up there. Our Hon. Minister Thiru Mullaivendan had assured during the local body elections that bus stand would be built in the Chinna Eri, in Denkanikottai.

The reputation of a Government is judged by the performance of Local Administration and Revenue Departments, which serve the needs of the people.

I request the Hon. Minister once again to see that the bus stand is built in the Chinna Eri in Denkanikottai and cultivable lands are assigned to the landless poor. I thank you for giving me this opportunity.



1999 ஏப்ரல் 6]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாக இந்த மாமன்றத்தில் வருவாய்த் துறை மானியக் கோரிக்கையின் மீது பேசக்கூடிய வாய்ப்பினைக் கொடுத்ததற்காக என்னுடைய மகிழ்ச்சியையும் நன்றியையும் தெரிவித்து, எனக்குத் தெரிந்த ஒருசில கருத்துகளை இந்த மன்றத்தின் முன் வைக்க விரும்புகிறேன்.

பொதுவாக, ஓர் அரசிற்கு நல்ல பெயரும், அவப்பெயரும் வருவதற்கு அடித்தளமாக இருக்கக்கூடிய துறை, வருவாய்த் துறை என்பது எல்லோருக்கும் தெரியும்.

இன்று மேல்நிலையிலே இருக்கக்கூடிய அதிகாரிகள் முழுமையாக நல்ல முறையிலே செயல்பட வேண்டுமென்கிற எண்ணத்தில் செயல்பட்டாலும்கூட, கீழ்நிலையிலே இருக்கக்கூடிய அதிகாரிகள் மக்களுடைய எண்ணங்களுக்கு ஏற்பச் செயல்படாமல், கீழ்த்தட்டிலே இருக்கக்கூடிய மக்களுக்குத் தேவையான உதவிகளை உடனுக்குடன் செய்யாத ஒரு சூழ்நிலையை நாம் பார்க்கின்றோம். இதையெல்லாம் மாற்றியமைக்கக்கூடிய வகையில் அரசு சிறப்பாகச் செயல்பட வேண்டுமென்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நினைத்தாலும் கூட, அதைச் செம்மையாகச் செயல்படுத்துவதற்கேற்ற வகையில் கீழ்நிலையில் வருவாய்த் துறையில் இருக்கக்கூடிய அதிகாரிகள் இல்லை. செயல்பாடுகளை முழுமையாக மாற்றி அமைக்க வேண்டும்.

குறிப்பாக, ஈரோடு மாவட்டத்திலே, பவானி வட்டத்திலே, ஒற்றைச் சாளர முறையை கோபியிலும் மற்றும் சத்தியமங்கலத்திலும் ஏற்படுத்தி வைத்து, முன்னுதாரணமாகச் செயல்படுவதற்கு, அங்கே இருக்கக்கூடிய சார் ஆட்சியர் மரியாதைக்குரிய திரு. இக்பால் சிங் அவர்கள் முயற்சித்து வருகின்றார்கள். ஆனால், அதே நேரத்திலே, அங்கே கீழ்நிலையில் பணியாற்றக்கூடிய அதிகாரிகள் சிறப்பாகப் பணியாற்றினால்தான் அதிலே நாம் வெற்றியடைய முடியும். எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்த மாற்றத்தைப் படிப்படியாக எல்லா நிலைகளிலும் கொண்டு வந்து, சிறப்பாகச் செயல்படுத்துவதற்கு ஆவன செய்து கொடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்] [1999 ஏப்ரல் 6

எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர்கள் சொன்னார்கள். ஏழையெளியவர்களுக்குத் தையல் இயந்திரம் வாங்க வேண்டுமென்றால், ஆண்டு வருமானம் ரூ. 6,500-க்கு சான்றிதழ் கேட்கிறார்கள். அதுபோல, குடும்பத் தலைவர் இறந்துவிட்டால் அவர்கள் உதவி பெறும்பொருட்டு, ஆண்டு வருமானம் ரூ. 7,500 க்கு சான்றிதழ் கேட்கிறார்கள். மற்றவர்களுக்கெல்லாம் ரூ. 12,000-க்கு ஆண்டு வருமானச் சான்றிதழ் கேட்கிறார்கள். இது என்ன நியாயம் என்றே தெரியவில்லை. இது மத்திய அரசு சம்பந்தப்பட்டதாக இருந்தாலும், என்ன செய்வீர்களோ தெரியாது. இந்தக் கீழ்நிலையிலுள்ள அதிகாரிகள் அந்தச் சான்றிதழ்களை வழங்குவதற்குத் தக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். இதனாலேதான் இலஞ்சம் பெருகுகின்றது. அங்கே இருக்கக்கூடிய அதிகாரிகளிடமிருந்து சான்றிதழைக் கேட்கும்போது, அவர்கள் ரூ.500, ரூ.1,000 கேட்டால் கூடப் பரவாயில்லை என்று அதனைக் கொடுக்கக்கூடிய சூழ்நிலையை நாமே ஏற்படுத்திவிடக் கூடாது. இந்த ஆண்டு வருமான வரம்பை உயர்த்தி, ரூ. 25,000 என்ற அளவிற்குக் கொண்டு வந்தால்தான், குறிப்பாக ஏழை எளியவர்கள் அத்தனை பேரும் பயன்பெற முடியும் என்று அன்போடு இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-55

பயிர் வாரியாகத் தீர்வை விதிக்காமல் ஏக்கருடைய அடிப்படையிலே தீர்வை விதிக்க வேண்டும். மாண்புமிகு முதல்வர் அவர்கள் தங்களுடைய தேர்தல் அறிக்கையிலே தெள்ளத்தெளிவாக எந்தப் பயிராக இருந்தாலும் பாதை வரி நீக்கப்படும், முழுமையாகப் பயிர் வாரியாகத் தீர்வை விதிக்காமல், ஏக்கர் அடிப்படையிலே தீர்வை விதிக்கப்படும் என்று கூறியிருக்கிறார்கள். அது விவசாயிகளுடைய நீண்ட நாள் கோரிக்கை, அதைக் கண்டிப்பாக நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதியிலே மாத்திரம், இன்று பாதை வரியாக 75 இலட்சம் போட்டிருக்கிறார்கள். தண்டத் தீர்வையாக 75 இலட்சம் போட்டிருக்கின்றார்கள். எப்படி விவசாயிகள் கட்டப் போகிறார்கள்? அதைக் கட்டவே இல்லை. கடந்த 4, 5 ஆண்டுகளாக, காகிதத்திலே இருக்கிறதே ஒழிய, உண்மையிலேயே கட்டவில்லை. இந்த நிலையை எல்லாம் பரிசீலனை செய்து, அந்தத் தண்டத் தீர்வையை நிறுத்த வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



1999 ஏப்ரல் 6] [திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்]

பொதுக் காரியத்திற்காக, கோடிக்கணக்கிலே பணத்தை ஒதுக்கீடு செய்கிறோம்; சாலை அமைப்பதற்காக, மயானங்களை எல்லாம் அப்புறப்படுத்த வேண்டும். மயானங்களை ஒழுங்காக தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், எல்லோருக்கும் கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் நில ஆய்வாளர்களை, பணம் கட்டிக் கூப்பிட்டால்கூட பொதுக் காரியத்திற்கு முன்னுரிமை கொடுத்து வருவதில்லை. தனிப்பட்டவர்களுக்கு உடனடியாகச் செல்கின்றார்கள். எனவே, பொதுக் காரியத்திற்கு முன்னுரிமை கொடுத்து வரவேண்டும். நில ஆய்வாளர்கள், அவர்கள், உடனடியாக சாலைகளை அமைப்பதற்கு, வசதியாக மயானங்களை அப்புறப்படுத்தி, ஒழுங்குபடுத்தி, சீர்படுத்திக் கொடுக்க வேண்டும். அதற்கு முன்னுரிமை கொடுத்து நில ஆய்வாளர்கள் செயல்படக்கூடிய அளவிற்குச் செய்து கொடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

முன்னாள் தலைமைச் செயலாளர் சபாநாயகம் அவர்களுடைய குழு அறிக்கை என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. குறிப்பாக, கிராமத்திலே நிர்வாக அலுவலர்கள் சிறப்பாகச் செயல்பட்டால்தான் கிராமப் பகுதிகளிலே இருக்கக்கூடிய மக்கள் சிறப்பான முறையிலே பயன் அடைய முடியும். ஆனால், இப்போது அந்தக் கிராமப் பகுதியிலே அவர்கள் குடியிருப்பதைக் காண்பதே அரிது. ஆகவே, அப்படிப்பட்ட சூழ்நிலையை மீண்டும் உருவாக்க, முன்னாள் தலைமைச் செயலாளர் சபாநாயகம் அவர்களுடைய தலைமையிலே ஒரு commission அமைத்து, அந்த நிலையை ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையிலே நீங்கள் செயல்பட்டீர்கள். அது எந்த நிலையிலே இருக்கிறது? அதைச் செயல்படுத்த வேண்டுமென்று நான் விரும்புகின்றேன். பழைய நிலையை ஏற்படுத்தினால்தான் கண்டிப்பாக அந்தந்தக் கிராமப் பகுதிகளிலே இருக்கக்கூடிய மக்கள் பயன் அடைய முடியும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

நீதிபதி இராமனுஜம் commission மூலமாக, ஊழலை ஒழிக்க வேண்டுமென்ற தெள்ளத்தெளிவான முடிவை எடுத்து, அதை முழுமையாகச் செயல்படுத்த வேண்டும். அப்படிச் செயல்படுத்தினால்தான் ஊழலை ஒழிப்பதற்கு ஏற்ற வகையிலே அமையும். அதைச் செயல்படுத்த வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

புதியதாக பட்டா கொடுக்கும்போது நீரோடை, சாலைப் புறம்போக்கு, வண்டிப் பாதை என்று இப்படிப் பல்வேறு நிலையிலே பார்க்கிறோம். ஆனால், மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் வேலாயுதன் அவர்கள் கூறியதைப்போல, பல்வேறு பகுதிகளை நாங்கள் சென்று பார்க்கின்றபோது மேடான பகுதியாக இருக்கிறது. நீரோடையே இல்லை, ஏரிப் புறம்போக்கு இல்லை. சாலைக்கும், அதற்கும் சம்பந்தமே இல்லை. அதில் 30, 35 ஆண்டுகளாகக் குடியிருக்கிறார்கள். அவர்களுக்கு பட்டா கொடுப்பதற்கு அங்கே இருக்கக்கூடிய மாவட்ட ஆட்சித் தலைவரே அதனைப் பார்த்து, உண்மையிலேயே எந்தவிதப் பாதிப்பும் இல்லை என்று சொன்னால், அங்கேயே பட்டா கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். காரணம், தலைமைச் செயலகத்திற்கு Paper வந்து, இங்கே பல்வேறு சூழ்நிலைகள் இருக்கக்கூடிய காரணத்தினாலே, 2 வருடங்கள் ஆனாலும்கூட அந்த பட்டா வராத சூழ்நிலையைப் பார்க்கிறோம். இது தங்களுக்கும் தெரியும் என்று நினைக்கிறேன். ஆகவே, இந்த நிலையிலே, எந்தவிதப் பாதிப்பும் சாலைக்கோ அல்லது நீரோடைகளுக்கோ இல்லாத சூழ்நிலையிலே, அங்கே இருக்கக்கூடியவர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே பட்டா கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரண்டு நிமிடங்களில் முடித்துக்கொள்கிறேன். எதிர்காலத்திலே, வரக்கூடிய காலங்களிலே, மாவட்ட வருவாய் அலுவலராக ஏன் I.A.S., அதிகாரிகளை நியமிக்கக்கூடாது என்று நீங்கள் சிந்தித்து ஒரு நல்ல முடிவு எடுக்க வேண்டும். காரணம், வேகமாகச் செயல்படுவதற்கேற்ற வகையிலே I.A.S., அதிகாரிகளைப் போட்டீர்கள் என்றால், ஊழலும் குறைந்து, வேகமாகச் செயல்படுவதற்கு ஏற்ற வகையிலே இருக்கும் என்று நான் கருதுகின்றேன். அதையும் நீங்கள் சிந்தித்துச் செயல்படுத்த வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு பூமியைக் கிரயம் செய்யும்போது பட்டா மாறுதல் செய்து விடுகிறோம். அப்போதே பணம் கட்டி, பட்டா ரசீது கையெழுத்துப் போட்டு கொடுத்து விடுகிறார்கள். ஆனால், அந்த பட்டா ரசீது மாற்றக் கொடுத்து 10 வருடங்கள் ஆனாலும்கூட, தனிப்பட்ட முறையிலே வட்டாட்சியர் அலுவலகத்தை அணுகினால்தான், அந்த பட்டா மாறுதலுக்குண்டான வேலைகளை எல்லாம் செய்தால்தான், பட்டா மாறுதலாகிறதேயொழிய, அங்கே கிரயம் ஆகின்றபோதே நிலத்திற்கு பட்டா ரசீது கொடுத்து, கையெழுத்துப் போட்டு, அது





உடனடியாக மாறக்கூடிய சூழ்நிலையை நாம் ஏற்படுத்தி கொடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பள்ளிக் கட்டடங்களுக்கு, மருத்துவமனைகளுக்கு, சமத்துவபுரத்திற்கெல்லாம் இலவசமாக அரசு நிலத்தைக் கொடுப்பது போல், கூட்டுறவுச் சங்கத்தினுடைய கட்டடங்களுக்கும் எதிர்காலத்திலே இலவசமாக நிலம் கொடுக்கத் தாங்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய பவானி தொகுதியிலே, ஓடத்துறை ஊராட்சியிலே, பாலப்பாளையம் என்ற கிராமம் இருக்கிறது. அந்தப் பாலப்பாளையத்தில் மிகவும் பின்தங்கிய மக்கள் 175 பேர் வசித்து வருகின்றார்கள். அங்கு 7 ஏக்கர் நிலம் தனிப்பட்டவரின் பொறுப்பில் இருந்தது. அந்த 7 ஏக்கர் இன்று சுமாராக 21 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பூமி. அதற்காகப் பலமுறை நான் நடந்து, அவரிடத்திலே கையெழுத்து வாங்கி, அரசுக்கு ஒப்படைத்துவிட்டேன். ஆனால் இரண்டு வருடமாக நான் முயற்சித்தும்கூட, அந்த 175 பேருக்குப் பட்டா வாங்க முடியவில்லை. செயலாளரிடத்திலே, இங்கே இருக்கக்கூடிய சிறப்பு ஆணையாளர் இடத்திலே, மற்றும் இங்கே கீழ்நிலையிலே இருக்கக்கூடியவர்களிடத்திலே முயற்சித்தும்கூட, கடந்த இரண்டு ஆண்டுகளாக 3 சென்டுக்கு மேலே நாங்கள் கொடுக்க முடியாது. 7 சென்ட், 10 சென்ட் இருக்கிறது என்று கூறுகிறார்கள்.

*நண்பகல் 12-00*

அங்கே தனிப்பட்ட முறையிலே, தனிப்பட்ட பூமியை அரசாங்கத்திற்குக் கொடுத்த நேரத்தில், 35 ஆண்டுகளாகக் குடியிருக்கக்கூடிய மிகவும் பின்தங்கிய மக்களுக்கு, 3 சென்ட், 7 சென்ட், 10 சென்ட் ஆக இருந்தாலும்கூட, அந்த ஓடத்துறை ஊராட்சி, பாலப்பாளையத்திலே இருக்கக்கூடிய அத்தனை பேருக்கும் பட்டா செய்து கொடுக்க வேண்டும். மாணிக்கம்பாளையம் ஊராட்சியிலே, தொட்டிப்பாளையத்திலே 75 குடும்பங்கள் இருக்கின்றன. அதற்கெல்லாம் எந்தவிதப் பாதிப்பும் இல்லாத சூழ்நிலையில் நீரோடை என்று எழுதி வைத்திருக்கிறார்கள். கள்ளியங்காடு ஊராட்சியிலும் இதே சூழ்நிலைதான். இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் எதிர்காலத்தில் வருவாய்த் துறை சிறப்பாக நடந்தால்தான் இந்த அரசினுடைய சிறப்பும், அரசினுடைய மரியாதையும் மேலோங்கும். வருவாய்த் துறை அந்த வகையில் எதிர்காலத்தில் சிறப்பாகச் செயல்படும் என்று கூறி,

[திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்] [1999 ஏப்ரல் 6

வருமானத்தை அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டு, இந்த நல்ல வாய்ப்பினை நல்கிய மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், மற்றவர்களுக்கும் நன்றி கூறி, எனது உரையை நிறைவு செய்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பா. துரைசாமி.

***திரு. பா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் , தலைவர் அவர்களே, தமிழகத்திற்கு சிறந்த ஒரு நிதிநிலை அறிக்கையைத் தந்து, எங்கெங்கோ சென்றுகொண்டிருந்த அரசுப் பணங்களையெல்லாம் அரசு தீட்டும் நலத் திட்டங்களுக்குப் பயன்படுத்தத் திட்டம் தீட்டி, வருமானத்தை அரசு கஜானாவில் சேர்த்து, மனிதநேயம் காத்து, மனிதக் கழிவுகளை மனிதனே சுமக்கின்ற இழிநிலையைப் போக்கி, அதற்குச் சட்டம் தந்த நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைச் சொல்லி, வருவாய்த் துறை பற்றிய என்னுடைய சில கருத்துக்களை இங்கே எடுத்துவைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வருவாய்த் துறை மூலமாக சிறப்பான பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. குறிப்பாக, நில வரி, நில வரித் தள்ளுபடி, நில உரிமைப் பதிவேடு, நிலக் கொள்கை, வீட்டுமனை வழங்கல், விவசாய நிலம் ஒப்படை செய்தல், ஆக்கிரமிப்புகளை அகற்றுதல், நிலச் சீர்திருத்தம், நகர்ப்புற நில உச்சவரம்பு, வேளாண்மை வருமான வரி, நில அளவை, பதிவுருக்கள் மற்றும் பராமரிப்பு, வெள்ள நிவாரணம், நலத் திட்டங்கள், தீ விபத்துக்கான நிவாரணம் போன்ற பணிகளையும், சிறப்புத் திட்டங்களையும் தீட்டி, நல்ல வகையில் அரசாங்கம் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆதிதிராவிடர்களுக்கென நிலம் கையகப்படுத்தும் திட்டத்திலே நம்முடைய மாநிலம் சிறப்பாக செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. அதிலும் குறிப்பாக மாவட்ட வருவாய் அதிகாரி மூலமாக நிலம் கையகப்படுத்தப்பட்டு, நேரடியாக அவர்களுக்கு பட்டா வழங்குவதற்கு நம்முடைய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமாய் இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

ஏழைகளுக்கு, அவர்கள் பிற்படுத்தப்பட்டவர்களாக இருந்தாலும் சரி, தாழ்த்தப்பட்டவர்களாக இருந்தாலும் சரி, அரசு உடனடியாக பட்டா வழங்க வேண்டுமென்று ஆணையிட்டுள்ளது. ஆனால் வட்டாட்சியர்களாகவும், R.I.-களாகவும், உள்ளவர்கள் சிலர் பட்டா



1999 ஏப்ரல் 6] [திரு. பா. துரைசாமி]

வழங்குவதில் சுணக்கம் காட்டுகிறார்கள். எனவே, இதனைக் களைவதற்கு நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் வழி காணவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

இப்போது மாவட்ட நிர்வாகம் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. புதிய மாவட்ட அலுவலகங்களுக்கு நிலம் கையகப்படுத்தவும், மாவட்ட வளாகம் கட்டுவதற்கும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிதிநிலை அறிக்கையிலே நிதி ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். அதேபோல் அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பாக கணினிமயமாக்கும் - Computer மயமாக்கும் திட்டத்திற்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அதேபோல் Internet என்ற ஒரு திட்டத்தை அறிவித்து, மாவட்ட நிர்வாகம் சிறப்பாக செயல்பட்டுக்கொண்டிருக்கிறது.

எங்களுடைய புதிய மாவட்டமான பெரம்பலூர் மாவட்டத்திற்கு நிதி ஒதுக்கப்படாமல் இருக்கிறது. அங்கே சட்டம் ஒழுங்கு நன்றாக, சிறப்பாக உள்ளது. எனவே, தாயுள்ளம் கொண்ட நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள், பெரம்பலூர் மாவட்டத்திற்கு நிதி ஒதுக்க வேண்டுமாய் இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். நல்லமுறையில் நம்முடைய மாவட்ட ஆட்சித் தலைவர் அந்த மாவட்டத்தை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். நம்முடைய மாவட்ட கண்காணிப்பாளரும் அங்கே சட்டம் ஒழுங்கை சிறப்பாகவே அமல் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். எங்களுடைய மாநிலங்களவை உறுப்பினர் திரு. சிவசுப்பிரமணியன், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் திரு. க.சொ. கணேசன், அதேபோல் பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. தேவராஜன் ஆகியோர் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே இந்த பெரம்பலூர் மாவட்ட அலுவலகத்திற்கு நிலம் கையகப்படுத்த வேண்டுமென்றும், பெரம்பலூர் மாவட்டத்திற்கு மாவட்ட வளாகம் கட்டப்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்தக் கோரிக்கையை ஏற்று, பெரம்பலூர் மாவட்டத்திற்கு உடனடியாக மாவட்ட அலுவலகம் கட்டுவதற்கும், நிலம் கையப்படுத்துவதற்கும் ஆவன செய்ய வேண்டுமாய் மாண்புமிகு முதல்வர் அவர்களை இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

பெரம்பலூர் மாவட்டம் பிரிக்கப்பட்டபோது, மாண்புமிகு முதல்வர் அவர்களால் கூட்டம் கூட்டப்பட்டு, அரியலூருக்கு 25 அலுவலகங்களும், பெரம்பலூர் பகுதிக்கு ஏறத்தாழ 35 அலுவலகங்களும்

ஒதுக்கப்பட்டு, அந்த அலுவலகங்கள் எல்லாம் இப்போது சிறப்பாக செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. அங்கே ஒப்பந்தம் ஏற்பட்டு சட்டம் ஒழுங்கு சிறப்பாக இருந்துகொண்டிருக்கிறது. எனவே உடனடியாக அந்த மாவட்டத்திற்கு நிதி ஒதுக்க வேண்டுமாய் இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டுள்ளேன்.

பிற்பகல் 12-05

எங்களுடைய வரகூர் தொகுதியில் குன்னம் வட்டத்தைப் பிரித்த நிலையில், அங்கே குன்னம் வட்டத்திலிருந்து செட்டிக்குளம் பிர்க்காவை மட்டும் தனியாகப் பிரித்து, அந்தப் பகுதி மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையின்படி பெரம்பலூர் வட்டத்துடன் சேர்ப்பதற்கோ அல்லது செட்டிக்குளம் பிர்க்காவை தனி வட்டமாக ஆக்குவதற்கோ நடவடிக்கை எடுக்கும்படி இந்த நேரத்தில் நான் மாண்புமிகு முதல்வர் அவர்களையும், மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். காரணம், அந்தப் பகுதி மக்கள், துறையூரிலிருந்து குன்னம் வட்டத்திற்கு வருவதென்றால் ஏறத்தாழ 40 கிலோமீட்டர் தூரம் இருக்கிறது. அதை பெரம்பலூர் வட்டத்திலேயே சேர்த்தால், கண்டிப்பாக அந்த மக்களின் நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு அது ஒரு வாய்ப்பாக இருக்கும். எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதனைச் செய்து தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

இப்போது கிராமப்புறத்திலே, V.A.O.-க்கள் தலைமையிடத்திலே இல்லாத காரணத்தால் சட்டம் ஒழுங்கு அங்கே சீர்குலைவதற்கு வாய்ப்பாக இருக்கிறது. எனவே, பழைய நிலையே இருந்தாலும்கூட நன்றாக இருக்கும். எனவே, அந்த V.A.O.-க்களை வேறு துறைகளிலே மாற்றி, அவர்களுக்கு வேறு பணிகளை அளித்து, அங்கேயே அவர்கள் தங்கியிருக்கின்ற சூழ்நிலைகளிலே V.A.O.-க்களை நிறுத்த வேண்டுமென்று நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய வேண்டுகோளாக வைக்கின்றேன்.

தற்போது, கிராம அலுவலர்களும், கிராம உதவியாளர்களும் சேர்ந்து 40 கோடி ரூபாய் வசூல் செய்கின்றார்கள். ஆனால் அவர்களுக்கு நம்முடைய மாநில அரசு ஏறத்தாழ 200 கோடி ரூபாய் செலவு செய்கிறது. எனவே, அவற்றை எல்லாம் போக்கி, அந்தக் கிராம நிர்வாக அதிகாரிகளை மாற்றுப் பணிக்கு நியமித்து, தக்க வழிமுறைகளைச் செய்யுமாறு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். (மணியடிக்கப்பெற்றது)





இப்போது தமிழக அரசால் பல்வேறு நலத்திட்ட உதவிகள் சிறப்பாக வழங்கப்பட்டு வருகின்றன. அதிலே, குறிப்பாக குடும்பத் தலைவரை இழந்தால் அந்தக் குடும்பத்திற்கு வழங்கும் தொகை 7,500-லிருந்து சுமார் 10,000 ரூபாய் ஆகிறது. அதை அரசாங்கம் 15,000 ரூபாய் ஆக உயர்த்தித் தரவேண்டுமாய் நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள கடமைப்பட்டுள்ளேன்.

கணவனை இழந்தவர்களுக்கும், கணவனால் கைவிடப் பட்டவர்களுக்கும் இப்போது அரசாங்கம் வழங்குகின்ற ஓய்வூதியத்தை அதிகப்படுத்தித் தர வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

வெள்ள நிவாரணத்திற்காக வழங்கப்படுகிற தொகையையும் அதிகமாக்கித்தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். (மணியடிக்கப்பெற்றது)

என்னுடைய தொகுதியிலே கீழ்க்கண்ட தேவைகளைப் பூர்த்தி செய்து தர வேண்டுமாய் இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

புதிதாக உருவாக்கப்பட்ட குன்னம் தாலுகா என்னுடைய தொகுதியில் உள்ளது. அங்கே இன்னும் குற்றவியல் நீதிமன்றமோ, அல்லது உரிமையியல் நீதிமன்றமோ ஏற்படுத்தப்படவில்லை. அவற்றை ஏற்படுத்தித் தர வேண்டுமாய் இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டுள்ளேன்.

அதேபோல, சார்நிலை கருவூலமும், சார்-பதிவாளர் அலுவலகமும் அங்கே ஏற்படுத்தப்படவில்லை. அவற்றையும் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புதிதாக உருவாக்கப்பட்ட குன்னம் தாலுகாவில், வேப்பூர் ஒன்றியத்திலே, வேப்பூரிலே ஒரு தாலுகா மருத்துவமனை உள்ளது. அந்தத் தாலுகா மருத்துவமனைக்கு புதிய கட்டடத்தை உருவாக்கித் தரவேண்டுமாய் இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

தீயணைப்பு நிலையம், சென்ற ஆண்டு மாண்புமிகு முதல்வர் அவர்களால் உருவாக்கப்பட்டது. அந்தத் தீயணைப்பு நிலையத்திற்கான கட்டடங்களைக் கட்டித் தரவேண்டுமாய் இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். (மணியடிக்கப்பெற்றது)

[திரு. பா. துரைசாமி] [1999 ஏப்ரல் 6

சட்டம் ஒழுங்கைப் பராமரிக்க அகரம் சீகூரிலே ஒரு காவல் நிலையத்தையும், நக்கச் சேலத்திலே ஒரு காவல் நிலையத்தையும் உருவாக்கித் தர வேண்டுமாய் இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அ.வ. அப்துல் நாசர்.

***திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை மானியக் கோரிக்கைகளின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வருவாய்த் துறையிலே, வீட்டுமனைப் பட்டா பெறுவதற்கான உச்ச வரம்பு வருமானமாக 12,000 ரூபாய் விதிக்கப்பட்டிருக்கின்றது. அதை 18,000 ரூபாய் அளவிற்கு உயர்த்த வேண்டுமாய் நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால், ஒரு குடும்பத்தில் இன்றைக்கு 12,000 ரூபாய் வருமானம் எளிதான முறையிலே ஈட்ட முடிகின்றது. ஏனென்றால், சம்பளமெல்லாம் உயர்த்தப்பட்டிருக்கின்றதால் ஈட்ட முடிகின்றது. அதனாலே உச்சவரம்பை 18,000 ஆக உயர்த்தித் தந்தால் நிறைய மக்கள் பயனடைய வாய்ப்பாக இருக்கும்.

அதேபோல, விவசாய நிலங்கள் ஒப்படைப்புத் திட்டத்தின் கீழ் வேலையில்லா விவசாயப் பட்டதாரிகளுக்கும் நாம் வாய்ப்பளிக்க வேண்டும். ஏனென்று சொன்னால், இப்போது அனைத்து ஆதிதிராவிட மக்கள், பழங்குடி மக்கள், அதேபோன்று முன்னாள் இராணுவத்தினருக்கெல்லாம் நிலம் வழங்கப்படுகின்றது. அதில் வேலையில்லா விவசாயப் பட்டதாரிகள், 35 வயதைக் கடந்த பிறகும் பதிவு செய்தும் வேலைக் கிடைக்காமல் அவதியுறுகின்றனர். அவர்கள் குடியிருக்கக்கூட வீட்டுமனை இல்லாத நிலை எல்லாம் இருக்கின்றது. அப்படிப்பட்டவர்கள் மீது, இந்த அரசு கருணை கொண்டு வேலையில்லாத அந்தப் பட்டதாரிகளுக்கும் ஒரு முன்னுரிமை அளித்து வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன். அப்படி வீட்டுமனைப் பட்டா வழங்குகின்ற போது ஒரு வருடத்திற்குள்ளாக அந்த இடத்திலே வீடு கட்டியிருக்க வேண்டுமென்று நிபந்தனை விதிக்கப்பட்டிருக்கின்றது. அதைக் குறைந்தபட்சம் 3 வருடங்கள் என்று நாம் உயர்த்தித் தர வேண்டும்.

221075



1999 ஏப்ரல் 6] [திரு. அ.வ. அப்துல் நாசர்]

இப்போது ஜாதிச் சான்றிதழ் பெறுவதற்கு, வருவாய்த்துறை அலுவலர்களைச் சென்று பார்த்தோம் என்று சொன்னால் பெறுவது மிகவும் குதிரைக் கொம்பான ஒரு விஷயமாக இருக்கின்றது. ஏனென்று சொன்னால், அங்கே பணம் செலவழித்தால்கூட, ஜாதிச் சான்றிதழ் உடனடியாக வழங்கப்படுகின்றதா என்றால் வழங்கப்படுவதில்லை. அதுமட்டும் அல்ல, நேற்றைக்குக்கூட ஒரு பத்திரிகையில் பார்த்தேன். தினமலர் என்ற பத்திரிகையைப் படிக்கும்போது பார்த்தேன். அதாவது ஜாதிச் சான்றிதழ் வாங்குவதற்காகச் செல்கின்றவர்களிடம், நம்முடைய அரசு வெளியிடுகின்ற தமிழரசு பத்திரிகைக்கான சந்தாவை வாங்கிக் கொண்டு, அதைப் பெற்றுக் கொண்ட பிறகுதான் ஜாதிச் சான்றிதழ் வழங்கப்படுவதாகச் சொல்கின்றார்கள். இது நிச்சயமாகத் தடுக்கப்பட வேண்டிய ஒரு விஷயம். ஏனென்று சொன்னால், சந்தா செலுத்துவது என்பது அவரவருடைய மன விருப்பத்தின்படி ஏற்றுக் கொண்டு செய்ய வேண்டிய விஷயம். அந்தப் பத்திரிகையிலே குறிப்பிடும்போது சொல்கின்றார்கள். அந்தச் சான்றிதழ் பெறுவதற்காக ஒருவர் சென்றபோது, அவர் படிப்பறிவு இல்லாத ஒரு கூலித் தொழிலாளி. அவரிடமும் 72 ரூபாய் சந்தா பெற்றுக்கொண்டு பிறகுதான் அந்தச் சான்றிதழை வழங்கியிருக்கின்றார்கள். இப்படிப்பட்ட நிலைமையெல்லாம் மாற்றப்பட வேண்டும்.

பிற்பகல் 12-10

எனது தொகுதியிலே இருளர்கள்-பழங்குடியின மக்கள் - எல்லாம் நிறைந்து வாழ்கின்றார்கள். கிட்டத்தட்ட 536 குடும்பங்கள் எனது தொகுதியிலே இருக்கின்றன. அவர்கள் இதுவரை ஜாதிச் சான்றிதழ் பெற முடியாத நிலை இருக்கிறது. அதுபோல காட்டுநாயக்கன் ஜாதியைச் சேர்ந்த பழங்குடியின மக்களும் எனது தொகுதியிலே வாழ்கின்றார்கள். அவர்களுக்கும் இதுவரை ஜாதிச் சான்றிதழ் கிடைக்கவில்லை. இதனால் அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களும், குழந்தைகளும் படிப்பறிவு பெற முடியவில்லை. இதை அரசு தயவு செய்து பரிசீலிக்க வேண்டும். ஏனென்று சொன்னால், நாம் அனைவருக்கும் கல்வியறிவு கொடுக்க வேண்டும் என்ற திட்டத்தின் அடிப்படையிலே அனைத்துக் கிராமங்களிலும் தொடக்கப் பள்ளியைத் தொடங்கியிருக்கின்றோம். இப்படிப்பட்ட சூழ்நிலையிலே அந்த இருளர்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கும் கல்வியறிவு கொடுப்பது நமது கடமை என்ற அடிப்படையிலே, அவர்கள் படிக்கச் செல்லும்போது அவர்களுக்கு ஜாதிச் சான்றிதழ் தேவைப்படுகின்றது. எனவே, அவர்களுக்கு அந்தச் சான்றிதழை வழங்குவதற்கு அரசு

[திரு. அ.வ. அப்துல் நாசர்] [1999 ஏப்ரல் 6

ஆவன செய்ய வேண்டும். அவர்கள் சுமார் 25 ஆண்டு காலமாகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், இதுவரையில் சான்றிதழ் வழங்கப்படவில்லை. எனவே, அவர்களுக்கும் நீங்கள் ஜாதிச் சான்றிதழ் வழங்க உடனடியாக ஆவன செய்ய வேண்டும்.

இப்போது ஆக்கிரமிப்பாளர்கள் ஏரிகளிலும், வாய்க்கால்களிலும் குடிசைகள் கட்டிக்கொள்கிற ஒரு நிலைமை இருக்கின்றது. ஆற்றுப்படுகைகளில்கூட குடிசைகள் அமைத்துக்கொண்டு அவர்கள் வெள்ள நேரத்திலே பாதிக்கப்படக்கூடிய நிலைமை எல்லாம் இருக்கின்றது. அதுமட்டுமல்ல, வெள்ள நேரத்திலே பாதிக்கப்படக்கூடாது, நில அரிப்பு எல்லாம் ஏற்படக்கூடாது என்ற காரணத்தாலே ஆற்றுக் கரைகளிலே விளைச்சல் நிலங்களுக்கான பட்டா வழங்கப்படுவதில்லை. ஆனால், இப்போது ஆற்றுப்படுகைகள் அனைத்துமே விவசாய நிலமாக மாற்றப்பட்டு அந்தக் கரைகள் எல்லாம் வெட்டி எடுக்கப்பட்ட காரணத்தால் வெள்ள நேரத்திலே கடுமையான அபாயம் ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படுகின்றது. எனவே, அப்படிப்பட்ட ஆக்கிரமிப்புகளையெல்லாம் அகற்றுவதற்கு அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அதுவும், எங்கள் தொகுதியிலே மிராளூர் என்ற கிராமத்தில் அந்த பகுதியைச் சேர்ந்த ஒரு தனியார் S.K.S. Brick Works என்ற பெயரில் செங்கற்சூளை அமைத்திருக்கிறார். அந்தச் செங்கற்சூளை அமைப்பதற்கு அந்த வெள்ளாற்றங்கரையிலே இருக்கக்கூடிய கரைகளைத்தான் வெட்டி எடுக்கின்றார். அதுமட்டுமல்ல, அங்கே இருக்கக்கூடிய ஆற்று மணலையெல்லாம் அவர் கள்ளத்தனமாக எடுத்து விற்றுக்கொண்டிருக்கிறார். அதனால்தான் வெள்ள நேரத்திலே மழைக் காலங்களிலே கடுமையான பாதிப்புகளை அந்தப் பகுதியிலே ஏற்படுத்துகின்றது. அதோடு அவர்மீது உரிய நடவடிக்கை எடுக்க அதிகாரிகளிடம் எடுத்துச் சொல்லி கேட்கும்போது அவர்கள், நாங்கள் பார்க்கிறோம், செய்கிறோம் என்று சொல்லுகின்றார்களேயொழிய இலஞ்சத்தைப் பெற்றுக்கொண்டு அவர்கள் எல்லாம் நடவடிக்கை எடுக்காமல் வாளாயிருக்கிறார்கள். அதனால் அதிகாரிகளுடைய சுயநலத்தினால் அந்தப் பகுதியிலே வெள்ளம் வருகிறபோது அங்கே இருக்கக்கூடிய மக்கள் எல்லாம் பாதிக்கப்படுகிறார்கள். அந்தப் பகுதியிலே வெள்ளம் என்று சொன்னாலே, சிறிது மழை பெய்தாலும் அதிகமான தண்ணீர் வந்துவிடுகிறது. இதனால் அந்தப் பகுதியிலே சாலைகளில் எல்லாம் முழங்கால் அளவிற்கு மேல் தண்ணீர் ஓடுகின்றது. அந்தப் பகுதியிலே குடிசைகளிலே மக்கள் வசிக்க முடியவில்லை.



1999 ஏப்ரல் 6] [திரு. அ.வ. அப்துல் நாசர்]

எனவே, அரசு உரிய நடவடிக்கை எடுத்து அந்தப் பகுதியிலே உள்ள அந்த நிறுவனத்தின் மேல் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

எனது தொகுதி புவனகிரியிலே குளம் புறம்போக்கு நிலத்திலே குளத்தையே ஒருவர் தூர்த்துவிட்டு வீடு கட்டிக்கொண்டிருக்கிறார். இவருக்கும் மனைப் பட்டா வழங்குவதற்கு அங்கே இருக்கக்கூடிய அதிகாரிகள் துணை போகின்றார்கள். அதுவும், வட்டாட்சியரும் அவருக்குத் துணை போகின்றார். அங்கே இருக்கக்கூடிய V.A.O. அதற்குத் துணை போகின்றார். தாமரைக்குளம் என்ற அந்தக் குளத்தை 40 அடி நீளத்திற்குத் தூர்த்து வீடு கட்டிக்கொண்டிருக்கிறார். இப்படிப்பட்ட நிலைமைகளை எல்லாம் கவனத்தில் கொண்டு ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும் என்று சொல்கின்ற இந்த நேரத்திலே இப்படிப்பட்ட புதிய, புதிய ஆக்கிரமிப்புகளை ஏற்படுத்துபவர்களுக்கு அதிகாரிகள் துணை போய்க் கொண்டிருக்கிறார்கள். அவற்றையெல்லாம் அரசு கவனித்து, அரசு அதிகாரிகள் மீதும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

1997 ஆம் ஆண்டு பெரும் வெள்ளம் ஏற்பட்டபோது, 1406 ஆம் ஆண்டுக்கான பசலிக்கான நிலவரியை இரத்து செய்தோம். ஆனால், 2 வருஷம் கழித்து இப்போது அந்த நில வரியை வசூலித்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே, அதை உடனடியாக நிறுத்த அரசு உத்தரவிட வேண்டும். *(மணியடிக்கப்பெற்றது)*

*பிற்பகல் 12-15*

ஒரேயொரு நிமிடம் எனது தொகுதி சார்பாக, கல்வி இலாகா சம்பந்தப்பட்ட ஒரு கோரிக்கையை மட்டும் நான் இங்கே வைக்க விரும்புகின்றேன். எனது தொகுதியிலே இருக்கக்கூடிய புவனகிரி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 1,553 பிள்ளைகள் படித்துக் கொண்டிருக்கின்றார்கள். அந்த 1,553 பிள்ளைகளுக்கும் 35 ஆசிரியர்கள்தான் பணிபுரிந்து கொண்டிருக்கிறார்கள். அதனால் அவர்கள் சரியான முறையில் பாடம் நடத்த முடியவில்லை. இட நெருக்கடியும் அங்கே மிகுந்திருக்கிறது. எனவே, அங்கு ஆசிரியர்களை அதிகப்படியாக நியமிக்க வேண்டும்.

இராமநாதபுரம் மாவட்டம், தொண்டியில் இருக்கக்கூடிய அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் 6ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை ஒவ்வொரு வகுப்புக்கும் ஒரு வகுப்பறைதான் இருக்கிறது. அந்தப் பள்ளியில் 5 ஆசிரியர்கள்தான் வேலை செய்துகொண்டிருக்கின்றார்கள். ஒவ்வொரு வகுப்பிலும் என்று பார்த்தால், 6ஆம் வகுப்பிலே 134 மாணவிகள், 7ஆம் வகுப்பிலே 130 மாணவிகள், 8ஆம் வகுப்பிலே 127 மாணவிகள், 9ஆம் வகுப்பிலே 97 மாணவிகள், 10ஆம் வகுப்பிலே 77 மாணவிகள் படித்துக்கொண்டிருக்கின்றார்கள். இதனால் அவர்கள் சரியான முறையிலே கல்வியைப் பயில முடியவில்லை. எனவே, அரசு உரிய நடவடிக்கை எடுத்து அங்கும் ஆசிரியர்கள் குறைவாக இருக்கக்கூடிய பள்ளிகளிலேயும் தேவையான கூடுதல் ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டு, வாய்ப்புத் தந்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. மணி.

***திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வருவாய்த் துறை மானியத்தில் சில கருத்துக்களை நான் இங்கே சொல்ல விரும்புகின்றேன். குறிப்பாக, நில உச்சவரம்புச் சட்டம் ஏற்கெனவே 60, அதற்குப்பிறகு இன்னொரு முறை அமல் நடத்தப்பட்டு உள்ளது. ஆனால் 60-இன் காலகட்டத்திலே அந்த நில உச்சவரம்புச் சட்டத்திலே உபரி நிலம் எடுக்கப்படவில்லை. அதற்கப்புறம் உபரி நிலமாக ஏற்கெனவே இங்கே தந்திருக்கின்ற கணக்கின்படி ஒரு இலட்சத்து 98 ஆயிரத்து சொச்சம் ஏக்கர் நிலம் 1 இலட்சத்து 37 ஆயிரம் மக்களுக்கு பயன்படக்கூடிய அளவில் எடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இன்னும் உபரி நிலம் உண்டு. நம்முடைய மாநிலத்திலே, அதிகப்படியான உபரி நிலங்கள் இருக்கின்றன. அவை தனியாருடைய கைவசம், பல்வேறு நிறுவனங்கள் கையிலே இருந்துகொண்டிருக்கின்றன. அவற்றை நிலமில்லாத விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்களுக்குப் பகிர்ந்து அளிப்பதன் மூலமாகத்தான் நம்முடைய நாட்டிலே கிராமப்புற விவசாயிகளுடைய வாழ்க்கை நிலையிலே உரிய மாற்றத்தை நாம் ஏற்படுத்திக் கொடுக்க முடியும். அந்த வகையிலே உபரி நிலம் என்று நான் சொல்லுகின்றபொழுது பல்வேறு நிறுவனங்கள், அதாவது குறிப்பாகச் சொன்னால் திண்டுக்கல் தாலுகாவிலே, அங்குவிலாஸ் கம்பெனி 1,000 ஏக்கரா, பொன்னையா ராவுத்தர் 1,000 ஏக்கரா, கொடைக்கானலிலே



பி.ஆர்.கே. வகையறா 15 ஆயிரம் ஏக்கரா, இன்னும் இதுபோன்று பல்வேறு நிறுவனங்களுடைய கையிலே ஆயிரம், பத்தாயிரம், பதினைந்தாயிரம் ஏக்கர் நிலம் இருந்துகொண்டிருக்கிறது. இதற்கு உச்சவரம்பைக் கொண்டு வந்து அந்த உச்சவரம்பின் மூலமாக உபரி நிலத்தையெடுத்து நிலமற்ற விவசாயிகளுக்குத் தருவதன் மூலமாகத்தான் கிராமப்புற விவசாயிகளுடைய வாழ்க்கை நிலையில் மாறுதல் ஏற்படுத்த முடியும். அந்தவகையிலே நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சரவர்கள் நேற்றையதினம் நம்முடைய விவசாயத் தொழிலாளர்களுடைய சம்பள விகிதங்களிலே மாற்றத்தை ஏற்படுத்தி ஒரு நல்ல தீர்மானத்தைக்கொண்டு வந்து இருக்கிறார்கள். அதை வரவேற்று, அதனுடன் அவர்களுடைய சேம நலத் திட்டத்தையும் கொண்டுவந்து அதுபோன்று ஓய்வூதியத்தையும் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த காலத்தில் உபரி நிலம் என்பது 15 ஏக்கருக்கு மேல் உள்ளது. 15 ஏக்கர் ஒரு குடும்பத்திற்கு. ஒரு குடும்பம் என்று சொல்லுகிறபொழுது அன்றையதினம் 5 பேர் என்று தீர்மானித்துக் கொண்டார்கள். ஆனால் அதற்கு மேல் ஒரு நபர் இருந்தால் 5 ஏக்கர் கொடுக்கப்பட வேண்டும் என்று ஒரு நிலையை எடுத்துக்கொண்டார்கள். அது சரியல்ல என்பதை என்னுடைய கருத்தாக நான் சொல்லுகின்றேன்.

அரசினுடைய தேவைகளுக்கு நிலத்தை எடுக்கின்றபொழுது அந்த நிலத்திலிருக்கின்ற விவசாயிகளை அல்லது குடியிருப்புகளை வெளியேற்றுகின்றபொழுது மாற்று நிலம் கொடுப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். இல்லையென்று சொன்னால், அது அவர்களுடைய வாழ்க்கையிலே ஒரு பெரிய பிரச்சினையாகிவிடும்.

நகர்ப்புற உச்சவரம்பு கறாராக அமல்படுத்தப்பட வேண்டும். சமீபத்திலே, மத்திய அரசு நகர்ப்புற உச்ச வரம்பு கூடாது என்று சொல்லியிருப்பதை நாம் நிராகரிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக குமரி மாவட்டத்திலே இரப்பர் தோட்ட முதலாளிகளிடம் உள்ள புறம்போக்கு நிலங்களை அரசு கையகப்படுத்த வேண்டுமென நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

வலிய ஏலா விவசாயிகளினுடைய பிரச்சினை தீர்வு காணப்படாமல், 1979ஆம் ஆண்டிலேயிருந்து இந்த மாமன்றத்திலே

தொடர்ச்சியாகப் பேசப்பட்டு வருகிற ஒரு பிரச்சினை. இந்த வனத் துறை சட்டம் வருவதற்கு முன்னாலே அங்கே விவசாயிகள் குடியிருந்து வருகிறார்கள். அந்த விவசாயிகளுக்கு எந்தவிதமான அடிப்படை வசதிகளும் கிடைக்கவில்லை பாதுகாக்கப்பட்ட குடிநீர் இல்லை. மின்சாரம் கிடையாது. பாதைகள் இல்லை. அப்படிப்பட்ட ஒரு துரதிருஷ்டமான நிலை இருந்துகொண்டே இருக்கின்றது. எனவே, வலிய ஏலா விவசாயிகளுக்கு பட்டா வழங்குவதற்கு உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-20*

அதுபோன்று 1977-க்கு முன்னாலே கோரிக்கை வைத்த சக்கரபாணி ஆம்பாடி விவசாயிகளுக்கு பட்டா வழங்குவதும், மாங்கோடு கிராமம், களியல் கிராமம், பொன்மலை கிராமங்களிலே புறம்போக்கு நிலங்களில் ஒரு ஏக்கரா பயிர் செய்கின்ற விவசாயிகளுக்கு அந்த நிலத்திற்கு இலவசப்பட்டா தருவதற்கான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே பல உறுப்பினர்கள் கூறியதைப் போன்று, அரசுக்குத் தேவையில்லாத நிலம், குளம், புறம்போக்கு என்று இருக்கின்றது. ஆனால் குளம் கிடையாது. அந்த நிலத்தை நகராட்சிகளுக்கு ஒப்படைக்க வேண்டுமென்று, குழித்துறை நகராட்சிப் பகுதியிலே பயனற்ற குளத்தை ஒப்படைக்க வேண்டுமென்ற நீண்டகால கோரிக்கை, பத்து ஆண்டுகளுக்கு முன்னாலே கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். ஆனால் கொடுப்பதற்கு அவர்கள் தயாராக இல்லை.

அதுபோல, இந்த இயற்கைச் சீற்றத்தின் காரணத்தால் ஏற்பட்ட இழப்பு, கடந்த மழைக்காலத்தில், கடந்த ஆண்டு நவம்பர், டிசம்பர் மழைக் காலத்தில் ஏற்பட்டது. வெள்ளத்தினால் அன்று ஏற்பட்ட சீரழிவினால் பெரும் பாதிப்பு ஏற்பட்டது. அந்தப் பகுதியிலே இருக்கின்ற விவசாயிகளுக்கு எந்தவிதமான சலுகைகளும், நிவாரணமும் தரப்படவில்லை என்பதை நான் அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு கொண்டு வர விரும்புகின்றேன்.

அதுபோன்று இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்படுகின்ற விவசாயிகளுக்கு வரிச் சலுகை. அதுபோன்று விவசாயக் கடன். அதை முழுமையாக இரத்துச் செய்வது நல்லது. அதைத் தள்ளி வைப்பதால் அவர்கள் மீண்டும் கடனாளியாகத்தான் மாறுகின்றார்கள். எனவே அந்த நிலை போக்கப்படவேண்டும்.



அதுபோன்று இலவச வீட்டுமனைப் பட்டா சம்பந்தமாக ஒப்படை செய்கின்ற நேரத்தில் வருமான வரம்பு என்பது இப்போது வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கின்றவர்களுக்கு நாம் ஒரு கணக்கை வைத்திருக்கின்றோம். ஆனால் அந்த வரம்பை சற்று உயர்த்தி 20 ஆயிரம் ரூபாய் வருமானம் இருக்கின்றவர்கள் என்ற அடிப்படையில் வறுமைக் கோட்டுக்குக் கீழே அதுபோன்று இருக்கிறவர்கள் என்று நிச்சயிக்க வேண்டும்.

சுமார் 8 இலட்சத்திற்கு அதிகமானவர்கள் இந்த குடும்பங்கள் வீட்டுமனை இல்லாமல் இருக்கிறார்கள். எனவே அவர்களுக்கு வீட்டுமனை கிடைக்க ஒரு பெரிய திட்டத்தை அரசு உருவாக்க வேண்டும். 8 இலட்சம் மக்களுக்கு வீட்டுமனை இல்லையென்று சொன்னால், அதை ஒரு பெரிய பிரச்சினையாக நாம் கருதி அதற்கான ஒரு திட்டத்தை, ஒரு Master Plan-ஐத் தயார் பண்ணி அவர்களுக்கு வீட்டுமனை கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதுபோல, நத்தம் நிலங்களில் பல ஆண்டுகளாகக் குடியிருக்கிறார்கள். 50 வருடங்களாகக் குடியிருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு பட்டா இல்லாத ஒரு நிலை தொடர்ந்து இருக்கிறது. அவர்களுக்கு பட்டா வழங்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கோயில் நிலங்கள். இந்தக் கோயில் நிலங்களைப் பொறுத்தமட்டிலே இரண்டு விதமான கருத்துக்கள். ஒன்று அதற்கு நிலம் வேண்டும் என்றும், வருமானம் வேண்டும் என்றும் சொல்கிறார்கள். ஆனால் நிலம் என்பதிலே அந்த நிலத்தை அரசாங்கம் கையகப்படுத்தி, அதற்குப் போதுமான நிதியை அந்தக் கோயில்களுக்கு வழங்கி, அந்த நிதியைக் கொண்டு அவர்களுடைய வங்கியிலே போட்டு அந்த நிதியினுடைய வருமானத்தை வைத்து அந்தக் கோயிலினுடைய அன்றாடப் பணிகளை செய்வதற்கு உதவுவதோடு, அந்த நிலங்களிலிருந்து விவசாயிகளை வெளியேற்றாமல், விவசாயிகளுக்கு பாதுகாப்புக் கொடுக்கக்கூடிய ஒரு நிலையை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று மலைப்பாங்கான பகுதிகளில் இருக்கிற விவசாயம் செய்கின்ற மலைவாசிகளை வெளியேற்றக்கூடாது. பட்டா கொடுப்பதிலே பல பிரச்சினைகள் இங்கே கூறப்படுகின்றது. இருந்தாலும் கூட அவர்களுக்கு பட்டா வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, பண்ருட்டி, விருத்தாசலம், புதுக்கோட்டை ஆகிய பகுதிகளிலே இருக்கின்ற மலைப் பகுதிகளில் இருக்கின்ற விவசாயிகளுக்கு ஏற்கெனவே முந்திரித் தோட்டங்கள் இருக்கின்றன. அந்த முந்திரித் தோட்டங்களை இப்போது குத்தகைக்கு விடுகிறபோதுகூட பல்வேறுவிதமான முறைகேடுகள் நடப்பதாகக் கூறப்படுகின்றது. எனவே, அந்த முந்திரிக் காடுகளை விவசாயிகளுக்கு நாம் கொடுப்பதன் மூலமாக உற்பத்தியைப் பெருக்குவதற்கும் அதனாலே அங்கே தொழில் வளருவதற்கும் ஒரு வாய்ப்பு ஏற்படுத்திக் கொள்ள முடியும். அந்த வகையில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சுமார் 50 வருடங்களுக்கு முன்னாலே ஏரி, குளம் என்று எல்லாம் இருந்தது. இப்போது அங்கே ஏரியும் கிடையாது, குளமும் கிடையாது. சாலையும் இருக்காது. இந்தப் பெயரைச் சொல்லி அந்த விவசாயிகளுக்கு வீடு கட்டவோ அல்லது அதை வேறு விதமாகப் பயன்படுத்துவதற்கோ, Classification change பண்ணவில்லை என்ற காரணத்தைச் சொல்லி பட்டா வழங்காமல் இருக்கின்றார்கள். ஏரியும் இருக்காது, குளமும் இருக்காது. குறிப்பாக நான் சொல்வேனேயானால், களியல் கிராமத்தில் சிற்றாறு அணை என்ற ஒன்று இருக்கிறது. இந்த அணை வருவதற்கு முன்னாலேயே விவசாயிகள் அங்கே குடியிருந்து வருகிறார்கள், விவசாயம் செய்து வருகின்றார்கள், அணை வந்ததற்குப் பின்னால் அவர்கள் இதற்கு பட்டா வழங்க வேண்டுமென்று கேட்கிறபோது எதைச் சொல்கிறார்கள் என்றால் இந்த அணை புறம்போக்கு என்று எழுதிவிட்டார்கள். எனவே, இதைக் காரணம் காட்டி 50 வருடங்களுக்கு முன்னாலே அங்கே குடியிருந்தவர்களுக்கு பட்டா வழங்குவதிலே பல்வேறு பிரச்சினைகளை உருவாக்கி வருகின்றார்கள். அதற்கு மேலே சொல்லப்போனால், இந்தத் துறையிலே இருக்கிற அந்தப் பணிகளைச் செய்வதில் இருக்கிற காலதாமதம்.

சமீபத்திலே சாராய ஒழிப்பு என்பதன் பெயரால் களியல் கிராமத்தில் இருக்கிற செம்பூத்தேரியைச் சேர்ந்த பகுதியிலே இருக்கின்ற விவசாயிகள் முழுமையாக நாங்கள் இனி சாராயம் காய்ச்சுவது இல்லை என்று ஒரு முடிவுக்கு வந்து, அதிகாரிகள் எல்லாம் வந்து மூன்று முறை அங்கே சந்தித்து, காவல் துறையினர், வருவாய்த் துறை அதிகாரிகள் எல்லாம் போய்ப் பார்த்தார்கள். பார்த்துவிட்டு சரி



என்று ஒத்துக்கொண்ட பிறகும், அவர்களுடைய கோரிக்கை முதலில் அவர்கள் கைகளில் இருக்கக்கூடியது 5 சென்ட், 10 சென்ட், 25 சென்ட் நிலம்தான்; அதற்கு பட்டா வேண்டுமென்று கோரிக்கை வைத்து மாதம் 6 தாண்டிய பிறகும் அதற்கான நடவடிக்கை மேற்கொள்வதற்கு தயாராகாத ஒரு நிலை நீடிக்கின்றது. ஆகவே இப்படிப்பட்ட பிரச்சினைகளில் அரசு உரிய கவனம் செலுத்தி அவர்களுக்கு உடனடியாக பட்டா வழங்குவதன் மூலம்—அந்தப் பகுதியை சாராயம் காய்ச்சுவதிலிருந்து விடுபட்ட பகுதியாக நம்முடைய காவல் துறை அதிகாரிகள் இப்போது பிரகடனம் செய்திருக்கிறார்கள். அந்தவகையிலே — அந்த விவசாயிகளுக்கு உதவக்கூடிய ஒரு நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-25*

துயர் துடைப்புப் பணிகள் என்று சொல்கிறபோது, கடந்த மழைக்காலத்திலே, குறிப்பாக நான் சொல்லவேண்டுமானால் குழித்துறை நகராட்சி பகுதிக்குள்ளேயே திருத்துவபுரம் என்ற பகுதியிலே ஒரு பெரிய குளம் இருக்கின்றது. அந்தக் குளம் உடைப்பு எடுத்து அங்கிருக்கின்ற விவசாயிகளுடைய வயல் காடுகள் பூராவும் மூழ்கி மூன்று முறை அவர்களுக்கு இழப்பு ஏற்பட்டது. ஆனால் அதிகாரிகளைக் கேட்டால் எங்களுடைய பட்டியலில் வரவில்லை என்று சொல்லி அவர்களுக்கு எந்தவிதமான நஷ்டஈடும் தராத ஒரு நிலை இருக்கிறது. அதற்கு மேலே சொன்னால், மூன்று முறை அந்தப் பகுதி பொதுப் பணித் துறை அதிகாரிகளைச் சந்தித்து அந்த உடைப்பை அடைக்க வேண்டுமென்று கோரிக்கை வைக்கப்பட்டது. ஒரு கிலோ மீட்டர் தூரம்கூட இருக்காது அந்த அலுவலகத்திற்கும், உடைப்பு நடந்த இடத்திற்கும். ஆனால் அவர்களைக் கண்டுகொள்ளாத ஒரு துரதிர்ஷ்டவசமான நிலையிருக்கிறது. ஆகவேதான், இந்த மலைப்பாங்கான பகுதியிலே வருகின்ற விவசாயிகளைப் பொறுத்தமட்டிலே அதிலே இரண்டு தரமாக Forest land என்று சொல்கின்ற இடத்தைத் தனியாகவும், மற்றபடி இருக்கின்ற இடத்தை தனியாகவும் எடுத்துக்கொண்டு, மற்றபடி இருக்கின்ற இடத்தில் வாழ்கின்ற மலைவாழ் மக்களுக்கு பட்டா வழங்கி அவர்களுடைய பயிர்களைப் பாதுகாக்கின்ற வகையில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

[திரு. டி. மணி] [1999 ஏப்ரல் 6

நில உச்சவரம்பு சட்டம் என்பதன் அடிப்படையில் உபரி நிலத்தை நாம் இன்னும் அதிகப்படியாகக் கைப்பற்றி நிலமற்ற விவசாயிகளுக்கு, விவசாயத் தொழிலாளர்களுக்கு வழங்குவதன் மூலமாக தமிழ்நாட்டின் கிராமப்புற விவசாயிகளுடைய, விவசாயத் தொழிலாளர்களுடைய வாழ்விலே ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதற்கும், அவர்களுடைய வருமானத்தைப் பெருக்குவதன் மூலமாகவும்தான் நம்முடைய நாட்டினுடைய எதிர்காலம் சிறப்பாக இருக்கும். அந்தவகையிலே கறாராக உபரி நிலத்தை எடுக்கின்ற ஒரு நடவடிக்கைக்கு அரசு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கெனவே இங்கே அறிவித்திருக்கின்ற விவசாயத் தொழிலாளர்களுடைய கூலி சம்பந்தமாக, சம்பளம் சம்பந்தமாக அரசாங்கத்தை நான் பாராட்டி, அதேநேரத்திலே அவர்களுக்குச் செல்ல வேண்டிய சேம நலச் சட்டமும், அதேபோன்று ஓய்வு நிதியும் வழங்கி அடித்தட்டிலே வாழ்கின்ற இந்த மக்களுக்கு உதவ வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, முடிக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எ. தெய்வநாயகம்.

**திரு. எ. தெய்வநாயகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1999-2000ஆம் ஆண்டிற்கான வருவாய்த் துறை மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு முதற்கண் நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வருவாய்த் துறையைப் பொறுத்த மட்டிலும் தமிழகத்திலே சீரும் சிறப்புமாக நடந்து கொண்டிருந்தாலும்கூட, இப்போது இருக்கின்ற நில உச்சவரம்புக்குண்டான நிலத்தை கையகப்படுத்தி ஏழை விவசாயிகளுக்கு, நிலமில்லாத விவசாயிகளுக்குக் கொடுத்து ஒரு நல்ல வெற்றியைக் கண்டிருக்கிறது என்பதை நான் அறிக்கையின் மூலம் கண்டு மகிழ்ச்சி அடைந்தேன். ஏறக்குறைய உபரிநிலம் நெருக்கமாக இருந்து, அவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டு அந்தப் பணியைச் சிறப்பாகச் செய்திருக்கிறார்கள். அந்தவகையிலே, நமது அரசு நிலமற்ற விவசாயிகளுக்கு, நிலத்தைக் கொடுத்து அவர்கள் வாழ்வை முறைப்படுத்தியிருக்கின்றார்கள். அந்தவகையிலும் நான் பாராட்டுத் தெரிவிக்கிறேன்.

அதேபோல, நகர்ப்புற வரியை பொறுத்தமட்டிலும் நகர்ப்புற வரி, வீடு கட்டும் பணியிலே ஒரு இக்கட்டான சூழ்நிலையை இப்போது உருவாக்கிக்கொண்டிருக்கிறது. மைய அரசு நகர்ப்புற உச்சவரம்பு



1999 ஏப்ரல் 6] [திரு. எ. தெய்வநாயகம்]

சட்டத்தை அடியோடு இரத்து செய்துவிட்டது. அதை நம்முடைய தமிழக அரசு—எந்தக் கோணத்தில் அவர்கள் அந்தச் சட்டத்தை, மத்திய அரசு அடியோடு இரத்து செய்ததை நமது அரசு எந்தவகையிலே தீர்மானம் செய்து அதன்படி நடந்து தீர்மானத்தை அனுப்பினாலும் அதற்கு நாங்கள் ஒத்துழைக்கிறோம் என்றும் சொல்லியிருக்கிறார்கள். அதற்குத் தமிழக அரசு என்ன செய்ய இருக்கிறது என்பதை விளக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வெள்ளச் சேதங்களைச் சீரமைக்கும் பணியைப் பொறுத்தமட்டிலும் மதுரையில் சென்ற டிசம்பர் மாதத்திலே நடந்த அந்தக் கொடுமை, மதுரையிலே கிட்டத்தட்ட 1,000 குடிசைகள் நாசமாக்கப்பட்டு வெள்ளத்தின் காரணமாக மூழ்கடிக்கப்பட்டு சிதறிப்போய் விட்டன.

பிற்பகல் 12-30

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

அது ஏழை மக்கள் வாழ்கிற பகுதி. கிட்டத்தட்ட 1,000 குடும்பங்கள் அல்லல்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். அந்த 1,000 குடிசைகளுக்கு இழப்பீட்டுத் தொகையும், ஒரு வார காலத்திற்கு அவர்களுக்கு உணவு, உடை எல்லாம் கொடுத்து அரசு நல்ல முறையில் செயல்படுத்தியது. அதற்காக கிட்டத்தட்ட 85 இலட்சம் ரூபாய் மாவட்ட ஆட்சித் தலைவர் வாயிலாகக் கொடுக்கப்பட்டு செலவழிக்கப்பட்டிருக்கிறது. நிரந்தரமாகத் தீர்வு காண்பதற்கு, அந்தப் பணிகளை நிறைவேற்றுவதற்கு வைகை ஆற்றின் இருமருங்கிலும் தடுப்புச் சுவர் கட்டி, அந்தச் சேதத்தை நாம் சரிக்கட்டுவதற்கு உரிய எண்ணத்தை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோக, இருமருங்கிலும் இருக்கின்ற குடிசைவாழ் பகுதி மக்களை நிரந்தரமாக அப்புறப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம் என்னவென்றால், வெள்ளம் வந்துவிட்டால் அந்தக் குடிசைவாழ் மக்கள் அல்லல்படுகிறார்கள். அதுமட்டுமல்ல. அங்கு இருக்கின்ற குடிசைகளால் தரைப்பாலம் சீர்குலைகிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் முயற்சியால் புதியதாக தரைப்பாலம் அமைக்கப்பட்டது. அந்தத் தரைப்பாலம் சீர்குலைந்துவிட்டது. அதைச் சீர் செய்வதற்கும் பணம் தேவைப்படுகிறது. வெள்ள நேரத்தில், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 11 நபர்கள் வீடு இடிந்து உயிர் இழக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. அதற்கு இழப்பீட்டுத் தொகைகூட கொடுத்தார்கள்.

[திரு. எ. தெய்வநாயகம்] [1999 ஏப்ரல் 6

அது போதுமானதாக இல்லை. அதைக் கொஞ்சம் அதிகமாகக் கொடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அது மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுடைய தொகுதி. ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 11 நபர்கள் வெள்ளத்திலே மூழ்கி இறந்திருக்கிறார்கள். அந்த வீடும் நாசமாகிப் போய்விட்டது. அது பெரிய வீடு. அப்படிப்பட்ட சூழ்நிலையில், அவர்களுடைய உயிர் இழப்பீட்டிற்கு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கருணையோடு பரிசீலித்து இன்னும் கொஞ்சம் கூடுதல் நிவாரணத்தைக் கொடுப்பார்கள் என்று நம்புகிறேன். நிச்சயமாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோக, வீட்டுமனைப் பட்டா வழங்குதல் குறித்து — என்னுடைய தொகுதியைப் பொறுத்தமட்டில் திடீர் நகர், ஸ்ரீராம் நகர், போடி லைன், மதுரை கிழக்குத் தொகுதியில் காமராஜபுரம் இப்படி பல இடங்களில் பட்டா இல்லை. ஆனால் நிறைய வீடுகள் வந்துவிட்டன; நிறைய குடிசைகள் வந்துவிட்டன. அவற்றிற்கு பட்டா வழங்க, கிரயம் அடிப்படையில் சொத்து விலை போட்டு கூட பட்டா வழங்கலாம். அதற்குத் தயாராக இருக்கிறார்கள். அதைக் கொஞ்சம் செய்தால் நல்லது. கிராமத்தில் பல இலட்சம் பேருக்கு பட்டா வழங்கியிருக்கிறோம். நகர்ப்புறத்தில் பட்டா வழங்கப்படுவதில்லை. அதற்குச் சட்டம் இல்லை என்று சொல்கிறார்கள். நகர்ப்புறத்தில் N.R.D.P. Loan கிடையாது, I.R.D.P. Loan இல்லை, Tadco Loan கொடுக்கப்படுவதில்லை, இப்படியெல்லாம் இருக்கும்போது, பட்டாவையாவது கருணைகூர்ந்து இந்தப் பகுதியில் உள்ளவர்களுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை மத்திய தொகுதியில், புதுமண்டபம் பகுதியில் போன மாதம் 5,6 கடைகள் தீயினால் கருகி கிட்டத்தட்ட 5 இலட்சம், 6 இலட்சம் ரூபாய் அளவுக்குச் சேதம் அடைந்துள்ளது. அதற்கு இதுவரைக்கும் எந்தவித இழப்பீடும் கொடுக்கப்படவில்லை. Endowment துறைக்கும் மனு கொடுத்திருக்கிறேன். மாவட்டக் காவல் துறைக்கும் மனுச் செய்தாகிவிட்டது. எந்தவித இழப்பீட்டுத் தொகையும் கொடுக்கவில்லை. 5,6 கடைகள் தையல் இயந்திரம், துணிமணிகள் எல்லாம் எரிந்துவிட்டன. யாரும் இதுவரை இழப்பீட்டுத் தொகை கொடுக்கவில்லை. நாங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடமும் மனுச் செய்தாகிவிட்டது. Endowment அமைச்சர் அவர்களிடமும் மனுச் செய்திருக்கிறோம். அந்த மனுவிற்கு எந்தவித response-ம் இல்லை.



1999 ஏப்ரல் 6]

***மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக கோயில்களின் சார்பில், கடைகள் தரை வாடகைக்கு மட்டும்தான் கொடுக்கப்படுகின்றன. ஏற்கெனவே திருவேற்காடு கோயிலில் வெளிப்புறத்தில் 7,8 கடைகள் அதுபோல தீயினால் சேதம் ஆனபோது, அதற்குத் தரை வாடகை மட்டும் வசூலிக்கிற பொறுப்புதான் இந்து சமய அறநிலையத் துறையிலே இருக்கிறது. எனவே, மேற்கட்டுமானம் முழுக்க முழுக்க அந்தத் தனி நபர்களைப் பொறுத்தது. அதுபோல, புது மண்டபத்திலும் கட்டப்பட்டிருக்கின்ற கடைகளுக்குத் தரை வாடகை மட்டும் வசூலிக்கப்படுகிறது. மற்ற அனைத்து அமைப்புகளையும் அவர்களே செய்து கொள்கிறார்கள். அதற்கும் இந்து சமய அறநிலையத் துறைக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. அறநிலையத் துறை இதுவரைக்கும் யாருக்கும் இழப்பீடு கொடுத்ததும் இல்லை.

**திரு. எ. தெய்வநாயகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இழப்பீடு கொடுப்பதற்கு இல்லை என்ற வழிமுறை இருந்தாலும், சேதம் நிறைய இருக்கிறது, தையல்காரர்கள் தையல் இயந்திரம் வைத்திருக்கிறார்கள். துணிமணிகள் நிறைய எரிந்திருக்கின்றன. அதையெல்லாம் சேர்த்தால் பல இலட்சம் ரூபாய் போய்விட்டது. அதற்காக இதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணை உள்ளத்தோடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர், திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு தொகுதி உறுப்பினர், தண்டராம்பட்டை தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் அமைக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து கொடுப்பார்கள் என்று நம்புகிறேன். வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

## 5. அறிவிப்புகள்

### (அ) உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் கைது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்கள் இன்று (6-4-1999) இரயில் மறியல் போராட்டத்திலே ஈடுபட்டு, கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று வேலூர் மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர் ஒரு செய்தியை அனுப்பி இருக்கிறார்.

பிற்பகல் 12-35

## 4. தகவல் கோரல் — தொடர்ச்சி

### உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் கைதான விவரம்—தொடர்ச்சி

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்களை, சட்டமன்றம் நடந்துகொண்டிருப்பதால், இன்றே விடுதலை செய்து சட்டமன்ற நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்கு உதவுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, சட்டமன்றம் நடந்து கொண்டிருக்கும்போது அந்தப் பொறுப்பு, அந்த நினைவு, மாண்புமிகு உறுப்பினருக்கு இருந்திருக்க வேண்டும். அதை ஏனோ மறந்துவிட்டார். அவரை யாரும் வீட்டிலே போய்க் கைது செய்து, சட்டமன்றத்திற்குச் செல்லக் கூடாது என்று தடுத்ததாகத் தெரியவில்லை. அவர்போய் இரயில் மறியல் செய்தார். அவருக்கும், மத்திய சர்க்காருக்கும் உள்ள பிரச்சினை அது. இருந்தாலும்கூட மனம் இரங்கி, நாளைக்குச் சட்டமன்றத்திற்கு அவர் வருமாறு செய்கின்ற பொறுப்பை இந்த அரசு ஏற்றுக்கொள்ளும். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்திற்கு வந்தாலும் மக்கள் பணியாற்றத்தான் வருகின்றார். இன்று அவர் போராட்டத்திலே கலந்துகொண்டதும் மக்கள் பிரச்சினைக்காகத்தான். அவருடைய பிரச்சினைக்காகவோ அல்லது தவறு செய்தோ கைது செய்யப்படவில்லை.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மக்கள் பிரச்சினைக்காக ஒரு நாள் அல்ல, ஒரு மாத காலம் சிறையிலே இருந்தால் அந்த மக்களுக்கு இன்னும் அந்தப் பிரச்சினை ஆழமாக அவர்களுடைய உள்ளத்திலே வேரூன்றும். (சிரிப்பு)



## 5. அறிவிப்புகள் - தொடர்ச்சி

### (ஆ) காமன்வெல்த் பாராளுமன்ற தமிழ்நாடு கிளையின் சார்பாக, 'பொருளாதாரம் மற்றும் அரசின் வரவு-செலவு மேலாண்மை' என்ற தலைப்பின்கீழ் கருத்தரங்கு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு மற்றோர் அறிவிப்பு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 27-3-1999 அன்று சட்டமன்றப் பேரவையில் செய்த அறிவிப்பையடுத்து, "பொருளாதாரம் மற்றும் அரசின் வரவு-செலவு மேலாண்மை" என்ற தலைப்பின்கீழ் சட்டமன்ற உறப்பினர்களுக்காக ஒரு கருத்தரங்கு காமன்வெல்த் பாராளுமன்றச் சங்கத்தின் (தமிழ்நாடு கிளை) சார்பில் நடைபெறவுள்ளது. இக்கருத்தரங்கு 7-4-1999, 8-4-1999 ஆகிய நாட்களில் மாலை 5-00 மணி முதல் 8-00 மணி வரை, தலைமைச் செயலகம், நாமக்கல் கவிஞர் மாளிகை 10 ஆவது தளத்திலுள்ள மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். இக்கருத்தரங்கில் தமிழ்நாடு அரசு நிதித் துறைச் செயலாளரும், அண்ணா மேலாண்மை இயக்ககத்தில் பணியாற்றும் பொருளாதார வல்லுநரும் உரையாற்றுவார்கள். மேற்கண்ட கருத்தரங்கில் அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களும் தவறாது கலந்துகொண்டு பயன்பெறுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

## 3. மானியக் கோரிக்கைகள், 1999-2000, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

### (அ) கோரிக்கை எண் 1—நில வருவாய்த் துறை—தொடர்ச்சி

### (ஆ) கோரிக்கை எண் 40—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு—தொடர்ச்சி.

### (இ) கோரிக்கை எண் 45—இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்—தொடர்ச்சி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் பதிலுரை.

***மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை மானியக் கோரிக்கைகளின் விவாதத்தில் இன்றைக்குக் கலந்துகொண்டு நல்ல கருத்துக்களை 10 பேர்கள் வழங்கியிருக்கிறார்கள். முதன் முதலில் அந்த வாய்ப்பினைப் பெற்றவர் மகளிர் குலத் திலகம் பொன்னம்மாள் அவர்கள் ஆவார்.

[திரு. நாஞ்சில் கி. மனோகரன்] [1999 ஏப்ரல் 6

இரண்டாவது, திரு. சுப. தங்கவேலன், மூன்றாவது திரு. சி. வேலாயுதன், நான்காவது திரு. மீ. அ. வைதியலிங்கம், ஐந்தாவது திரு. ச. இராஜ ரெட்டி, ஆறாவது திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், ஏழாவது திரு. பா. துரைசாமி, எட்டாவது திரு. அ.வ. அப்துல் நாசர், ஒன்பதாவது திரு. டி. மணி, பத்தாவது திரு. எ. தெய்வநாயகம், அவர்கள் வழங்கிய கருத்துக்களுக்கு எனது நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கூடிக் கலந்து பேசுவதன் மூலம் நல்ல பல கருத்துகள் வருகின்ற வாய்ப்பினைப் பொதுவாகவே பெறுவதைப்போல், இந்த மாமன்றமும் உறுப்பினர்களின் கருத்துகளைத் தெரிந்து கொள்கின்ற வாய்ப்பினை பெற்று, அவர்கள் தெரிவித்த கருத்துகளை எப்படி எப்படி நிறைவேற்ற முடியுமோ அப்படி அப்படி நிறைவேற்றுவதற்கு துறை சம்பந்தப்பட்ட நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பதை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேசிய *10* பேர்கள் என்னென்ன பேசினார்கள் என்பதை நான் உங்களுக்குத் தெரிவிப்பதற்கு முன்பு, பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். *1996* ஆம் ஆண்டு மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையின் கீழ் அமைச்சராகப் பொறுப்பேற்று, நான்காவது முறையாக வருவாய்த் துறை மானியக் கோரிக்கைகளை இந்தப் பேரவைமுன் நான் வைத்துள்ளேன். இதில் பெருமையும், பெருமிதமும் அடைகிறேன்.

பிற்பகல் *12-40*

பொதுமக்களின் குறைகளைக் கண்டறிந்து, அவர்கள் கேட்காவிட்டாலும்கூட அவற்றைப் போக்குவதற்குத் தேவையான உடனடி முயற்சிகளை மேற்கொள்வது ஒரு அரசின் கடமையாகும்.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அந்தக் கடமை உணர்வோடு, கடமையைக் கொள்கையாகக் கொண்டு எங்களை வழி நடத்தி வருகிறார். கலைஞரைப் பொறுத்தவரையில் அதிகமாக நான் தெரிவிக்க வேண்டிய அவசியமில்லை; நினைவு ஆற்றல், உழைப்பு ஆற்றல், உணர்வு ஆற்றல், படைப்பு ஆற்றல், தமிழ் ஆற்றல்—இவற்றின் மொத்த உருவம்தான் டாக்டர் கலைஞர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நாம் நினைவிலே கொள்வது நல்லது என்று கருதுகிறேன்.



1999 ஏப்ரல் 6] [திரு. நாஞ்சில் கி. மனோகரன்]

அமைச்சர்களின் பணிகளை ஆய்வு செய்கின்ற ஒரே முதலமைச்சர் இங்கே தமிழகத்தில்தான் இருக்கிறார் என்பதை நான் குறிப்பிட்டாக வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் அறிவுரைகளின் விளைவாக மக்கள் நலத் திட்டங்கள் சிறப்புற நடைபெற அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

மாணவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்குவது குறித்துக்கூட ஒரு புதிய திட்டத்தை நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள். சான்றிதழ்களுக்காக வட்டாட்சியர் அலுவலகங்களில் மாணவர்கள் காத்திருக்காமல், சான்றிதழ்கள் பள்ளிகளுக்கே அனுப்பப்பட்டு, மாணவர்களுக்குப் போய்ச் சேரும். இத்தகைய தொலைநோக்குப் பார்வை நமது முதல்வருக்கு மட்டுமே சொந்தமானது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வருவாய்த் துறை, பொது மக்களின் தேவைகளை அறிந்து, அவற்றை இயன்றவரையில் நிறைவேற்றுவதில் முன்மாதிரியாக இருக்கும் ஒரு துறையாகும். இத்துறை ஆற்றாத பணிகளே இல்லை என்றால் அது மிகையாகாது. இத்துறையின் பணிகள், சாதனைகள் உங்கள் முன் வைக்கப்பட்டுள்ள கொள்கை விளக்கக் குறிப்பிலும், சாதனை அறிக்கையிலும் இடம் பெற்றுள்ளன. இருப்பினும், ஒரு சிலவற்றைக் குறித்து உங்களுடன் பகிர்ந்துகொள்ள நான் விரும்புகிறேன்.

சமுதாய மாற்றத்திற்கும், சமூக நீதி காப்பதற்கும் நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் மூலமும், வீட்டுமனை மற்றும் விவசாய நில ஒப்படைகள் மூலமும் ஏழை எளியவர்களுக்குப் பயன் தரும் வகையில் வருவாய்த் துறை பணி புரிந்து வருகிறது. *1998-99* ஆம் ஆண்டில் வீட்டு மனைகள் வழங்க நிர்ணயிக்கப்பட்ட இலக்கு அறுபதாயிரம் மட்டுமே. இந்த ஆண்டு பிப்ரவரி வரை ஒரு இலட்சத்து *96* ஆயிரத்து *973* வீட்டு மனை பட்டாக்கள் வழங்கப்பட்டு இருக்கின்றன என்பதைப் பூரிப்போடு தெரிவித்துக்கொள்கிறேன். *8* ஆயிரத்து *600* ஏக்கருக்கு மேல் விவசாய நிலம் ஒப்படை செய்யப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளாக அரசு நிலங்களில் வீடு கட்டி குடியிருந்து வருபவர்களுக்கு பட்டா வழங்க வேண்டும் என்று சில உறுப்பினர்கள் கோரிக்கை எழுப்பினார்கள். அரசு நிலங்களில் அனுமதியின்றி குடியிருப்பது ஆக்கிரமிப்பு ஆகும். குளம், ஏரி ஆகிய நீர் நிலைப் புறம்போக்குகள் பாதுகாக்கப்பட வேண்டியவை. இவற்றில் உள்ள ஆக்கிரமிப்புகள் ஆட்சேபனையானதாகக் கருதப்படுகின்றன.

[திரு. நாஞ்சில் கி. மனோகரன்] [1999 ஏப்ரல் 6

ஆட்சேபனை அற்ற புறம்போக்குகளில் குடியிருந்து வருவோருக்கு அவ்வப்போது பட்டா வழங்கப்பட்டு வருகிறது. இருப்பினும் ஏழை எளியவர்களுக்கு உதவ வேண்டும் என்பதற்காக ஆக்கிரமிப்புகளை வரன்முறை செய்வது குறித்து ஆய்வு செய்ய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஒரு குழுவினையும் அமைத்தார்கள். அக்குழுவும் தன் பரிந்துரைகளை அரசுக்கு அனுப்பியது. பெரும்பாலான ஆக்கிரமிப்புகள் நீர்நிலைகளில் இருந்ததால் பொதுப்பணித் துறை தலைமைப் பொறியாளரின் அறிக்கையைப் பெறுமாறு அரசு, நில நிர்வாக ஆணையரை அறிவுறுத்தியுள்ளது. அவரது அறிக்கை வந்தவுடன், ஆட்சேபனை இல்லாத ஆக்கிரமிப்புகளை வரன்முறை செய்வதை அரசு பரிசீலிக்கும். தாமதங்கள் தவிர்க்கப்பட வேண்டும் என்பது மாண்புமிகு முதல்வரின் ஆணை. அதிகாரங்கள் பரவலாக்கப்படுவதன் மூலம் தாமதம் தவிர்க்கப்படும் என்பதால், ஒப்படை செய்வதற்கான நிதி வரம்புகளை உயர்த்தி அண்மையில் அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

அதேபோல் நில உச்ச வரம்பு மிச்ச வரம்பாக இருந்த நிலையை மாற்ற மாண்புமிகு முதல்வர் அவர்கள் 1970 ஆண்டுகளில் கொண்டுவந்த - நிலச் சீர்திருத்த உச்ச வரம்பை 30 ஏக்கரிலிருந்து 15 ஏக்கராக மாற்றியது உள்ளிட்ட - பல சட்டத் திருத்தங்கள் வாயிலாக எவ்வளவு மிகை நிலங்கள் கூடுதலாகக் கிடைத்தன என்பதைக் கொள்கை விளக்கக் குறிப்பு தெளிவாக்குகிறது.

1961 முதல் 1970 வரை கிடைத்த மிகை நிலங்கள் 19 ஆயிரத்து 28 ஏக்கர் மட்டுமே. பயனடைந்தோர் எட்டாயிரத்துக்கும் குறைவானவர். ஆனால், முதல்வர் கொண்டுவந்த சட்டத் திருத்தங்களால் சென்ற ஆண்டு வரை மிகை நிலமாக அறிவிக்கப்பட்ட மொத்த பரப்பு ஒரு இலட்சத்து 98 ஆயிரத்து 630 ஏக்கர் என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன். ஒரு இலட்சத்து 37 ஆயிரத்து 189 பேர்களுக்கு, ஒரு இலட்சத்து 82 ஆயிரத்து 612 ஏக்கர் நிலம் ஒப்படை செய்யப்பட்டுள்ளது. ஒப்படை பெற்றவர்கள் நிலத்தை மேம்படுத்தி வாழ்க்கையில் மேலும் வளம் காண அவர்களுக்கு ஹெக்டேருக்கு 2,500/-ரூபாய் நிதி உதவி வழங்கப்படுகிறது. முன்பு இச்செலவினம் மைய அரசுக்கும் மாநில அரசுக்கும் சம பங்காக இருந்தது. ஆனால் 1997-98லிருந்து இதனை மாநில அரசே முழுமையாக ஏற்று வருகிறது. இவை அனைத்தும் ஏற்கெனவே நான் கூறியபடி ஏழைகளின் இன்னல்களைக் களைய இந்த அரசு மேற்கொண்டு வருகிற முயற்சிகளின் எடுத்துக்காட்டுகளேயாகும்.



1999 ஏப்ரல் 6] [திரு. நாஞ்சில் கி. மனோகரன்]

இந்த நேரத்தில் ஆங்கில கவிஞன் ஷெல்லி கூறிய சில வரிகளை நான் நினைவுகூற விரும்புகிறேன்.

"The Seed ye sow another reaps;
The wealth ye find another keeps;
The robes ye weave another wears;
The arms ye forge another bears;
Sow seed,- but let no tyrant reap;
Find wealth,- let no imposter heap;
Weave robes,- let not the idle wear;
Forge arms, in your defence to bear."

*பிற்பகல் 12-45*

"நீ விதைக்கிறாய் வேறொருவன் கதிர் அறுக்கிறான்;
நீ கண்ட செல்வத்தை மற்றவன் அடைகிறான்;
நீ நெய்யும் ஆடையை மற்றவன் அணிகிறான்;
உனது பட்டறையில் உள்ள ஆயுதத்தை வேறொருவன் சுமக்கிறான்:
—இந்த நிலை மாற வேண்டும். ஆகவே—
விதையை நடு - வேறு எந்தக் கொடியவனும் பயிரை அறுக்கக் கூடாது
செல்வத்தைத் தேடு - வஞ்சகர் எவரும் அதைத் துய்க்கக் கூடாது;
ஆடையை நெய்க - சோம்பேறி யாரும் உடுத்த வேண்டாம்;
ஆயுதங்கள் உருவாக்கு - அது உன் பாதுகாப்பிற்கே இருக்கட்டும்;"

உழுபவனுக்கே நிலம் சொந்தம், உழைப்பவனுக்கே அதன் பலன் சொந்தம் என்ற நமது கொள்கைகள், இந்தக் கவிதை வரிகளின் உருவகமே ஆகும். 1971 ஆம் ஆண்டிலே நமது அரசு கொண்டு வந்த குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உடைமை உரிமை வழங்குதல்) சட்டத்தின்படி பட்டா வழங்கப்பட்ட ஏழைகளுக்கு இந்திரா நினைவு திட்டத்தின்கீழ் முன்னுரிமை கொடுத்து, வீடுகள் கட்டிக் கொள்ள அனுமதி வழங்குமாறு ஊரக வளர்ச்சித் துறை இயக்குநருக்கு அரசு அறிவுறுத்தியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

நிர்வாகம் தூய்மையாகவும், வெளிப்படையானதாகவும், மக்களால் எளிமையாக அணுகுவது போலும் அமைய வேண்டும் என்பதில் நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் எவ்வளவு முனைப்புடன் இருக்கிறார்.

[திரு. நாஞ்சில் கி. மனோகரன்] [1999 ஏப்ரல் 6

என்பதை நாடே அறியும். 1997 ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம் (Right to Know Information Act) தமிழகத்திலே இயற்றப்பட்டது. நலத் திட்டங்கள் பற்றி மக்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும் என்ற காரணத்தால், வருவாய்த் துறை தொடர்பான கையேட்டினை—மக்கள் சாசனம் என்றே அதற்குப் பெயர்—எல்லா அலுவலகங்களிலும் வைத்திருக்க வேண்டும் என்ற அவரது ஆணை செயல்படுத்தப்பட்டுள்ளது. சட்டமன்றத்திலும் அது தாக்கல் செய்யப்பட்டது.

மேலும், பல நிர்வாகச் சீர்திருத்தங்கள் அமைப்பு ரீதியாக வருவாய்த் துறையிலும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு 4 மாவட்டங்கள், 8 கோட்டங்கள் மற்றும் 24 வட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

மக்களின் தேவைகளையும், மாண்புமிகு உறுப்பினர்களின் கோரிக்கைகளையும் கருத்திற்கொண்டு, சென்ற ஆண்டில் மட்டும் ஒரு வருவாய்க் கோட்டமும், 12 வட்டங்களும் ஏற்படுத்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டார்கள்.

ஒரு கோட்டத்திற்கு சுமார் ரூ. 53 இலட்சமும், ஒரு வட்டத்திற்கு சுமார் ரூ.123 இலட்சமும் அரசுக்குச் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே, மேலும் புதிய அமைப்புகளை உருவாக்கும் முன்பு, அதற்கான நிதிச் செலவினத்தைக் கருத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகிறது என்பதை நான் இங்கே வலியுறுத்திக்காட்ட விரும்புகிறேன்.

புதிய அமைப்புகள் உருவாக்குவது 'மாவட்ட நிர்வாகம்' என்ற தலைப்பின்கீழ் வருவதால் இது தொடர்பான கோரிக்கைகளை அந்த மானியக் கோரிக்கையின்போது மாண்புமிகு முதல்வர் அவர்கள் பரிசீலிப்பார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன். இது தட்டிக் கழிக்கின்ற முயற்சி அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கடந்த அக்டோபர் முதல் டிசம்பர் வரை வட கிழக்குப் பருவமழை தீவிரமாகப் பெய்ததால் சில மாவட்டங்களில் பயிர்களும், நீர் நிலைகளும், சாலைகளும் சேதம் அடைந்தன.

நிவாரணப் பணிகளை உடனடியாக முடுக்கிவிட வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் இட்ட கட்டளையின்படி



1999 ஏப்ரல் 6] [திரு. நாஞ்சில் கி. மனோகரன்]

அமைச்சர்களும், துறை அதிகாரிகளும் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்கள்.

சென்னை மாநகரில் வெள்ளச் சேதங்களைத் தடுப்பதற்குத் தேவையான முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை, வணக்கத்திற்குரிய மேயர், தம்பி ஸ்டாலின் சிறப்பாகச் செய்த காரணத்தால், சென்னை மாநகரில் தண்ணீர் தேங்கி நிற்கும் நிலை பெருமளவில் ஏற்படவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் அளிப்பதற்கும், சேதம் அடைந்த சாலைகள், கரைகள் ஆகியவற்றை சீரமைக்கவும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் 35.14 கோடி ரூபாய் நிதி அனுமதித்தார்கள்.

சென்ற ஆண்டு மானியக் கோரிக்கையின்போது ஓர் அறிவிப்பைச் செய்தேன்: சட்டம்-ஒழுங்கு பாதிக்கப்படும் நேரங்கள், புயல், வெள்ளம் போன்ற இயற்கைச் சீற்ற காலங்கள் ஆகிய சமயங்களில் மாவட்ட மற்றும் மாநிலத் தலைமையிடங்களுடன் உடனடியாகத் தொடர்பு கொள்ள V.H.F. (Very High Frequency) போன்ற நவீன தொலைத் தொடர்பு வசதிகளை ஏற்படுத்த அரசு பரிசீலிக்கும் என்று குறிப்பிட்டிருந்தேன். அதன்படி, 12 கடலோர மாவட்டங்களில் அடங்கிய 19 வருவாய்க் கோட்டங்களிலும், 36 வட்டங்களிலும், மாநில தலைமையிடத்தில் வருவாய் நிர்வாக ஆணையர் அலுவலகத்திலும் V.H.F. என்ற தொலைத் தொடர்பு வசதி செய்யப்பட உள்ளது. இதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்கள் 110.75 இலட்சம் ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள். நிவாரணப் பணிகள் உடனுக்குடன் விரைந்து செயல்பட இந்த வசதி மிகவும் உறுதுணையாக இருக்கும்.

அதேபோல 1-7-1999-க்குள் மாநிலத்தில் 50 வட்டங்களில் A Register மற்றும் சிட்டா கணக்குகளை கணினி மயமாக்கக் கருதப்பட்டுள்ளது. நில அளவை அலுவலர்களுக்கு நவீன உத்திகளிலும், கருவிகளிலும் பயிற்சி தருவதற்காக அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் நவீன அதிநுட்ப பயிற்சி நிலையம் ஒன்று அமைக்கப்பட உள்ளது. இதற்காக 127.03 இலட்சம் ரூபாய் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

பிற்பகல் 12-50

இந்த நேரத்தில்—உங்களுக்கெல்லாம் தெரிந்தவர்தான் — அவுல் பக்கீர் ஜெயினுலாபுதீன் அப்துல் கலாம் அண்மையில் பாரத ரத்னா

[திரு. நாஞ்சில் கி. மனோகரன்] [1999 ஏப்ரல் 6

விருது பெற்றவர், உலகப்புகழ் பெற்ற விஞ்ஞானி, இந்திய அரசின் பாதுகாப்பு அமைச்சகத்தில் முக்கியமான கருத்தாழமிக்க விஞ்ஞான இலட்சியங்களைத் தந்து கொண்டிருப்பவர், தமிழகத்தைச் சார்ந்தவர், நம்மவர், சொந்த ஊர் இராமேஸ்வரம், அவர் கூறுகிறார்:

A developed India by 2020 or even earlier is not a dream. It is a vision for many young Indians. It is a mission we all can and succeed.

கி.பி. 2020 அல்லது அதற்கு முன்பேகூட இந்தியாவை ஒரு வளர்ச்சிபெற்ற நாடாக மாற்றுவது என்பது ஒரு கனவல்ல; பல இளம் இந்தியர்களுக்கு அது ஓர் ஆசை. நான் பக்கீர் அவர்களைப் பற்றி இங்கே பெருமையாகக் குறிப்பிடுவதற்குக் காரணம், இராமேஸ்வரத்திலே பிறந்தாலும், தமிழகத்திலே பிறந்தாலும், இந்தியத் துணைக் கண்டத்தில் பெரும்புகழைப் பெற்று, உலகளாவிய புகழைப் பெற்று, இப்போது நமக்கென்று ஒரு தனி மதிப்பை தேடித் தந்து கொண்டிருக்கிற அந்த ஒப்பற்ற விஞ்ஞானிக்கு, கழகத்தின் சார்பிலேயும், என் சார்பிலேயும், இந்த மாமன்றத்தின் சார்பிலேயும் உரிய மரியாதையை நான் தெரிவித்து வாழ்த்துகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழிகாட்ட நாம் அனைவரும் அந்தக் குறிக்கோளை நிறைவேற்றப் பாடுபடுவோம். ஒன்றுபட்டு ஆற்றக்கூடிய, அடையக்கூடிய ஒரு குறிக்கோளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழிகாட்ட நாம் அனைவரும் அதை நிறைவேற்றப் பாடுபடுவோம்.

தமிழகத்தை 21 ஆம் நூற்றாண்டை நோக்கி இட்டுச் செல்லும் பல திட்டங்களை நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் உருவாக்கி வருகிறார்கள். அரசு விண்ணப்பப் படிவங்கள் அனைத்தும் இன்னும் ஓராண்டில் தமிழ், ஆங்கில கணிப்பொறி இணையத்தில் (Internet) கிடைக்கும் என்றும், இந்த இணையத்தின் வாயிலாக அரசு திட்டங்களின் விபரங்களும் பெற இயலும் என்றும் நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்ததை நீங்கள் அறிவீர்கள்.

11, 12 ஆம் வகுப்புகளில் கணினியை விருப்பப் பாடமாக வழங்கும் திட்டத்தை நடப்பு ஆண்டில் தொடங்கி ஆண்டுதோறும் நாற்பத்து எட்டாயிரம் மாணவர்களுக்கு மென்பொருள் (Software) துறையில் வேலைவாய்ப்பிற்கு தகுதியாக்கவும் கருதப்பட்டுள்ளது. நான் ஏற்கெனவே



1999 ஏப்ரல் 6] [திரு. நாஞ்சில் கி. மனோகரன்]

தெரிவித்தவாறு, வருவாய்த் துறையை படிப்படியாக கணினி மயமாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சென்ற ஆண்டு வருவாய்த் துறையின் பணிகள் மன நிறைவைத் தந்துள்ளன என்று கூறும் நேரத்தில், வரும் ஆண்டில் இத்துறை மேற்கொள்ள இருக்கும் பணிகள் குறித்து சில அறிவிப்புகளை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

*அறிவிப்பு 1 :* வருவாய்த் துறை அலுவலகங்களில் எந்த மனு கொடுக்கப்படும்போதும் தாமதங்களைத் தவிர்த்து, நடவடிக்கை எடுப்பதை முறைப்படுத்த வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு, அந்த மனுவை பெற்றதற்கு ஒப்புகைச் சீட்டு (Acknowledgement slip) வழங்கப்படும். இதனால் பொதுமக்கள் மனுக்களைத் தவறாமல் ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்க வாய்ப்பு ஏற்படும்.

*அறிவிப்பு 2:* மாவட்ட நிர்வாகம் திறம்பட செயல்பட அலுவலர்கள், வருவாய்த் துறையில் செயல்படுத்தப்படும் ஆணைகள், விதிமுறைகள் பற்றி நன்கு அறிந்திருக்க வேண்டும். எனவே, வருவாய்த் துறையில் செயல்படுத்தப்படும் பொருள்கள் பற்றிய ஒரு கையேடு (Manual) தயார் செய்யப்பட்டு அலுவலர்களுக்கு வழங்கப்படும். இது அவர்களுக்கு ஒரு வழிகாட்டியாக அமைந்து விரைவில் முடிவெடுக்கப் பயன்படும். மேலும் மாவட்ட அளவில் பல்வேறு வருவாய் அலுவலர்களுக்குப் பயிற்சியும் வழங்கப்படும்.

*அறிவிப்பு 3:* நிலபட்டாக்கள் நிரந்தரமான ஆவணங்கள் ஆகும். சாதாரண காகிதத்தில் இருப்பதால் விரைவில் சேதம் அடைந்து விடுகிறது. இதனைத் தடுக்க இந்த பட்டாக்கள் இனி நல்ல தரமான தாள்களில் அச்சிட்டு வழங்கப்படும்.

*அறிவிப்பு 4:* அரசு சுகாதாரத் துறையின்கீழ் இயங்கும் ஆரம்ப சுகாதார நிலையங்கள், மருத்துவமனைகள் ஆகியவற்றிற்கும் அரசு கல்வித் துறையின்கீழ் இயங்கும் பள்ளிக்கூடங்கள், பயிற்சி நிலையங்கள் ஆகியவற்றிற்கும் நிலம் தேவைப்படும்போது வெகு விரைவில் நில மாற்றம் செய்யப்பட வேண்டும் என்று அரசு கருதுகிறது. எனவே, நீர்நிலைப் புறம்போக்கு போன்ற பொதுப்பணித் துறை நிலங்களைத் தவிர்த்து, ஏனைய நிலங்களைப் பொறுத்தமட்டிலும் நில மாற்றம் செய்வதை மாவட்ட ஆட்சியரே இறுதி முடிவு எடுத்து ஆணை பிறப்பிக்கும் வகையில் அரசாணை வெளியிடப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. நாஞ்சில் கி. மனோகரன்] [1999 ஏப்ரல் 6

*அறிவிப்பு 5:* நீர்ப்பாசன மேம்பாட்டு வரி (Betterment Levy) யிலிருந்து விலக்கு பெறும் மதிப்பீட்டு உச்சவரம்பினை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

*அறிவிப்பு 6:* நகர்ப்புற நிலவரி தற்போது சந்தை விலையில் ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் என்ற அளவில் வரி விதிப்பு முறை உள்ளது. இதனால் கணக்கீடு செய்வதில் காலதாமதமும், பொதுமக்களுக்கு குழப்பமும் ஏற்படுவதாகத் தெரிய வருகிறது.

வெளிப்படையான நிர்வாகத்தைத் தரவேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் சுட்டிக்காட்டி வருகிறார். ஆகவே, நகர்ப்புற நிலவரி விதிப்பு முறையைச் சீரமைத்து, நடைமுறையை எளிமைப்படுத்த வேண்டும் என்று அரசு விரும்புகிறது. அதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும்.

*அறிவிப்பு 7:* நில உடைமைப் பதிவேடு திட்டம் தற்போது 16 மாவட்டங்களில் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எஞ்சியுள்ள மாவட்டங்களிலும் படிப்படியாக இத்திட்டம் விரிவுபடுத்தப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

*அறிவிப்பு 8:* நில உரிமையாளர்களுக்கு வழங்கப்படும் நில உடைமைப் பதிவேட்டுடன் புலத்தின் வரைபட நகலையும் இணைத்து வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

*அறிவிப்பு 9:* விண்கோள் நில அளவை முறையை (Global Positioning System) அறிமுகப்படுத்த அரசு கருதியுள்ளது. அந்த வகையில் முன்னோடித் திட்டமாக முதலில் ஒரு வட்டத்தில் இதை நடைமுறைப்படுத்த முயற்சி மேற்கொள்ளப்படும்.

*அறிவிப்பு 10:* நிர்வாகத்திற்கும், பொதுமக்களுக்கும் உதவி செய்ய வேண்டும் என்பதற்காக நிர்வாகச் சீரமைப்புகள் செய்யப்பட்டு வருகின்றன. இந்த அரசு பொறுப்பு ஏற்ற பிறகு 4 மாவட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இவ்வாறு புதிதாக உருவாக்கப்பட்ட மாவட்டங்களில் நில அளவைத் துறையின் சில உதவி இயக்குநர்களுக்கு ஈப்புகள் வழங்கப்படவில்லை-ஈப்புகள் என்றால் Jeep-கள் என்று பொருள், சரியா? தமிழ்க்குடிமகன் இருக்கின்றாரா? (சிரிப்பு) —அவர்களுக்கு படிப்படியாக ஈப்பு வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.



1999 ஏப்ரல் 6] [திரு. நாஞ்சில் கி. மனோகரன்]

*பிற்பகல் 12-55*

மாண்புமிகு உறுப்பினர்கள் பல கருத்துக்களைச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சுப. தங்கவேலன் அவர்களும், திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களும் ஒரு கேள்வியை எழுப்பினார்கள். வருவாய்த் துறையை சீரமைத்து, செம்மைப்படுத்த நியமிக்கப்பட்ட முன்னாள் தலைமைச் செயலாளர் சபாநாயகம் அவர்களது அறிக்கை என்னவாயிற்று என்று கேட்டார்கள். அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அவர் தலைமையிலே, வருவாய்த் துறை நிர்வாக சீரமைப்புக் குழு ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. அக்குழு தனது அறிக்கையை அரசுக்கு அளித்துள்ளது. உள் துறை, பொதுத் துறை, சட்டத் துறை, சமூக நலன், ஆதிதிராவிடர் நலன், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலன், மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை, உணவு மற்றும் கூட்டுறவுத் துறை மற்றும் வருவாய்த் துறை ஆகிய பல துறைகள் தொடர்பாக 205 பரிந்துரைகள் அவ்வறிக்கையில் உள்ளன. நிர்வாக அமைப்புகளை மாற்றி அமைப்பது குறித்து பல பரிந்துரைகள் உள்ளன. அவற்றை நன்கு ஆய்ந்து முடிவு எடுக்கப்பட வேண்டும். எனவே, அவை அரசின் பல்வேறு துறைகளால் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. இறுதி முடிவுகள் விரைவில் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதற்குப் பிறகு, திருமதி பொன்னம்மாள் அவர்கள் பேசுகின்றபோது வெள்ள நிவாரணத் தொகையை கூடுதலாக, திண்டுக்கல் மாவட்டத்திற்கு ஒதுக்க வேண்டுமென்று கேட்டார்கள். அவருக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ள நஷ்ட ஈடு 7 இலட்சம், சாலைகள் பழுது பார்த்தல் 90 இலட்சம், ஏரிகள், கண்மாய்கள் - P.W.D.-5 இலட்சம், ஆக மொத்தம் 102 இலட்சம். ஒரு கோடிக்கு மேலே தொகை ஒதுக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். திருப்தியா?

அதற்குப் பிறகு, எழுத்து மூலம் தனது கோரிக்கைகளைத் தெரிவிக்க வேண்டுமென்று எந்தக் காரணத்தினால் கருதினாரோ தெரியாது, நமது மதிப்பிற்குரிய திருநாவுக்கரசு அவர்கள் அறந்தாங்கி தொகுதியைப் பற்றி சில கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அவருக்குத் திருப்தி அளிக்க வேண்டும் என்பதற்காக நான் படித்தே காட்டுகிறேன்.

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி, ஆலங்குடி தாலுகாவை இரண்டாகப் பிரித்து, கரம்பக்குடியைத் தலைமையிடமாகக் கொண்டு தனித் தாலுகா அமைத்துத்தர கேட்டுக்கொள்கிறேன் என்று கேட்டிருக்கிறார்கள். இது முதலமைச்சருக்குத் தெரிவிக்க வேண்டிய ஒன்று. தெரிவிப்பேன் என்ற உறுதியை நான் திருநாவுக்கரசு அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். *(சிரிப்பு)*

இரண்டாவதாக, புதுக்கோட்டை மாவட்டம், மணல்மேல்குடி, இலுப்பூர் ஆகிய புதிய வட்டங்களுக்கு, வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் கட்டித்தர கேட்டுக்கொள்கிறேன் என்று கேட்டிருக்கிறார்கள். இதைக் கேட்டாரே தவிர, இலுப்பூர் வட்டத்தை உருவாக்குவதற்குக் காரணமாக இருந்தவன் நான் என்பதை அவர் சுட்டிக்காட்டவில்லை. பரவாயில்லை. *(சிரிப்பு)* அது அவருடைய இயல்பு என்று நான் சொல்லவில்லை. விட்டுவிடப்பட்டுவிட்டது. விட்டுப் பிடியுங்கள் என்று கலைஞர் அவர்கள் சொல்லுவதுபோல், இப்படி செய்து இருக்கக்கூடும் என்று நான் கருதுகிறேன்.

அதற்குப் பிறகு, வீட்டுமனைகள் வழங்க வேண்டுமென்று நமது மணி அவர்கள் கேட்டார்கள். வீட்டுமனை கொடுப்பதற்கு இந்த அரசு தீவிர கவனம் செலுத்தி வருகிறது. அரசு புறம்போக்கு நிலங்களில் குடிசை கட்டியிருந்தால் அவற்றுக்கு பட்டா வழங்க வருவாய்த் துறை நடவடிக்கை எடுத்து வருகிறது, மலைவாழ் மக்கள், ஆதிதிராவிட மக்கள், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், மற்றவர்கள் ஆகிய அனைவருக்கும் பட்டா வழங்கப்படுகிறது. இந்தப் பணி இன்னும் சீரிய முறையில் செயல்படுத்தப்படும் என்பதை அருமை நண்பர் மணி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதற்குப் பிறகு, 'வந்தே மாதரம், பாரத மாதா கி ஜே' *(சிரிப்பு)* வேலாயுதன் அவர்கள் பேசும்போது வீட்டுமனைகளுக்கு விரைவில் பட்டா வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். வீட்டுமனைகளுக்கு பட்டா வழங்குவதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அரசு நிலங்களில் வீடு, குடிசை கட்டப்பட்டிருந்தால் அந்த நிலத்தின் தன்மையைக் கண்டறிந்து பட்டாக்கள் வழங்கப்படுகின்றன. ஆட்சேபனை உள்ள இடங்களில் பட்டா வழங்க இயலாது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதற்கு மேல் அதிகமாகப் பேசுவதற்கு எதுவும் இல்லை என்று நான் கருதுகிறேன். ஆகவே முடிவுரையாக தெரிவித்துக்கொள்கிறேன்.



மாண்புமிகு உறுப்பினர்கள் பல கருத்துக்களை இங்கே தெரிவித்துள்ளார்கள். இது தவிர நேரிலேயும் பல உறுப்பினர்கள் தங்களுடைய எண்ணங்களைக் கூறியுள்ளார்கள். இன்னும் தெரிவிக்கின்றேன். உங்களுக்கு என்னென்ன கோரிக்கைகள் உண்டோ, அந்தக் கோரிக்கைகளை என்னிடம் தருவதற்கு துளிகூட சுணக்கம் உங்களுக்குத் தேவையில்லை என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். ஏனென்றால், யார் என்ன சொன்னாலும் சரி, அவர்களை அணைத்து, அன்போடு அரவணைத்து, அவர்களது கருத்துக்களைக் கேட்கவேண்டுமென்று கட்டளையிட்டிருப்பவர் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் என்பதை நான் பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 1-00*

மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்துள்ள கருத்துகள், நேரிலும் தெரிவித்துள்ள கருத்துகள் குறித்து மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் கலந்து, உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை உங்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். பல உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்து இருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் அவற்றைத் திரும்பப்பெற்று, துறை கோரியுள்ள நிதியினை அளிக்க, மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு அன்புடன் வேண்டுகிறேன். திரு. ஞானசேகரன்... இல்லையா, வெட்டுத் தீர்மானம் முன்மொழியவில்லையா? *(குறுக்கீடு)* அவருக்கும் எனது வாழ்த்துக்களை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். *(சிரிப்பு)*

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது அனுமதி கிடையாது.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் நேரம் அதிகமாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரம் அதிகமாக இருந்தால் பேசுவதற்கு அனுமதி தரவேண்டுமா?

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** தலைவர் அவர்களே, நாங்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன பாதிக்கப்பட்டிருக்கிறீர்கள்? அதற்காகத்தான் நீங்கள் முதலிலேயே பேசுவதற்கு அனுமதி அளித்தேன். அப்புறம் என்ன பாதிப்பு?

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மழைக்காலங்களிலே மிகவும் பாதிக்கப்படுகிறது. அந்தக் கரைகளையெல்லாம் பலப்படுத்த வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவற்றையெல்லாம் நேரிலே போய்ச் சொல்லுங்கள், செய்து கொடுப்பார்கள். விவாதம் முடிவுற்றது, இப்போது வாக்கெடுப்பு.

### (அ) கோரிக்கை எண் 1—நில வருவாய்த் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 1—நில வருவாய்த் துறை, வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.



திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை. திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. மணிவர்மா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. தங்கமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இல்லை.

[1999 ஏப்ரல் 6

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.வ. அப்துல் நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஆர்.ஆர். சேகரன், இருக்கையில் இல்லை. திரு. ஆர்.ஆர். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின்



1999 ஏப்ரல் 6] [பேரவைத் தலைவர்]

அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. சு. சிவராஜ் இருக்கையில் இல்லை. திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது.

“நில வருவாய்த் துறை பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 13,00,65,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்” என்னும் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## (ஆ) கோரிக்கை எண் 40 - இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 40-இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு, வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

[1999 ஏப்ரல் 6

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. தங்கமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.



1999 ஏப்ரல் 6]

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.வ. அப்துல் நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர். ஆர். சேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.ஆர். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

**"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 40-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 71,74,51,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.**

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்கு கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

**(இ) கோரிக்கை எண் 45—இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 45—இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும், வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.வ. அப்துல் நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. லி. அய்யலுசாமி.

**திரு. லி. அய்யலுசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லி. அய்யலுசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

[பேரவைத் தலைவர்] [1999 ஏப்ரல் 6

"இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 78,68,36,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் புதன்கிழமை (7-4-1999) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-04 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ). சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

119. 12-01-1998 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்ட வணிகவரிகள் மற்றும் அறநிலையத் துறையின் 12-1-1998 ஆம் நாளிட்ட II(1)/வ.வ.அ.நி/(a-9)/98 ஆம் எண் அறிவிக்கையில் மாற்றம் செய்தது குறித்து வணிக வரிகள் துறையின் 31-3-1999 ஆம் நாளிட்ட 77 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

120. 27-3-1999 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்ட வணிக வரிகள் துறையின் 27-3-1999 ஆம் நாளிட்ட II(1)/வ.வ./40 (d-15)/99 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தம் செய்தது குறித்து வணிக வரிகள் துறையின் 31-3-1999 ஆம் நாளிட்ட 80 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959ஆம் ஆண்டு



1999 ஏப்ரல் 6]

தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

121. குறிப்பிட்ட சில நிலங்கள் அல்லது கட்டடங்களை மேம்படுத்துவதற்கு முறைப்படுத்தும் கட்டணத்தை வசூலிப்பதன் வாயிலாக விலக்களிப்பது குறித்தும், 1999 ஆம் ஆண்டு முறைப்படுத்தும் கட்டணத்திற்கான (சென்னைப் பெருநகர்ப் பகுதி) விண்ணப்பம், மதிப்பீடு மற்றும் வசூலிப்பதற்கான விதிகளை வகுப்பது குறித்தும், 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகரமைப்பு மற்றும் ஊரமைப்பு (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 58/1998) 1-3-1999 முதல் செயற்பாட்டிற்கு வருவது குறித்தும் வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறையின் 27-02-1999 ஆம் நாளிட்ட 76 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள் [1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகரமைப்பு மற்றும் ஊரமைப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

122. 1997-98 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் செயல்முறை குறித்த ஆண்டறிக்கை. [1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 36/1972) 35 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

### (ஆ). அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

56. மானியக் கோரிக்கை எண் 20—வேளாண்மை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு 1999-2000 (தமிழ், ஆங்கிலம்).

57. வேளாண்மைத் துறை பற்றிய செயல்முறைத் திட்டம், 1999-2000. (தமிழ், ஆங்கிலம்).

58. மானியக் கோரிக்கை எண் 1—நில வரி, மானியக் கோரிக்கை எண் 40—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு மற்றும் மானியக் கோரிக்கை எண் 45—இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1999-2000 (தமிழ், ஆங்கிலம்).

59. வருவாய்த் துறையின் சாதனை அறிக்கை, 1999-2000. (தமிழ், ஆங்கிலம்).

60. 27-3-1999 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்ட வணிக வரிகள் துறையின் 27-03-1999 ஆம் நாளிட்ட II(1)/வ.வ./40 (d-15)/99 மற்றும் II (1)/வ.வ./40 (d-16)/99 ஆகிய எண்கள் கொண்ட அறிவிக்கைகளில் பிழைத் திருத்தங்கள் செய்தது குறித்து வணிக வரிகள் துறையின் 31-3-1999 ஆம் நாளிட்ட 7269/பி1/99 ஆம் எண் கடிதத்தில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள்.



## இணைப்பு

*(357 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## வருவாய்த் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 1999-2000

### கோரிக்கை எண் 1 — நில வருவாய்த் துறை

### கோரிக்கை எண் 40 — இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு

### கோரிக்கை எண் 45 — இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்

1. முன்னுரை:

அரசினுடைய சட்டத் திட்டங்களை நடைமுறைப்படுத்துகிற முக்கியமான கருவியாக வருவாய்த் துறை விளங்குகிறது. எனவே, 'அரசு' என்றாலே மக்களின் மனக்கண்முன் தோன்றுகிற துறை வருவாய்த் துறைதான் என்றால் அது மிகையாகாது. பொதுமக்களின் வாழ்வில் பிறப்பிலிருந்து இறுதி நிகழ்ச்சியாம் இறப்பு வரை பல்வேறு நிலைகளில் பணியாற்றுகிற துறை இத்துறையாகும். வருவாய்த் துறை நிர்வாகத் துறைகளின் அமைப்பில் பாரம்பரியமும் பெருமையும்மிக்க மூத்தத் துறையாகும். நிர்வாகத்தின் முதுகெலும்பாகத் தொடர்ந்து விளங்குவதுடன், கட்டுக்கோப்பான சமுதாய முன்னேற்றத்திற்கும் அதன் வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றுவது வருவாய்த் துறையாகும்.

2. மக்களுடைய நில உடைமை உரிமையைப் பாதுகாத்தல், நில வருவாய் ஆவணங்களைப் பராமரித்தல், மேம்படுத்தல் முதலிய இன்னோரன்ன பணிகள் வருவாய்த் துறையின் முக்கிய பணிகளாகும். நிலச் சீர்திருத்தங்களைச் செயல்படுத்துவது, நில ஒப்படை வழங்குதல், மிகை நிலத்தை வழங்குதல் மற்றும் நகர்ப்புற நிலவரி மற்றும் வேளாண்மை வருமான வரி வசூல் செய்தல் ஆகிய பணிகளை நிறைவேற்றி சமுதாய சமத்துவத்தை உருவாக்கும் முயற்சியை வருவாய்த் துறை மேற்கொண்டுள்ளது.

3. எந்தப் பகுதியிலும் சட்டம், ஒழுங்குப் பிரச்சினை எழுகிறபோதும் வறட்சி, வெள்ளம் போன்ற இயற்கை இடர்பாடுகள் நிகழும் கால கட்டங்களிலும் வருவாய்த் துறைதான் முதலில் மக்களை நாடிச்

[1999 ஏப்ரல் 6

செல்கிறது. இயற்கைச் சேதங்கள் எதிர்நோக்கப்படுமானால், பொதுமக்களை முன்கூட்டியே எச்சரிப்பது வருவாய்த் துறை ஆகும். பாதிக்கப்பட்ட மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றம் செய்து, அவர்களுக்கு உணவு, உறைவிடம் அளிப்பதுடன் அத்தியாவசியப் பொருட்கள் வழங்கி உதவித் தொகையையும் வருவாய்த் துறை வழங்கி வருகின்றது.

பொதுமக்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் வருவாய்த் துறையின் பங்கினைக் குறைத்து மதிப்பிட முடியாது எனலாம். சமூகம் அல்லது மக்களுக்குச் சிறந்த முறையில் பணியாற்றுவதற்கு ஏதுவாக எப்பொழுது, எங்கெங்கு அவசியமாகிறதோ அங்கெல்லாம் மாவட்டங்கள், வட்டங்கள், முதலிய வருவாய் நிர்வாக பணியமைப்பைச் சீரமைக்க அரசு முனைந்துள்ளது. வருவாய் நிர்வாகம் மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியர்களைத் தலைவர்களாகவும், அவர்களுக்குத் துணையாக மாவட்ட வருவாய் அலுவலர்கள், வருவாய்க் கோட்ட அலுவலர்கள், வட்டாட்சியர்கள், வருவாய் ஆய்வாளர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் கிராம உதவியாளர்கள் ஆகிய பலதரப்பட்ட அலுவலர்களைக் கொண்டதாகும்.

**2.** *நில வரி:*

நில வரித் திட்ட முறையில் அடிப்படைத் தீர்வை என்பது ஒரு நிலத்தின் இனம், வளம், தரம் ஆகியவற்றைக் கொண்டு நிர்ணயிக்கப்படுகிறது. இவ்வாறு நிர்ணயிக்கப்படும் அடிப்படைத் தீர்வை நிலவரி என அழைக்கப்படுகின்றது. இதனை அடிப்படையாகக் கொண்டு விதிக்கப்படும் பிற தீர்வைகள், உள்ளூர் வரி, உள்ளூர் மேல்வரி, கூடுதல் தீர்வை, கூடுதல் தண்ணீர்த் தீர்வை ஆகியவையாகும். இவை நில வரியின் ஒரு பகுதியாகக் கொள்ளப்பட்டு நிலவரியுடன் வசூலிக்கப்படுகின்றன. கிராம கணக்குகளில் புன்செய் என பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்து நிலங்களின் மீதான அடிப்படைத் தீர்வை வசூல் 1967 ஜூலை 1 ஆம் நாள் முதல் தொடங்கிய பசலி ஆண்டிலிருந்து இரத்து செய்யப்பட்டுள்ளது. அதேபோன்று 5 ஏக்கர் அல்லது அதற்குக் குறைவான பரப்பளவுள்ள நன்செய் நிலம் வைத்திருக்கும் விவசாயிகளுக்கு நன்செய் தீர்வையில் புன்செய் தீர்வை அளவிற்கு நில வரி 1971 ஜூலை 1 ஆம் நாள் முதல் இரத்து செய்யப்பட்டுள்ளது.



1999 ஏப்ரல் 6]

*2.* சுமுகமான முறையில் நில வரி வசூல் செய்யப்படுகிறது. 1989 ஆம் ஆண்டு முதல் நில வரி வசூலில் ஜப்தி நடவடிக்கை கைவிடப்பட்டது. 1403 ஆம் பசலி ஆண்டுக்குப் பிறகு இந்த முறை ஆய்வு செய்யப்பட்டது. இயற்கை இடர்பாடுகளினால் பாதிக்கப்படாமலிருந்து ரூ. 10,000 மற்றும் அதற்கு மேலும் நில வரி நிலுவை வைத்திருக்கும் பட்டாதாரர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கலாம் என்று கருதப்பட்டது. 5 ஏக்கருக்கு மேல் புன்செய் நிலமோ அல்லது 2.5 ஏக்கருக்கு மேல் நன்செய் நிலமோ வைத்திருக்கும் பட்டாதாரர்களிடம் அவர்கள் நிலத்தில் 50 விழுக்காட்டுக்கும் மேல் பயிர் விளைச்சல் இருந்தால், ஒரு பசலி ஆண்டுக்கான நிலுவை நில வரித் தொகையையும் நடப்பு ஆண்டுக்கான நில வரித் தொகையையும் வசூல் செய்ய டிசம்பர் 1994 இல் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

*நில வரித் தள்ளுபடி*

***(1)*** *பருவகால நில வரித் தள்ளுபடி:*

நில வரித் தள்ளுபடி பெற விரும்பும் ஒரு விவசாயி எந்த நிலத்திற்குத் தள்ளுபடி தேவைப்படுகிறது என்பதைக் குறிப்பிட்டு எழுத்து மூலமாக சம்பந்தப்பட்ட வருவாய் அலுவலர்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும். பயிராய்வு அலுவலரின் ஆய்வுக் குறிப்பின் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட வருவாய் அலுவலரால் நில வரித் தள்ளுபடி அனுமதிக்கப்படும். பருவகால நில வரித் தள்ளுபடியின்போது உள்ளூர் வரி, உள்ளூர் மேல்வரித் தள்ளுபடி செய்வது கிடையாது.

***(2) வழக்கத்திற்கு மாறான சூழ்நிலைகளில் நிலவரி வசூலிப்பதை நிறுத்தி வைத்தலும் அதைத் தள்ளுபடி செய்தலும்:***

சில தவிர்க்க இயலாத சூழ்நிலைகளில் அதாவது பரவலாக நிலவிவரும் வறட்சி அல்லது பெருவாரியான நிலங்களில் பயிர் பாதிப்பு ஏற்பட்டால், நில வரித் தீர்வையை அரசு நிறுத்தி வைக்கிறது அல்லது தள்ளுபடி செய்கிறது. இந்நேர்வுகளில் நில வரி பாக்கித் தொகை மற்றும் அரசு கடன்கள் ஆகியவை அடுத்து வரும் பசலி ஆண்டுக்கு ஒத்திவைக்கப்படுகிறது. பயிர் உற்பத்தி 50 விழுக்காடு மற்றும் அதற்குக் குறைவாக இருந்தால் நில வரி பாக்கித் தொகை, உள்ளூர் மேல்வரி, உள்ளூர் கூடுதல் மேல்வரி மற்றும் அரசு கடன்கள் ஆகியவற்றை வசூலிப்பது அடுத்து வரும் பசலி ஆண்டுக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

2. 1997 ஆம் ஆண்டு வடகிழக்குப் பருவ மழையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்கும் பொருட்டு, தமிழ்நாடு முழுவதற்கும் நிலவரி இரத்து செய்யப்பட்டுள்ளது என 6-4-1998 அன்று இப்பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததன் அடிப்படையில் அரசாணை (நிலை) எண் 459, வருவாய்த் துறை நாள் 4-6-1998 இல் 1997 ஆம் ஆண்டு வடகிழக்குப் பருவ மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு 1407 ஆம் பசலி ஆண்டுக்கான நிலவரி முதலிய தொகை ரூ. 43,33,00,000/- (ரூபாய் நாற்பத்து மூன்று கோடியே முப்பத்து மூன்று லட்சம் மட்டும்) இரத்து செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் ஏற்கெனவே தொகையேதும் செலுத்தியிருந்தால் அது அடுத்த ஆண்டு செலுத்த வேண்டிய நிலவரிக்காக ஈடு செய்யப்படும் எனவும் ஆணையிடப்பட்டுள்ளது.

**3. நில உரிமைப் பதிவேடு:**

விவசாய நில உடைமைதாரர்களுக்கு நில உரிமைப் பதிவேடு வழங்குவதற்கு 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு நில உரிமைப் பதிவேடு சட்டம் இயற்றப்பட்டது. நில உரிமைப் பதிவேடு நில உரிமையைக் குறிக்கும் சான்றாவணமாகும். நில உரிமைப் பதிவேடு, நிதி நிறுவனங்கள், கூட்டுறவு வங்கிகள் மற்றும் வணிக வங்கிகள் விவசாயிகளுக்குக் கடன் அளிக்க உதவுகிறது.

2. இத்திட்டம் வேலூர், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், கரூர், கோயம்புத்தூர், மதுரை, தேனி, மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இரண்டாம் கட்டமாக சேலம், நாமக்கல், தருமபுரி, இராமநாதபுரம், திண்டுக்கல், திருநெல்வேலி மற்றும் கடலூர் மாவட்டங்களுக்கு இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

**4. நிலக் கொள்கை:**

*அ. நில மாற்றம்:-*

அரசின் வெவ்வேறு துறைகள் வசம் உள்ள நிலங்கள் உட்பட அனைத்து வகையான அரசு நிலங்களும் வருவாய்த் துறையால் பராமரிக்கப்படுகின்றன. அரசு நிலங்கள் ஒப்படை, நில மாற்றம், நில உரிமை மாற்றம் மற்றும் குத்தகை மூலம் தனியாருக்கும் அரசின் பல்வேறு துறைகள், அரசு சார்ந்த துறைகள் மற்றும் நிறுவனங்களுக்கும்



அரசால் வழங்கப்படுகின்றன. தற்போது அரசு வசம் உள்ள நிலங்கள் மிகவும் குறைந்து கொண்டு வருவதால், அரசு வசம் உள்ள நிலங்களை வழங்குவது குறித்து அரசால் கவனமாகப் பரிசீலனை செய்யப்பட்டு நியாயப்படி முடிவெடுக்கப்பட்டு வருகிறது.

2. மைய அரசுத் துறைகளுக்கு நிலங்களும் கட்டடங்களும் வருவாய் நிலையாணை எண் 23 இன்கீழ் உள்ள விதிகளின்படி சந்தை மதிப்பீடு வசூலித்துக்கொண்டு நில மாற்றம் செய்யப்படுகின்றன. இருப்பினும் சென்னையில் துரித இரயில் போக்குவரத்துத் திட்டத்திற்கென நிலங்கள் இரயில்வேத் துறைக்கு நிலக்கிரயமின்றி நில மாற்றம் செய்யப்பட்டு வருகின்றது.

3. மாநில அரசுத் துறைகள் நிலம் கோரி விண்ணப்பித்தால் நிலம் வழங்குவதற்கு வருவாய் நிலையாணை எண் 23ஏ இன்கீழ் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. வணிக நோக்கத்திற்கென நிலம் கேட்கப்படும்பொழுது மட்டும் நிலக்கிரயம் வசூலிக்க ஆணையிடப்படுகிறது. பள்ளிக் கட்டடங்கள், மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், சமத்துவபுரம் போன்ற வணிக நோக்கற்ற பயன்பாட்டிற்கு நிலங்கள் நிலக்கிரயமின்றி நில மாற்றம் செய்யப்படுகின்றன. துறைகளுக்கு நில மாற்றம் செய்யப்பட்ட நிலங்கள் கேட்கப்பட்ட நோக்கத்திற்காக முழுமையாக அத்துறைகளால் பயன்படுத்தப்படவில்லையெனில், அத்தகைய நிலங்கள் வருவாய்த் துறையால் திரும்பப் பெறப்பட்டு அரசின் வேறு எந்தத் துறைகளுக்கும், அத்துறைகள் விண்ணப்பித்தால் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.

*ஆ. நில உரிமை மாற்றம்:*

பொது நோக்கங்களுக்காகவும், சமுதாய நலனை மேம்படுத்துவதற்காகவும் நிலம் வழங்குவது அவசியம் என்பதை அரசு நன்கு அறிந்துள்ளது. எனவே பள்ளிகள், பேருந்து நிலையம், அங்காடி, சாலை, மருத்துவமனை போன்ற பொது நோக்கங்களுக்காக வருவாய் நிலை ஆணை எண் 24இன்கீழ் அரசு சார்பு நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள் அல்லது தனியார் நிறுவனங்களுக்கு அரசு நிலங்கள் உரிமை மாற்றம் செய்யப்படுகின்றன. அத்தகைய நிறுவனங்களுக்கு ஒவ்வொரு நேர்விலும் தகுதியின் அடிப்படையில், நிலக்கிரயமின்றியோ அல்லது நிலக்கிரயம் வசூலித்துக்கொண்டோ அரசு நிலங்கள் உரிமை மாற்றம் செய்யப்படுகின்றன.

**5. வீட்டுமனை வழங்குதல்:**

மக்களின் அடிப்படைத் தேவைகளில் நிலம் ஒன்றாகும். சமுதாயத்தில் பொருளாதாரத்தில் நலிவுற்ற நிலையில் உள்ளவர்களை முன்னேற்றுவதற்காக சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ளவர்களுக்கு அடிப்படை வசதிகளைத் தருவது அரசின் குறிக்கோளாக உள்ளது. இக்குறிக்கோளை அடைய மாநிலத்தில் நகர்ப்புறங்கள் மற்றும் கிராமப்புறங்களில் தகுதி வாய்ந்த நபர்களுக்கு இலவச வீட்டு மனைகள் வழங்கும் திட்டத்தை அரசு கடைபிடித்து வருகிறது.

2. வருவாய் நிலையாணை 21-ன்கீழ் நில ஒப்படை செய்யப்படுகிறது. ஆண்டு வருமானம் ரூ. 12,000/-க்கு குறைவாகயிருப்பின் அவர்களுக்கு இலவசமாக வீட்டுமனைகள் ஒப்படை செய்யப்படுகின்றன. வீட்டுமனைகள் ஒப்படை செய்வதில் கீழ்க்கண்டவாறு முன்னுரிமை அளிக்கப்படுகிறது:—

(அ) எல்லைப்புற பாதுகாப்பு படை மற்றும் பிரதேச இராணுவப் படை உட்பட முப்படையில் பணியில் இருந்தபோது உயிரிழந்தவர்கள் மற்றும் செயலிழந்தவர்களின் குடும்பங்கள்.

(ஆ) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்

(இ) விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகள்

(ஈ) முன்னாள் இராணுவத்தினர்

(உ) இராணுவத்தில் பணிபுரிவோர்

(ஊ) ஆதரவற்ற பெண்கள் மற்றும் கைம்பெண்கள்

(எ) நிலமற்ற ஏழைகள்

பெண்களின் முன்னேற்றம் மற்றும் நலத்தைக் கருத்திற்கொண்டு மனைவி அல்லது குடும்பத்தில் பெண் உறுப்பினர் பெயரில் ஒப்படை செய்யப்படுகிறது. ஒவ்வொரு ஒப்படைதாரரும் வீட்டுமனை ஒப்படை செய்த நாளிலிருந்து ஓராண்டுக்குள் வீடு கட்ட வேண்டும் என்று ஒப்படை செய்யும்போது நிபந்தனை விதிக்கப்படுகிறது. அவ்வாறு கட்டாவிட்டால் அவ்வீட்டுமனையை எந்தவிதமான ஈட்டுத் தொகையுமின்றி அரசே திரும்ப எடுத்துக்கொள்ளும். மேலும் ஒப்படை செய்யப்படும் இடத்தில் இரு மரங்களை வளர்க்க வேண்டும் என்ற நிபந்தனையும் விதிக்கப்படுகிறது.



3. மேலும் புறம்போக்கு நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகள் எங்கெங்கு தேவையென அல்லது விரும்பத்தக்கது எனக் கருதப்படுகிறதோ அங்கங்கு வரன்முறைப்படுத்தப்படுகின்றன. ஒப்படை செய்யப்படும் நிலங்களில் வீடுகளைக் கட்ட வீட்டுமனையின்பேரில் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் அடமானம் செய்யவும் ஒப்படைதாரர்களுக்கு அரசு அனுமதி அளித்துள்ளது.

4. ஒப்படை நேர்வுகள் விரைவாக முடிவு செய்யப்பட வேண்டியதை முன்னிட்டு நிலமதிப்புத் தொகை அதிகார வரம்பை அரசு தற்போது கீழ்க்கண்டபடி உயர்த்தியுள்ளது:-

| அதிகாரம் படைத்த அலுவலர் | உயர்த்தப்பட்ட வரம்பு |
|---|---|
| (1) வட்டாட்சியர் | ரூ. 10,000/ |
| (2) கோட்டாட்சியர் | ரூ. 20,000 |
| (3) மாவட்ட வருவாய் அலுவலர் | ரூ. 50,000 |
| (4) மாவட்ட ஆட்சியர் | ரூ. 2,00,000 |
| (5) சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் | ரூ. 2,50,000 |
| (6) ரூ. 2,50,000-க்கு மேல் உள்ள நேர்வுகளில் அரசு ஆணை பிறப்பிக்கும். | |

5. இத்திட்டத்தின்கீழ் ஒவ்வோராண்டும் ஓர் இலக்கு நிர்ணயிக்கப்படுகிறது. 1997-98 இல் வீட்டுமனை ஒப்படை இலக்கு 75,000 ஆக நிர்ணயிக்கப்பட்டது. 1997-98 இல் அதில் 2,50,811 வீட்டுமனைகள் வழங்கப்பட்டன. 1998-99 இல் வீட்டுமனை ஒப்படை இலக்கு 60,000 ஆக நிர்ணயிக்கப்பட்டது. அதில் 28-2-1999 வரை 1,96,973 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

**6. விவசாய நிலம் ஒப்படை செய்தல்:**

வேளாண்மைக்குத் தகுந்த நிலம் உற்பத்திக்கு ஓர் இன்றியமையாத காரணமாக இருப்பதோடு, நம் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் ஒரு முக்கிய பங்காகத் தொடர்ந்து இருந்து வருகிறது. கிராமங்களிலுள்ள ஏழை மக்கள் பெரும்பாலும் தங்கள் வாழ்க்கைக்கு விவசாயத்தையே நம்பி இருப்பதால், ஏழை மக்களுக்கு விவசாய நிலங்களை முன்னுரிமை அடிப்படையில் வழங்கும் கொள்கையை அரசு கடைபிடித்து வருகிறது.

இதனால், ஏழை மக்கள் விவசாயத்தையும் வேளாண்மை சார்ந்த வேலைகளைத் தொழிலாக மேற்கொள்ளவும், நில ஆதாரங்களைத் திறன்பட பயன்படுத்திக்கொள்ளவும் முடிகிறது.

2. ஒருவரின் குடும்ப ஆண்டு வருமானம் ரூ. 12,000/- மும் அதற்குக் குறைவாகவும் இருப்பின் அவர் 'ஏழை' எனக் கருதப்படுகிறார். தகுதியுள்ள நபர்களுக்குக் கீழ்க்கண்ட முன்னுரிமை வரிசைப்படி ஒப்படை வழங்கப்படுகிறது:-

(அ) மரணம் அடைந்த எல்லைப்புற பாதுகாப்புப் படையினர் மற்றும் பிரதேச இராணுவப் படையினர் ஆகியோரின் குடும்பத்தினர்

(ஆ) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்

(இ) விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகள்

(ஈ) முன்னாள் இராணுவத்தினர்

(உ) இராணுவத்தில் பணிபுரிவோர்

(ஊ) ஆதரவற்ற பெண்கள் மற்றும் கைம்பெண்கள்

(எ) நிலமற்ற ஏழைகள்

3. அரசிடம் இருக்கும் நிலங்கள் விவசாயத்திற்காக ஒப்படை கோருபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், நிலங்களை இயன்ற அளவில் அதிக ஏழை மக்களுக்குச் சமமாகப் பகிர்ந்தளிப்பதற்கு அரசு முயற்சி செய்து வருகிறது. எனவே, ஒரு நபருக்கு ஒப்படை செய்யப்படுவதற்கான அதிகபட்ச வரம்பினை அரசு நிர்ணயம் செய்துள்ளது. அதன்படி கன்னியாகுமரி மாவட்டம் நீங்கலாக ஏனைய மாவட்டங்களில் ஒருவருக்கு ஒப்படை செய்யப்படும் நிலத்தில் உயரளவு பரப்பு அவர் ஏற்கெனவே வைத்திருக்கும் நிலப்பரப்பும், ஒப்படை பரப்பும் சேர்த்து 3 ஏக்கர் புன்செய் அல்லது ஒன்றரை ஏக்கர் நன்செய் என்ற வரம்புக்கு உட்பட்டு ஒப்படை செய்யப்படுகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு நிலங்களின் பரப்பு மிகவும் குறைவாக இருப்பதாலும் அந்நிலங்கள் மிகவும் மதிப்பு வாய்ந்தவை என்பதாலும் இந்த உயரளவு அம்மாவட்டத்தில் ஒரு ஏக்கர் புன்செய் அல்லது 0.50 ஏக்கர் நன்செய் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பெண்கள் முன்னேற்றம் மற்றும் நலத்தை ஊக்குவிக்கும் வகையில் தற்போது இவ்வொப்படைகள் குடும்பத்திலுள்ள மனைவி/பெண் உறுப்பினர்கள் பெயரில்தான் செய்யப்படுகின்றன.



4. அரசு, ஏழை மக்களின் மறுவாழ்வுக்காக நிலங்களை இலவசமாக வழங்குகிறது. ஒப்படை நிலங்கள், அவை வழங்கப்பட்ட நாளிலிருந்து 3 ஆண்டுகளுக்குள் பயிரிடப்பட வேண்டும். ஆனால் சில ஒப்படைதாரர்கள், எந்தக் காரியங்களுக்காக நிலம் அவர்களுக்கு ஒப்படை செய்யப்பட்டதோ, அக்காரியங்களுக்காக அவற்றினைப் பயன்படுத்துவதில்லை. அவற்றை வீட்டுமனைகளாக மாற்றி விற்பனை செய்துவிடுகின்றனர். இதனைத் தடுப்பதற்கு, ஒப்படை நிலத்தை 10 ஆண்டு காலத்திற்கு விற்கவோ, உரிமை மாற்றம் செய்யவோ கூடாது என்றும், 10 ஆண்டுகளுக்குப் பின்னரும் நிலங்களை விற்பனை செய்ய முன்அனுமதி பெற வேண்டும் என்றும் சில நிபந்தனையுடன் ஒப்படை செய்யப்படுகின்றன. இருப்பினும் பயிரிடுவதற்குக் கடன் வாங்கும்பொருட்டு நிலங்களை, அரசு உடைமையாக்கப்பட்ட தேசிய வங்கிகளில் அடமானம் வைக்கலாம். அந்நிலத்தை ஒப்படைதாரர் அல்லது அவரது குடும்ப உறுப்பினர்கள் நேரடியாகவோ அல்லது கூலியாட்களைக் கொண்டோதான் பயிரிட வேண்டும். மேலும், ஒப்படைதாரர் குறைந்தது 10 மரங்களை ஒப்படை நிலத்தில் நட வேண்டும். ஒப்படை நிபந்தனைகள் மீறப்பட்டால், எவ்வித இழப்பீடும் வழங்காமல் நிலத்தை அரசு மீள எடுத்துக்கொள்ளும்.

5. பொதுத் தேவைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள சமுதாய நிலங்களைப் பாதுகாப்பதை அரசு தனது தலையாய கடமையாகக் கருதுகிறது. எனவே, ஏரி, குளங்கள், கால்வாய், ஓடை போன்ற அனைத்து நீர்வழிப் புறம்போக்குகளையும், மந்தைவெளி, மேய்க்கால் மற்றும் மயானம் புறம்போக்குகளையும், ஒப்படை செய்வதற்கு அரசு தடை விதித்துள்ளது. இருப்பினும், ஆட்சேபணையற்ற மற்றும் பொதுக் காரியங்களுக்குப் பயன்படுத்தப்படாத தடை செய்யப்பட்ட இனங்களில் உள்ள ஆக்கிரமணங்களை வரன்முறைப்படுத்துவதற்குப் பரிந்துரை செய்வதற்காக உயர்மட்டக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் ஆக்கிரமணங்கள் முறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

6. இயற்கைச் சூழல் சமன்பாட்டினை பாதுகாப்பதற்கும், நில அரிப்பினைத் தடுக்கவும் மாநிலத்திலுள்ள அனைத்து மலைப் பிரதேசங்களிலும் வேளாண்மைக்கென நில ஒப்படை செய்வதற்கு அரசு தடை விதித்துள்ளது.

7. அரசின் பல்வேறு துறைகளின் வளர்ச்சித் திட்டங்களுக்காக நிலங்கள் தேவைப்படுகின்றன. எனவே, சென்னை, கோயம்புத்தூர்,

[1999 ஏப்ரல் 6

திருச்சி மற்றும் மதுரை போன்ற மாநகரங்களிலும் அதன் புறநகர்ப் பகுதிகளிலும் ஒப்படை செய்வதற்கு அரசு தடை விதித்துள்ளது.

8. தகுதியுள்ள ஏழை மக்களுக்கு சிரமமில்லாமலும், தாமதம் இல்லாமலும் நில ஒப்படை செய்வது அரசின் கொள்கை. இதனைக் கருத்தில் கொண்டு வருவாய்த் துறையின் பல்வேறு அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகார நிதி வரம்பினைக் கீழ்க்கண்டவாறு உயர்த்தி அரசு ஆணையிட்டுள்ளது:-

| | |
|---|---|
| (1) வட்டாட்சியர் | ரூ. 10,000/-வரை |
| (2) வருவாய்க் கோட்ட அலுவலர் | ரூ. 20,000/-வரை |
| (3) மாவட்ட வருவாய் அலுவலர் | ரூ. 50,000/-வரை |
| (4) மாவட்ட ஆட்சியர் | ரூ. 2,00,000/-வரை |
| (5) நில நிர்வாக ஆணையர் | ரூ. 2,50,000/-வரை |
| (6) அரசு | ரூ. 2,50,000/-க்குமேல் |

9. கடந்த மூன்று ஆண்டுகளில் கீழ்க்கண்டவாறு அரசு பட்டா வழங்கியுள்ளது:

| | பட்டாக்களின் எண்ணிக்கை | பரப்பளவு (ஏக்கரில்) |
|---|---|---|
| 1996-97 | 7,826 | 5,909.40 |
| 1997-98 | 10,608 | 7,926.89 |
| 1998-99 (பிப்ரவரி முடிய) | 13,812 | 8,679.11 |

**7. ஆட்சேபணைக்குரிய ஆக்கிரமணங்களை அகற்றுதல்:**

அரசு நிலம் குறைந்த அளவே உள்ளது. அது பல்வேறு பொதுக் காரியங்களுக்குத் தேவைப்படுகிறது. எனவே அரசு நிலங்களின் மீதுள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்படவேண்டும். இருப்பினும் குறிப்பிட்ட பொதுக் காரியங்களுக்காக ஒதுக்கப்படாத தரிசு நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகள் ஆட்சேபகரமற்றவை எனக் கருதப்படுகிறது. ஆனால் நீர்வழிப் புறம்போக்குகள், மந்தைவெளி மற்றும் கோயில் நிலங்கள் ஆகியவற்றில் உள்ள ஆக்கிரமிப்புகள் ஆட்சேபகரமானவை எனக் கருதப்பட்டு அவை அகற்றப்பட வேண்டும். 1905 ஆம் ஆண்டு



1999 ஏப்ரல் 6]

தமிழ்நாடு நில ஆக்கிரமிப்புச் சட்டப்படி, ஆக்கிரமிப்புகளை அகற்றும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. வருவாய்த் துறை, பொதுப்பணித் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறை அலுவலர்களும் நகராட்சி, மாநகராட்சி அலுவலர்களும் முறையற்ற ஆக்கிரமிப்புகளை அகற்ற அதிகாரம் பெற்றுள்ளனர்.

2. அரசு நிலங்களில் உள்ள முறையற்ற ஆக்கிரமணங்களை முறையாக அகற்றும் நடவடிக்கைகள் செயலாக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது. ஆட்சேபணை உள்ள அனைத்து ஆக்கிரமணங்களையும் அகற்ற சீரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**8. நிலச் சீர்திருத்தம்:**

1. பொருளாதாரத்தில் வேளாண்மையின் முக்கியத்துவத்தை கருத்தில்கொண்டு நிலங்கள் சிலரது வசம் குவிந்து அதன் மூலம் வேளாண்மை நில உடைமைகளில் ஏற்பட்ட ஏற்றத்தாழ்வுகளைப் போக்கவும், மற்றும் உபரியாக உள்ள அந்நிலங்களை நிலமற்ற ஏழைகளுக்கு வழங்கவும் 1961 ஆம் ஆண்டைய தமிழ்நாடு நிலச் சீர்திருத்தச் (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்) சட்டம் 58/61 இயற்றப்பட்டது.

2. மேற்கூறப்பட்ட சட்டம் 6-4-1960 முதல் செயல்படுத்தப்படுகிறது. 1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தச் சட்டப்படி 5 நபர்கள் கொண்ட ஒரு குடும்பத்திற்கு உச்சவரம்பு 30 தர ஏக்கர் என்றும் நிர்ணயிக்கப்பட்டது. ஒரு குடும்பத்தில் 5 நபர்களுக்கு மேல் இருந்தால், ஒவ்வொரு கூடுதல் நபருக்கும் 5 தர ஏக்கர் அனுமதிக்கப்பட்டது. இருப்பினும் ஒட்டுமொத்த உச்சவரம்பு 60 தர ஏக்கர் என நிர்ணயிக்கப்பட்டது. 6-4-1960 அன்று குடும்பத்தின் பெண் உறுப்பினருக்கு என்று சொந்த நிலம் இருந்திருப்பின், குடும்பத் தகுதியுடைமை நீங்கலாக சீதனமாக பத்து தர ஏக்கர் வரை வைத்திருக்க அவருக்கு உரிமை உண்டு.

3. கூடுதலாக மிகை நிலம் பெறும் நோக்கத்துடன் அரசு 1970ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தச் சட்டம் 58/61-க்கு ஒரு சட்டத் திருத்தம் கொண்டு வந்தது. (தமிழ்நாடு சட்டம் 17/70) இதன்படி 5 நபர்கள் கொண்ட ஒரு குடும்பம் வைத்திருக்கக்கூடிய நில உச்சவரம்பு 30 தர ஏக்கரில் இருந்து 15 தர ஏக்கராக குறைக்கப்பட்டது. முதன்மைச் சட்டத்தில் கரும்பு மற்றும் மேய்ச்சல் நிலங்களுக்கு விலக்களிக்கப்பட்டிருந்தது. சட்டத்தின் நோக்கங்கள் முற்றிலும் நிறைவேற,

[1999 ஏப்ரல் 6

தமிழ்நாடு சட்டம் 41/71-ன்படி மேற்கண்ட நிலங்களுக்கு அளிக்கப்பட்ட விலக்கும் 15-1-1972 முதல் இரத்து செய்யப்பட்டது.

4. முதன்மைச் சட்டத்தில் (58/61) ஒரு குடும்பத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட ஒட்டுமொத்த உச்சவரம்பான 60 தர ஏக்கர் அளவை, 40 தர ஏக்கராக இவ்வரசு முன்பு ஆட்சியில் இருந்தபோது குறைத்தது. இதற்காக தமிழ்நாடு சட்டம் 20/72 என்ற இரண்டாவது திருத்தச் சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டம் 1-3-1972 முதல் செயல்படுத்தப்படுகின்றது.

5. தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்) நான்காவது திருத்தச் சட்டத்தின்படி (தமிழ்நாடு சட்டம் 39/72) குடும்பத்தின் ஒட்டுமொத்த உச்சவரம்பு 40 தர ஏக்கரில் இருந்து 30 தர ஏக்கராக மேலும் குறைக்கப்பட்டது. 1-3-1972 முதல் இச்சட்டம் செயல்படுத்தப்படுகிறது. அதாவது இன்றைய நிலையில் 5 நபர்கள் கொண்ட எந்த ஒரு குடும்பமும் வைத்து இருக்கக்கூடிய நிலம் 15 தர ஏக்கர் எனவும், ஐந்து நபருக்கு மேல் இருந்தால் ஒவ்வொரு நபருக்கும் 5 தர ஏக்கர் எனவும் அதிகபட்சமாக ஒரு குடும்பம் 30 தர ஏக்கர் விவசாய நிலம் வைத்துக்கொள்ளலாம் எனவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. முதன்மைச் சட்டத்தில் எல்லா அறக்கட்டளை நிறுவனங்களும் கவரப்படவில்லை. 1-3-1972-ல் தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்) மூன்றாவது சட்டத் திருத்தத்தின்படி எல்லா அறக்கட்டளை நிறுவனங்களின் கைப்பற்றில் உள்ள நிலங்களுக்கு அறக்கட்டளை நிறுவனங்களின் தன்மையைப் பொறுத்து உச்சவரம்பு நிர்ணயிக்கப்பட்டது.

6. மேற்கண்ட சட்டங்களின் கீழ் உச்சவரம்பிற்கு மேற்பட்ட நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு, நிலமற்ற ஏழைகளுக்கு உயரளவாக 3 ஏக்கர் புன்செய் அல்லது 1½ ஏக்கர் நன்செய் நிலம் என்ற அளவில், 1965ஆம் ஆண்டைய தமிழ்நாடு நிலச் சீர்திருத்தம் (மிகை நில ஒதுக்கீடு) விதிகளின் கீழ், தகுதியுடையோருக்கு ஒப்படை செய்யப்படுகின்றது. நில உச்சவரம்பு குறைக்கப்பட்டதைத் தொடர்ந்து அதிகப்படியான மிகை நிலம் கிடைத்ததையும் அதிகப்படியான நபர்களுக்கு ஒப்படை செய்ததையும் கீழ்க்காணும் அட்டவணை காட்டுகிறது:



1999 ஏப்ரல் 6]

| ஆண்டு | உபரியாக அறிவிக்கப்பட்ட நிலம்(ஏக்கரில்) | ஒப்படை செய்யப்பட்ட நிலம் (ஏக்கரில்) | பயன் அடைந்த நபர்கள் |
|---|---|---|---|
| 1961-70 | 19,028 | 14,074 | 7,978 |
| 1971-75 | 60,515 | 43,090 | 28,920 |
| 1976-80 | 47,617 | 27,640 | 22,324 |
| 1981-90 | 50,834 | 59,647 | 53,494 |
| 1991-98 (31-12-98 வரை) | 20,636 | 38,161 | 24,473 |
| மொத்தம் | **1,98,630** | **1,82,612** | **1,37,189** |

நிதியுதவித் திட்டம்:

நிலச் சீர்திருத்தச் சட்டத்தின் கீழ் அறிவிக்கப்பட்ட மிகை நில ஒப்படை பெற்றவருக்கு நிதியுதவி அளிக்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மைய அரசு நிதியுதவி திட்டத்தின்படி நிதியுதவியாக ஹெக்டேர் ஒன்றுக்கு ரூபாய் 2,500 வீதம் வழங்கப்படுகின்றது. 1996-97 ஆம் ஆண்டு வரை இத்திட்டத்திற்கான செலவை மத்திய அரசும், மாநில அரசும் நடைமுறையில் சரிசமமாகப் பகிர்ந்து கொண்டன. இச்சட்டத்தின்கீழ் 30 விழுக்காடு சிறப்புக் கூறாக தாழ்த்தப்பட்ட இனத்தவர் மற்றும் பழங்குடியினருக்கு நிதியுதவி வழங்குவதற்குத் தனியாக வகை செய்யப்பட்டுள்ளது. 11-12-1997 நாளிட்ட வருவாய்த் துறையின் 1181 எண்ணுள்ள நிலை ஆணையின்படி, 1997-98 ஆம் நிதியாண்டிலிருந்து இத்திட்டச் செலவினை மாநில அரசு முழுமையாக ஏற்று செயல்படுத்தி வருகிறது.

குடிவாரச் சட்டங்கள்:

தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 25/1955) 1955 ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. எந்த ஒரு பயிரிடும் குத்தகைதாரரும், குத்தகைப் பணத்தைச் சரிவர செலுத்தாத நிலையிலோ, நிலத்திற்கோ அல்லது அதில் உள்ள பயிர்களுக்கோ சேதம் விளைவிக்கின்ற செயல்களைச் செய்தாலோ, நிலத்தைச் சாகுபடி செய்யாமல் இருந்தாலோ, விவசாயத்தை தவிர்த்தும்

மற்ற காரியங்களுக்கு நிலத்தைப் பயன்படுத்தினாலோ நில உரிமையாளருக்கு நிலத்தின் உரிமையை மறுக்கும் வகையில் செயல்புரிந்தாலோ தவிர, பயிரிடும் நிலத்தில் இருந்து வெளியேற்றப்பட இயலாது. ஆயுதப்படையினரைத் தவிர வேறு எந்த நில உடைமையாளரும், மேலே குறிப்பிட்ட காரணங்களின்றி மற்றக் காரணங்களுக்காகக் குத்தகைதாரர்களிடமிருந்து தங்களுடைய நிலத்தை மீளப் பெற முடியாது.

2. கடந்த சில ஆண்டுகளில் தமிழ்நாட்டில் உள்ள குறிப்பிட்ட சில மாவட்டங்களில் வறட்சி அல்லது வெள்ளம் வேளாண்மையை மிகவும் பாதிப்புக்குள்ளாக்கியது. இதனால் விவசாயிகள் பெரும்பாலும் தங்கள் மகசூலை இழக்க நேரிட்டு குத்தகைத் தொகையினைச் செலுத்துவதற்கு இயலாமல் உள்ளனர். எனவே, குத்தகைத் தொகை செலுத்துவதற்கு தவறிய காரணத்திற்காக நிலத்திலிருந்து வெளியேற்றப்படும் துயர நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். நிலக்கிழார்களுக்கு செலுத்தத்தக்கதாக உள்ள குத்தகைத் தொகையினைப் பொறுத்தமட்டில் அதனைச் செலுத்தாமல் நிலுவையில் வைத்திருக்கின்ற பயிரிடு குத்தகைதாரர்களைப் பயிரிடும் நிலத்திலிருந்து வெளியேற்றுவதிலிருந்து பாதுகாப்பு அளிக்க, 1997 ஆம் ஆண்டைய தமிழ்நாடு பயிரிடு குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதிலிருந்து பாதுகாப்பு அளித்தல் சட்டம்) (தமிழ்நாடு சட்டம் 20/1997) என்ற சட்டம் இவ்வரசால் கொண்டு வரப்பட்டது. வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலும், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலும் உள்ள பயிரிடும் குத்தகைதாரர்கள் 1996 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 30 ஆம் நாள் அன்றோ அல்லது அதற்கு முன்னரோ நிலக்கிழாருக்கு கொடுக்கப்பட வேண்டியதாக இருந்து, இந்தச் சட்டம், வெளியிடப்பட்ட நாளான அதாவது 25-4-1997-ல் செலுத்தப்படாமல் சேர்ந்துள்ள குத்தகைத் தொகை நிலுவை முழுவதையும் அல்லது 1997ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 30ஆம் நாளில் முடிவடைகின்ற பசலி ஆண்டிற்கு செலுத்தத்தக்க குத்தகை தொகைகளை அல்லது அவை இரண்டையும் வசூல் செய்வதனை 30-6-1999 வரையிலான கால அளவிற்குத் தள்ளி வைப்பதன் மூலம், ஓரளவிற்கு நிவாரணம் வழங்க இச்சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு தள்ளிவைக்கப்பட்ட கால அளவின்போது மேற்சொன்ன குத்தகைத் தொகையினைச் செலுத்தாததற்காக அந்தக் குத்தகையாளர்களை நிலத்திலிருந்து வெளியேற்றாமல் இருக்கவும் இச்சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. இச்சட்டம் வெள்ளம் மற்றும் வறட்சியால் பாதிக்கப்படாத வேலூர்,



தேனி, நீலகிரி, ஈரோடு, நாமக்கல் மற்றும் தருமபுரி தவிர்த்து தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் பொருந்தும்.

3. 1956 ஆம் ஆண்டைய தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நியாயக் குத்தகை செலுத்துதல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 24/56) குத்தகைதாரர்களால் ஆண்டொன்றுக்கு மொத்த விளைச்சலில் 25 விழுக்காட்டினைத் தனிப்பட்ட நிலச் சொந்தக்காரர்களுக்கு அல்லது பொதுப் பொறுப்புக் கழகங்களுக்கு குத்தகைத் தொகையாக அளிக்க வழிவகை செய்கின்றது. அரசுக்குச் செலுத்த வேண்டிய நிலவரி மற்றும் நிலத்தின் மீதான இதர இனங்களை நிலத்தின் உரிமையாளர்கள் செலுத்துவர். ஆனால் விவசாயத்திற்கான செலவு முழுவதையும் பயிரிடு குத்தகைதாரர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

4. 1961 ஆம் ஆண்டைய தமிழ்நாடு பொதுப் பொறுப்புக் கழகங்கள் (வேளாண்மை நிலங்களின் நிருவாகம் மற்றும் ஒழுங்குபடுத்துதல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 57/61) பொதுப் பொறுப்புக் கழகங்கள் வைத்துள்ள விவசாய நிலங்களின் நிருவாகத்தை முறைப்படுத்துவதற்காக இயற்றப்பட்டுள்ளது. எந்த ஒரு பொதுப் பொறுப்புக் கழகமும், தன்னுடைய பண்ணைச் சொந்தச் சாகுபடிக்கு 20 தர ஏக்கருக்கு மேல் நிலத்தினை வைத்துக்கொள்ளக்கூடாது. இதற்கு மேலுள்ள நிலத்தினை உண்மையான பயிரிடும் குத்தகைதாரர்களுக்குக் குத்தகைக்கு விட வேண்டும்.

5. 1969 ஆம் ஆண்டைய தமிழ்நாடு வேளாண்மைத் தொழிலாளர்கள் நியாய ஊதியங்கள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 19/1969) நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டத்தில் விவசாயத் தொழிலாளர்களுக்கு பல்வேறுபட்ட விவசாயப் பணிகளுக்கு வழங்கப்படும் ஊதியத்தை முறைப்படுத்துவதற்காக இயற்றப்பட்டுள்ளது.

6. 1969ஆம் ஆண்டைய தமிழ்நாடு வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைகள் ஆவணச் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 10/1969) தமிழ்நாட்டில் நிலச் சொந்தக்காரர்கள் அல்லது பொதுப் பொறுப்புக் கழகங்களிடம் உள்ள விவசாய நிலங்களைப் பயிரிடும் குத்தகைதாரர்கள் தங்களது பெயர்களைப் பதிவு செய்ய இச்சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இச்சட்டத்தின்படி, வட்டாட்சியர் பதிவு அலுவலராவார். அவர், பயிரிடும் குத்தகைதாரர்களின் நிலங்களைப் பாதுகாப்பதற்காக குத்தகை உரிமைப் பதிவேடுகளைப் பராமரிக்க வேண்டும். பதிவு அலுவலர் தன்னிச்சை நடவடிக்கை எடுத்து குத்தகைதாரர்களைப் பதிவு செய்ய இச்சட்டப்பிரிவு 4-ன்கீழ் அதிகாரம்

அளிக்கப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் பிரிவு 5(ஏ) இன்படி வட்டாட்சியர்களுக்கு உதவி புரிவதற்காக வட்டார அளவில் அமைக்கப்படும் அலுவல் சார்பற்ற ஆலோசனைக் குழுவில் நிலமற்ற ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்த விவசாயத் தொழிலாளர் ஒருவரும் பயிரிடும் குத்தகைதாரர் ஒருவரும் மற்றும் சமூக நல ஊழியர்கள் 3 பேரும் உறுப்பினர்களாக இருப்பர்.

7. 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உடைமை உரிமை வழங்குதல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 40/71) குடியிருப்புகளில் அனுபோகதாரர்களுக்கு உடைமை உரிமை அளிக்கின்றது. அதன்படி 19-6-1971 அன்று குத்தகைதாரர் அல்லது உரிமம் பெற்றவர் என்ற முறையில், குடியிருப்பு மனையை அனுபோகத்தில் வைத்திருந்தவர், உரிமையாளராக இருப்பர். இக்குடியிருப்பு, வில்லங்கம் ஏதுமின்றி அவரிடமே நிலைபெற்றிருக்கும். தமிழ்நாடு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உடைமை உரிமை வழங்குதல்) சட்டத்தின்கீழ் குடியிருப்புப் பட்டா பெற்ற வறுமைக் கோட்டிற்குகீழ் உள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி அல்லாதவர்களுக்கும் ஊரக வளர்ச்சித் துறையில் செயல்படுத்தப்படும் இந்திரா நினைவு திட்டத்தின்கீழ் முன்னுரிமை கொடுத்து வீடு கட்டிக்கொள்ள அனுமதி அளிக்க ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.

8. தமிழ்நாடு கிராமப்புற கைவினைஞர்கள் (குடியிருப்பு அனுபோக உரிமை வழங்குதல்) சட்டம் 1976 (குடியரசுத் தலைவரின் சட்டம் 38/76) இன்படி, குத்தகைதாரர் அல்லது உரிமம் பெற்றவர் என்ற முறையில் 1-7-1975 அன்று தமிழ்நாட்டில் குடியிருப்புகளை அனுபோகத்தில் வைத்துள்ள கிராமக் கைவினைஞர்களுக்கு உடைமை உரிமை வழங்க இச்சட்டம் வகை செய்கின்றது.

9. இந்த அரசால் இயற்றப்பட்ட தமிழ்நாடு குடியிருப்புச் சட்டங்கள் சார்ந்த திருத்தச் சட்டம் 1990 (தமிழ்நாடு சட்டம் 39/90) மூலம் குடியிருப்பு அனுபோகத்தில் வைத்துள்ள குடியிருப்புதாரர்களுக்கு 1-4-1990 வரை காலக்கெடுக்களை நீட்டி 1-4-1990 அன்று குடியிருப்பு அனுபோகத்தில் வைத்துள்ள குடியிருப்புதாரர்களுக்கு குடியிருப்பு மீதான உரிமையைப் பெற்று பயன்பெற வகை செய்யப்பட்டுள்ளது.

**நிலத் தீர்ப்பாயங்கள்:**

மாவட்ட வருவாய் அலுவலரின் தலைமையில் நிலத் தீர்ப்பாயம் அமைக்கப் பெற்றது. தற்போது மாநிலம் முழுமைக்குமாக சென்னையில் ஒரு நிலத் தீர்ப்பாயம் செயல்பட்டு வருகிறது.



**தமிழ்நாடு நிலச் சீர்திருத்த தனி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம்:**

தமிழ்நாடு நிலச் சீர்திருத்த தனி மேல்முறையீட்டு தீர்ப்பாயம் 1-11-1990 முதல் ஏற்படுத்தப்பட்டது. சென்னை உயர் நீதிமன்றத்தில் உள்ள நிலச் சீர்திருத்தம் சம்பந்தமான நீதிப் பேராணை அதிகார வரம்பு நீக்கப்பட்டு நிலுவையில் உள்ள நிலச் சீர்திருத்த நீதிப் பேராணை மற்றும் உரிமையியல் சீராய்வு மனுக்கள் இத்தனி மேல் முறையீட்டுத் தீர்ப்பாயத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

**தீர்ப்பாயத்தில் முடிக்கப்பட்ட வழக்குகளின் விவரங்கள் பின்வருமாறு:—**

| | | வழக்குகள் | பல்வகை மனுக்கள் |
|---|---|---|---|
| 1. | உயர் நீதிமன்றத்தில் இருந்து மாற்றப்பட்ட மொத்த வழக்குகள் | 895 | 696 |
| 2 | தமிழ்நாடு நிலச் சீர்திருத்த தனி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் | 705 | 2,042 |
| | மொத்தம் | 1,600 | 2,738 |
| | (அ) மாற்றம் செய்யப்பட்ட வழக்குகளில் முடிவு பெற்றவை | 891 | 694 |
| | (ஆ) தமிழ்நாடு நிலச் சீர்திருத்த தனி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் முடிவு பெற்றவை (31-12-1998 முடிய) | 652 | 1,957 |
| | மொத்தம் | 1,543 | 2,651 |
| | 31-12-1998 அன்று நிலுவை | 57 | 87 |

உச்சநீதிமன்றம் சமீபத்தில் மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் முடிவுகள் உயர் நீதிமன்ற பகுதி நடுவர் ஆயத்தின் நீதிப் பேராணை வரம்புக்குட்பட்டவை என ஆணையிட்டுள்ளது.

வருவாய் நீதிமன்றங்கள்:

கடலூர், மயிலாடுதுறை, திருவாரூர், தஞ்சாவூர், திருச்சி மற்றும் மதுரை ஆகிய இடங்களில் தனித் துணை ஆட்சியர்களின்கீழ் 6 வருவாய் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. வருவாய் நீதிமன்றத் தனித் துணை ஆட்சியர்கள், 1969 ஆம் ஆண்டைய தமிழ்நாடு வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமை ஆவணச் சட்டத்தின் கீழான வட்டாட்சியர்களின் ஆணைக்கு எதிராகத் தொடரப்படும் வழக்கு மனுக்களை விசாரணை செய்து முடிவெடுக்கும் மேல்முறையீட்டு அதிகாரிகள் ஆவார்கள். மேலும், தமிழ்நாடு பயிரிடு குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டம் 1955, தமிழ்நாடு பயிரிடு குத்தகைதாரர்கள் (நியாயவாரம் வழங்குதல்) சட்டம் 1956, தமிழ்நாடு பொதுப் பொறுப்புக் கழகங்கள் (வேளாண்மை நிலங்களின் நிருவாகம் மற்றும் ஒழுங்குபடுத்துதல்) சட்டம் 1961, தமிழ்நாடு விவசாய நிலங்கள் (குத்தகை உரிமைப் பதிவுச் சட்டம்) 1969, தமிழ்நாடு குடியிருப்புதாரர்கள் வெளியேற்றுகையிலிருந்து பாதுகாத்தல் சட்டம் 1961, தமிழ்நாடு குடியிருப்புதாரர்கள் (உடைமை உரிமை வழங்குதல்) சட்டம் 1971 மற்றும் தமிழ்நாடு கைவினைஞர்கள் (குடியிருப்பு உடைமை உரிமை வழங்குதல்) சட்டம் 1976 ஆகிய குடிவாரச் சட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றனர்.

**9. இடைத் தரகர்களை ஒழித்தலும், ரயத்துவாரியாக மாற்றலும்:**

வேளாண்மை சீர்திருத்தத்தின் முக்கியத்துவத்தையும் நிலவரி வருவாய்த் திட்டத்தில் ஒரே சீரான நிலையைக் கொண்டு வருவதன் அவசியத்தையும் கருத்தில்கொண்டு, அரசுக்கும் விவசாயிகளுக்கும் இடையே இருந்த பல்வேறு முறையிலான இடைத் தரகர்களை ஒழிக்க பல்வேறு சட்டங்கள் இயற்றப்பட்டன.

கீழ்க்காணும் சட்டங்கள் மிகவும் முக்கியமானவைகளாகும்:—

(அ) தமிழ்நாடு உடைமைகள் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம், 1948 (தமிழ்நாடு சட்டம் 26/1948)

(ஆ) தமிழ்நாடு குத்தகை நிலங்கள் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம், 1963 (தமிழ்நாடு சட்டம் 27/1963)

(இ) தமிழ்நாடு இனாம் உடைமைகள் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம் 1963 (தமிழ்நாடு சட்டம் 26/1963)



மேற்காணும் சட்டங்களின்கீழ் பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டுள்ளன.

கீழ்க்கண்ட சட்டங்களின்கீழ் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன:

(ஈ) தமிழ்நாடு சிறு இனாம் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம், 1963 (தமிழ்நாடு சட்டம் 30/1963)

(உ) தமிழ்நாடு கூடலூர் ஜென்மம் உடைமைகள் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம், 1969 (தமிழ்நாடு சட்டம் 24/1969)

(ஊ) தமிழ்நாடு வரியற்ற நிலங்களின்மீது ரயத்துவாரித் தீர்வை விதிக்கும் சட்டம், 1973 (தமிழ்நாடு சட்டம் 31/1973)

3. ஜென்மம் நில உடைமைதாரர்கள் சிலர் அவர்களின் கைப்பற்றில் உள்ள நிலங்களுக்கு 1969 ஆம் ஆண்டைய தமிழ்நாடு கூடலூர் ஜென்மம் உடைமைகள் (ஒழிப்பும் மற்றும் ரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம் பொருந்தாதுஎன சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதிப் பேராணை மனுக்கள் தாக்கல் செய்தனர். இந்த நீதிப் பேராணைகள் தள்ளுபடி செய்யப்பட்டன. அவர்களில் சிலர் மேற்படி தள்ளுபடி ஆணையை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு மனுக்கள் அளித்துள்ளனர். உச்ச நீதிமன்றம், மேல்முறையீடு மனுதாரர்களின் நிலங்களுக்குச் சாதகமாக தடையாணை வழங்கி உள்ளது. அரசின் நியாயமான நிலையை நிரூபிப்பதற்காக உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள சிவில் வழக்குகளை விரைவில் முடிக்கக்கோரி, பொது மனு ஒன்றும் உச்ச நீதிமன்றத்தில் அரசால் தாக்கல் செய்யப்பட்டது. அரசியல் நிர்ணயச் சட்டத்தின்படி கூடலூர் ஜென்மம் ஒழிப்புச் சட்டம் செல்லத்தக்கதா என்ற வினா எழுப்பப்பட்டுள்ளதால் இதுகுறித்து விசாரிக்க உச்ச நீதிமன்ற அதிக நீதிபதிகள் உள்ளடக்கிய பெஞ்சுக்கு அனுப்ப உச்ச நீதிமன்றம் ஆணையிட்டுள்ளது. அரசால் வேகமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. உடைமைகள் ஒழிப்புச் சட்டங்களில்,

1. நட்ட ஈட்டுத்தொகை நில உடைமைதாரர்களுக்கு வழங்கவும்,

2. தர்ம சத்திரங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு தஸ்திக் கொடை வழங்கவும் வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன.

வருவாய்த் துறையால் வருடந்தோறும் நிறுவனங்களுக்குத் தஸ்திக் கொடையும் மேலும் நில உடைமைதாரர்களுக்கு ஒரே தவணையில் நட்ட ஈட்டுத்தொகையும் வழங்கப்படுகிறது.

**10. நகர்ப்புற நில உச்சவரம்பு:**

நகர்ப்புற நிலங்களின் பயன்பாட்டை முறைப்படுத்த தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1978 இயற்றப்பட்டது. நகர்ப்புற பகுதிகளில் உள்ள காலி நிலங்களுக்கு உச்சவரம்பு நிர்ணயித்தல் மற்றும் ஒரு சிலரிடம் மட்டும் நகர்ப்புற நிலம் குவிந்து கிடந்து அவர்கள் அதை இலாப நோக்கத்துடன் தக்க வைத்து விற்பது மற்றும் வாங்குவதில் ஆதிக்கம் செலுத்துவதை தடுத்து நிறுத்தி சாமானியர்களுக்கும் நகர்ப்புற நிலம் கிடைக்கும் வகையில் பகிர்ந்தளிப்பது ஆகிய இரு முக்கிய குறிக்கோள்களைக் கொண்டது இச்சட்டம்.

2. மேற்படி சட்டத்தின் மூன்று சிறப்புக் கூறுகள் பின்வருமாறு:—

(1) தனிப்பட்ட நபர், ஒரு குடும்பம், ஒரு நிறுவனம், ஒரு குழுமம் அல்லது ஒரு கழகம் அல்லது தனிப்பட்டவர்கள் சேர்ந்த ஒரு கூட்டமைப்பு வைத்திருக்கும் வெற்று நிலத்தின்மீது உச்சவரம்பு விதித்தல்.

(2) எதிர்காலத்தில் கட்டப்படும் குடியிருப்பு கட்டடப் பரப்பிற்கு உச்சவரம்பு விதித்தல்.

(3) நகர்ப்புற நிலச் சொத்துக்களின் பரிமாற்றத்தை முறைப்படுத்துதல்.

3. சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும் திருநெல்வேலி நகரக் கூட்டுப்பகுதிகளில் இச்சட்டம் தற்போது நடைமுறையில் உள்ளது.

4. சென்னை புறநகர்ப்பகுதியில் உள்ள நிலங்கள் ஒரு சிலரிடம் குவிவதைத் தடுக்கவும் 1966 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிப் பகுதிகளுடன் ஒருங்கே அமைக்கும் நோக்கத்தோடு, சென்னை நகர்ப்புறக் கூட்டுப்பகுதிகளில் உள்ள 160 கிராமங்களுக்கு 9-8-1995 முதல் இச்சட்டம் நீட்டிக்கப்பட்டது.

5. 1978 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டத்தின்கீழ் ஒவ்வொரு நகர்ப்புறக் கூட்டுப்பகுதியிலும் தனி நபர், ஒரு குடும்பம் மற்றும் தொழில்



நிறுவனம் வைத்துக்கொள்ளக்கூடிய நில உச்சவரம்பின் விவரம் பின்வருமாறு:—

| நகரக் கூட்டுப்பகுதி | வகைப்பாடு | தனி நபர் | ஒரு குடும்பம் | தொழிற் நிறுவனம் |
|---|---|---|---|---|
| | | | (சதுர மீட்டரில்) | |
| சென்னை | I | 500 | 2000 | 2000 |
| கோயமுத்தூர்<br>மதுரை<br>திருச்சிராப்பள்ளி | II | 1500 | 3000 | 3000 |
| சேலம்<br>திருநெல்வேலி | III | 2000 | 4000 | 4000 |

6. மத்திய மற்றும் மாநில அரசுகள் வைத்திருக்கும் நிலங்களுக்கும், அரசுத் துறை மற்றும் உள்ளாட்சி நிறுவனங்கள், அட்டவணைப்படுத்தப்பட்ட வங்கிகள், கூட்டுறவு வீட்டுவசதிக் கழகங்கள் மற்றும் அறக்கட்டளை நிறுவனங்கள் வைத்திருக்கும் நிலங்களுக்கும் இச்சட்டத்தின் விதிமுறைகள் பொருந்தாது.

7. ஒருவரிடம் உச்சவரம்பிற்கு அதிகமாக வெற்று நிலம் இருந்தால், அதற்கு விலக்குக் கோரி அவர் விண்ணப்பிக்கலாம். அத்தகைய மிகை வெற்று நிலங்களைப் பயன்படுத்தும் நோக்கங்கள் மற்றும் ஒவ்வொரு நேர்விற்குத் தேவையான விவரங்களையும் சூழ்நிலைக்குத் தொடர்பான பிற கூறுகள் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு, மாநில அரசு நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டம், பிரிவு 21(1)(ஏ)-இன்கீழ் விலக்கு அளிக்கலாம். உச்சவரம்பு வரையறைக்கு அதிகமாக காலியிடம் வைத்திருக்கும் ஒரு நபர் மீது இச்சட்டத்தின் விதிமுறைகள் அவருக்கு மிகக் கடுமையான இடர்பாட்டை விளைவிக்குமானால், மாநில அரசு, அவருக்கு நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டம், பிரிவு 21(1)(பி)-இன்கீழ் காரணங்களை விளக்கி, விலக்களிக்கலாம்.

8. 1978 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டத்தின்கீழ் கையகப்படுத்தப்பட்ட நிலங்களை சட்டப்பிரிவு 24-இன்கீழ் ஏதேனும் ஒரு தொழிற்சாலை, தொழிலாளர்களுக்கு மாநில அரசால் ஏற்பளிக்கக்கூடிய குடியிருப்பு வகை, இடவசதி செய்வதற்காகவோ அல்லது தொழில்

நோக்கத்திற்காகவோ, ஒதுக்கீடு செய்ய, மாநில அரசுக்கு அதிகாரம் உள்ளது. மாநில அரசினால், கையகப்படுத்தப்பட்ட காலி நிலங்கள் 1978 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) விதி 23-இன்கீழ் கீழ்க்கண்ட முன்னுரிமை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்படுகிறது:-

(1) மாநில அரசுத் துறைகள்
(2) உள்ளாட்சி மன்றங்கள், மாநகராட்சி மற்றும் மாநில அரசின் கட்டுப்பாட்டில் உள்ள பொது நிறுவனங்கள்
(3) மத்திய அரசுத் துறைகள்
(4) மத்திய அரசு நிறுவனங்கள் மற்றும் மத்திய அரசு பொது நிறுவனங்கள்
(5) வீட்டுவசதிக் கழகங்கள், கூட்டமைப்புகள்
(6) தொழில் நிறுவனங்கள்
(7) தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்கு குடியிருப்பு கட்டுவதற்கு
(8) நிறுவனங்கள்
(9) தனி நபர்கள்

9. மேற்கூறிய சட்டத்தின்கீழ் 2,014 ஹெக்டேர், 88 ஏர், 09 சதுர மீட்டர், மிகை வெற்று நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. இதில் 327 ஹெக்டேர், 67 ஏர், 27 சதுர மீட்டர் நிலம் அரசுத் துறை, அரசு கழகங்கள், வீட்டுவசதி வாரியங்கள், நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு 31-12-1998 வரை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 104 ஹெக்டேர் நிலம் நீதிமன்ற நடவடிக்கையிலும் 216 ஹெக்டேர் நிலம் ஆக்கிரமிப்பிலும் உள்ளது. (31-12-1998 நிலவரப்படி). 1,367 ஹெக்டேர் நிலம் ஒதுக்கீடு செய்வதற்காக உள்ளது.

10. நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டத்தைப் பற்றி அறியாது 3-8-1976 முதல் 31-12-1994 வரை ஒன்றரை கிரவுண்டு நிலம் வரை குடியிருப்புக்காக நகர்ப்புற மிகை வெற்று நிலத்தை வாங்கியிருப்பின் அதனை அரசு நிர்ணயித்த மண்டல மதிப்பினை செலுத்தி வரன்முறைப்படுத்த அரசு ஆணையிட்டுள்ளது.

11. நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்குகளை விரைவாக முடிக்கவும், இவ்வழக்கில் தொடர்புள்ள மக்களுக்கு விரைவில் தீர்ப்பு கிடைக்கவும், தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்)



சட்டம், 1978-இன்கீழ் வரும் வழக்குகளை தமிழ்நாடு நிலச் சீர்திருத்த சிறப்பு மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்திடம் ஒப்படைக்கலாம் என்று அரசு முடிவு செய்தது. அதன்படி சட்டம் 40/96 இயற்றப்பட்டு உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள அனைத்து வழக்குகளையும் தீர்ப்பாயத்திற்கு மாற்ற வழிவகை செய்யப்பட்டது. இத்தீர்ப்பாயத்தின் நியமன நாளாக 15-9-1998 ஆம் நாளை நிர்ணயித்து ஆணையிடப்பட்டது. மேற்படி வழக்குகள் தற்போது சென்னை உயர்நீதிமன்றத்திலிருந்து தீர்ப்பாயத்திற்கு மாற்றம் செய்யப்படுகின்றன.

***11. நகர்ப்புற நிலவரி:***

அரசுக்கு வருவாயை அதிகப்படுத்தும் நோக்கத்துடனும், மக்களிடம் அதிக பரப்பளவுள்ள நிலங்கள் வைத்திருப்பதைத் தவிர்க்கும் பொருட்டும், தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம் முதன் முதலில் 1-7-1963 முதல் சென்னை நகரில் அறிமுகம் செய்யப்பட்டது. மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி ஆகிய நகரங்களுக்கு 1-7-1971 முதலும் சென்னை புறநகர்ப் பகுதிகளுக்கு 1-7-1975 முதலும் இச்சட்டம் நீட்டிக்கப்பட்டது. இப்பகுதிகள் அனைத்திற்கும் 1-7-1971 ஆம் தேதி சந்தை மதிப்பு அடிப்படையில் நகர்ப்புற நிலவரி நிர்ணயம் செய்யப்பட்டது.

2. பின்னர் இச்சட்டம் திருநெல்வேலி மாநகராட்சிப் பகுதிக்கு 1981 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 1 ஆம் தேதி முதலும் கீழ்க்கண்ட நகராட்சிகளுக்கும், மற்றும் இரண்டு நகரியங்களுக்கும் 1-7-1991 முதலும் விரிவுபடுத்தப்பட்டது.

**நகராட்சிகள்**

| | |
|---|---|
| மயிலாடுதுறை | கும்பகோணம் |
| காஞ்சிபுரம் | உடுமலைப்பேட்டை |
| கடலூர் | பழனி |
| விழுப்புரம் | காரைக்குடி |
| புதுக்கோட்டை | இராஜபாளையம் |
| ஈரோடு | நாமக்கல் |
| பொள்ளாச்சி | உதகமண்டலம் |
| தஞ்சாவூர் | திண்டுக்கல் |
| திருப்பூர் | கரூர் |
| தூத்துக்குடி | நாகர்கோவில் |
| வேலூர் | |

**நகரியங்கள்**

கொடைக்கானல், மேட்டூர்

[1999 ஏப்ரல் 6

3. நகர்ப்புற நிலவரிச் சட்டம் அமலில் உள்ள எல்லாப் பகுதிகளுக்கும் 1–7–1981 நாளைய சந்தை மதிப்பை அடிப்படையாகக் கொண்டு 1–7–1991 முதல் வரிவிதிக்கப்பட்டது.

வரிவிதிப்பு விகிதங்கள் பின்வருமாறு:—

| சென்னை புறநகர்ப்பகுதி தவிர்த்த ஏனைய நகர்ப்புற நிலங்கள் அனைத்தும் | | சென்னை புறநகர்ப் பகுதியில் உள்ள அனைத்து நிலங்கள் | |
|---|---|---|---|
| 1. முதல் இரண்டு மனைகள் | வரியில்லை | 1. முதல் மூன்று மனைகள் | வரி யில்லை. |
| 2. இரண்டு மனைக்கு மேல் ஐந்து மனைக்குள் | சந்தை மதிப்பில் 0.7 சதவீதம் | 2. மூன்று மனைக்கு மேல் ஏழு மனைக்குள் | சந்தை மதிப்பில் 0.7 சதவீதம் |
| 3. ஐந்து மனைக்கு மேல் பத்து மனைக்குள் | சந்தை மதிப்பில் 1 சதவீதம் | 3. ஏழு மனைக்கு மேல் பத்து மனைக்குள் | சந்தை மதிப்பில் 1 சதவீதம் |
| 4. பத்து மனைக்கு மேல் இருபது மனைக்குள் | சந்தை மதிப்பில் 1.5 சதவீதம் | 4. பத்து மனைக்கு மேல் இருபது மனைக்குள் | சந்தை மதிப்பில் 1.5 சதவீதம் |
| 5. இருபது மனைக்கு மேல் | சந்தை மதிப்பில் 2 சதவீதம் | 5. இருபது மனைக்கு மேல் | சந்தை மதிப்பில் 2 சதவீதம் |

4. மாவட்ட வருவாய் அலுவலர்களின் அறிக்கையின்படி நிர்ணயிக்கப்பட்ட குறியீடான ரூபாய் பன்னிரண்டு கோடியில் 28–2–1999 வரை ரூபாய் 12.54 கோடி நகர்ப்புற நிலவரி வசூலிக்கப்பட்டுள்ளது.

**5. கணினிமயமாக்கல்:**

சென்னை மாவட்ட ஆட்சியர் மற்றும் இதர மாவட்ட வருவாய் அலுவலர்களை அம்மாவட்டத்தில் உள்ள நகர்ப்புற நிலவரி தீர்வைதாரர்களின் பெயர் மற்றும் இதர விவரங்களை கணினியில் பதிவு செய்யும் பணியினை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டிருந்தது. அனைத்து மாவட்டங்களிலும் நகர்ப்புற நிலவரி தொகை விவரம் கணினியில் பதிவு செய்யப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது.



1999 ஏப்ரல் 6]

6. இந்தச் சட்டத்தின் பிரிவு 29 இல் கீழ்க்கண்ட நிலங்கள் வரிவிதிப்பினின்று விலக்கு பெறுகின்றன:

1. மத்திய, மாநில அரசு அலுவலகங்கள்
2. பொது வழிபாட்டுக்கான நிலங்கள்
3. மாநில அரசினால் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனை நிலங்கள்
4. மயான பூமி நிலங்கள்
5. சாலைகளாக பயன்படும் நிலங்கள்
6. தமிழக அரசினால் அங்கீகரிக்கப்பட்ட பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழக நிலங்கள்
7. பொது பூங்காக்கள், நூலகங்கள் மற்றும் அருங்காட்சியகங்கள் உள்ள நிலங்கள்
8. ஆதரவற்றோர் மற்றும் அனாதை விடுதிகள் உள்ள நிலங்கள்

7. பயிர் செய்யப்படும் நிலங்களுக்கு இந்தச் சட்டத்தின்கீழ் விலக்களிக்கப்பட்டுள்ளது. அறக்கட்டளைகள், மத சம்பந்தமான நிறுவனங்கள் மற்றும் பிற நிறுவனங்கள் தங்கள் நிலங்களுக்கு நகர்ப்புற நிலவரி செலுத்துவதில் அதிகமான சிரமம் இருப்பின் அரசுக்கு மனு செய்து கொண்டால் பரிசீலனை செய்யப்பட்டு, உரிய இனங்களில் அரசு, பிரிவு 27(1)-இன்கீழ் தகுதி அடிப்படையில் வரிவிலக்களித்து ஆணையிடும்.

8. மேலும் கீழ்க்கண்ட அமைப்புகளுக்கு சலுகைகளை அரசு அளித்துள்ளது:—

1. சிறுதொழில் சான்று பெற்ற தொழிற்சாலைகளுக்கு வரியில் 25 சதவீதம் சலுகை. மற்ற தொழிற்சாலைகளுக்கு 10 சதவீதம் சலுகை.
2. சங்கீத நாடக சபைகளுக்கு 50 சதவீதம் சலுகை.
3. திரையரங்குகளுக்கு 10 சதவீதம் சலுகை.

4. குடிசைப்பகுதியாக அறிவிக்கப்பட்ட நிலங்கட்கு முழுச்சலுகை

5. நகர்ப்புற நிலத்தில் கட்டடம் இருந்து அது நிலத்தின் சொந்தக்காரரால் மட்டும் குடியிருக்க பயன்படுத்தப்பட்டால் விதிக்கும் நகர்ப்புற நிலவரியில் 50 சதவீதம் கழிவு தரப்படுகிறது.

9. நகர்ப்புற நிலவரி தீர்ப்பாயங்களில் (சார்பு நீதிமன்றங்கள்) செய்து கொள்ளப்பட்ட மேல்முறையீட்டு மனுக்களை விரைவாக தீர்வு செய்யவும், அதனால் இவ்வழக்குகளில் தொடர்புள்ள மக்களுக்கு விரைவாக தீர்ப்பு கிடைக்கவும் நகர்ப்புற நிலவரிச் சட்டம் அமலில் உள்ள அந்தந்த மாவட்ட வருவாய் அதிகாரிகளைக் கொண்ட தீர்ப்பாயங்களை ஏற்படுத்திட அரசு 28-11-1997 இல் உத்தரவிட்டுள்ளது. சென்னை நகருக்கு சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் அலுவலகத்திலிருந்து இணை ஆணையர் நகர்ப்புற நிலவரி தீர்ப்பாயமாக செயல்பட நியமிக்கப்பட்டுள்ளார். சார்பு நீதிமன்றங்களில் நிலுவையில் இருக்கும் அனைத்து வழக்குகளும் சம்பந்தப்பட்ட மாவட்ட வருவாய் அலுவலர்களுக்கு மாற்றம் செய்யப்பட்டு வருகிறது.

**12.** வேளாண்மை வருமான வரி:

1955 ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாட்டில் அமல்படுத்தப்பட்டு வரும் வேளாண்மை வருமான வரிவிதிப்புச் சட்டத்தின்கீழ் மலைத் தோட்டப் பயிர்களில் இருந்து பெறப்படும் வருமானத்திற்கு மட்டுமே வரிவிதிக்கப்பட்டது. மாநிலம் முழுவதுமுள்ள மலைத்தோட்டம் அல்லாத பயிர்களும், 1958-ஆம் ஆண்டு இச்சட்டத்தின் வரம்பிற்குள் கொணரப்பட்டன. எனினும் சிறு விவசாயிகட்கு நிவாரணம் அளிக்கும் முகத்தான் மலைத்தோட்டம் அல்லாத பயிர்களின் மீதான வேளாண்மை வருமான வரி விதிப்பு திருத்தப்பட்டச் சட்டம், 40/91இன்படி 1-4-1992 முதல் முழுமையாக அகற்றப்பட்டது. இரப்பர், காபி, தேயிலை, ஏலக்காய், பாக்கு, கிராம்பு மற்றும் மிளகு ஆகிய மலைத் தோட்டப் பயிர்களின் மீது மட்டுமே தற்போது வேளாண்மை வருமான வரிவிதிப்பு செய்யப்படுகிறது.

2. எட்டு சாதாரண ஏக்கருக்கும் அதிகமான நிலங்களை உடைய வரிதாரர்கள் மட்டுமே 1-4-1992 முதல் தமிழ்நாடு வேளாண்மை வருமான வரி விதிப்புச் சட்டத்தின்கீழ் வரிவிதிப்புக்கு உட்படுத்தப்படுகிறார்கள். இணக்க முறை வரிவிதிப்பின்கீழ் சாதாரண



8 ஏக்கர் வரை வரிவிலக்களிக்கப்பட்டும், அதற்கு மேற்பட்டு 50 ஏக்கர் வரை இணக்க முறை வரிவிதிப்பு அனுமதிக்கப்பட்டும் வருகிறது. நிறுவனங்களுக்கும் மற்றும் தனி நபர்களுக்கும் வெவ்வேறு வரி விகிதம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

(3) சுயவரி விதிப்புக்கும் மற்றும் முன்னதாக வரி செலுத்தும் முறைக்கும் 1992-93 வரிவிதிப்பு ஆண்டு முதல் வழிவகை செய்யப்பட்டுள்ளது. வரி விலக்கத்திற்கான வருமான உச்சவரம்பு ரூ. 28,000 ஆகும். மலைத்தோட்டப் பயிரல்லாத இனங்களில் வருமான வரி நிலுவையினை 1-6-1992 முதல், வட்டாட்சியர் மூலமாக வசூலிக்க ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(4) 1997-98 ஆம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட குறியீடான ரூ. 20.00 கோடிக்குப் பதிலாக ரூ. 38.68 கோடி வேளாண்மை வருமான வரி வசூலிக்கப்பட்டது.

**13.** நில அளவை, நிலப் பதிவுருக்கள் மற்றும் பராமரிப்பு:

பொதுமக்கள் தமக்குரிய நிலங்களைப் பற்றிய விவரங்களைத் தெரிந்து கொள்வதற்கும், தாம் செலுத்த வேண்டிய நிலத் தீர்வையைச் செலுத்தி வருவதற்கும் ஏதுவாக நிலங்களை அளந்து அவைகளைப் பற்றிய பதிவேடுகளைத் தயாரிப்பதற்காகவும், பத்திரமாகப் பராமரித்து வருவதற்கும் நில அளவை மற்றும் நிலவரித் திட்டம் என்ற மிகப் பழமையான துறை ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இது பிர்க்கா அளவில் தொடங்கி பல அலகுகளைக் கொண்டதாகும். தற்சமயம் இத் துறையானது தீவிரமாக புலத்தணிக்கை மூலமாக நிரந்தரமான நில அளவைப் பதிவேடுகளை நாளது வரை முறையாகப் பராமரித்து வருகிறது. நிலங்களை அவ்வப்போது பல்வேறு காரணங்களின் அடிப்படையில் அதாவது பாகப் பிரிவினை, உரிமை வழி மாற்ற தானம், நிலம் மாற்றம், நீதிமன்றத் தீர்ப்பு, நில ஒப்படை போன்ற காரணங்களால், உட்பிரிவு செய்யவும், நிலங்களில் எல்லைகளை நிர்ணயிக்கவும் இத்துறை பொறுப்பாகிறது. கிராமப்புறத்தில் நத்தம் அளவையையும், நகர்ப்புறத்தில் நகர அளவையையும் செய்து வருவதுடன், அவ்வப்போது ஆரம்ப நில அளவை, மறு நில அளவை, துணை நில அளவை, போன்றவற்றையும் இத்துறை செய்து வருகின்றது.

2. வழக்கமான பராமரிப்புப் பணிகளைத் தவிர, ஒரு நிலத்தின் எல்லைகளையும் உரிமையாளர்களையும் தீர்மானிப்பதற்கு மிக

முக்கியமான கீழ்க்கண்ட திட்டப்பணிகள் இத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது:—

(1) நத்தம் மற்றும் வேளாண்மைக்கல்லாது பிறவற்றிற்கு பயன்படுத்தப்பட்டு வரும் வேளாண்மை நிலங்களை அளவை செய்தல்.

(2) சென்னை (பழைய நகரம் நீங்கலாக) அனைத்து நகராட்சிகள், நகரியங்கள் மற்றும் மாநகராட்சிகளில் நகர அளவை செய்தல்.

(3) மாநிலத்தில் ஆறு மலைகளில் உள்ள மலைக்கிராமங்களில் எஞ்சியுள்ள வருவாய்ப் பணி செய்தல்.

அ. நத்தம் நில அளவை:

நத்தம் நில அளவை சென்னை மாவட்டம் நீங்கலாக 27 மாவட்டங்களில் பரவியுள்ள 201 வட்டங்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை எடுத்துக்கொள்ளப்பட்ட 194 வட்டங்களில் 191 வட்டங்களில் புல அளவைப் பணி முடிக்கப்பட்டுள்ளது. 3 வட்டங்களில் இப்பணி முன்னேற்றத்தில் உள்ளது. எஞ்சிய 7 வட்டங்களில் இப்பணி நடப்பு ஆண்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.

28-2-1999 முடிய 4,467 ச.கி.மீ. பரப்பில் அளவைப் பணி முடிவுற்றது. 4,402 ச.கி.மீ. பரப்பில் ஆவணங்கள் நிலவரித் திட்டத் தொடர் பணிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன.

ஆ. நகர அளவை:

நகர அளவையின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, அதாவது முதல் நகர அளவை, துணை நகர அளவை ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. தமிழ்நாட்டில் 6 மாநகராட்சிகளும், நகரியங்களை உள்ளடக்கிய 108 நகராட்சிகளும் உள்ளன.

இருபத்தொன்பது மாவட்டங்களை உள்ளடக்கிய 108 நகராட்சிகளில் 82 நகரங்களிலும், 6 மாநகராட்சிகளிலும் இப்பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. 60 நகரங்களிலும், ஒரு மாநகராட்சி மற்றும் ஒரு மாநகராட்சியின் ஒரு பகுதியிலும், அளவைப் பணி முடிக்கப்பட்டுள்ளது. 22 நகரங்களிலும், 4 மாநகராட்சிகளிலும் இப்பணி முன்னேற்றத்தில் உள்ளது. எஞ்சிய 26 நகரங்களில் இப்பணி நடப்பு நிதியாண்டில் படிப்படியாக மேற்கொள்ளப்படும். 28-2-1999 முடிய உள்ள காலத்தில் 1,502 ச.கி.மீ. பரப்பில் அளவைப் பணியும், 1,395



ச.கி.மீ. பரப்பில் தனி அலுவலர் இறுதித் தணிக்கைப் பணி மற்றும் நிலவரித் திட்டத் தொடர் பணி மேற்கொள்ள ஆவணங்களும் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இ. மலைக்கிராம அளவை:

வேலூர், திருவண்ணாமலை, பெரம்பலூர், நாமக்கல், சேலம் மற்றும் கோயமுத்தூர் மாவட்டங்களில் கீழ்க்குறிப்பிட்ட ஆறு மலைகளை உள்ளடக்கிய 66 கிராமங்களில் மலை அளவை எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது:—

1. ஜவ்வாது மலை
2. ஏலகிரி மலை
3. பச்சை மலை
4. கொல்லி மலை
5. அரநூத்து மலை
6. ஆனை மலை

மேற்கண்ட மலைகளில், பணிக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட 66 மலைக் கிராமங்கள் அனைத்திலும், அளவைப்பணி முடிக்கப்பட்டுள்ளது.

ஈ. வருவாய்ப் பதிவுகள், பதிவேடுகள் பராமரித்தல்:

நிலப் பதிவேடுகள், நிலம் வைத்திருப்பவர்கள் மற்றும் புறம்போக்கு நிலங்கள் போன்ற விபரங்களைக் கொண்டுள்ளது. நில மற்றும் குத்தகை விவரங்களில் மேற்படி நிலப் பதிவேடுகள் ஆதாரமான ஆவணங்களாக விளங்குகின்றன. எனவே, இவைகளின் செயலாக்கப் பராமரிப்புப் பணி அவசியமாகிறது. வட்ட மற்றும் கிராம அளவில் பதிவேடுகள் நாளது வரையில் பராமரிக்கப்படுகின்றன. பொது மக்களுக்கு தமது உடைமை குறித்த புல எல்லையைத் தெரிந்துகொள்வது, வருவாய்க் கணக்குகளில் தமது உடைமைகளைப் பதிவு செய்யும் பணிகளிலும், பாகப்பிரிவினைகள் ஏற்படும்போது அவை தொடர்பாக ஏற்படும் மாற்றங்களைக் கண்டறிந்து நில அளவைப் பதிவேடுகளில் தேவையான பதிவுகள் செய்தல் மற்றும் உரியக் கட்டணத் தொகை பெற்று நில உடைமைதாரர்களுக்குத் தேவையான புலப்பட நகல்கள் வழங்குதல் ஆகியப் பணிகளை இத்துறை நேரடியாகச் செய்கிறது.

2. மாநிலத்தில் 25 மாவட்டங்களில், மாவட்ட நில அளவை அலகு அலுவலகங்களும், தலைமையிடத்தில் ஒரு மத்திய நில அளவை

அலுவலகமும் செயல்பட்டு வருகிறது. பொதுமக்களுக்கு நில அளவை தொடர்பாக தேவைப்படும் தகவல்கள், மாவட்ட நில அளவை அலுவலகங்களில் உள்ளன. மேலும், பொதுமக்களுக்குத் தேவையான கிராமப் படங்கள், வட்டப் படங்கள், மாவட்டப் படங்கள், சுற்றுலா வரைபடங்கள் மற்றும் பெருவழிப் பாதைகளைக் காட்டும் பல்வகையான படங்களும் மாவட்டங்கள் மற்றும் சென்னை மத்திய நில அளவை அலுவலகத்தில் உள்ள விற்பனைப் பிரிவுகளில் குறைந்த செலவில் பொதுமக்களுக்குக் கிடைக்க வகை செய்யப்பட்டுள்ளது.

### உ. நில அளவைப் பயிற்சி நிலையம்:

நில அளவைப் பயிற்சி நிலையம் தஞ்சை மாவட்டம், ஒரத்தநாட்டில் இயங்கி வருகிறது. வானவியல் அளவை மற்றும் கார்டோகிராப் போன்ற அளவை முறைகளில் சிறப்புப் பயிற்சிகளும் தேர்வு செய்யப்பட்ட சிலருக்கு அளிக்கப்பட்டு வருகிறது. நில அளவைத் துறைப் பணியாளர்களுக்கு, நவீன நில அளவைத் தொழில் நுட்பத்திலும், கருவிகளிலும், பயிற்சி வழங்குவதற்கென சென்னை, அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் ஒரு அதிநவீன தொழிற் நுட்ப நில அளவைப் பயிற்சி நிலையம் தொடங்க அரசு ரூ. 127.03 இலட்சம் அனுமதித்துள்ளது.

### ஊ. நிலப் பதிவுருக்களை கணினிமயமாக்கும் திட்டம்:

நிலப் பதிவுருக்களை கணினிமயமாக்கும் திட்டம் மைய அரசின் 100 விழுக்காடு நிதியுதவியுடன் கூடிய திட்டமாக தமிழக அரசால் 1991 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் ஒரு முன்னோடித் திட்டமாக அறிமுகப்படுத்தப்பட்டது. பின்னர், ஏனைய மாவட்டங்களுக்கு படிப்படியாக விரிவாக்கம் செய்யப்பட்டது.

2. மைய அரசின் நெறிகாட்டுதலுக்கு இணங்க தேசிய தகவல் மையம் கணினிகள் வழங்குதல் அவற்றை 3 ஆண்டுகளுக்குப் பராமரித்தல் மற்றும் பணியாளர்களுக்குப் பயிற்சி அளித்தல் போன்றவற்றை மேற்கொள்ள வேண்டும். மாநில அரசு தடைபடாத மின் வழங்கல் உள்ளிட்ட தேவையான அனைத்து உள்கட்டமைப்புப்படி கணினி அறைகள், எழுது பொருட்கள் போன்றவற்றை வழங்கும். கிராமங்களில் அடிப்படை பதிவுருக்களான 'அ' பதிவேடு மற்றும் சிட்டா விவரக்குறிப்புகள் மேற்கொள்ள வேண்டும். முன்னேற்பாடு



பணிகட்கு ஒதுக்கீடு செய்யப்பட்டத் தொகையிலிருந்து மாவட்ட அலகிற்கு ரூ. 10.20 இலட்சமும், வட்ட அலகிற்கு ரூ. 3.80 இலட்சமும் 29 மாவட்ட தலை நகரங்களிலும் உள்கட்டமைப்பு தோற்றுவிக்கப்பட்டு, தேசிய தகவல் மையத்தினால் பெண்டியம் அடிப்படையிலான கணினிகள் அனைத்து மாவட்டத் தலைமையிடங்கட்கும் வழங்கப்பட்டுள்ளன.

3. இதுகாறும் மத்திய அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ. 513 இலட்சத்தில் ரூ. 248.48 இலட்சம் திட்டச் செயலாக்கத்திற்கென செலவிடப்பட்டுள்ளது.

4. 'அ' பதிவேடு விவரக் குறிப்புகள் 6,104 கிராமங்களுக்கும் சிட்டா விவரக்குறிப்புகள் 2,883 கிராமங்களுக்கும் முடிக்கப்பட்டுவிட்டன.

5. இடம் தெரிவு செய்தல் பணி 16 மாவட்டங்களிலும் 89 வட்டங்களிலும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. நில அளவை புலப்படங்கள் மற்றும் நிலப் பதிவேடுகளை கணினிமயமாக்கும் முன்னோடித் திட்டத்தை இரண்டு வட்டங்களில் செயல்படுத்த மைய அரசின் நிதி உதவிப் பெறும் திட்டத்தின்கீழ் மைய அரசு ரூ. 61.96 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. 1-7-1999-க்கு குறைந்தபட்சமாக 50 வட்டங்களில் 'அ' பதிவேடு மற்றும் சிட்டா பதிவுகள் முழு கணினிமயமாக்கப்பட திட்டமிடப்பட்டுள்ளது.

6. நிலப் பதிவுருக்களை கணினிமயமாக்கும் திட்டத்தினால்;

அ. பதிவு மாற்றம் விரைவில் செய்ய ஏதுவாகும்.

ஆ. பொதுமக்களால் எவ்வித சிரமமின்றி குறித்த காலத்தில் நிலப்பதிவுரு நகல்களை பெற இயலும்.

இ. அனைத்து நில விவகாரங்களிலும் விவரமாகவும் துல்லியமாகவும், வெளிப்படையாகவும் செயல்பட இயலும்.

### எ. வருவாய்த் துறை நிர்வாகத்தை வலுப்படுத்துதல் மற்றும் நிலப் பதிவுருக்களை மேம்படுத்துதல்:

வருவாய்த் துறை நிர்வாகத்தை வலுப்படுத்துதல் மற்றும் நிலப் பதிவுருக்களை மேம்படுத்தும் திட்டத்தினை நிறைவேற்றும் பொருட்டு

[1999 ஏப்ரல் 6

மைய அரசு நிதி உதவித் திட்டத்தின்கீழ் 1989-90 முதல் 1995-96 ஆம் ஆண்டு வரை இவ்வரசு பின்வருமாறு நிதி உதவியைப் பெற்றுள்ளது:

| | ரூபாய் |
|---|---|
| 1989-90 | 200.00 இலட்சம் |
| 1990-91 | 20.00 இலட்சம் |
| 1991-92 | 148.00 இலட்சம் |
| 1992-93 | 125.76 இலட்சம் |
| 1993-94 | 150.70 இலட்சம் |
| 1995-96 | 77.60 இலட்சம் |
| மொத்தம் | **722.06 இலட்சம்** |

மேற்கண்ட தொகையில் 50 சதவீதம் மாநில அரசால் ஏற்கப்படுகிறது. இத்தொகை, நவீன உபகரணங்கள் வாங்கவும், பயிற்சி உள்ளமைப்புகளை வலுப்படுத்தவும், கட்டடம் கட்டுவதற்கும் உபயோகப்படுத்தப்படுகிறது. இதுவரை இவ்வகையில் ரூ. 6.46 கோடி செலவிடப்பட்டுள்ளது.

**14. வெள்ள நிவாரணம்:**

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழைக் காலம் அக்டோபர் முதல் டிசம்பர் வரையாகும். கடந்த வடகிழக்குப் பருவமழைக் காலத்தில் பெய்த மழை வழக்கத்தைவிட அதிகமானதாகும். சராசரி மழையளவான 470 மி.மீ. மழையளவைக் காட்டிலும் மாநிலத்தில் 600 மி.மீ. அளவு மழை பெய்துள்ளது. தூத்துக்குடி, தர்மபுரி, வேலூர், ஈரோடு மற்றும் கரூர் மாவட்டங்களைத் தவிர மற்ற மாவட்டங்களில் கூடுதலாக மழை பெய்துள்ளது. இப்பருவமழைக் காலத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தில் அதிக மழை பெய்துள்ளது. வைகை ஆற்றில் ஏற்பட்ட வெள்ளத்தால் தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்கள் பாதிக்கப்பட்டன. பெருமழையால் பல மாவட்டங்களில் சாலைகள், நீர்நிலைகள் மற்றும் பயிர்களுக்கு அதிக சேதங்கள் ஏற்பட்டன.

2. மழையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பின்வருமாறு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது:—

| | | ரூபாய் |
|---|---|---|
| 1. மனித உயிரிழப்பிற்கு (ஒன்றுக்கு) | .. | 15,000 |
| 2. கால்நடை இழப்பிற்கு-கிடாரி, பசு, காளை, எருமை (ஒன்றுக்கு) | .. | 5,000 |



1999 ஏப்ரல் 6]

| | | |
|---|---|---|
| 3. பசு மற்றும் எருமை கன்றுகள் (ஒன்றுக்கு) | .. | 3,000 |
| 4. செம்மறி ஆடு மற்றும் வெள்ளாடு (ஒன்றுக்கு) | .. | 1,000 |
| 5. முழுமையாகப் பாதிக்கப்பட்ட குடிசை (ஒன்றுக்கு) | .. | 1,000 |
| 6. பகுதியாகப் பாதிக்கப்பட்ட குடிசை (ஒன்றுக்கு) | .. | 500 |
| 7. முழுமையாகப் பாதிக்கப்பட்ட நெற்பயிர் (ஹெக்டேர் ஒன்றுக்கு) | .. | 1,000 |

இதரப் பயிர்களுக்கு பயிர்களின் வகைகளுக்கேற்ப ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ. 400 முதல் ரூ. 4,000 வரை பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

3. தென் மேற்கு வங்கக்கடலில் 27-10-1998, 13-11-1998 மற்றும் 19-11-1998 இல் குறைந்த காற்றழுத்த மண்டலம் உருவானதால் பல மாவட்டங்களில் 27-10-1998 முதல் 21-12-1998 வரை வடகிழக்குப் பருவமழை தீவிரமாக பெய்தது. அதனால் பயிர்களும், நீர்ப்பாசன நிலைகள் மற்றும் சாலைகளுக்கும் சேதங்கள் ஏற்பட்டன. வைகை மற்றும் பெரியாறு அணைக்கட்டு நீர்ப்பிடிப்பு பகுதிகளில் முன் எப்போதும் இல்லாத வகையில் கனத்த மழை பெய்ததால் 10-12-1998 அன்று வைகை அணைக்கட்டில் நீர்வரத்து அதிகமாகி அணையிலிருந்து நீரை வெளியேற்ற வேண்டியக் கட்டாயம் ஏற்பட்டது. இதனால் வைகை ஆற்றின் போக்கிலுள்ள கண்மாய்களில் உடைப்புகள் ஏற்பட்டு பயிர்களுக்குச் சேதங்கள் ஏற்பட்டன. வைகை ஆற்றின் குடிநீர் நிலைகள் அனைத்தும் பாதிக்கப்பட்டன.

4. மதுரை நகரில் பெருத்த வெள்ளம் ஏற்பட்டது. மதுரை நகரம் மற்றும் அதைச்சுற்றியுள்ள கிராமங்களில் வெள்ளத்தால் சூழப்பட்ட 8,785 குடும்பங்களைச் சேர்ந்த 23,360 நபர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டு செல்லப்பட்டு 80 உறைவிடங்களில் 7 நாட்களுக்கு தங்க வைக்கப்பட்டு அவர்களுக்கு உணவு வழங்கப்பட்டது. வைகை ஆற்றில் ஏற்பட்ட வெள்ளத்தால் சூழப்பட்ட திண்டுக்கல் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் வசித்த 1,600 நபர்களுக்கும் இராணுவ ஹெலிகாப்டர் உதவியுடன் உணவுப் பொட்டலங்கள் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டன. இராமநாதபுரம் மாவட்டத்தில் பரமக்குடி வட்டத்தில் உள்ள சில கிராமங்களில்

வெள்ளத்தால் அப்பகுதிகள், பிறபகுதிகளிலிருந்து துண்டிக்கப்பட்ட நிலையில் அங்கிருந்த மக்கள் பத்திரமான இடத்திற்கு படகுகளில் கொண்டு செல்லப்பட்டனர். மேலும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உய்யக்கொண்டான் ஆற்றில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக திருச்சிராப்பள்ளி நகரில் புதிதாக உருவாக்கப்பட்ட தாழ்வான குடியிருப்பு பகுதிகளில் வெள்ளம் புகுந்ததால் அப்பகுதியிலுள்ள மக்கள் இராணுவத்தின் உதவியுடன் படகுகள் மூலம் பத்திரமான இடத்திற்குக் கொண்டுச் செல்லப்பட்டனர்.

5. 1998ஆம் ஆண்டு வடகிழக்குப் பருவமழை காலத்தில் 169 நபர்களும், 372 கால்நடைகளும் இறந்துள்ளன. மேலும் கடுமழை காரணமாக 75,557 குடிசைகள் பாதிக்கப்பட்டன. 26,928 ஹெக்டேர் பரப்பளவில் பயிர்கள் சேதமடைந்துள்ளன.

6. வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் அளிக்கவும், சேதமடைந்த சாலைகள், கரைகள் முதலியவற்றை சீரமைக்கவும் அரசு ரூ. 35.14 கோடி நிதி அனுமதித்துள்ளது.

7. வடகிழக்குப் பருவமழை காலம் தொடங்குவதற்கு முன்பே வெள்ளச் சேதங்களை தவிர்ப்பது குறித்த பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை ஆய்வுக் கூட்டம் சென்னையில் தலைமைச் செயலாளர் தலைமையிலும், மாவட்ட ஆட்சியர்களால் மாவட்ட அளவிலும் பல்வேறு அலுவலர்களுடன் இது குறித்து ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது. அக்டோபர் முதல் டிசம்பர் 1998 வரையிலான வடகிழக்குப் பருவமழைக் காலத்தில் பருவமழையின் காரணமாக ஏற்படும் நிலைமையினை மற்ற துறைகளுடன் இணைந்து கண்காணிப்பதற்காகத் தலைமைச் செயலகம், சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் அலுவலகம் மற்றும் மாவட்டாட்சியர்களின் அலுவலகங்களில் வெள்ளக் கட்டுப்பாட்டு அறை ஏற்படுத்தப்பட்டது. உரிய நடவடிக்கை மாவட்ட நிர்வாகத்தால் மேற்கொள்ளப்பட்டதால் நீர்நிலை ஆதாரங்களில் ஏற்பட்ட சிறிய உடைப்புகள் சரியான நேரத்தில் பழுதுபார்க்கப்பட்டு பெருத்தச் சேதங்கள் தவிர்க்கப்பட்டன. சென்ற ஆண்டில் நீர் நிலை ஆதாரங்கள், ஏரிகள் மற்றும் கால்வாய்களில் தூர்வாரும் பணி மேற்கொண்டதன் விளைவாக இப்பருவமழைக் காலத்தில் பெய்த மழையினால் நீர்நிலை ஆதாரங்கள் மற்றும் பயிர்களுக்கு ஏற்படும் அதிக சேதங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன.



## 15. நலத் திட்டங்கள்:

### விபத்து நிவாரணத் திட்டம்:

44 வகையான ஏழைத் தொழிலாளர்கள், தாம் செய்யும் தொழிலில் ஈடுபட்டிருக்கும்போதோ அல்லது இதர நேரங்களிலோ விபத்தினால் பாதிக்கப்பட்டால், அவர்களது குடும்பங்களுக்கு தற்போது செயலாக்கத்தில் உள்ள விபத்து நிவாரணத் திட்டத்தின் கீழ் நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் நிதியுதவி கோரி விண்ணப்பம் செய்வதற்கு ஆண்டு வருமானம் ஏதும் நிர்ணயிக்கப்படவில்லை.

2. விபத்தில் இறக்க நேரிடும் ஏழைத் தொழிலாளர்களின் குடும்பத்திற்கு ரூ. 15,000 நிவாரணமாக வழங்கப்படுகிறது. விபத்தில் உடல் ஊனமடைந்தவர்களுக்கு ரூ. 5,000 முதல் ரூ. 10,000 வரை அவர்களின் ஊனத்திற்கேற்றவாறு நிவாரணம் வழங்கப்படுகிறது.

3. 1989 ஆம் ஆண்டு இத்திட்டம் அமல்படுத்தப்பட்டபோது, 22 வகையான ஏழைத் தொழிலாளர்கள் மட்டுமே இத்திட்டத்தின் கீழ் பயன்பெறத் தகுதியுடையவர்களாக இருந்தனர். பின்னர் 44 வகை ஏழைத் தொழிலாளர்களுக்கு இத்திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

4. இத்திட்டத்தின்கீழ் 1990-91 முதல் 1998-99 வரை கீழ்க்கண்டவாறு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது:—

| வ.எண். | ஆண்டு | பயனடைந்த குடும்பங்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட நிதியுதவி |
|---|---|---|---|
| | | | ரூபாய் |
| 1. | 1990-91 | 998 | 88,65,000 |
| 2. | 1991-92 | 1,081 | 91,36,000 |
| 3. | 1992-93 | 961 | 70,00,000 |
| 4. | 1993-94 | 991 | 66,06,000 |
| 5. | 1994-95 | 1,024 | 89,74,000 |
| 6. | 1995-96 | 1,836 | 2,00,89,000 |
| 7. | 1996-97 | 1,548 | 1,33,41,000 |
| 8. | 1997-98 | 998 | 1,20,29,000 |
| 9. | 1998-99 (1/99 வரை) | 884 | 1,31,91,000 |

## தமிழ்நாடு நலிந்தோர் குடும்ப நலத் திட்டம்:

. பொருளீட்டிக் குடும்பத்தைக் காப்பாற்றக்கூடிய குடும்பத் தலைவர் மரணமடைந்தால், அவரை இழந்து நலிவுற்று வாடும் குடும்பத்தின் துயரினைத் துடைக்கும் பொருட்டு தமிழ்நாடு நலிந்தோர் குடும்ப நலத் திட்டத்தின்கீழ் அக்குடும்பத்திற்கு ரூ. 7,500 நிதியுதவி வழங்கப்பட்டு வந்தது. இவ்வாறு நிவாரணமாக வழங்கப்பட்டு வந்த ரூ. 7,500 இல் மத்திய அரசு ரூ. 5,000-மும் தமிழ்நாடு அரசு ரூ. 2,500மும் ஏற்று வந்தன. 18-1-1999 முதல் இவ்வுதவித் தொகை ரூ. 10,000 ஆக உயர்த்தப்பட்டு, முழுத் தொகையையும் மத்திய அரசே தனது தேசிய குடும்ப நலத் திட்டத்தின் கீழ் ஏற்றுக்கொள்கிறது. இத்திட்டத்தின்கீழ் நிதியுதவி பெற ஆண்டு வருமானம் அனைத்து வகையிலும் ரூ. 7,200க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

இத்திட்டத்தின் கீழ் 1990-91 முதல் 1998-99 வரை கீழ்க்கண்டவாறு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது:—

| வ.எண். | ஆண்டு | பயனடைந்த குடும்பங்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட நிதியுதவி |
|---|---|---|---|
| | | | ரூபாய் |
| 1. | 1990-91 | 22,154 | 6,36,65,000 |
| 2. | 1991-92 | 22,161 | 6,69,56,000 |
| 3. | 1992-93 | 39,087 | 12,66,39,335 |
| 4. | 1993-94 | 36,835 | 15,62,00,000 |
| 5. | 1994-95 | 19,296 | 11,48,90,295 |
| 6. | 1995-96 | 54,762 | 24,56,39,000 |
| 7. | 1996-97 | 61,755 | 30,88,62,970 |
| 8. | 1997-98 | 40,034 | 26,18,70,000 |
| 9. | 1998-99 (12/98 வரை) | 30,189 | 22,58,40,800 |



## 16. தீ விபத்துகள்:

கிராமங்களில் அதிக எண்ணிக்கையிலான வீடுகள் கூரை வீடுகளாகவே உள்ளன. குடிசைப்பகுதிகள் மிகுந்துள்ளதால் சென்னை நகரும் அதற்கு விதிவிலக்கல்ல. வருடத்தில் எந்த நேரத்திலும் தீ விபத்து ஏற்படலாம். இருப்பினும் ஏனைய பருவக் காலங்களைவிடக் கோடைக் காலத்தில்தான் அதிகப்படியான தீ விபத்துக்கள் நிகழ்கின்றன. தீ விபத்து ஏற்படும்போது நிவாரணமாக, முழுமையாகப் பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு ரூ. 1,000மும், பகுதியாகப் பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு ரூ. 500மும் வழங்கப்படுகிறது. இவ்வாறான பண உதவி தவிர, 5 கிலோ அரிசியும், 1 லிட்டர் மண்ணெண்ணெய் (72 மணி மற்றும் அதற்கு மேல் மின் தடங்கல் ஏற்பட்டிருக்குமாயின்), 1 வேட்டி அல்லது லுங்கி மற்றும் 1 சேலை முதலியன பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் வழங்கப்படுகின்றன.

2. எப்பொழுதெல்லாம் தீ விபத்துக்களால் மனித உயிரிழப்பு ஏற்படுகிறதோ, அப்பொழுது இறந்தவர் பொருளீட்டும் நபராக இருந்தாலும், இல்லாவிட்டாலும் எந்தவிதப் பாகுபாடுமின்றி, இறந்தவர் குடும்பத்திற்கு கருணைக் கொடையாக ரூ. 15,000 வழங்கப்படுகிறது. தீ விபத்தில் இறக்கும் குழந்தைகளுக்கும் இது பொருந்தும். கருவூல விதி 27-இன்படி மாவட்ட ஆட்சித் தலைவர்களே தேவையான பணத்தைப் பெற்று தீ விபத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்க அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

3. தீ விபத்தில் இறக்கும் கால்நடைகளைப் பொறுத்தவரை கீழ்க்கண்டவாறு நிவாரணம் வழங்கப்படுகிறது:—

1. பசு, காளை மற்றும் எருமை ஒன்றுக்கு ரூ. 5,000
2. பசு மற்றும் எருமை ஆகியவற்றின் கன்று ஒன்றுக்கு ரூ. 3,000
3. செம்மறி ஆடு மற்றும் வெள்ளாடு ஒன்றுக்கு ரூ. 1,000.

ஃ

221075

அரசு மைய அச்சகம், சென்னை-600 079.

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
816, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280
and 283 of the Tamil Nadu
Legislative Assembly Rules and
printed by the Director of
Stationery and Printing,
Chennai-600 002.